ஸ்ரீ

ஹரி ஓம்.

ஸ்ரீராமமயம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஜாநகீபரிணயம்.

கவித்தலம்,

ஸ்ரீமாந், துரைசாமிமூப்பனாரவர்களால்

வடமொழியிலிருந்துதென்மொழியில்

செய்யப்பட்டு,

சென்னை,

கொம். பெ. செங்கல்வராயசெட்டியார்

அவர்களது ஸ்ரீநிலய முத்ராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விஷு௵ பங்குனி மீ

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

அறிவிப்பு.

அணா.

ஜானகிபரிணயம் விலை .... ௫.

அயோத்திமாநகரமான்மியம் . ௬.

இவற்றைக் கும்பகோணம் நேடிவ் ஹைஸ்கூல் உபாத்தியாயர் T ஸ்ரீநிவாசாசாரியாரிடம் பெற்றுக்கொள்ளலாம். புறத்தேயத்தார் ஒவ்வொன்றிற்கும் தபாற்கூலி ஒன்றரை அணா அனுப்பவேண்டும். ஒருசேரப் பத்துப்புத்தகம் வாங்கினவர்களுக்கு ஒன்று தரவு கொடுக்கப்படும்.

ஸ்ரீ

ஸ்ரீ:

ஸ்ரீராமஜயம்.

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

நூலினுட்பொருள் விளக்கம்.

அவையேற நவைபாறச் சுவைபூறக்கற்ற கல்விமாந்தர்களே! கேண்மின்கள்.

ஸ்ரீ ராமபத்தரான ஸ்ரீமத்ராமபத்ர அந்தணர்பெருமான் வடமொழியில் செய்தருளிய ஜாநகீபரிணயமென்னும் இந்நாடகம் பலமங்கலச் செயல்களுள்ளும் ஏற்றமுடைய மணவினையைப்போல ஏனை நாடகங்களுள்ளும் போரச் சிறமைத்து.

ஆண்பாலார் பெண்பாலாருடைய அபிதானங்களை ஆண்டாண்டு இந்நூலில் பரக்கப் பகர்ந்திருக்கின்றமையின், ஈண்டு விரித்திலேன். நாடகமாகலின் வேதத்தோடொத்த ஸ்ரீமத் வால்மீகம் ஓதிய சிலவற்றிற்கு வேறுகவே வியப்புறத் தொடுத்திருக்கின்றவற்றை இதன்கீழ் நவில்கின்றேன்

பகவான் விசுவாமித்திர முனீந்திரா மகஞ்செயலுற்று இராமலட்சுமணரை அழைத்தது இயற்கையாலன்று தேவருணவை விரும்பிய சுணங்கனைப் போல, அறுமுகனைத் தந்த ஐம்முகனைப் பெற்ற நான்முகனை யீன்ற மைதிலியாரைக் காதலித்த ஈரஞ்சு தலையனை அஞ்சிய ஜனகபிரபன்னர் காதி காதலரைக் கண்ணுற்று முனீந்திரரோ மகமென ஒரு பொய்ப்பெயரிட்டுத் தயரத சக்கரவர்த்தி தொடக்கத்தோரை நமதாசிரமத்தின்கண் உடன் கொடுபோந்து அழகுதானும் ஓரழகு பெறத்தானீன்ற தாமரைக் கோயிலாருக்கும், வீரந்தானும் ஓர் வீரம்பெறத் தான் தந்த தாமரைக் கோயிலாருக்குந் திருமணமுடித்தருள்வீரென் றிரப்ப, அதனால் அடமாமுனிவர் ஸ்ரீசாகேதஞ் சார்ந்து சக்கரவர்த்தி திருமகனரை அழைத்தனரென்று கொள்க.

ஸ்ரீ

சக்கரவர்த்தி திருமகனூர் தாடகையைக் கோறல்செய் தருளியது அவள் முனிந்துவந்த காரணம்பற்றியன்று. இராவணனுடைய தூதர்களாகிய சுகசாரணர் இருவரும் பிரமருஷியும், ராஜருஷியுமாகிய இருவரும் ஒன்று சேர்ந்து சூழ்ந்த சூழ்ச்சியை யுணர்ந்து, இராமலட்சுமணரை ஜனகப் பெயர்ப் பெரியோர்பால் அணுகச் செய்யாமையின்பொருட்டுப் பகவான் கோசிகமுனிவரை யெடுத்துத் தண்டாது விழுங்குமாறு தாடகையை விடுத்தனரொன்றும், அச்சழக்கி அச்சுகசாரணர் சொற்கொடு சேறலும், தாரகப்பரமனூர் அவளைத் தமது ஏவென்னுங் கூற்றுவன் கைப்படுத்தருளினரொன்றும் அறிக.

விமல சுகிர்த ரத்னம் சிலையின்மேல் சீர்பாதம் வைத்தருளியது அகலிகையின் கல்லுருவந் தவிர்த்தற்கன்று. வைதேகியார் இரகுநாதரையே காதலிக்கின்றமையின் அந்நாதரைக் கொன்று ஜாநகியாரை இராவணனென்னும் இழுதையை விரும்பச் செய்வான் நம் தாயாரைப்போல மாயா சீதையுண்டாக்கிக் காகுஸ்தரைக் கருதுபு காமநோயுற்று உய்யும்வகையின் ·· அனலில் வீழ்ந்து ஆவிதுறப்பச் செய்தலும், இரகுபுங்கவர் ·· யமையினின்று அதனைக் கண்ணுற்றுக் காதலியாராகிய ··· திலியார் உயிர்நீத்தமையின் யாமும் அத்தீயிற் குளிப்போமென்று அணித்தாகி ஓர் கல்லின்மீது இவறலும், அப்பாறை யுருவாய்க்கிடந்த அகலிகை மெய்யான மெய்யோடு இராமாஜய ஜய, இராகவாஜயஜய, என்று மொழிந்துகொண்டே தோன்றினளென்று உணர்க.

மிதிலையர் பெருமனூர் தம்மிடத்திருந்த சைவதனுசை விசுவாமித்திர மாமுனிவரோ டெழுந்தருளிய இராகவபிரானது திருமுன்னரிட்டது அக்கார்முகத்தை வணக்கினவனுக்கே தமது காதலியை ஈதல்புரிவேமென்று சூளுறவு செய்தமையாலன்று. ஸ்ரீ அயோத்தியினின்றுங் கோசிகமாமுனிவர் பரமராம் இராமலட்சுமணரோடு சீதையாரது தாதையார் பாற் சாருமுன் இலங்கேசன் என்னுந் துராத்துமன் பரமாத்தும

னெனவும், சாரணச்சழக்கன் ராமாநுஜனெனவும், வித்யுஜ்ஜிஹ்வன் காதி காதலனெனவும் கள்ளப் படிவங்கொண்டு ஜனகர் பக்கல் வந்திருத்தலும, விமலையினின்றும் போந்த அம்மூவரும் உடனே ஆங்குவந்தருளினர். அதுகாலை மெய்யுணர்வுற்ற விதேயா வேந்தர் ஐயுற்று,அவ்விருதிறத்தனரில் உண்மையுடையார் இன்னாரெனத் தெருளுவான் முன்னரோ தமக்குச் சங்கரன் அருளிய வாய்மையை ஓர்ந்து சிவசாபத்தைக கொணர்ந்து காட்ட, நமது சர்வசுவாமி வளைசகலுற்றவேலை அத்தநு அன்னாரது வரம்பிலாற்றலை ஆற்றாமே முறிந்ததென்றோர்க

பரசுராமா சைவமுனி இறலுற்ற ஓசையால் முனிவுற்று வட்டையில்வந்து ஜானகீ காந்தனை எதிர்த்தாரல்லர். ஜனகப்பெரியோர் சிவமுனியை வருவிததலும், அச்சுற்றோடிய இராவணன் அழுக்காறுற்று, அரசா குலகண்டகனை ஏவ அவர் வநது மறித்தானெனத் தெரிக.

நம முதற்பெருந்தேவை நாட்டினின்றும் அகற்றமந்தரை முயன்றதும், கைகேசி அதற்கு இணங்கியதும், சக்கரவர்த்தியார் உட்டன்பட்டதும், வில்லுண்டை உதையானும், தன் மகற்குப் பாரளிக்க நினைத்தமையானும், சம்பராசுரனுடைய போரில்வரன் ஈந்தமையானும் அல்ல; நாயினுங் கடையனான பத்துத்தலையான் பின்னும் மயனையும், மாரீசனையும், வித்யுஜ்ஜிஹ்வனையும் ஏவலும், அம்மூவருஞ் சென்று மந்தரை கைகேசி தசரதராகிய அம்மூவருளத்திலும் புகுந்து இராமபத்திரனைக் காட்டில் விடுப்பச் செய்தனர். செய்யவே மந்தரை ஆதியராகிய அம்மூவரும் அவ்விராககருடைய ஆவேசங்கொண்டு மூவரையும் கோசல தேயத்தினின்றும் அகற்ற உடன்பட்டனரென்க.

தண்டகவனத்தில் விராதனெனவன் மிதிலை நாடியானைத் தோளிற் பொறுத்துச் சென்றானல்லன். பஞ்சவடியில் இராம

சந்திரரைக் காணலுற்ற சூர்ப்பநகை அவரது சுந்தரத் திருத்தோளை அணையக்காதலித்து நங்கள் அன்னையாராம் வைதேகியாரெனவும், விராதன் ஜானகியாரைப்பாரா முழுப் பேதைமையினால் அவரைப் புல்ல எண்ணுபு இரகு புங்கவரெனவும் ஒருவரையொருவர் தேருமே சோரவேடம் பூண்டு கிட்டி, அவ்விராதன் சீதையார் திருவுருக்கொண்ட சூர்ப்பநகையை அச்சீதையாரெனவே கருதித் தூக்கிச் செல்ல, இளையபெருமான் அதனைத் திருக்கண்சாத்தி விராதனை யிராதபடிக் கொன்றருளினரெனக்காண்க

சுவாமி பிராட்டியாரை நேடத் தொடங்கியதுமுதல் வாலியைக் கோறல்செய்தருளிய காறும் அந்தா நாடிகையில சுருக்கமொழியக் கண்டுகொள்க.

நம எல்லாம் வல்ல சுவாமி இராவண சங்காரம் புரிந்த நாளும், காரமேகத்தை நோக்கும் சாதகமெனப் பரிந்திருந்து எதிர் போந்த ஜானகியாரைத் தாசரதியார் தீயிற் குளிப்பத் திமொற்றம் விளம்பியது அம்மங்கையர்க்கரசியாரது திருக்கோலத்தைக் கண்டருளினமையாலன்று மிதிலை நாடியார் தமது கணவர்பால் அணுகப் போதும் போது மூக்கறையுங் காதறையுமாகிய சூர்ப்பநகை எதிர்ப்பட்ட சகுன விரோதத்தாலென்று தெளிக

பரதாழ்வானும் சத்துருக்கினாழ்வானும் நந்திக்கிராமத்தில் கனலில் ஆவிநீப்பத் துணிந்தது தமது பிரானார் எழுந்தருளுவதாயப் புகன்றருளிய அவதியில் வாராமையாலன்று. இராவணாதியரைக் கொன்றவனுடைய குலத்தை வேரறுப்பேனென்று சூர்ப்பநகை தாபசி உருக்கொடு நந்திக்கிராமம் நண்ணி இராமலட்சுமணர் அரக்கர் செய்த மாயையால் விண்ணாடாள உற்றனரென்று சாற்றிய மாற்றத்தாலென்றுகருதுக.

நம அரும்பெறலடிகளுக்குப் பட்டாபிஷேக மகோற்சவம் நடந்தது ஸ்ரீ அயோத்தியிலன்று நந்திக்கிராமத்திலென்று பெருமகிழ்வுடைக.

ஸ்ரீ

அவையடக்கம்!

கற்றுணர்ந்த எந்தையீர் யாமுறு ஒரு பொருளல்லேன்; ஒரு சிறிதுங் கற்றேனல்லேன். கற்றவர் மாட்டுச்சார்ந்தேனு மல்லேன். ஐயன்மீர்! யான்கூறும் வழூப்பட நிரம்பாமென் சொல்லை இன்னுஞ் சிறிது கேண்மின். நத்தமான், மலயமான், சுதாமான் என்ற முக்குலத்துள், அச்சுதாமான் மரபிற் றோன்றிய எனது குரவர் பொன்னிநாட்டுச் சென்னிமாட்டு வில்லேருழவர்களாய்த் தொழில் புரிந்தனரேனும், பின்னர் உதித்தவர் * சொல்லேருழவர்களாய், அப்பொரு தொழிலை நீத்து உழுதொழிலை யேற்றமையின்புல்லியேனும் அம்மரபு வழுவச் செய்யாது செந்தமிழென்னுஞ்செய்ந் நிலனை எனது நாவென்னு முழுபடையினால் உழுது, மனமென்னும் விதைவிதைத்து, அறிவென்னும் புனல் பாய்ச்சிக் கல்வி யென்னும் பைங்கூழ்செடி கொடிகளை வளர்த்து, ஞானமென்னுஞ் செந்நெல் கொள்ளலோடு அச்செடியிலுங் கொடியிலும் நற்சொல், நற்பொருள், நன்னடை, நற்றொடை என்னும் பலவகை நறுமலர்பறித்து விரவி அன்பெனுநாரால் தொடுத்து, குடந்தை மகிழ்நர் தாரகப்பரமனார் வனர் புனைதிருத்தோளை ஒப்பனை புரிந்து, அபிமானம் பங்கமுற, அங்கம் நிலனுறப் பங்கயத்தாளைப் பணிந்து பணிசெய்தேனேயன்றி, நூல் செய்தேனென்னுங்கருத்துடையேனல்லேனாகலின் சொல்வழு, பொருள்வழு முதலியபதனைக் கண்டிழி என்னைத் தூற்றி முனியாதீர். நுமதருஞ்சிறுகுழவியின் மிழலையெனக்கொண்டு நான் உய்யுமாறு அருள்சுரந்து ஆசி புரிந்தருண்மின். நான் விதைக்கும் விதை சோலையாயினும் செந்தமிழென்னுங் கொழுநிலன் வளமிகுந்ததாகலின் ஸ்ரீஅயோத்திமா நகரமான்மியமும், இச்சானகி பரிணயமுமாகிய செந்நெல்லை விளைத்தது. சங்கல்ப சூரியோதயமென்னும் அமுதையும் இனி விளையச்செய்யும்.

---

* சொல் = நெல்.

ஸ்ரீ

ஸ்ரீ

ஸ்ரீராமமயம்.

கவித்தலம் கல்விச்சாலைத் தமிழ்ப்புலவர்

மூ. வை. ஐயாத்துரைஐயரவர்கள்

இயற்றிய

பனிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சொல்லிலும் பொருளிலுந் தொடையிலும் நடையிலுந் துகளறவிளக்கியின்பந், துய்த்திடச்சானகீ பரிணயந்தன்னையே துங்கமுறுதமிழ்வசனமாய்.

நல்லியற்சோழமண்டலநங்கைவதனமாய்நாவலர்க்குறைவிடமுமாய், நாகரும்விழைகவித்தலநகரில்வாழ்கின்றநற்குணனயந்தசீலன்,
பல்லியங்குமுறுகடைவாயிலன்பார்த்திபன்பாந்துணும்பணபுமிச்கோன், பரமனடியன்றிமற்றொன்றிலுமபற்றிலான்பைந்தமிழ்க்கடல்பருகினேன்.

இல்லையென்றுரையாத குறையன்றிமற்றெலா மேய்ந்ததுரைசாமிமகிப, னிப்புவியுளோர்க்கெலாமின்னமுதமெனநன்கியற்றியிசைபெற்றனனரோ.

ஸ்ரீராமமயம்.

மகாவித்துவஜ்ஜன சேகரராகிய

திரிசிரபுரம்.

கோவிந்தபிள்ளையவர்கள்செய்த

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மாசகலவிலையோலை வாங்கன்மனைவிக்கென்றன் றென்றவாய்மை, நேசமவன்மனைவிககேபணிசெயலென்றனுமனூராநிற்பராம, தாசனெனுந்துரைசாமி ஜாநகீபரிணயநூறனையுஞ்சொன்னேன், கோசலநாடுறுநகர்மான்மியங்கூறியுண்மைநிலைகுறித்துமன்றே.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

சென்னைச் சருவகலாசாலைத் தமிழ்த்தலைமைப்புலவர்
கோமளபுரம்

இராசகோபாலபிள்ளையவர்கள்செய்த

நிலைமண்டிலவாசிரியப்பா.

பொன்னியனெட்டிதழ்ப்பூம்பொகுட்டின்மேல்
மன்னியநான்முகன்வகுத்தபல்லண்டக்
குழுமலிற்கதழுபுகூறுமிவ்வண்டத்
தெழுதருசிவணலிலிருநிலமகண்முகக்
கணிபொலந்திலகமென்றுசிகுபுலமை
திணியுறுசெந்நாததெய்வக்கவிஞர்
தெளிதிற்றெற்றெனச்செப்புசால்பிற்றூல்
எள்ளலில்சீர்த்தியினிதுவிரித்த
சோழநாட்டுத்தொல்பதிப்பைஞ்ஞீல்
வாழ்நெறிப்புரிதிருமன்றலிற்சத்த
பதிநிகழ்பின்னர்ப்பரிவினிழைக்குறு
விதிமுறைகடவாவியன்மங்கலவினைக
குதநவான்பொரிதரவுறவளைஇச்செஞ்சொற்
கதிர்கருலையரக்கிதழ்க்கடிமலர்மீமிசைக்
கவினவணவல்கனல்வயினீட்டும்
காட்சியதாமாற்கயலினமுகணடெழீஇ
வீழ்ச்சியிற்றளவின்விழுமுகையாங்கண்
பாசடைகிடத்தல்பசுமணித்தட்டம
மூசுபூம்பொரியின்முழுநோக்குடைத்தால்
தாழ்சடையான்பணிதலைக்கொடுவாணன்
சூழ்நகர்ப்புறநிலைஇச்சுடர்த்திறலாழியால்
விறலழிவுன்னுபுமெய்த்தேத்தொண்டாக்

தற்சிறப்புப்பாயிரம்.

குறுபணியியற்றுவானூற்றனசெம்மணி
குயினீணுவளகங்குலவெழிலுடைத்தால்
குயிறளிர்பொதுளியகொழுமாப்புகுதல்
அரிவையர்செவ்வாயமிழ்துறழமிழலை
வெருவராத்திக்கண்வீழ்தலேய்க்கும்
விண்ணம்போழவிரிபொழிலார்ந்ததால்
பண்ணமர்செந்தமிழ்ப்பழமறையிறைவிநால்
மறைச்சிலதியரொடுமகிழூஉநடங்குயிற்
றுறைதருபொன்மனையுயர்மறுகணிததெனச்
செவித்தலநிரப்புதொல்சிறப்பவையெலலையில்
கவித்தலமோம்பல்செயகாவலாகாவலன்
சுதன்மையன்பராவருஞ்சுதன்மரபினன்
குறுமுனிநிகர்ப்பப்பெறுபுலமிக்கோன்
பொய்யாதிநான்மையுகாத்தனிவாகினன்
செய்யாமொழியாந்திருவாய்மொழிப்பொருள்
பன்னுபுகழிதரூஉப்பயன்படுமெலவையன
கன்னியாமயக்குக்காலாழபயம்பு
தவல்புரிதறுகட்டடங்கரககளிறு
துய்த்திலாதுறுபொருளவைததியலிங்கத
தெய்த்தபுன்னுமலியினியல்பினர்சேரா
வாய்மைசால்புரவோன்வேய்ப்புரைதோளி
பங்கனுட்குழைந்துபழிச்சுமெம்மானுடை
அங்கணன்பூங்கழலகக்கணிறீஇயினோன்
பூதூரெந்தைதாட்போதூருளததோன்
பொன்னினைச்சுவணமென்றிங்கிலவணாப்போர்
ஆமாறறைதல்போறசிமானிவனென
உரைசாமியமிலாத்துரைசாமிநாவலோன்
வான்கரைபுகழ்மையேய்சானகீபரிணயம்
தன்னிகரிலலாததென்மொழித்தேத்து
மொழிபெயாத்துதவியமுதுக்குறைவாங்கதற்
குழிதராவுலகெலாமுலப்பிலாவவன்குணம்

தற்சிறப்புப்பாயிரம்.

நாடுகோவோவிலேனல்வாழிகூறுகோ
பீடுமாணியதிறல்பிறங்கவன்சீர்த்தி
வீறுறுவீற்றுகநாத்தழுதழுப்பப்
பாடுகோபாடுகோபாடுகோயானே.

ஸ்ரீமத்வரவரமுநயேநம:

வித்வான்
காஞ்சிபுரம் இராமசாமிநாயுடு அவர்களால் செய்யப்பட்ட
அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொன்பூத்ததாமரையின்பொகுட்டுறையுநான்முகத்துப்
புத்தேளொண்டோட்
கொன்பூத்தமூவிலைவேற்சூலிசியீரிருகோட்டுக
குன்றமூர்வோன்
தென்பூத்தநற்றவத்தராதியர்வேண்டிடநிருதர்த்
தெறுபாககெண்ணி
இன்பூத்ததயரதன்றனிருந்தவத்தாலொருமகவா
யியைந்துதோன்றி (௧)
ஈரெட்டாண்டுற்றுருப்பருவத்திற்கோசிகன்ற
னெழின்மகத்தைப்
பாரொட்டாப்புகழொடுகாத்தருங்கொடியதாடகையாம்
பாதகிதன்னைக
கூரொட்டாசுகமொன்றாலுயிர்பிரித்தேயரக்கருயிர்
குடிக்குமாசைச்
சீரொட்டாககூற்றினுக்கோர்விருந்திட்டான்செழுந்தவத்தன்
செல்லறீர்த்தே (௨)
வேலையுலகம்புகழும்விழுச்செல்வத்தனிமிதிலை
விழைவினைகும்
காலையிருங்கானமதிற்கல்லொன்றைத்தனதுதிருக்
காற்றூளொன்றால்

ஸ்ரீ.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

புரஸை, இயற்றமிழ்ப்புலவர்

கோ. பள்ளிகொண்டான்பிள்ளையவர்கள்செய்த

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

திருமக—ளுற்றதாயகமாந் திரைகெழுபாற்கடலுந்தக்கத்
திரளணித்

திருமலர்வந்தவனரனு தியதேவா பணிநேத்தித்
தியோராய

திருமருவாவரககா புரிசெல்லலெலாம் வினைப்பஞ்
செய்யவன்றோ

திருமருவிவாழமுன்ன ரளித்தவரப்பயனுந்தவச
சிந்தைசெய்து (க)

ஒருமுநிவன் மகம்யற்ற வதன்கணெழுவமுதேயோ
ருருவாகக்கொண்டே

ஒருமுநிவனருளினிறைந்த மாழியான புதல்வனென
வுதித்துப்பின்போய

ஒருமுநிவன் மகங்காத்துத் தடமதில்சூழ் மிதிலைநக
ருற்ற முன்னா

ஒருமுநிவன் பன்னிதனச் கொளிமலர்ச்சேவடிதந்துகளா
லுருவளித்து (உ)

கார்முகந்தோய் வடவரையாற் கண்டதோகடசெவிகட்
கரசுதானே

கார்முகக்குந கடல்கடைந்த கவவமோககணவில்லோ
கவன்றிடாதிங்

கார்முகத்தானமாநதெடுக்கு மாற்றலுள்ளாரெவரோயென்
றறையும்பெற்றிக

கார்முகமொனறிறுத் தெந்தாய் தற்பரையைமணம்புணர்ந்த
காதைதன்னை (௩)

முத்தலைம்புகழும் வடமொழியினின்றுந்தென்மொழியின்
முதிஞர்யாரும்
மூத்தமுறும்படி யியற்றி யச்சிட்டுத் தந்தனனுன்
மூவாக்கீராததி
முத்தமிழின் சுவைகண்டம் முத்தலையார கடவுண்ட
முனிநிகர்த்தோன்
முத்தலையான் புரம்வாழுங் கோவிந்தப் புலவன்டான்
முதுநூல்கற்றோன் (௪)

சுதன்மகுல மெனுநரலை கலித்தோங்கவருசுதா
கரனெம்மாலச்
சுதன்மனைப் பாதம்பணியு முத்தையக்குரிசின்முன ந
தொடர்ந்துசெய்த
சுதன்மமெலாந்திரண்டு பகீரதன்கொலாமிவனெனவே
துதிக்கவந்த
சுதன்மகிழ்ந்து பதின்மருக்கும் பகிர்ந்துணனுமினைடறததின்
சூழ்ச்சிதேர்ந்தோன். (௫)

கோமளமாபுரம் வாழ்நாவலர்பெருமானிராசகோ
பாலகோமான்
கோமளசிமானெனும் பேரளித்தழைத்துக்கொண்டாடுங்
குபேரச் செல்வன்
கோமளாகளுழு புவிகன்னிகையாதிதானமெலாம
கொடுக்கும் வள்ளல்
கோமான நல்லறச் சாலைகழ கமுதல்வைத்தளிக்குங்
கொள்கைபூண்டோன் (௬)

மூடபகையும் வென்ற முனிகணமும் வானவர்கணமு
மொய்த்துப்போற்றும்
முப்பரமாம் பொருள்களுக்கு முதல்வனுஞ்சீராம
மூர்த்திபாதம்
முப்பொழுது மெப்பொழுது மறவாதுமுன்னமா
முளரிவைப்போன்

முப்பரம மறைப்பொருளுங்குரவர்பாற்கற்றுணர்ந்தம்
முறையினிற்போன் (எ)

தாரகவாச்சியன் பெயரே யோதிடனுப்பயனெனவுந்
தணவாதென்றும்
தாரகவாச்சி யன்புகழே கேட்டல் செவிப்பயனெனவுந்
சம்பு வேத்தும்
தாரகவாச்சியனுருவே யுன்னலுளப்பயனெனவுந்
தருமமன்ன
தாரகவாச்சியன் கழலேவணங் கறலைப்பயனெனவுஞ்
சரதஙகொண்டோன். (அ)

சஙகத்தாற்றருக் கொணர்ந்தான்றமர்க்கெளியான்பிறாக்கரியா
ன்றகைசால்சாது
சங்கத்தானறியாத வறிவித்து மயககறுக்குந்
தருமக்கல்விச்
சஙகத்தானே மிவனை பொறிபுயத்தானூர்த்துவபுண்
டரந்தயங்கும்
சங்கத்தான் பூமகளு நாமகளு மகிழ்ந்துறையுந்
தானமாயோன். (கூ)

கவித்தலைவனுணையெனக் கட்டுரைக்கு மாணையுளோன்
கவினுற்காமன்
கவித்தலம்வாழ்நராதி பனிப்புவி மிடியாம்வெயிலோரீஇக
களித்துவாழக்
கவித்ததனித் தண்குடையான் மங்கலமாக் கரிபுரிதோ
காலானுள்ளோன்
கவித்தலைவர் கற்பகமெந் துரைசாமி மூப்பனெனுங
கலைவல்லோனே.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வெஸ்லியன் மிஷன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,

ரா. ஸ்ரீநிவாச முதலியாரவர்கள் செய்த

நேரிசை யாசிரியப்பா.

பூமலிதாமரைப்பொகுட்டுறைபுத்தேள்
தேமலியிதழிச்செஞ்சடைவானவன்
புரந்தரனாதியர் போற்றிவணங்குபு
நிரந்தரமரக்கர் நெடுந்துயர்சாற்ற
அன்னவாசகிரங்கி யருளியவாற்றால
பன்னருஞ்சீர்த்திப் பார்த்திபன்றயரதன்
பெருமகத்தெழுந்த பெருஞ்சுவை யமுதோர்
உருவெனத் தாங்கி யொருமகவாய்வந்
திரெட்டாண்டு மியைவுருமுன்னாப்
னாரெட்டாததவம்பல்குறுகோசிகன்
வேள்விக்கூறு மிகநனியியற்றும்
தோள்வெறபேயெனச் சொற்றதாடகை
மைந்தரோடவிய மனத்திலுன்னி
மைந்துடையொருசரம் வழங்கிமாமுனி
மகமதைக்காத்து வான்மிதிலைக்குட்
புகவிழைந்தேகும் போழ்திற்கல்லொன்
றிளஙீரிரண்டை யேந்திமுன்வர
வளமலிகழற்கால் வான்றுகள் பெய்தே
வில்லியலொண்ணுதன் மெல்லியலாக்கி
அநகத போதன ரடிபணிந்தேத்தும்
சனகராதிபன் றந்தசிற்பரையைச்
சங்கரன் வில்லிறுத் தங்கவளிப்பப்

ஸ்ரீ

தற்சிறப்புப்பாயிரம்.

பொங்கமர் கடிமணம புரிந்தகாதையை
வடமொழிக்கிணங்க மனனுறவமைத்து
திடமுற்றிலங்கு தென்மொழியதனுல
சானகிபரிணய மென்றொரு தமிழ்நூல
மானவரேத்து வழங்குமாதந்தான்
பொன்னாட்டினுமுயர் செந்நாட்டையுமெனும்
தென்னாட்டிடையமர் பொன்னாட்டலையெறி
காவிரித்துறையிற் கவினுறவின்றேன்
பூவிரித்தளிகள் புரிந்துணைவளனும
... கட்டகட்டின் மோட்டிளவாளை தாப்
விரிதலைக்க முகந்தருபழனுகுத்து
விண்மணியென்னுமொணகதிர்ச்செல்வன்
இரதத்தார்த்தவேழ்துரகதமருட்டி
மீண்டுறுதண்பணை யீண்டுறுவளனும்
சொலலுக்கடங்கா தெல்லுற்றோங்கும்
புலித்தலக்கணியாம் கவித்தலமதனில்
சுதாமகுலமாந் தொல்லார்கலிபபால்
விதுவெனவந்து மிடலுடைத்திரிசிரன்
டெயரிற் குலவும் வியனுறு நகர்வாழ்
கோவிந்தவள்ளல் கோட்டமின்றளித்த
கல்விச்செல்வன் காவலர்புகழும்
கோமளபுரம்வாழ் நாமகனுவன்
தராதலம் போற்று மிராசகோபாலன்
வாமார்நிலகு சீமானெனும் பெயா
தந்தைதைத திடவெழிற் சிந்தையுவந்தோன்
... நமதக கரிகட் கெறுமுழரியேறனன்
வளையாழிக்குறி வளாபுயத்தணிந்தோன்
திருமணனிலகவருமதிமுகதோன
எனனுறன் கறமு மியலுறநடாத்தி
சனனுசசிறப்பி னவைதபபோறறு
இத்தளாபராவும் முதனையட்பெருமான்

தொலகுடிவந்த நல்லறவுருவன்
ஓவியக் கவின்பெறு பாவையர்யாரும
மடலூர்தரச்செயடலூர்மதனன்
அவலின்வந்த பாவலர்கடெல்லாம்
கற்பகமனைய பொற்புறு கொடையான்
மாப்புவிபுகழ் துரைசாமி
மூப்பனென்றலகு மொழிநாவலனே.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

இயற்றமிழாசிரியர்

கே.ர. இராசகோபாலபிள்ளையவர்கள்

மாணுக்கரும்

சென்னை S. P. G. ஹைஸ்கூல் தமிழ்ப்புலவரும், ஆகிய

ப. வாசுதேவமுதலியாரவர்கள்செய்த

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உலகெனலாகியுயிர்களுமிராகியுயர்மறைதுணிபொருளாகி அலகறுமன்பாக்காரமுதாகியரியபேரின்பமாய்நலங்கொள் [ல் பலகுணக்கடலாய்ப்பகரருஞ்சீரதிபல்கியவயோதியம்பதியி இலகவந்துதித்தவிறையவனிறைவியிருங்கடிமனவிளைகளை யை. (க)

வடமொழிதனினின்றமுதுறழ்தமிழின் வளம்படவனப்பொரு படநய, இடனுறவமைத்துக்கேட்குநர்படிப்போரிருசெவிநாச் சுவையூறந், திடனுறதொடையாததெள்ளிதிற்புனைந்தான்றெ வ்வரும்விழைதரவென்று, மடனிகுதிறமிக்கௌவியமவித்தவ லனுநாநன்குவாழ்த்துறவே (உ)

நன்குணநுதலுந்தனிபபெயராகித் தகைகொள்சீமானெனுந்த னவா, இன்குணநாமமிராசகோபாலவியற்றமிழ்ப்புலவாதமேற் தல், மனபெறத்தந்தவான்திருச்செல்வன்மாண்கவிததலகாம ன்னன், நன்குணவைபபாமாயிருஞாலநவி றுரைசாமிநாவல னே (௩)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இயற்றமிழாசிரியர்

கோ. இராசகோபாலபிள்ளை யவர்கள்

மாணாக்கர்

மயிலை. அ. சண்முகபிள்ளை யவர்கள்

பாடிய

கலிவிருத்தம்.

முப்பரம் பொருட்கொரு முதல்வன் மூலத்தோங்
கப்பரம்பொருளரிந்தம னுச்சன
கப்பெருந்தகைதருங் கனியைவேட்டெழும்
அப்பெருஞ் சானகிபரிணயம்மரோ. (க)
சொன்னயம்பொரு ணயந்துறைந் தகதியம்
என்னநன் கெம்மனோர்க கினி தினலகினான்
பொன்னகமொனநலம பொலிகவிந்தலத்
தன்னிகரிலாத் துரைசாமிச் செல்வனே. (உ)
இன்னவன் றனகெனக் கியற்றமிழ்க்கடல்
நன்னயமோடு பகரிக்கு நாவலன்
என்னையுமல்வழி யெய்தொணாதருள்
மன்னியவிராச கோபால வள்ளியோன் (௩)
முதலையானகா முன்னிச்செய்தவம்
இத்திருவுருக் கொடிங்கேய்ந்ததாமெனச்
சொற்றிடு கோவிந்தத் தோன்றல்பானனி
முத்தமிழ்ப் பரவையை முகந்தனாமையால். (௪)
பூனதமாட மீப்பொலி கவித்தல
மாநகாவயினெவரும் மகிழ்ந்திடத்
தானனிபுரத்தலாற் றகைமைசான்றசீ
மானெனுந்தனிப்பெயாவழங்கலேற்றுளான். (௫)

ஹரி

ஸ்ரீராமஜயம்.

ஜாநகீபரிணயம்.

முதலங்கம்.

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்:

திருக்கிளாவானவரின்னற்கடல்கடப்பத்
தென்கடலைக் கடந்திலங்கை சென்றியாணா
உருககிளா விணைஞடியார் வெஞ்சிறை யொழிப்ப
ஞொருதனியே'சிறை கிடந்தாட்காழிந்து
செருககிளர் வாளவுணரொடுமகககன் யாக்கை
செகுத்துமீண்டிராகவன்பொற் றிருததாள் சார்ந்த
மருக்கிளர்காற்கான் முனைகாலிணையெக்காலு
மறவாமே வழுத்துகிற்பே மறுவில்லேமே.

மலர்வலை நேருங் கும்பயோனியினுடைய குண்டிகையினின்றுதோன்றி, உலகளந்தறிதுயின்மேவும அரங்கேசன்திருவடியைச்சாரந்துவந்து, ஆனைக்கா அரனை மஞ்சனயாட்டி, காசியையொத்த ஐயாற்றையுங், கண்டமென்னுங கடிநகரிகாத்தகவித்தலமாநகரையுந்தனது திரததிற்கொண்டு, இரததிஞகரனை மணந்தொழுகுதலின் கஙகையெனுங கடவுட்டருநதியோடெதிரந்து, கீடந்தோயுமேனும் வீடேயுதவாநின்ற காவிரிமாநதி யெஞ்ஞான்று மிடையீடின்றிப்பெருகுதலாற் சந்திரன்தவழசெழித்துச் செம்மாந்த பூகத்தினுடைய தாறுகளையரியவெடுத்த கொடுந்துறடுபோலுயாந்து கதிர்வளையுஞ் செந்நெற்பைங்கூழ் வளராநிற்கும் பண்ணைகள் சூழ்ந்த சோணாட்டில்,பொன்னலாகிய மதிள் சூழ்ந்ததாய,கொடிநிரைநிவந்த வெள்ளிமலையைப்போன்ற மாடங்கள் நெருங்கியதாய், பிரமனுல

குபேரபோலப் பிராமணர் வீதியுற்றதாய், அளகாபுரியொத்த ஆ
வணத் தெருவுள்ளதாய், இந்திரலோகமென்ன அரசர் மறுகு
கொண்டதாய், கந்தருவ நகரம்போல வல்குல விறலும்பூங் கொ
டிகளுடைய அழகுள்ள வீதியோரபுறத்தடர்ந்ததாய்த் திகழ்ந்
து, தெய்வப் புலமையெனனும் பெருமைகொண்ட கவிச்சக்கர
வர்த்தியாரை நேரான கற்றவர்கள் வாழ்ந்திருக்குடந்தைமாநக
ரைநாட்டியத்தில் வல்ல நடனொருவன்சார்ந்து, பங்குனித் திங்
களில் தாரகப் பரமனுக்கு நடவாநின்ற நவமித்திருவிழா
வையும், அவ்விழாவைச்சேவிக்கத் தேசதேசங்களினின்று
போந்து கூடிய மேலோர்கூட்டத்தையுங் கண்டுமகிழ்ந்து
குண்டலமணிந்த காதைக் குண்டலந்திறக்கொடுத்து, ஓ! சபை
யில் வீற்றிராநின்ற மேன்மக்களே! என்னைக்குறித்தென்னை
கூறுகின்றீர்கள் நவரசமுற்றதும், நல்லகருத்துற்றதும்,
புதுவதுபுனைந்ததுமாகிய வோர் திப்பியநாடகமும்மாற்கா
ட்டத்தக்கதென்று சொல்லுகின்றீர்களோ. ஆச்சரியம் ஆச்
சரியம், எவ்விடயத்தி லென்கருத்துற்றதோ வவ்விடயத்
தையே தாங்களுங்கொண்டது எனது பாக்கியமேயென்றனா
ந் தாங்குப்போட்டிருந்த வெழினியைநோக்கி, எடி! இங்கே
வாவென, வந்தேன் அத்தானென்றுவந்துசபையாரைவணங்கிப்
பொன்னங்கொடிபோல நுடங்குகின்றவளை நடன்பார்த்து, பெ
ண்ணே! எனதுகண்ணே! அவைக்களத்தாருடையவாணையை
க்கேட்டாயோவென்றனன் அந்நடி மோவாயிற் கைகொடுத்து
ப்பெருமூச்செறிந்து, கேட்டேன்கேட்டேன், இரகுநாதருக்குப்
பாரியாய் நிச்சயித்திருக்கிற ஜானகிபிராட்டியாரை மாயையில்
வல்லவனானவோரிராக்கத னந்நாதருடைய வடிவங்கொண்டு
கொண்டுபோகமுயல்கின்றனனென்றுகேள்விப்படுகின்றேன்.
ஆகையால் வருந்துகின்றனென் என்செய்கோவென்றனள்
கணவனவளைநோக்கி நீ விசாரப்பட்டது போதும்போது
ம், நிறுத்து. சீதாகலியாணத்தை முடிப்பிக்கும்பொருட்டுத் திரி
லோகத்திலு மேன்மைபெற்ற பகவான் விசுவாமித்திரமாமுனி
வ னென்னலேற்படுத்தப்பட்டிருக்கின்றார். புத்தேளிர்களோ

டெல்லாவுலகங்களையும மாருகப்படைக்கத்தொடங்கிய வம்மா முனிவா மைதிலியாருடையதிருமணத்தை முடிப்பா.ஐயுறேல், இச்சபையாரகளானந்திக்குமபொருட்டு நாம் கானஞ்செய்யத் தொடங்குவோமென்றனன். அந்நடி அத்தான்! இச்சபையிலுள்ள கல்விமான்கள் கண்டு களிக்கும்படியாகியநாடகம் யாதெனக கருதுகின்றேனென, நடன் அவளைநோக்காப் புன்முறுவல்கொண்டு ஏடி! பூங்குயிலே! ஜானகீ பரிணயமென்னு நாடகத்தை நினக்குக் கற்பிதநேனன்றே? மறப்பெனுங்கள்ளன்கையிற பறிகொடுதது விட்டாயோ? சொல்லென்றனன். நடி நடனைப்பாரா அததானத்தான் இப்போதுணாந்தேன், மகானுபாவராகிய யக்கிய ராமதீட்சிதருடைய புத்திரசிகாமணி சாகரத்திற்றேன்றுஞ் சந்திரனைப்போன்ற ராமபத்திர தீட்சிதராலனறே வந்நாடகமியறறப்பட்டதென்றனள். நடனதைக்கேட்டு,ஆமாம் நன்கு ஞாபகங்கொண்டனை கசடறக கற்றுயாந்த செந்நாப்புலவர் சந்நிதியில் நீலகண்ட தீட்சிதராற்புகழப்படுகின்றவரும்,கொண்டாஜோதிஷிகரென்கிற வித்துவான்ற கனப்படுத்தப்படுகின்றவரும், ஸ்ரீ பாலகிருஷ்ணரென்னும் தேசிகராற் றிருவருள் செய்யப்படுகின்றவரும்,சொககநாத தீட்சிதருடைய மருகரும,இராமதாசருமாகிய இராமபத்திரதீட்சிதா இரகுநாதா சரிநதிரத்தைப்புனைந்துரைத்துத் திரிலோகத்திலு மேம்பாடுபெறுகின்றனா. பரதாசாரியார் உடம்பாட்டின்படி யபிநயசாஸ்திரத்தை விளஙகசெயது நாமும் பேறுபெறுவோம், நீ கானஞ்செய்வாயென்றனன். அவ்வேலை நடி, குமரிகளுடைய வைம்பாலில்வளைந்திருககின்ற வகுளமாலையின் மணத்தாற் குமரர் கல்வியின் முடிவிலுண்டாகின்ற தஙகளயர்வைபபோகக, அககுமரிகள் சாளரஙகடோறுமந்த மந்தவருந் தென்றலினுல் வியர்வைப் போககுவார்களென்று கானஞ்செயது மற்றென்றைத் தொடஙகுமுன் வெருவினவள்போலப பாவனைசெய்து கானஞ்செய்யாது திரையினுட் சென்றனள். அவ்வேலை நடன், ஏடிஏடி! பூண்முலை! எங்கே குகின்றுயென்று தொடர்ந்துபோய், நினது சிறிது கானத்

னைதக்கேட்டுச் சவையார் மிகவு மாநந்திக்கின்றனர். அது கண்டு நீ மிகவுமுள்ளமகிழாது, அச்சுறவேறுடுவானேனன் வெளியில் வாவென்றனன். அக்கண்ணுளாள், இராககதவொருவனுங்குவருகின்றனனே, அவனைககண்டு நான் வெருவுறுதிருப்பேனேனவென, நடன் வுபூணமுலே! ஆங்குவருகின்றவன் இராவணனோடு திரிந்துகொண்டிரர்நின்ற சாரணனுடைய படிவத்தைத் தரித்துககொண் டிங்நாட்டிய நிலனிற்போதுகின்றனனென்று கருதுகின்றேன். மேல் நாடகதனைத நடததுவோம். அச்சமடையாதி வாவென்று கைப்பற்றி அவைக்கணழைததுவந்தனன் உடனே சாரணன்வந்து தூரததிற் கணேணச்செலவிட்டு, ஆஙகுப்போதுகின்றவன் யாவன்? தேவாசுராகளெல்லாரும் பூசிக்கும் பாதாரவிந்தத்தை யுடையாராயும, திரிலோகாதிபராயும், நமக்குச் சுவாமியாயுமிருககிற இராவணனைசுவரரால் மிதிலாதேசததுக்குச்செல்ல வேவப்பட்டுவருஞ சுகன் போற்றேன்றுகின்றுனென்று நின்றனன். உடனே சுகன் சாரப்போந்து சாரணனைனோக்கா, நீ யிங்கணவந்த காரியமென்னையெனச சாரணன் நீ வந்தகாரிய மென்னென்றனன். சுக னவனை ப்பாாத்து நான் பின்னர்மொழிகின்றனென். நீ வந்தவா றுரைத்தியெனச் சாரணன், ஏசுகனே! கேண்மோ, ஜனகருடைய்யாகபூமியி லவதரித்தவளாயும், மூன்றுலோகத்திலுமுள்ள பெண்கட்கருங்கலனுயுமிருக்கிற ஜானகியை நமககுத்தரும்படி ஜனகராசனிடத்திற் பேசிவருவாயென நமதரசராகிய இலஙகாதிபராலேவப்பட்டு வந்தேனென்றனன். சுகனதைக்கேட்டு, தெய்வமகளிர்களெல்லாரையு மிலங்கையிற் கொணடுவந்து சிறைச்சாலையில்லடைத்தது குழந்தைகள் விளையாடும் வணடல்விளையாடடுப்போலான இராவணனுர்க்கு மக்கட்பிறப்பினரான ஜனகரிடததில் வணககம்வந்தது ஆச்சரியத்தினுமாச்சரியம, சிதையைப பலாதகாரமா யெடுததுப்போக இராவணனுா கருதாததறகுக காரணமென்னையோவென்றனன். சாரணன் சுகனே! அரமபையிட்ட சாபததை நீயறியாயோ? அஃதன்றியு நட்பினரான ஜனகாவருந்த நமதனை

யர் சீதையைச் சிறையெடார. ஆனதுபற்றி நீ சொன்ன துசி தமாகாதென்றனன். சுகன் சாரணனே! கேட்பாய், இரதியினு மழகுமிகக மைதிலி யிரகுபுஙகவனுடையகட்டழகையும், வீரத்தையும, குணத்தையுஙகேட் டவனையே பதியாயடைவேனெ ன்கின்றனள். ஜனகரு மதைக்கேட்டுச் சம்மதித்திராவண ருககுப்பயந்து, சீதைககு மிராமனுக்கும் பரிணயமுடிக்கும்படி புரந்தராதிக்கடவுளாகளை யின்னேபடைக் கின்றனெனென் றுதொடங்கிய விசுவாமித்திரனைக் கேட்டுக்கொணடிருக்கின் றனா. அவ்விசுவாமித்திரனு மதறகிணஙகித் தலைப்பட்டுத்தான் யாகஞ்செய்வதாய்ப் பெயரிட்டுககொண்டு இராமனுடன் தச ரதர் கோசலைமுதலானவாகளை யழைத்துவர அயோத்தியா புரிககுச்சென்றிருககின்றனன் ஜனகா தமககிளையவனான கு சததுவசனை மிதிலையில் வைத்துவிட்டுக காதிகாதலனால் மகத் துக்கழைக்கப்பட்டவாபோல வெளியிட்டுக்கொண்டு புத்திரி யான பூமிஜாவுடன் கோசிகனாச்சிரமத்தில் வந்திருககின்ற னா. மகருஷி யிராசருஷியாகிய வவ்விருவருடைய கபடச் செயலை யோருங்காற் சீதைககு மிராமனுககுமே மண நடக் குமென் றெண்ணுகினறனெனென்றனன் சாரணன் சுகனைப் பாாத்து, அப்படி முடிவதானால் நாமென்செய்குதும். அரசனு டைய ஆணைப்படி ஜனகா வசிககிற விசுவாமித்திர னாசிரமத் துக்குப போகின்றேனென்றனன். சுகனவனைப்பார்த்து நீ யா ஙகுசசெல்வதிற் பயன்யாதெனச் சாரணன் சுகனே! பயன் யாதெனலாமோ? பிரமகுலததிற்பிறந்தவா, அதிகபிரதாப முள்ளவா. இந்திராதியரையாளுகின்றவா. வெள்ளியங்கிரி யை யீசனோடெடுத்துப் பந்தாடினவா, தாமே விரும்பி மணமகனாகின்றேனென்றாற் பெண்கொடேனென்று மறுப் பாருமுளரோவென, சுகன் சாரணனே! கேட்டி. அவ் வாறாயினும் ஜனகா தமது பெண்ணினுடைய கருத்துககியை ந்து மறுப்பரென்றனன். சாரணன் சிறிதாலோசித்து, சுகனே! இலங்கேசருடைய குலப்பெருமைமிக்க, அயனருளிய அள விலாவாயுளார். அரனீந்தவாளர், செவியடங்காககேள்வி

யர், மதனன் வியக்குஞ்செவ்வியர், திரிலோகநாதர், தசக்கிரீவர், அவனைவிட்டு மானிடச்சிறுவனுகிய இராமனிடத்திற் சீதையம்மா ளெவ்வாறுசையுறறனள்? இலஙகாதிபதி சானகியையடையும்பொருடடு, நாமிபபோது செய்யவேண்டியது யாதெனிற்சீதை யிராமன்பாற் கொண்டிராநின்ற வன்பைத்தொலைததது நமது சுவாமியை வேட்கும்படி செய்யவேண்டியதென்று கருதுகின்றேனென்றனன். சுகனதைக்கேட்டு, சாரணு ! சீதையிராமனைத்தவிர வேறொருவனை யுமுன்னவேமாட்டாள் இதனில் நீ முயலவதுபயன்தராது ஆனுலொரு சூழ்ச்சிசொல்கின்றேன் அதைசசெய்யின முடியினுமுடியும், தசரதர்முதலாயவாகளைக் கலியாணததுக்கழைததுவர அயோத்திக்குபபோயிருககின்ற க்ஷத்திரியபபாாபபானுகிய விசுவாமித்திரனுடையவரவைத்தடுத்து, இராமனைப்போல விராவணரும், விசுவாமிததிரனைப்போல விதயுஜ்ஜிஹ்வனுமாயையா லுருவங்கொண்டு ஜனகாபாலனுகவேணடுமெனலும், சாரண னச்சூழ்ச்சியைக் கேடடுமகிழ்ந்து சுகனே ! நீமொழிந்தது நன்றுநன்று நீ சொன்னவுபாயத்தா லிராசகாரியங்குறைவின்றி நிறைவேறும் சாகேததகினின்றுபோதுங கோசிகனைததடுபபது ஆயிரங்களிற்றின்வலியுள்ள நமது தாடகையாலன்றி மற்றொருவராலுமொண்ணுது. அததாடகையை யேவுவமே லோரிடத்திற் கரநதிருந்து வழியில்வரும்போது அரசவந்தணனைக்கொன்று மென்றுதின்றுவிடுவாள். கொல்லுமுன் விசுவாமித்திரனுக் கன்னவளுடைய கொள்கை தெரிந்தாலும், பெண்ணென்றிரங்கிக் கொடுமைபுரியாது விட்டுவிடுவனென்றனன் சுகன் நன்றுநன்று, அவ்வாறேசெய்யும்படி தாடகையை விரைவில் நீசெல்லவிடுதி. நான்சென்று இலங்கேசர்க கிச்சூழ்ச்சியையுரைத் தவரையழைத்துவருகின்றனெனென் றகன்றுபோயினன். அககாலை யிருகடைவாயினின்று சிந்தாநின்ற தசைகளைவிரும்பிக கையேந்திபபற்காட்டிக கெஞ்சுகின்ற கழுதுகளும, விரிசிறைக்கழுகுகளும் புடைசூழக் கருவரையெனத திரண்டு நீண்டு நான்றுடாநின்றகொங்கை

களால் கருமுகில்களாடிபட்டு வாய்வெரீஇக் கதறித் திசைதிசை யோடத்தாடகைவந்தனள். வந்தவளைநோக்கி நின்றநிருதன் ஏ பெரியவளே! சாரணன் நமஸ்காரஞ்செய்கின்றேனென வந்ததாடகை சாரண! தீர்க்காயுள் பெறுதியென்றனள். சாரணன் அம்மா! அதிவிரைவாய நீ யெவணேகுகின்றாயென அவள் சாரண! கேண்மோ விசுவாமித்திரன்புரியு மகமழியுமாறு செய்யாமையின்பொருட் டம்முனிவனுடைய மித்திரனாகிய பரசுராமனாற் பிரார்த்திக்கப்பட்ட நம தாண்டகையாகிய தசக்கிரீவனுடைய வாணையை மாரீசனுக்கறிவிப்பான் செல்கின்றேனென்றனள். சாரணனதைக்கேட்டு நகையாடி நாசியிற்றர்ச்சனி விரலைநிறுவித்தலைதுளக்கி விசுவாமித்திரனுடைய வுபாய நன்றாயிருக்கின்றது சதுர்வித வுபாயங்களினு மிகுந்தவல்லவனுனதாற் பிறந்தயோனியையும் வேறுபடுத்திக்கொண்டான ஏ தாடகை! சீதைக்குமிராமனுக்குங் கலியாணஞ்செய்யும்பொருட்டுச் சனகனும் விசுவாமித்திரனுங் கூடி யாகமென்று பொய்யேற்பாடுசெய்துகொண்டிருக்கின்றனர். நமதுபெருமான் இராவணரோ மைதிலியை நினைத்துநினைத்து அனலுற்றமெழுகுபோ லுருகுகின்றனரென, தாடகை குழந்தாய! சாரண! அவ்வாறாயின், அம்மைதிலியை நாமொருவருமுணராது தூக்கிக்கொண்டு வருகின்றேனென்றனள். சாரணன் தாடகை! அது யுக்தமன்று, இராவணர் திக்குவிஜயஞ்செய்தகாலத்தில் இமயமலைச்சாரலி லோர்நாள் தங்கியிருந்தனர். அன்று குபேரனுடையகுமாரன் நளகூபரனை யணையச்சென்ற அரம்பையைநோக்கி, அத்தசக்கிரீவர் மோகங்கொண் டவளை யிரந்தனர். அவ ளுடன்படேனெனலும், கேளாது மேல்வீழ்ந்தனர். வீழ்கையி லவளசினந்து அடாபாவி! நின்னைவிரும்பாத மாதர்களை, இனிவலிசெய்து புணர்வாயே லெனதுமொழியால் நீ கேடெய்துகவென்று சபித்தனள். நீ சீதையையபகரித்துவந்து மவளிணங்காவிடின் நீதூக்கிச் சுமந்துவந்ததுதான் பயனாய்முடியுமாகலின், இலங்கேசர் சீதையை யடையும்பொருட்டு நானுஞ்சுகனுஞ்சூழ்ந்த

சூழ்ச்சி யீதென்று முன்னுய்ந்து துணிந்ததையுரைத்தலும், அக் கொடியாள் கேட்டுவந்து சாரணனைகொண்டாடிக் குழந் தாய! மன்றல்செய்யும்பொருட்டு யாகமென்றுபெயரிட்டு வஞ் சஞ்செய்வோமாகனே, நாம் வஞ்சனையாலேயே வேறல்வேண டும் நான்சென்று விசுவாமித்திரன் வரும் வழியிலிருந்து அவனை விழுங்கிவிடுகின்றேன். நீயிப்போதே யிலங்கைசா ந்தரசனை யழைத்துவாவென் றுரைத்தேகினள். பின்பு சாரணன் சுகனழைத்தலு மிராவணா தாமதியாது வந்துவிடு வர். நாமிலங்கைக்குப்போகவேண்டுவதில்லை. அரசமாதவனை க்கொல்லத் தாடகைக்குதவியாய் மாயையிலவல்ல மாரீசன் சு வாகுமுதலியோரை யனுப்புவோமென்று புறம்போந்தான். அவ்வேலை சுகனுற்கூவப்பட்ட இராவணன் விதயுஜிஹ்வனோ டுவந்து, ஏசாரணு! என்செய்கேன், சீதையால் யான்படுமின்ன லை யாரிடத்துரைசெய்தாறுவேன். பூமகளான அவளதுபொ ற்பையுங் குணத்தையுங்கேட்டபின்னா உலகிலுள்ள மற்றை மகளிர்களெல்லாருமெனக் காணுகத்தோன்றுகின்றனரே. அ தையறிந்து மதனனென்னேடு மாறுபுரிகின்றனன் சீதையை ப்பெறுவிடின் இறந்தாலன்றி யவ்வநங்கனுடைய வலியைக கடக்க வலியிலேன் யான் சீதையைப்பெறுமாறு புரிதியெ னச் சாரணன், இலங்காதிபரே! நீர் இராமனைப்போல வுருக் கொள்ளும், ஜானகியையானே நுமக்குக்கொடுக்கின்றேன். இ ராமவேடத்தைத்தரிக்க வுமக்கு மனமில்லாவிடின் சீதையை மறந்துவிடும். அம்மைதிலி யிராமனிடத்திற் கொண்டிராநின் ற வன்பைவிட்டாலும, இருபதுகையும் பத்துத்தலையுமுடைய வும்மை விகாரவடிவனெனகொண்டு விரும்பாளென்றனன். இராவணன் ஓசாரணு! ஓர் மானிடப்பெண்ணை நான் காத லித்தகாரணத்தால் தசகிரீவன்த சக்கிரீவனென்று மும்மை யுலகமும் வழுத்தும் பெருமைசான்ற வென்னை நானேவெறுத் துஇராமனைப்போல வேடங்கொள்வதினெனக்கு நாணந்தலைக் கொள்கின்றதெனச் சாரணன்கைகுவித்து இலங்கேசரோ! கே ளும். விதர்ப்பதேசத்து மன்னவன் மங்கையாகிய தமயந்தி

யை மணம்புரியக்காதலித்து இந்திரன்முதலிய சில வமரர்கள்
மனிசனுகிய நளசக்கரவாத்தியினுடைய வேடத்தைததரித்
தனவொன்பதைக கேட்டிலீரோ நீரிப்போது செய்யததொடங்
குவது புதிதன்று. விண்ணவாகளும் விருடபிச்செய்த வினைய
மேயென்றனன். அவ்வேலை யாங்குநினற விதயுஜ்ஜிஹ்வன் அவ்
விந்திராதிவிபுதா நளனுடையவேடந்தாங்கியுந் தமயந்தியை
யடையாததுபோ லிவ்விராவண னிராகவனுடையமேனியை
க் கொண்டாலுஞ் சீதையைபபெறுனென்று மனததினுட்சிரி
த்து, அஃதை வெளிக்காட்டாது இராவணனைத்தொழுது ஐய!
சிறிதுபொழுது இராமனுடைய வேடத்தைத்தரிப்பதி லித்த
னையாலோசனையென்னை ? பாணிககாமல் நாம் விசுவாமித்திர
னுடைய ஆச்சிரமஞ் சாரவேணடுமெனறனன். இராவணன்,
அவ்வித்யுஜ்ஜிஹ்வனையும், சாரணனையும் பாரா நீவிா மொழி
வதினின்று நாமொழிவதிலலை கோசிகனுச்சிரமஞ்செல்வோ
ம். புஷ்பகமென்னுமுன் அவ்விமானமவந்தெதிாநின்றது வித்
யுஜ்ஜிஹ்வனேககி மூன்றுலோகததிலிராநின்ற வெழின் மிக்க
பிறுககளெலலாரு மிலஙகேசராகிய வுமகேயுரியவாகளென்
றற்குச் சான்று, திக்விஜயஞ்செய்தகாலததில நீர்காதலித்த
தடமுலையாாகளைத் தொகுதிதொகுதியா யேற்றிவருங்காலையப்
பெண்களுடைய பெருமூச்சுப்பட்டு வேறுவேறு வணணஙகளை
க்கொணடிராநின்ற முத்துமாலைகளாற் ரேறறமாறிநின்றதித்
தெய்வ விமானமேயன்றோவெனத் தசக்கிரீவ னதைககேட்
டுச் சிறிதுசினமு நாணமுமுற்ற டாவித்யு ஜிஹ்வா! நீசொன்ன
வாறன்று. வீரமில்லாதவனைப்போல நமதாணடைகை யிராவண
னிருஞான்று தமதியற்கையுருவத்தைமாற்றி வேறுருக்கொ
ண்டு வஞ்சஞ்செய்யத் தொடங்குகின்றனராகலின் நாமு நமது
ருவைமாற்றி மாறுதோற்றம் பற்றவேண்டுமெனக்கொடு விமா
ன மவ்வாறிருககின்றதென நினைககின்றனெனென்று, விதயு
ஜிஹ்வா ! இன்னுமபாராய், விமானத்தைககணடு சிததா வித்
தியாதரர் கின்னரா கந்தருவா முதலாகிய விண்ணவரெல்லா
ரும் வணஙகாமலுங் துதிககாமலுமிருக்கின்றாகள். விமானத்

திரிசாசரருடைய ஆர்ப்பையடைகளும் விட்புலமடந்தையர்களுடைய கானமு மவாநடனமும் பல்லியமுழக்கமு மில்லையென்றனன் அவ்வித்யுஜ்ஜிஹ்வன் திரிலோகாதிபதியே! மிதிலைநாடு மை யடையுமாறு கருதுவதையன்றி வேறொன்றையு மிப்போது நோககறக. சீதையை மணம்புரிந்து மேகமுமின்னலும்போல நீரிலங்காபுரிக்கேகும்வேலை யெல்லா முன்போலாகும் சுவாமி! விமானமீ திவரலாமென்றனன். பின்னர் இராவணன் வித்யுஜ்ஜிஹ்வனுடனும், சாரணனுடனும், புட்பக மேற்கொள்ளு மததேவவிமானங் காயமகழிச்சென்றது சாரணனேஜைசகிஜகநீசரோ! இலங்கைநாதரோ! விமான மதிவேகமாய்ச் செல்கின்றது பூமி கீழேவிழுகின்றதுபோற் றோன்றுகின்றது கடல் விரலாற்கீறியகோடுபோற் றோன்றுகின்றது. உதயகிரி அஸ்தகிரி சிறு மண்ணுங்கட்டிகள்போலத் தெரிகின்றனவென றோதுங்காலை வித்யுஜ்ஜிஹ்வன் இலங்கேசரே! விசுவாமித்திரருடைய பன்னசாலைக்கணித்தாய் வந்துவிட்டோம் கனிந்து செங்தேன்பிலகுகின்ற நறுங்கனிகளையுடைய பலதருக்களடர்ந்த சிறுவனமாயிருக்கின்றது அத்தருக்களின்பணைகளில் மரவுரிகளுமான்றோல்களுந் தூங்குகின்றன வனமுழுவதும் புலித்தோல்தர்ப்பாசனங்கள் முதலிய நிறைந்திருக்கின்றன மிருகங்கள் ஊர்வன பட்சிகள் பகையின்றித் திரியாநின்றன, ருஷிகளெல்லாருஞ் சமித்துகளை நாடுகின்றனர். சிலரெரியோம்புகின்றனர். சிலர் தவம்புரிகின்றனர். ஆகலாற கோசிகனுடைய குடிலை யிதுவேயென்றனன். இராவணன் புட்பகத்துநின்றிறங்கி சாரணா! மைதிலியினுடைய நெறித்திருண்டு நீண்டுநெய்த்துக்கடைகுழன்ற கூந்தலிற்றோய்ந்த காற்றுவீசும்பக்கமாய்ச் செல்வோமெனச் சாரணன் சுவாமி! நாம் கண்கட்டிவிதையினா லொருவருமறியாது எங்குமுழன்று மாக்கள் சொல்லும்வார்த்தைகளை யறியவேண்டுமென்றனன் வித்யுஜ்ஜிஹ்வன் தனதுகண்ணைமூடிப் பிறாகணனுக்குததாஙகள் மூவருந்தெரியாமலும் பேசிக்கொள்வது கேளாமலு மிருக்கும கண்கட்டி வித்தைசெய்தான். பின்னர் இராவணன்முதல் மூ

வருஞ் சிறிதுசேய்மைக்கட்சென் றோர்மரத்தடியினிற்றலு ம, பகவான் விசுவாமித்திரருடைய மாணுக்கன சத்தியவி ரதனும், சதானந்த மகருஷியினுடைய மாணுககன் தேவவி ரதனும், முப்புரிநூற் புரளு மார்பினராய், முஞ்சியணிந்த இ டையினராய்,வேதநவிலு நாவினராய் வந்தனா வந்தவாகளில் சத்தியவிரதன, தேவவிரதா!அயோத்தியாபுரிக்குச சென்றுள் ளபகவான் விசுவாமித்திரமகருஷியாரா லெரியோம்பும்படி நான் நியமிக்கப்பட்டிருக்கிறேனுகலாற றருப்பைசமித்துக்கொ ண்டுபோகவேண்டுமென்றனன். தேவவிரதன, ஜனகருடனி ருக்கிற சதானந்த மகருஷிக்குத தாப்புல் சமிதை நானுங்கொ ணடுபோகவேண்டுமென்றனன். சத்தியவிரதன் தேவவிரத னைப் பாரா, ஜனக ரொததனைநாள் விசுவாமித்திரருடைய ஆச் சிரமத்திலுறைவரெனத் தேவவிரதன் மகருஷியாக முடிக்குங காறு மவணுறைவரெனறனன் அவ்வேலை மரத்தடியினின்ற தசக்கிரீவன் சாரணு! இந்தப்பிரமசாரிக ளிருவருங் காதிகாத லன், கௌதமன் காதல னிருவருடைய மாணுக்கர்களெ ன்று நினையாநின்றேன் அவாகள்நேசததா லொருவாக்கொரு வா வார்த்தைசொலலிக்கொள்ளு மழகைபபார்த்தாயோ ? அ வவெல்லா நாமறைந்திருந்து கேட்போமென்றனன். சாரண ன் இலங்காதிபரே! வித்யுஜ்ஜிஹ்வனுடைய கணகட்டிவித் தையை நோக்கவிலலையோ? நாமிருககின்றதையும் பேசுகின் றதையு மவர்களறிகின்றிலரே, நமக்குவேறுகரந்துறைநிலையே ன்ன வேணடியிருக்கின்றது ? இசைசையானவிடனிற் சுகமாயு லாவலாமென்றனன. தேவவிரதன் சத்தியவிரதா! யாகததை க கெடுக்கிறதற கெண்ணிறந்த நிசிசராகள் தீட்சித்துக்கொ ணடிருக்கையிற் பக ான் கோசிக ரசசமிலா தெவவாறு த லைபபட்டனரென, சத்தியவிரதன் தேவவிரதா! கேள். முன் னோர்ஞான்று சரணமடைந்த திரிசங்குவுக்குத் தனுவுடன் து றக்கமெயத வருளியகாலை சுரர்கள்புரிந்த தவற்றால் உலகங்கள் முதல் யாவும மாறுபடைககின்றேனெனறெடுத்த முனிவைப் பிரமன்வேணடவிடுத்தவரும, ஆட்டைப்போல யூபத்திலணைத்

து வதைசெய்வான் அயோத்தியராணடைகையாகிய அம்பரீஷன் தாய்தந்தையருககு விலைகொடுதது வாங்கிவந்த சுனசேபனுக் காருயிரையளித்தவருமாகிய பகவான் விசுவாமித்திர மகருஷியாரக்கு இராக்கதரிடத்தி லச்சமுமுணடோவென்றனன். ஒளிந்துநின்றவித்யுஜ்ஜிஹ்வன் சாரணு! இந்தப் பிரமசாரியினுடைய வார்த்தையைக்கேட்டாயோவெனச் சாரணன் ஆம், கேட்டேன், விசுவாமித்திரனுடைய வலிமையறிந்து தான் நமதரசர் மகாமாயாவியான மாரீசனை யிந்தப்பிரதேசததில் நியமித்திருககின்றனரென விதயுஜ்ஜிஹ்வன் உணமைதான். மாரீசன் மாயையில் மிகுதியும்வலலவன், அமரரோடு சமரநோந்த காலையில் பகலையிரவாக மாற்றினன் அககணததிலேயே பகலாய்ச்செய்தனன். நீருணடபுயலகள் சூழந்தாறபோற ரூற்றுவித்தனன். புகைநெருஙகினூற்போலுண்டாககி விழிபிதுங்கச்செய்தனன், பின்னும் பறபல மாயைபுரிந்தனனன்றூவெனவு மிராவணன் விதயுஜ்ஜிஹவா! பாம்பின்காலைப பாம்பேயறியுமாபோல மாரீசனுடைய மாயையை யுணாந்தவனீயேயென்று கொணடாடினன் கோசிகா மாணுககனுகிய சததியவிரதன் தேவவிரதா! பகவான் விசுவாமித்திர மகருஷியினுடைய நோன்பினுன்மையைப் பாராய் கொடடாவிவிடாநின்ற சிங்கத்தினுடைய வாயிலிருக்கிற முளரிநாளத்தைக் கடகரி தனது புழைக்கையாறபறறி யீரப்பதைககாணுய், புன்மேயச்சென்றுள்ள ஆனிரையின் குழக்கன்றுகள் பெருமுழைகளிலுறைகினற பெண்புலியினிடத்துப் பால்குடிககின்றதைநோக்காய், விசுவாமித்திரரைப்போல் தேசுந் திறலுமுடையாரும், அம்மகருஷியின் றிறத்தை யறியாதாரு மிவவுலகில் யாவரெனத் தேவவிரதன் ஆமாம் பகவான் விசுவாமிததிரா யாரினுஞ்சிறந்தவராயதினூற்று னிராக்கதருககு வெருவாது மகம்புரியத்தொடஙகித தமது மிததிரராகிய தசரதசக்கரவாததியை யழைத்துவரப் போயிருசகின்றனரென்றனன் விதயுஜ்ஜிஹ்வன் வெகுண்டு சாரணு! பிரமசாரியான விசசிறுவன் மாரீசனுடைய மாயையையறிந்தவனலலனுகலால விசுவாமித்தி

ரனைப்போற்றுகின்றனனெனச் சாரணன் விதயுஜிஹ்வா! ஒவ்வொருவனுந் தன்னைச்சார்ந்தவனைப்போற்றுகிற துலகியல்பு. விசுவாமித்திரனை யவன்புகழ்வதினால் நீயடைந்தபேறழிவியா தெனவித்யுஜிஹ்வ னதைக்கேட்டுமடங்காது மாயைவல்லவன் மாரீசனையன்றி யாவனிருக்கின்றனன். ஒருவர்களுக்கும் புலப்படாது ருஷிகள்செய்யும் யஜ்ஞங்களிற் போந்தாங்குள்ளவிப்பிராகளையடிப்பன், கடிப்பன். யூபங்களைமுறிப்பன். மட்பாத்திரங்களையு மரப்பாத் திரங்களையுந்தகர்ப்பன். பசுக்களையு மவிகளையுந்தின்பன். வேள்வித்தீயையவிப்பன். உருட்டிவிழித்து ருஷிபத்தினிகளை வெருட்டுவன். அதுநிற்க, கோசிகமாமுனிபயந்து யாகத்தை முடிப்பிக்கவேண்டுமென்று பரசுராமர்மூலமாய் நமதரசனிடத்து விண்ணப்பஞ்செய்துகொண்டதை யிப்பிரமசாரியறியான்போலும், அதையறிந்தவனாயினவ்வாறுபுகலான் வசிட்டரது காமதேனுவினுடைய மயிர்களினின்றுமுதித்த துருக்கர் முதலானவர்களாலடிபட்டுதே தவஞ்செய்யப்போகிறேனென்று கானத்துக்கோடிய விசுவாமித்திரன் திண்ணியன், தொடங்கியகருமத்தை முடிக்கவல்லவனென் றெல்லாந்தெரிந்த ஜனகரெவ்வாறு துணைக்கொண்டனர். ஈது வியப்பென்றனன். இராவணனதைச் செவியேற்று விதயுஜிஹ்வா! விசுவாமித்திரனைப்பற்றி யழகாயசொல்லினையென்று கைபுடைத்தனன். சத்தியவிரதன் தேவவிரதா! தசரதசக்கரவர்த்திக்கு ருஷியசிருங்க மகருஷியினுடைய அனுக்கிரகத்தால் நான்குகுமாரர்கள் தோன்றியிருக்கின்றனர்களென்றும், அவர்களில் இராமசந்திரர் அநந்தகல்யாணகுணசம்பூர்ணரென்று மீரேழுலகத்தவர்களுக்கு மாநந்தங்கொடுக்குஞ் சௌலப்பியமொன்றுங் கேள்வியுறுகின்றேன். நீயறிவாயோவென, தேவவிரதன் நானறிவேன். பிரபன்னரான ஜனகமஹாராஜாவினிடத் தெனது தேசிகரான சதாநந்த மகருஷி தசரதசக்கரவர்த்திக்குப் புதல்வராயவதரித்திருக்கின்ற இராமர் ஜகத்காரணர், உலகமெல்லாமெதிர்த்தாலும் வெல்லு மாற்றலர், செருக்கில்லாதவர், வஞ்சமில்லாதவர், பொய்யு

ணையாதவா. அஸ்திரசஸ்திரவித்தையிற் றேர்ந்தவா பிரமச ரியாச்சிரமத்தி லிருக்கின்றவா, யாவரினு மேன்மையரோ ன் றடிக்கடிசொல்லுங்காலே கேட்டிருக்கின்றனெனென்றனன் அப்போது இராவணன் அழுககாறுற்று வித்யுஜ்ஜிஹ்வா! மூட்டி வாங்கு மிப்பிரமசாரியினுடைய குழறலைக்கேட்டாயோ? தாப மைகொண்டு சீவிக்கிற சதானந்த னெப்பொழுது மந்திபோ லச் சனகர் பக்கலிருந்துகொண்டு இராமனைக்குறித்துப் பித ற்றுகின்றனென்று நன்குவிளங்குகின்றது. அப்பிதற்றலைக் கேட்டே சனகரு மவாபுதல்விய மிராமனையே விரும்புகின் றனா. அங்ஙனமில்லாவிடின் திரிலோகாதிபதியாகிய வென்னை விட் டிராகவனை வரிக்கிறதற்குக் காரணமில்லையென்றனன் வி தயுஜ்ஜிஹ்வன் சாரணு! கேள் அச்சதானந்தனுடைய வன்னை யாகிய அகலிகையை வலாரிகறபழித்தனன் அவ்விந்திரனை நமதிலங்கேசா சிறைபபடுத்தினா, தனதுதாயையழித்தோ னையிழித்தவனை வழுத்தாது எங்கேயோ நேற்றுப்பிறந்த வோ ாசிறுவனைப் புகழ்கின்றனனுகலா லச்சதானந்தன் நன்றியறி யாதவன்போலுமென்றனன் சத்தியவிரதன் ஆமாம். நீசொன் னபடியேசதானந்தா ஜனகரிடத்தில் இராமனை யெப்போதுந் துதிக்கிறபடியாலே சீதை யிராமனோ நாயகனென் றுறுதியா யிருக்கின்றளெனத் தேவவிரதன் சத்தியவிரதா! அதனிற்சந் தேகமா? சதானந்த ரிடைவிடா திராமனைப்புகழகின்றமை யாற் சனகா சதானந்தருக்கு இராமஸ்தோத்திரம பண்ணுகின் றவரொன்று பெயரிட்டழைக்கின்றனரொன்றனன். வித்யுஜ்ஜிஹ வன சாரணு! உள்ளது வெளிப்பட்டது கேட்டாயோ? சதா னந்தனைச்சவட்டாது விடுவோமாகு லவனெப்போது மிராம னையே புகழ்ந்துகொண்டிருப்பன் அதைக்கேட்குறும் ஜனக ருக்குஞ் சீதைக்குமிராகவன்கண்ணே யன்புவளருமாதலால நமதுமாரீசனையேவிறற் சதானந்தனை யெடுத்துத்தண்டா துவிழுங்கிவிடுவானென்றனன். தேவவிரதன் சத்தியவிர தா! ஓர்நாள் சதானந்த ரிராமனைப்பழிச்சுங்காலை ஜனகா சதானந்தரோ! நீரெப்போது மிராமனைபபுகழ்கின்றீா. நமது

சீதையும் அவ்விராகவனையே வரிக்கின்றாள். சூரியகுலத்துசகு ஞ் சந்திரகுலததுக்குஞ சம்பந்தஞ்செய்யததகுதிதான், ஆயினு மவ்விருவருககுஙகலியாண நடப்பதரிதென்று நினைசகின்றே னென்றனரென்றனன அசகாலே விதயுஜிஹ்வன் ஜனகா நன் றுகூறினா, திரிலோகாதிபதியார் சீதையை வேணடுகையில் கோசலை முதலைக்குவதுவை நடக்குமோவென்றனன். சாரண ன் விதயுஜிஹ்வா! அடுத்தடுத்து நினதுவாயைவிள்ளற்க. பண வாகுலச்சிறுவாகளுடைய வார்த்தையை முற்றுங்கேட்போ மென்றனன் சததியவிரதன் தேவவிரதனைநோக்கி இராமபிரா னுககுஞ் சீதைக்கும் விவாக நடப்பதுவருத்தமென்று ஜனகர் சொலல ஏதுவேதெனத் தேவவிரதன் சததியவிரதா! பிரம னுடைய கொள்பெயரனும, பெருந்திண்மையனும், நாலைந்து கையனும், ஈரைந்து தலையனும், இந்திராதியரை யேவல்கொள் கின்றவனுமாகிய இலஙகேசன் சீதையை மணமபுரியவேண்டு கின்றனனென்று இரகசியமாய்ததாமகேள்விப்படுகிறபடியால் அச்சனகா தமதாரியனைநோககி ஏசதானந்தரே! இராவணனு க்குப்பயந்து சீதையை யவனுக்குக்கொடுக்கிறதா? உமதுமதப் படியும் சீதையினுடைய சம்மதபபடியு மிராமனுக்குத்திருமணம்புணர்க்கிறதா? என்செய்கிறதென்று நெஞசமறுகுகின்ற னனென்றோதினரொன்றனன். வித்யுஜிஹ்வன் நமமுடைய ஜனகா சதானந்தனுடையவாயை நன்றாயடககினர். அவ் வேலே சதானந்தனுடையமுகம் இரந்தவர் மகிழும்படிகோ டுத தவருவத்தலைக் கண்டுவெந்தறியானை யிரந்து மீளுவோனு டைய வதனத்தைக் குறைவறவொததிருக்குமென் றெண்ணு கின்றேனென்றான். சத்தியவிரதன் தேவவிரதா! முன்னொ காலத்தில்வாலி இராவணனுடைய இருபதுகைகள் முன்னையு மிரண்டுகாலகள் பின்னையு நாலப்புறத்தி லுதரபந்தனத்தைப பறறித் தூசகிச கேடகம்பற்றினவனைப் போலத்திரித்துக கட்லினுள் நாகலோகங்காறு மழுத்திஎடுத்து வானிலொற் றி மலைகளின்மோதித் தரையிற்றேய்த்துப் பேய்ப்பயலே! இ ராவணா! என்னை யாராகநினைத்து என்செய்தா யென்செய்தா

யென் றொருகையா லிருபது கன்னங்களையு மப்பம்போல வு ப்பப்புடைத்தகாலைப் பிரமனுடைய கொள்பெயரனென்றபெ யரும், மகாபலமும், இருபதுகையும், பத்துத்தலையும் விட்புலத் தரசன் முதலியோரை யேவல்கொள்கின்ற வாணமையு மெங் கேபோயின? அப்போது இராவணன் தாரையினுடைய தா ளினிலங்தோயவீழ்ந்து கதற,அவள் வாலிபுயத்தில் தனது தட ஙகொங்கையைப்பூட்டி அன்ப! தசக்கிரீவனைவிட்டு வெருட் டென்று கிஞ்சுகவாயாற் பஞ்சரக்கிளிபோற் கொஞ்சாவிடின ன்றே முடிவனன்றேயென்றனன் இராவணன் மீசைதுடிப் பக் கண்கள்சிவப்ப வெயிற்றாலிதழதுக்கிப் பெருமூச்செறிந்து இக்கொடியபிரமசாரியை யின்னே வாளுக்கிரையாககினே னென்று முனிந்தான். பின்ன ரவ்விராவணன், வித்யுஜ்ஜிஹ் வன் சாரண னவ்விருவருடைய மொழியா லமமுனிவை நீக்கி நின்றுவித்யுஜ்ஜிஹ்வனைநோககி வாலியென்றொருகுரங்கென்னி லும் தோள்வலியுடையதோ? அற்றைஞான்றோ காரணத்தா லெளிதிலகப்பட்டுக்கொணடேன். என்னை யெடுத்துச் சுற்றும் படியான சிறிது வன்மையேயவ்வலிமுகத்துக்கிருந்தது. உட னே நான்குத்திய வொரோகுத்தா லக்குரங்குஞ் சலித்தது. பின்னா நாங்களிருவரு முறவாடிக்கொண்டோம். இதனல் வா லிக்கு வெற்றியென்ன? எனக்குத் தோல்வியென்ன? என்றன ன். சாரண னதைககேட்டுச் சுவாமி! இலங்கேசரோ! அறியாப் பிள்ளையினுடைய வார்த்தையிற் றங்கள்சினங்கொளலாமோ? ஏழை தஙகளுடைய பெருமையை யுணராமையினற் றங கட்கிளிவரலென்ன? சிவன் வீற்றிருககுங் கைலைவெற்பைச் சுல்லிவேருடன்பறித்துத் தங்கள் கைகள் பந்தாடவில்லை யோ? அவ்வெற்பைப் பிடுங்கினகாலை பார்வதி பயமுற்று ஓ டிவந்து தழுவிக்கொள்ளக் கலகலவென்று சிரித்து வலிய வோர் பெண்வந்து தழுவிக்கொள்ளும்படியாகிய பாக்கியத்தை யிலங்காதிபதியா லின்றுபெற்றேனென்று எல்லாராலுங் கொ ண்டாடப்படுஞ் சங்கரன் தங்களைககொணடாடவில்லையோ வென்றனன். தேவவிரதன் ஏசத்தியவிரதா! இராவணனோ

சமயத்தில் வாலியா லிழுக்குற்றனந்த நீயிளிவரலெனப்புகல
வது தகுதியன்றெனச் சத்தியவிரதன் ஓதேவவிரதா! அதுமட்
டுமோ ரேவாநதியில் ஐஞ்ஞூறு கைகளா லோடுபுனலைம
றித்து மற்றைநூறு கைகளாற் காமனுங் காமிக்குமாதர் மா
தாகளுடைய தனத்திற்கழுமவப்பிய கலவைகளைக்கழுவியும், நா
கமென நான்ற பின்னலைப் பிடித்தீர்த்தும், தங்கத்தட்டமெ
ன வொளிராநின்ற நிதம்பந்தோன்ற மேகலைசூழ்ந்த கலையை
நீக்கியும், புனலை முகத்திலெற்றியும், இருகுறங்கினூடு கையை
க்கொடுத்துத் தடங்கொங்கைபற்றி யுயரத்தூக்கி யாகாயகங்
கையிற் றோய்த்தும் விளையாடிய கார்த்தவீரியார்ச்சுனனாற்
கட்டுண்டு சிறையிலடைக்கப்பட்டு மலரவனால் மீட்கப்பட்ட
வ னிவ்விராவணனன்றோவென்று புகன்றனன் இராவண
னைச்செவியேற்று முனிந்து துஷ்டனும், சண்டாளனுக்கு
வேதமோதி யாகத்தைச்செய்வித்தவனும், முனிகளுக்குட் க
டைப்பட்டவனுமாகிய விசுவாமித்திரனுடைய மாணவகனா
கையாற் குருவைப்போலவே சீடனுங்குழறுகின்றனன். மேனு
லகத்திலும் விசுவாமித்திரனுக்குப்பணிபுரிய விப்பிரமசாரியை
யனுப்பும்படி நம்மால் தாடகை யனுமதிக்கப்பட வேண்டியவ
ளென்றனன். தேவவிரதன்சத்தியவிரதா! கேள் யமனோடு
போர் புரிந்தவனும், நரகத்தினின்றும் வெளிப்பட்டவர்க
ளாற் றுதிக்கப்பட்டவனும், தேவாசுரர்களால் வியக்கப்பட்
டவனும், தனது கழல்பூண்ட கழலொலியைக்கேட்டு வெரு
ண்டுமீண்டோடின வெருமையேற்றினின்று குப்புறவிழுந்தய
மனைப்பார்த் தசிபுரிந்த விராக்கதப்படை யுடையானுமாகி
ருக்கிற இலங்காதிபன் வலியுடையானல்லனோ? என்றனன்.
வித்யுஜ்ஜிஹ்வனதைக்கேட்டுத் தேவவிரதன் நன்றாய்ச்சொல்
லினன். அவனுடைய வாசகத்தாலேயே யவன் நல்லவனாய்க்
காணப்படுகிறான். வடமொழி தென்மொழியன்றி யிலக்கண
மமையப்பெறாத மற்றைப்பாடைகளைப்போற் கன்னபின்ன
வென்று சத்தியவிரதனதுபயனில்சொல்லினாற் பயன்யா

தென்றனன் பிரமசாரிகளிருவருங் காலங்கடந்தது. ஆச்சிரமத்துக்குப் போவோமென்று போயினா

முதலங்கமுற்றிறறு.

ஸ்ரீராமதாசாகள் திருவடிகளேசரணம்.

உ-ஆமங்கம்.

பகவான் விசுவாமித்திர மகருஷியினால் வேள்வியின்பொருட் டழைக்கப்பட்ட அத்திரிமகமுனிவரும, அவரதுமனைவியாா அநசூயைத்தாயாரு மெழுந்தருளினா அததிரிமகருஷி எ அநசூயை! விசுவாமித்திர ராசசிரமத்துக் கணிததாய வநதுவிட்டோம, ஜனகமகாராஜா குழந்தை சீதையுடனுங்கு வநதிருக்கின்றனனொன்று கேள்வியுறுகின்றேன். அசசீதையின்கையில் யாதைதகொடுக்கலாம? ஆண்குழவியாயிருந்தாற் சோடிபூணூல் கொடுக்கலாமெனா அநசூயைத்தாயார் சுவாமி! இந்திர னமக்குத் தந்த சீனும்சுகமுதலியவற்றைச் சானகிக்குக் கொடுப்போம் அவளதைதத தரித்துக்கொள்வளே விராக்கதபயம் பைசாசபயமொன்று மவளையணுகாதென்றனா அத்திரிமகருஷி எ அநசூயை! நான் மறந்துவிட்டேன். இந்திரன்கொடுத்தவைகளைத் தரிககவுரியவள் சானகியே அன்றியுமிராவணனவளைவிரும்புகின்றனனென்று கேள்விப்படுகின்றேனென்று முன்னேபார்த்துக் கமலததையு மதன் நாளத்தையு மாங்குக் கொணடுபோகின்றவள் யாவளென்றனர். அநசூயைததாயாா அவள் மைதிலியினுடைய தோழியாகிய சுசரிதை. சீதை மன்மதனாலேயோ? வெய்யவனாலேயோ?வெப்பமடைந்திருககின்றனளென் றெண்ணுகின்றேனெனப் பகவான் அத்திரி மகருஷி மனககண்ணாலோாந்து மிதிலைநாடி கனவி லிராமபிரானைப் பாாத்துச் சித்தத்தை யவனிடத்திலேயேசெலுத்தி வேறொன்றையுஞ் சிந்தியாது, வேளினால் வெதுமபுகின்றனளென்றுணாத்துச் சனகாபா லணைவோமென்றேகினா. இராவணன் எ சாரணா! சீதையை யெப்போதுபார்பபோம் பாாபபோமென் றெ

ன திருபதுநாட்டங்களுநோறுது விளைகின்றன. விசுவாமி த்திரனுடைய ஆசசிரமததுக கெந்நெறியேபோகலா முனைத் தியெனச் சாரணன் இவ்வடவியூடு செல்லலாமென்றனன். வித்யுஜ்ஜிஹ்வன் சுவாமி! இலங்கேசரே! காற்றிவ் வழிபோதுகி ன்றது ஞானகியினுடைய வியற்கையாய்த் தெய்வமணங்க மழகூந்தலிலளாவிய கால் வீசுநெறியை முந்தியே விரும்பி னீரே இவ்வழிபோதலாமென்றனன். சாரணன் விசுவா மித்திரருடைய ஆச்சிரமந் தெஙகினுலும், கோங்கினுலும, கமுகினுலும், வாழையினுலும, ஆலினுலும், மாவினுலுஞ் சூழ ப்பட்டு நமககுப பெருமகிழ்விளைக்கின்றது. மரங்களின் வேர்கள் முதிர்ந்த கனிகளி னிரசத்தா னனைந்திருககின்றன. வானிற்பூத்த வுடுக்களென மரன்கள் பூக்களாலடர்ந்திருக்கின் றன வெயிலியங்காவண்ணஞ் சோலைகளோங்கியிருககின்றன. குளிர்ந்த வந்துவாநது வீசுகின்றதெனை வித்யுஜ்ஜிஹ்வன் ஆமாம சநதனுதி தைலவாசனையோடு மகிழம்பூமணமுநாறுதலால் மந் தமாருதன் மைதிலியினுடைய வைம்பாலிறமேய்ந்து வீசு கினறனனென்றனன். இராவண னீளாந்து நாசியாலுங் காற றை வாங்கிவாஙகிவித்யுஜ்ஜிஹவா!நன்குணர்ந்துகூறினைகூறினை யென்று குதிகொண்டனன். அபபோது திளைககுட் சானகி யெழுந்தருளியிருந்து சித்திரமவளைய வேண்டியதற்கு வேண் டியபொருள்களைக் கொணடுவரப்போன சீலவதியும், சீதஞ் செய்வான் கோகனகங கொணரப்போன சுசரிதையு மின் னும் வரக்காணேன். யாருமில்லையென் றநங்கனென்னை நலி கின்றனனேயெனசெயகோவென்றனள். இராவண னதைக கேட் டாஙகோா பெண்குயில் கூவுகின்றதெனச் சாரணன் இ லங்கேசரே!வார்த்தைகள் செவியின் சார்கின்றமையாற் கு யிலன்று பெண்கிளியாயிருத்தல்வேண்டுமென்றனன் பின்புதி ளையிலுள்ளமைதிலியாசிவனிடத்தடாதுசெய்ததினலங்கமி ழந்த அநங்கா! நின்னல் யாரும் படாதபாடுபடுகின்றேன் எ னது நாயகனுடைய வதன்தனைக் காணுங்காறு மென்னைக கொல்லாதியென்றனள். இராவணனதைச்செவியேற்று யா

ரோ வோர் ருஷிபன்னிகொழுநனைப்பிரிந்து விரகத்தினாற் புலம்புகின்றனள். அவளுடைய வின்குரலோசையா லவள் மிக ரூபலாவண்ணிய முடையாளென்று நினைக்கிறேன். அவளை நாடிக காணவேண்டுமென்றனன் சாரணன் மகாராஜா! கொடியிற்றேடிக காட்டுகின்றனனென்று நாலுபக்கங்களிலுஞ் சுற்றிப்பார்த் தொருவனையுங் காணேனென்றான். இராவணன் அரிதரிது செவிக்கமுதென இப்போது மதுரமொழிகளைக் கேட்டோமே. மொழிந்தவளைக்காணேமே யென்றழுங்கினன். வித்யுஜ்ஜிஹ்வன் ஆம்மகாராஜா! நம்முடைய மாயையினூங்கிது வலியமாயையா யிருககின்றதென்றனன். திரையினுள்மைதிலியார், ஏ மீனக்கொடியோனே! இரந்தவர்க்கீயாத புல்லருட் சிறந்த புல்லனோ நீ? கொல்லாதென்னுயிரையீவாயென்றிரந்துங் கொடுமைபுரிகிறாய் யென்றனள். சாரணன் மகாராஜா! வார்த்தைகள் கேட்கின்றன. உருதெரியவில்லை யென்றனன். இராவணன் சாரணா! மேகமில்லாமல் மழைபெயலேதடா? தேன்போன்ற மொழிகளைச் செப்புகின்றவளாரடா துருவிப்பாரடாவென்றனன். திரையினுட் சானகி வெளியிற்போன தோழிமாரிருவரும் வந்தாரில்லை. மதனனோ வென்னைவிட்டேகினானில்லை. இனி நஞ்சத்தையுண்டுயிர்நீப்பதே கருமமெனலுஞ் சுசரிதைதிரைக்குட்சென்று அம்மா மைதிலீயாரே! விடமென்றமொழியைச்சொல்லாதிரென்று பல்லவங்களைப்பரப்பியதிற்சேக்கைகொள்ளுமென்று தாமரைப்பூக்ககளாற் கால்போத விசிறினாள். இராவணன் ஓரணங்கு நாயகனை நினைத்துச் சோர்வடைந்திருக்கின்றனள். அவளுடைய தோழியச்சோர்வை நீக்குவானினிய செயல்களைப் புரிகின்றனள்போலாம். விரகதாபத்தை யடைந்திருக்கின்ற அவளைப்பார்க்க நமது கண் புண்ணியஞ்செய்யவில்லையென்று துயர்ந்தனன். சாரணன் இலங்கேசரே! தோழிதெரிகின்றனள் காமநோய்கொண்டவள் தெரியவில்லை. ஆச்சரியமாயிருககின்றதென வித்யுஜ்ஜிஹ்வன் சிறிதுழந்தா லவளையுங்காணலாம். முனிகளுடைய தவச்செயல்களிங்கு நன்றாய் விளங்குகின்

றனவென்றனன் சுசரிதை,சானகியாரோ!நாளைத்தின நுமதுநாயகர் வருகின்றனரெனக் கேள்வியுற்றனன். நீபார்க்கலாமெனச் சீதையாரின்று நான்சாகாம லிருந்தாலன்றோவென்றனர். சாரணன் ஐயோ இவள் நாயகனாரோவென, இராவணன் இவளையடையும் புண்ணியம் செய்தவன் யாவனோவென்றனன்.சுசரிதைபெண்ணமுதே!சானகீயாரோ! நுமதுபதியைச் சித்திரத்திலெழுதிப்பாராத துயிர்விடாதுபொறுத்திருமெனலும், சீலவதி சித்திரமெழுதற்குரிய பொருள்களைக்கொணர்ந்து கொடுத்தனள். சீதையார் கரத்தால்வாங்கிச் சித்திரப்பலகையைப் பார்த்துப் புளகம்போர்த்து நடுக்கமுற்றனர். சுசரிதைபெண்ணிற்றிலகமே! மிதிலையர் கோனன்னமே! என்னுற்றா யேனச்சமுறுகின்றீரெனச் சானகியார் யேடிதோழி!அடியார்களையெழுபிறப்பி லெழுதாபபரமனை யிப்பலகையில் நானெவ்வாறெழுதுவேன். மகானுபாவனை யோர்நாள் கனவிற்கண்டதுதானே என்றனள். சாரணன் இலங்கேசரோ! உம்மைத்தான் சொல்லுகின்றனள். மகானுபாவர் நீரேயன்றி வேறியாரென இராவணன் களிப்புற்றானாம. இன்னு மவள்சொல்லுகின்றதையெல்லாங்கேட்போமென்றனன் திரையினுள் மிதிலைநாடியரொருவாறு தேறிச்சித்திரமெழுதினர். இராவணன் சாரணா! கையிலணிந்திருக்கிற கங்கணத்தொலி யந்நாயகி யோர்நாயகனை வரைகின்றனளென்று கிளக்கின்றதென்றனன். திரைக்குட்சானகியார் ஏதோழிசுசரிதை!நமக்குக்கிடைக்காத வொருவனைக் கைவருந்த வெழுதுவதிற் பயனென்னோவென்று நயனத்தினின்று சிலமுத்துக்களை யுதிர்த்தனர். சுசரிதை யக்கண்ணீரைத்துடைத்து அந்நாயகனையேயடைவீர் முழுதுமெழுதுவீரெனச் சீதையாருக்கங்கொண் டலர்ந்ததாமரைபோன்ற சீறடிகளையும், வாள்விசித்திருக்கின்ற விடையையும், நூலணிந்த வரையென வகன்ற மார்பையும், முழந்தாள்வரையிற் றாழ்ந்தகைகளையும், வில்லுடன் றூணிதூக்கிய திருத்தோள்களையும், புண்டரிகமெனத் துலங்குங் கருணைக்கண்களையும், வண்டுகள்மொய்த்த பதுமமெனப்பொலியு மீசையுடைய திருமுகத்

தையுமெழுதிக் கைகுவித்து நாதரோ! உம்மை நான் காதலித்த
நவையினால் மலயமாருதன் ஆதிசேடனுடைய பெருமூச்செ
னவும், குளிர்ந்தசந்திரன் வெண்ணெருப்பெனவுந் தோன்றுகி
ன்றனவென்றுரைத்து, இவ்வேலைவந் தென்னையாண்டருளு
மென்று புகன்றனர். சிலவதி யதைக்கண்டு புன்னகைகொண்
டு சுசரிதையைநோக்கிச் சீதையார் தாமெழுதிய சித்திரத்தோ
டு பேசுகின்றனர் பாராயெனக் கண்ணுற்சொன்னாள். அச்சில
வதி சுசரிதைக்குக்கண்ணைக்காட்டியதைச் சானகியார்கண்ணு
ற்று அச்சோ, நாம் படத்தோடுபேசிய பேதைமையைக்கண்ட
ன்றோ இகுளையரிருவருங் கண்ணுற்றுப்பேசிக்கொண்டு நகைக்கின்
றனரென்று நாணமுற்றனர். இராவணன் படத்தைப்பார்த்து
மனந்தளர்ந்து அந்தோ பத்துத்தலைகளு மிருபதுகரங்களுமில்
லையே. வேறெவனையோ வெழுதியிருக்கின்றனளேயென் றுயி
ர்த்துயிர்த்து துயங்கினன். சாரணனு மப்படத்தைப்பார்த்து ஓ!
ஓ! பங்கயப்பாதங்களும் சுந்தரதோள்களும், சந்திரவதன
மும், செவியளாவுகண்களும், இந்திரநீலத் திருமேனியுமுடைய
விப்புருடோத்தமன் யாவனோ? ஆடவரெல்லாரும் பெண்மை
யையவாவுமழகுடையவனாயிருக்கின்றனனென் றுன்னினன்.
துக்கத்தால் மௌனமாயிருந்த இராவணன் வித்யுஜ்ஜிஹ்வா! ப
டத்தைப்பார்த்தாயோவென, சுவாமி பார்த்தேன்பார்த்தேன்
கையிலிருக்குங் கோதண்டம் அரசிளங் குமரனென்று முப்பு
ரிநூல் பிரமசாரியென்றுந்தெரிவிக்கின்றனவென்றனன். எழி
னியினுள் மைதிலியார் ஏசுசரிதை! நான்பொறித்த படத்தைப்
பாராயென! அவள் ஏ தேன்மொழி நான்பார்ப்பதிற் பயனென்
ன? நும்மாலெழுதப்பட்ட வந்நாயகர் பார்ப்பரேல் நுமது கை
கட்குக் கங்கணம்போடுவரென்றனள். சிலவதியதைக்கேட்டுச்
சுசரிதை தரித்துக்கொள்கின்றவர்களை யிராக்கதருக்குத் தெரி
க்காதனவும், சூரியன்போற் பிரகாசிக்கின்றனவும், பகவான் வி
சுவாமித்திர மகருஷிகொடுத்தனவுமாகிய கங்கணங்களை ஜான
கியாருடையகையில் முந்தி நீயே போட்டிருக்கின்றாயன்றோ
வென்றனள். வித்யுஜ்ஜிஹ்வ னதைக்கேட்டு இலங்கேசரோ! உன்

ளது வெளியாயிற்று. நம்மாற் பார்க்கப்படக்கூடாதவள்தா
ன் சீதை.சித்திரத்தில் விளங்குகின்றவன்தா னிராமனெனனு
மிராவணன்இவன்றானே?சீதையினுடைய நல்லமனத்தைக் கவ
ர்ந்த இராமனென்று அப்படத்தைநோக்கி யிம்மென்றெழுந்
து முனிந்தூ நறநறவென்று பல்லைக்கடித்து இரகுகுலத்திற் க
டைப்பட்ட ஏ இராமா! என்ன அஞ்சாது விழிக்கின்றாய் ஈ
ரேழுலகிலுஞ்சிறந்த சீதை நம்மையே வரிக்கின்றனளென்று
தருக்குக்கொள்ளாதை, ஜானகியினுடைய அறிவினறெளிவா
லும்,கைச்சாமாத்தியத்தாலுஞ் சித்திரத்திற் சிறிதழகுடையவ
னைப்போலப் பொலிகின்றாய். உன்னைக்கொல்வான் மாரீசன்
தேடிக்கொண்டிருக்கின்றனன். இப்போது சீதையெழுதிய
படம, மாரீசன்வாயில் நீயகப்பட்டபின்பு, நினதுதாய்தந்தை
யருக் கதிகதுக்கத்தைக்கொடுக்கும், ஒருவாறவ்வலக்கணையு நீ
க்குமென்றனன். சாரணன் திரிலோகாதிபனே! விசுவாமித்
திரனுடைய வினயத்தையறிந்திரோ? சீதையை நீர்கண்டாற்
சிறையெடாது விடீரென்றெண்ணி நம்முடைய கண்களுக்குச்
சானகி தோன்றாமலிருக்கும்பொருட்டுக் கங்கணங்கொடுத்தி
ருக்கின்றனனென்றனன். வித்யுஜ்ஜிஹ்வன் கெட்டவனாகிய க்ஷ
த்திரியப்பார்ப்பான் வஞ்சஞ்செய்யக் கொஞ்சமு நெஞ்சஞ்சா
தவனெனனு மிராவணன் ஆகாயத்தைப்பார்த்துப் பல்லாலித
ழுதுக்கி ருஷிகளுக்குள் எறிந்துபோட்ட விசுவாமித்திரா!
நினது நாமத்தினுடைய காரணத்தையே தொழிலாய்ப்பூண்டி
ருக்கின்றனை அக்காரணத்தா லென்னால்வதைபடுவாய் வேறு
சுவாகக முண்டபண்ண வல்லமையுள்ளவனே! மாரீசனை வெ
ற்றிகொள்ளவலியில்லாதவனே! அரம்பையை வென்றவனே!
தாடகையைப்பயந்தவனே! திரிலோகாதிபதியாகிய எமது மூய
ற்சிக்கு விரோதஞ்செய்கின்றமையால் நீ கடுகியிறந்துபோவா
யென்றனன்.சாரணன் மகாராஜரே! என்னை? இறந்துபோவா
யென்றுசொல்லுகின்றீர். இறந்தாயென் றோதுமென்றனன்.
இராவணன் சாரணா! ஜானகியை நாம் பார்ப்பான் உபாயந்தே
டுவாயென அவன் இலங்கேசனே! முன்னமே யாராய்ந்து மு

டித்துவிட்டேன். அதாவது நான் முனிவேடந்தரித்துக்கொண்
டயோத்தியினின்று வருகின்றவனைபபோலவந்து சீதையினு
டைய கையிலிருககிற கங்கணத்தைவாங்கி விடுகின்றனன். பி
ன்பு நீர் சீதையைப் பாாககலாமென்றோதிச் சிறிதுதூரமகன்
று முதிாந்தபருவமும், தளர்ந்தமெய்யும், வியர்வாற் கரைந்தொ
குந் தெய்வத்திருமணனும், கட்டுவிட்டசடையும், கையிலூன
றுகோலும்பொலிய வோாதவனுருககொடு ஜானகி வீற்றிருநத
திணைமருங்கு சார்ந்து ஓ பெண்களே! அயோத்தியினின்று வ
ருகின்றேன். வழிநடந்தமையால் மிகவும் வருந்துகின்றேன்.
எனது வருத்தத்தைச் சிறிது போககுமினென் றயாவுயிர்த்து
ககளைத்துப்படுத்தனன். மிதிலையாாகோனன்னஞ்சுசரிதை! யா
ரோ அயோத்தியினின்றும் வருகின்றேனென்கின்றா. அவ
ருக்குக் கைந்நீா அடிநீருண்ணீாமுதலியவை கொடுத்துபசரிய
பாயென அசசுசரிதை சாரணன்பால வந்து தாமரையிலைகளி
னல் மெலலெனத தண்காலபட வீசினள். சாரணமாமுனி
வன் இடுங்கிய கண்ணைச சிறிது விழித்து வாயாலு நாசியாலு
நெடுட்யிர்ப்பெறிநது அயாவுயிாதது, குழந்தாய்! பெணணே!
சிறுகாலுதவியாவி யுதவினையெனச் சுசரிதை தெயவாதீனம்
அருந்தவருயிருய்ந்தனரென்றுன்னிச் சுவாமி தேவா . ாவா ?
எவணின்றிவட்போதந்தீரெனக கடாவச்சாரணன் ஏமாதே!
தசரத சக்கரவாத்தியினுடைய தலைமகன் இராமனல்லனே?
என்றுமாத்திரஞ் சொலலிப் பேரின்னலடைந்தவனைப்போல
வும், சிரமத்தாலயாந்தவனைப்போலவு மிருவகையாய்ததோன்
றும்படி கணமூடி நெடிதுயிாததுச சோர்நதிருந்தான். திணை
யினுள் மைதிலியார்சக்கரவாத்தி முதற்புதல்வர்இராமபிரான
ல்லரோ? என்று மற்றொன்று முரையாதிவ்வந்தணருயிாப்ப
டங்கியிருத்தலை நோககுங்காலை இராகவபிரானையிநநிலவுலகி
ழந்ததோ? மறறியாதோ? எனத திருவுளமறுகித தெய்வமே
தெய்வமே இரகுநாதனைபபற்றி யிமமுனிவரென்ன சொலலு
கின்றாரோவென்று விம்மிவிமமிப் பொருமி ஏசுசரிதை! வி
ணவில் முற்றுங் கேட்டியென்றனர். அசசுசரிதை ஏமுனி

புங்கவரே! மேலே கூறுவதைச்கூறுமினெனவஞ்சமனத்துப் படிற்றொழுக்கச் சாரணன் மங்கையே! என்றுப் புலாகின்றதென்றனன். நாயினுங்கடைப்பட்ட இராவணன் நகை புரிந்து பகைஞனாகிய இராமனுடைய நாமத்தையுரைத்தாயன்றோ? நினது பொய்நாபிளக்கவில்லையோ? ஈரம் வற்றியது மட்டுமோவென்றனன். எழினியினுள் மிதிலையர்கோன்பொன்னன்னார் ஆ! ஆ! இப்பெருந்தவா நமக்குத் துன்பச்செய்திமொழிவாபோற்காண்கின்றார். என்செய்கேனென்றுளமழுங்கலுஞ் சீலவதியதைக்கண்டு ஏ சுசரிதை! இவ்வையருக்குபருகத்தண்ணீர் தந்து மற்றைய சமாசாரங்களைக் கேட்போமென்றனள், சுசரிதை தாமரைப்பச்சடையில் நளிர்புனல்கொணரலுந் தியவினைவல்லசாரணன் ஏ அரிவை! நான் மாதாகள்தொட்டவுதகமுண்ணமாட்டேனென்றனன் மிதிலைநங்கையார சாரணன்உதகமுண்ணமாட்டேனென்ற மாற்ற மாத்திரங் கேட்டு ஆசசோ அச்சோ, அருந்தவா உண்ணீரும வேண்டாவென்றல்லலுறுகின்றனர். நமது நாயகரென்ன தீங்கடைந்தன ரோவென்றுரைததேங்கினர். கொடுமைமிகக சாரணன் நினது நாயகன் மட்டுமோ? விசுவாமித்திரனும் இடுக்கணடைந்தவனேயெ நெஞ்சினுளெண்ணி, யான் நீர வேட்கை தணிந்தது சாலுஞ்சாலும, இககதியடைந்திருக்கின்றவென்னை யிராமனைச் சார்ந்தவாகள் பார்ததால் மிகுதியுமலக்கணுழப்பார்களென்றனன். வித்யுஜ்ஜிஹ்வன் நகையாடி அடேபேப்பயலே! சாரணா! இபபோதுனது படிவத்தையும், சாலத்தையும், சோர்வையுங்கண்ணுற்றால் நம்முடைய இராக்கதர்களும, சாரணா! நினக்கேனடா விந்தக்கேடென்று மாழ்குவார்களென்றனன் சீலவதி மிதிலையர்கோனகுலமாதரோ! வந்திருக்கின்றவன்முனியல்லன். நிருதனொருவன் முனிவர்படிவந்தரித்துக்கொண்டு வந்திருக்கின்றனனென்று கருதுகின்றேன். இவன் வஞ்சமொழியினால் நீர சோகமடையாதிரென, கள்ளவேடம பூண்ட சாரணன், அந்தோ நாம் இராக்கதனென விவளெவ்வாறு தெரிந்துகொண்டனளென்றச்சுற்றதை யொழிப்பான் கருத

3

லுற்றுக் குன்றெனப்பணைத்த குவிமுலைப்பொறையால் நுடங்குநுணணுசுப்பாளே! யானோ தாசரதியினுடைய தோழன் அன்னோனுக்காருயிரினு மினியனென்றனன். இராவணன் .நுய-ட. இராமனைக் கோறல்செய்ய நீ துணிந்திருத்தலாலவனுக்குத் தோழனுமாருயிரினுமினியவனு நீயன்றி மற்றியாவனுளனென்று பெருநகை புரிந்தனன். சீலவதி ஓ அந்தணீர! நீர் போந்தகாரியமென்னை? தாமதியாது சொல்லுமெனச்சாரணமாமுனிவன் உங்கட்கெல்லாவற்றையுஞ் சொல்லுகின்றேன். நீயிர் இராவணனைச் சேர்ந்தவர்களல்லீர்களோ சொல்லுமினென்றனன். மிதிலை நாடியார் ஆ! ஆ! இப்பெருந்தவர்ங்கள் நாயகருக்கு மிக்கபேரன்பினராகலா லிவ்வினமொழி கூறினரென்றுன்னினர். சீலவதி ஏ சுசரிதை! இராவணனென்பவன் யாவன்? நீயவனையறிதியோ வெனக் கடாவுதலும், இராவணன் மீசை துடிக்கத் தீயெரிய விழித்து ஏனடி யேனடி பெண்பேயே! திசைக்களிற்றின் பணைமருப்பை விரிதலையினிளந்தண்டுபோல முறித்தும், நமனுக்கு நமனானவனும், இந்திரனை ஏவல்கொள்கின்றவனும், கைலையைப் பிடுங்கிப்பந்தாடினவனும், மும்மையுலகத்தையுமாள்கின்றவனும், இராவணேசுவரனென்று பெயர்பெற்றவனுமாகிய வென்னை நீ கேட்டறியாயோ? ஏ பேதாய்! ஏழாய்! நின்னாலன்றோ நல்லர்வுள்ள மாதர்களெல்லாரும் பேதையரென்று பெயர்பெற்றனரென்று முனிந்தான். திரையினுட்சீதாபிராட்டியார் தோழிகாள்! இராவணன் இராக்கதனென்றெல்லாரும் வெறுக்கின்றனர். அவனைப்பற்றி நமக்கென்ன வார்த்தையென, இராவணனதைச் செவியுற்று வருந்தி, வித்யுஜ்ஜிஹ்வா! மைதிலியினுடைய வார்த்தையைச் செவியேற்றனையோவென்றனன் வித்யுஜ்ஜிஹ்வன் மகாராஜா! கேட்டேன் ஆனமையாலதான் சிறிதுபொழுது இராமனுடைய படிவத்தைத் தாங்கள் தரிக்க வேண்டுமென்று யாங்கள் வேண்டுகின்றனமென்றனன். இராவணன் வித்யுஜ்ஜிஹ்வா? நம்பாலாசை யில்லாதவளைக் கவாவுதும், அசீதையாளென்றறியாமையின்பொருட்டு இராமப்

படிவத்தைக்கொள்வதும், நமது நண்பரு மிராசருஷியுமாகிய ஜனகரை வஞ்சிப்பதும், இவளைச் சிநேகித்து மானத்தை விடுவதும் கீழ்மையேயன்றி மேன்மையாமோவென, வித்யுஜ்ஜிஹ்வன் இலங்காதிபரோ? அகாரணத்திலிவ்வெண்ணந் தங்களுள்ளத்திலெங்ஙன முளைத்தது? பிறரை வஞ்சிக்கிறதன்றி நம கருததொழில் வேறுமுளதோ! இராமனுடைய வேடத்தைத் தரித்துச் சீதையைக் கைப்பற்றுவதே காரியம் வேறொன்றுங் கருத வேண்டாவென்றனன் சீலவதி அந்தணரோ! நாங்கள் இராவணனைச் சேர்ந்தவர்களல்லேம், இங்கு வீற்றிருக்கின்றவர் தாம் மிதிலாதிபதியாராகியஜனகருடையசெல்வப்புதல்வியார். நாங்களவருடைய சிலதியர். வந்தகவ்வையைக் கூசாதுரைமினென்றனள். அக்காலைக் கரவடச்சாரணன் அரிதரிது! இவள்தான் சீதையென்று கைந்நீட்டி நெடுநிலனைக் காண்பிக்கின்றனள். நமக்கோ அவளிருக்கையைக்காட்டின விடனன்றிச சீதைதெரியவில்லை. க்ஷத்திரியப் பிராஹ்மணன்கொடுத்த கங்கணத்தாற் சீதை கண்ணுக்குப் புலப்படவில்லை. கடகத்தை வாங்கவுபாயமென்னென் றுன்னினன். சீலவதி ஓ யதிசிரேட்டரே! இப்போழ்திரகுநாதனைப் பற்றி க்ஷேமவார்த்தை சொல்வீரேல் நெஞ்சு பெருமகிழ்வுபூத்தெங்கள்சீதையார் நுங்கையிற் கங்கணம் போடுவோமெனப் படிற்றொழுக்கச் சாரணன் நான் தவப்படிமைகொண்டு முயல்வது வேறெதன்பொருட்டு, அக்கங்கணத்தைக் கழற்றவேயென்றுன்னி நகைத்தனன். ஜானகியார் இராகவபிரானுக்கென்னுற்றனரோ? அதனைப் பகரமாட்டாம லிம்முனிவர் துயருகின்றனரென்றயர்ந்து சோர்ந்தனர். இருவரையிருவரு நோக்கி அம்மா அம்மா சீதா! என்னுற்றனை யென்னுற்றனை? ஆருயிர்த்துணைவராகிய இராமபிரானார் தீங்கடைந்தாரெனவெண்ணிச் சோகமுற்றீரோ இவ்வயாவுந்தீரமின், எங்களோ டோருரையுரையீரென்றரற்றிப் புலம்பினர். சாரணன் காரணமிலலாம லிங்கேனழை? அங்கசிரமத்திலல்லவோ சிறிதுபேசாதிருந்தனெனென்று முற்றுங்கேட்குதியெனத்தோழிகள் அம்மா மைதிலியாரோ! குறைமொ

ழிகளையுங் கேட்குதுமென்று தேற்றினர் தேன்மொழியார் தெளிவடைந்து சாரணமா முனிவனை நோக்கினா அக்க ள்ளத்துறவி அம்மா ஜானகி! மதனனு மாதுருவை விரும் பத்தக்க இராகவனும பகவான் விசுவாமித்திர மகருஷியு மி ன்றிவட்போதுவா. நீ அல்லலுழப்பதேனென்றனன். இரா வணன் சாரணு! சந்நியாசிவேடம்பூண்டு நன்குநடிக்கின்றாய் பொய்யுரைக்கின்றாய் திருடவுந் திருடுவாயென்றனன். இராம பிரானும பகவான் விசுவாமித்திரரும் வருகின்றாரெனக்கேட் டசீதையாா மகிழ்ந்துவிரைந்தெழுந்து விசுவாமித்திரர் கொடு ப்பக்கரததிலணிந்திருந்த கங்கணங்களை யெடுத்துச் சாரணன் கையிற் கொடுத்தனா கொடுத்தலுஞ் சானகியாா கண்ணுக்கு த் தோறறினா. இராவணன் பாாத்திதென்ன வியப்பு ? வானும், நிலனும், பக்கங்களுந் தங்கத்தை யுருக்கி வாரிப் பூசப்பட்டவோ ? மேகமில்லாமல் மின்னலகள் திரண்டு பரந்திருக்கின்றனவோ? சீதையினுடைய திப்பிய வுறுப்பு களைப் பார்க்கவொண்ணாது, அவளுடைய திருமேனியின் காநதி கண்களைககூசத் தாக்குகின்றதென்றனன். அக்காலை வேள்வியின்பொருட்டு விசுவாமித்திர மகருஷியாலழைக்கப்ப ட்டு வந்த அநசூயையோடு பகவான் அத்திரி மகருஷியைச் சனகாவழிபாடுற் றம்மகருஷியை வணஙகுவான் நம்சீதை வரு கவென மாதனைவிடுகக, சானகியாரவாபாற் சென்றனர். இராவணன் ஐயோ! சீதை புறங்காட்டிப் போகின்றனளே. அவளுடைய சந்திரவதனத்தையும், கலசக் கொஙகையையும், தொடியணிந்த வேய்த்தோளையும், மேனியினொளிப் பிழம்பி னுற்கண் வழுககுற்றுக கண்டிலேன். முழுமதியைக கௌ வும் இராகுபோன்று கறுத்தபின்னலைமாததிரங் கணடேன். ஏ வித்யுஜ்ஜிஹ்வா ! நம்மாறகவரப்பட்டுச் சிறையில் வைககப் பட்டதெய்வமகளிாகளும, நாககன்னிகைகளும், அரசமாதாக ளுமின்னேயவரவரில்லமேகட்டும். சீதை கிடைப்பளேலவளை யன்றிமற்றியாரையுநோககவுமாட்டேனென்றனன். வித்யுஜ்ஜி ஹ்வன் இலங்கேசரே! இராமவுருத்தரித்தால் சீதை தங்கட்கரி

யளோவென ? இராவணன் ஒருவனைப்போல மற்றொருவன் வேடங்கொள்வது ஆண்மைமகனுக் கழகன்றே அதனினு மிராவணன் மானிடவேடங்கொள்வது கீழ்மையினுங் கீழ் மையதென்றனன். அவ்வேலை கள்ளநடைச் சாரணன்வந்து அரசமர்தவன் மந்திரஞ் செய்து கொடுத்திருந்த கங்கணங்களைவாங்கும்வரையுஞ் சீதை கண்ணுக்குப் புலப்படாதிருந் தாள். நானெண்ணியவாறே கடகங்களைவாங்கினேன் பின்னர் ஜனகர்பாலெய்திய மைதிலியோடு தோழிகளுமேகினர். ஒருவருமாங்கில்லாமையினாற் சுற்றிலும் பார்த்துச் சீதையெழுதிய இராமபடத்தையுங் கொணர்ந்து வந்துவிட்டேனென்றனன் இராவணன் சாரணா! நமக்குச் சத்துருவாகிய மனிதனுடைய படத்தையுஞ் சானகியைக்காட்டாது கரந்துவைத்திருந்த கங்கணங்களையுந் தூரவிட்டெறிவாய், அக்கங்கணங்களை நீ கைக்கொண்டிருத்தலால் நீ யெனக்குத் தெரியவில்லையென்றனன். சாரணன் அக்கங்கணங்களையும், படத்தையும் புட்பகத்தின்மிசை யோருபுறத்துவைத்தனன். இராவணன் இனி யாதுசெயற்பாற்றென்று கவன்றிருந்தான்.

௨-ஆமங்க முற்றிற்று

ஸ்ரீ ராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

௩-ஆமங்கம்.

களவிலும், குத்திரத்திலும், மாயையிலும் வல்லமாரீசன் வந்தான். வந்து அந்தோ! ஒப்பற்றவாற்றலுடைய இராமபாணமென்னைத் தூக்கிக்கொண்டுபோய்ச சாகரத்திலெறிந்தது. பெருவலி யுடையேனுனையாற் பரவையினின்றெழுந் திப்புறம் போந்தேன். கொடுமை கொடுமை! இன்றுகாறு மொருவரும் படாதபாடுபட்டேன். அவ்விராமன் கூர்ங்கணையால் கார்க்கொண்டலினூடு கரந்த சுவாகுவும்பட்டான், தாடகை நிலவுலகமுற்றும் மண்தூளிவிரித்ததனுள் ஒளிந்தவந்தனள். இராகவனம்பென்னும் பெருமாருதத்தினாலத்தூளியை விலக்

இத் தாடகையைக் கண்டு பெண்ணென்றிரங்கிக் கொல்லென்று வேறுவிசிகந் தொடுக்காமலிருந்ததும், அதுதுகளைப் போக்கிய அஸ்திரமே பகையென்று ஆயிரங் கடகளிற்றினுடைய வலியுள்ள தாடகையுயிரையுமுண்டதென வுணர்த்துத் தாயைக் கருதி யரற்றையுற்றென் னன்னையே யன்னையே! என்னையீன்றோயே! நீயுமாண்டொற்றாய். தமியனும் புலம்புகின்றேனே அம்மை அம்மை? ஈராஞ்ஞூற்றுக் கைம்மலையின்றிண்மையுடையாளே! இராமபாண நினது நெஞ்சைப்பிளந்தாலுங் காலன் நின்னை வெருவாது கிட்டிப்பற்றிப்போயினனோ? அல்லது நீயேயவ்யமபுரிசென்றாயோ? நின்னைப்பிரிந்து யான் தரியேன் வந்தேன் வந்தேன். ஏ சுபாகு! நீ யாங்குச் சென்றாய்? அம்மனையோடேகினையோ? நானிருக்க, இலங்காதிபதியிருக்க, கரனிருக்க வுங்களிருவருயிரை நமனஞ்சாதுண்டானோ? அக்கூற்றுவனுயிரை யின்னே நான் பருகுகின்றேன். ஏ கராளா! நீயுமிறந்தாயோ? நின்னையுங் காணேனே. வேந்தாகுலப்பனவஞ்சின்னம் விளைவது யாதோவென மொழிந்து சிறிது நெறி கடந்தனன் உடனே கராளன் வந்தான். வந்து ஓபாலநேத்திரனு மஞ்சுந் தோலாவலியுடைய அரசகுலச் சிறுவனாகிய இராகவன் விடுத்த கணையினுடைய கண்ணுக்ககப்படாதொளிந்தோடிவந்தேன். ஆனால் எனது வேகத்தாற் பிழைத்தோடி வந்தேனல்லேன். பிறன்வரைநின்றாளைக் கண்டவுத்தமனைப்போலப் பாணமெனதுவெரிநைக் கண்டு நாணமுற்று மீண்டு சென்றது, திரும்பிப் பார்ப்பேனேலெனது மார்பு தோன்றுகின்றதென்று இராமபாண மீளுமென்னுமச்சத்தால் நிலனைப்பார்த்தவண்ணமா யோடிவந்தேன். மாரீசன் உயிரோடிருக்கிறானோ வில்லையோ? அறியேன் அவனை மேகமண்டலத்துக்கு மேற்கொண்டுபோன இராமாஸ்திரமெவட்போட்டதோ? எங்குமடித்ததோ? என்செய்ததோ? அறியேன். மகேந்திர பருப்பதத்துக்கப்பால் கடலில் அம்மாரீசன் விழுந்திருப்பானென்று நினைக்கின்றேனென்றான். கராளனுடைய குரலைக்கேட்டு மாரீசன்மீண்டு

வந்தான். கராளன் இங்குவருகின்றவன் யாவன்? மாரீசனெனலாம். நீனைந்து பாசிபற்றிய ஆடையுடையவனும், பேநாறுங் குஞ்சியுடையவனும், உவர்மேலிட்ட மேனியனும் விளங்குகின்றா னென்றுரைத்தனன், உடனே மாரீசன் வரலுங் கராளன் எதிரோடி ஏ பெரியவரே! கராளன் நமஸ்காரஞ் செய்கின்றேனென்றனன். மாரீசன் குழந்தாய்! கராளா! தீர்க்காயுள் பெறுதியென்றாசி சொலலி,இராகவனுடைய அம்பெனுங் கூற்றின்வாய்ப்படாதுதெய்வாதீனம் பிழைத்தனையேயென்று கண்ணீர மல்க, அக்கராளனைக் கட்டிக்கொண்டிராமபாணத்தின் வலியையுரைப்பதெவன்! இராகவன் கார்முகத்தை வாங்கிச்செய்த நாணொலியிலுலண்ட முகடுவிண்டது! விண்ணேறெனை விழுகின்ற வெங்கணைகளின் துழனியால் திசகயங்கண்டு நடுங்கிச் செவிடுற்றன, மாரீசன் தொலைந்தான்றொலைந்தானென்று தேவர்கள் கைபுடைத்தார்கரு மமலையால் நான்செவிடுற்றேனெனக் கராளன் மாரீசனை நோக்கா, பெரியீர் மாயைவல்லீர் செயலச்செயலால் உயிருய்ந்து வந்திரோயென்று பராய் ஐய! இராமனைக் கோறல் செயயாது சென்று நமதரசனுக்கு நாம் பட்டவாற்றை யுணர்த்துதுமேல், நம்மைத்துகளெனவு மதியான். அன்றியும, இராமனுயிரோடிருந்தால் நமது வேந்தனுக்குஞ் சிதைக்கும் விவாக நடப்பதரிதாகையா லிராமனை முருக்கு முபாயமென்னையென, மாரீசன் சிறிதாராய்ந்து கராளா! சீதையைப்போல் மாயையினல் படைத்துச் சனகனுயிர் மாய்ந்தன னென்றாங்கவட்குணாதசித் தந்தையிறந்த வின்னலாலவளை யிராமன்முன் செந்தீயில் வீழ்ந்திறக்கும்படி செய்வமேலவ்விராகவன் சீதைமாய்ந்தும் வாழ்வேனோவென் றவ்வங்கியிலேயே யாவி நீப்பன். பின்றைப் புத்திரசோகமடைந்த தசரதனை விசுவாமித்திரன் தேற்றி அயோத்திகொண்டேகுவன். அப்போது இராசகாரியம் ஊறின்றிமுற்றுப் பெறும். அங்ஙனமியற்றும் மாயையைக்காதிகாதலனறியாதியற்றவேண்டுமென்றனன். கராளன் ஐய! உமது சூழ்ச்சி

நன்று நன்று. கௌசிகாநதியின் கூலத்தில்விசுவாமித்திரனுடைய பன்னசாலைக்கு கொன்றைக்காவதத்துக்கப்புறத்தில் தசரத சக்கரவாததி வந்தினிதிருக்கின்றனனென்று கேள்வியுறுகின்றேன். ஆங்குச் செல்வோமென்றிருவரும்வழிக்கொண்டனர். கராளன் பரிமாககளுடையகளைப்பொலி கேட்கின்றது. வனமேதிக ளவ்வொலியைப் பொறாது கொம்பினால் புற்றுகளை முட்ட வப்புற்றுகளி லிராநினற மாசுணங்கள்கான்ற நஞ்சையளாவிய காற்று வீசுகின்றது பேரிமுதலியபணைகளினொலியைக் கேட்டு வலிமுகங்கள் பணைகளிற்றாவுகின்றன. கடகரிகட்கரிந்த நாணறபுற்களினடிகள் தோன்றுகின்றன இனி நாம் ஆங்கட்செல்லாது இராமன் இவட்போதலுச்குரியகருமம்புரியவேண்டுமென்றனன்.அவ்வேலையிராமபத்திரா வேட்டைமேல் நசையுற்றுத் தந்தையோடொயாது, தம்பியரைக கூவாது மணிபதித்த மரவடிமீதிவர்ந்து சராசனமேந்திய கமஞ்சூன்முகில்போல வனத்தினூ டெழுந்தருளினர். மாரீசன் இராகவபிரானைப்பாரத்துதெய்வாதீனம் கும்பிடப்போன தெய்வங் குறுக்கேவந்தாற்போல யாதொரு முயற்சியுமின்றி வலியவே யிராமன் வருகின்றனனென்று களித்துக்குழந்தாய் கராளா! நீயிராமனுடைய நண்பனாகிய பிங்களனைப்போல வேடங்கொணடு வனகரியா லலைக்கப்பட்டவன் போற் கதறியோலமிட்டு இராமனை மிககசேய்மையில் கொண்டுவந்துவிடு. நான் காசிபனைப்போலமேனிகொண்டு, மாயாசீதையை யிராமனுக்குக் காட்டி, முன்னியவாறு முடிக்கின்றேனென்றகன்றான். திரையினுட் கராளன் பிங்களனுடைய படிவங்கொணடு ஏ இராமா! காட்டும்பலென்னைப் புழைக்கைகொண்டோச்சுகின்றது இவ்வேலை வந்தென்னைக் காவாயெனவரற்றி, இறந்தேனிறந்தே னென்று கதறலும், அருள்வள்ளலாராகிய தாசரதியாராமகோல மிடுகின்றவன் நமதன்பன். பிங்களனேயென்று வருந்திவின்னூனைத் தெறித்தொலிசெய்து குரலெழுந்த திசைவிரைந்து சார்ந்து, ஆங்குமதமாவின் லறையுண்டு சோகமடைந்தவனைப்போற்

பாவனைகாட்டிக் கிடந்த பிங்களவேடக் கராளனைத் திருக்கரங்களாலெடுத்து மடிமீது வைத்துத் தைவந்து காவியங்க வுத்தரியத்தால் விசிறிப் பிங்களா! பிங்களா! எழுவாய் எழுவாய் கண்டிறவாய் திறவா யென்றனா கராளன் சோகந் தீர்ந்தவனைப்போலெழுந்து ஏ இரகுநாதரோ! நீர் வேட்டமாடத் தனியாய்ச் சென்றிருக்கின்றீரென்று கேட்டு வந்தேன். மதவெற்பொன்றென்னை வெருட்டித் தாம்பு டைக்கையாற்றுக்கலு நானிட்டவோலங்கேட்டு, நீவிளைத்த நாணொலிக் கவ்யானை வெருண்டித் தணடத்திறுடு சென்றதென்றனன். இராமபத்திரா பிங்களா! தெய்வாதீனம் பிழைத்தனையே. சாதுக்கள் மனம்போற் றெளிந்தருவில் நதி தண்ணெனப்பெருகுகின்றது தட்பமாககுளிர்ந்ததென்றல் வீசுகின்றது. தருக்களுடையநெருக்கத்தாற்கதிரவன்வெயில்புகாதிருளாகியிவணெல்லாந் தண்ணென்றுள்ளது காதுக்கினிதாய்ச் சுரும்பினந்தூங்கிசை பாடுகின்றது. மயிலினமாடுகின்றது. குயிலினங் கூவுகின்றது. கிளியினம்பேசுகின்றது இந்நிலனுள்ளத்துக் கின்பம் பயப்பதாயுள்ளது. நம்மைச் சேர்ந்தவர்கள்வருங்காறு மிவட் சுகித்திருப்போமெனத் திருவாய்மலர்ந்தருளக கொடுமனக்கராளன்நம்மைச்சார்ந்தவர்கள்வருங்காறுமன்று மாரீசன் காசிபனுடைய வேடந்தரித்து வருமளவு நாமிவணிருத்தல் வேண்டுமென் றுள்ளதினுளெண்ணி நன்று நன்று. இத்தருவின்புனைநிழற்கீழிருந்து விடாய்தணிவோமென்றனன் இரகுநாயகா பிங்களா! என்றுருயிரனைய நீ சாவடைதியேல் இரதியினுஞ் சிறந்த சீதையைக் கலியாணஞ்செய்யேன். உயிர்வாழ்வையு மதியேனெனக் கூறியருள, வஞ்சகக் கராளன் இரகுநாதரோ! நீதொன்றும் புகலாதீர் சீதையை நீர்திருமணம் புரியாவிடி னவளிறப்பது திண்ணம். உம்மையன்றி வேறு யாரையுமதியாளென்றனன். இராமபிரானா அன்பா பிங்களா! உண்மை யுரைத்தாய். சீதை யென்னைக் கனவிற் கண்டுகாமுற்று, வெறிகமழ் சந்தனக்குழம்பணிந்தும், மென்றளிர பூஞ்சேக்கையிற் படுத்தும, முணடகப் பூவை முகிழ்முலையி லொ

ற்றியும் விரகவெப்பநோய் மாறாது வெதும்புகின்றனளென்றுகாசிபரெனக்குச் சாற்றியருளினரென் றருளிச்செய்யக்கராளன் அச்சோ! மாரீசன் இன்னம் வரவில்லையேயென்றயலெங்கும் பார்த்துச் சுவாமி! காசிபனென்பவர் யாரென்று கடாவினன் இராமசந்திர பிங்களா! பகவான் விசுவாமித்திரருடைய மாணாக்கர் காசிபரென்று நீயேயெனக்கு முந்தியுரைத்தனை. மறந்தாயோவென வினவியருளத் தீவினைக் கராளன் அந்தோ! தெரிந்தவனைப்போல, வாளாவிராது நெஞ்சைமாரீசன்பாற் செலவிட்டமையால் வாயில்வந்ததைச் சொல்லிவிட்டோம். இராமன் ஐயுறுவனோவென் றஞ்சி, இராகவரே! பொய்ச்சாந்தேனல்லேன் வெங்கதவாரணத்தை முன்னுந்தோறு மெனதுநெஞ்சம் பறையடிக்கின்றமையா லுளாவுற்றேன். நங்காசிபர் பொய்யுரையார் இப்போது சீதை நலனுணவுண்ணாமலும், நள்ளிரவிலுங் கண்வளராமலும், நீராடாமலும், நல்லாடை புனையாமலும், பூச்சூடாமலும், ஆடலபுரியாமலும், அணியணியாமலு நும்மையேநினைந்துநினைந்துருகுகின்றனளென்று கேள்வியுறுகின்றேனென்றான். இரகுநாயகா நமது நன்பனுடைய விம்மொழியால மதனனம்மிடத்து மெலலமெல்லக்கிட்டிவர நமது வலியுநாணமு மானமு மெட்டிப்போகின்றன. சீதையோ வெனதுள்ளத்திற் குடிகொண்டு புறத்திற்றோன்றா திருக்கின்றனள். என்செய்குதுமென்று வருந்தி மௌனமாயிருந்தனர். கராளன் இரகுநாதரே! ஏன் ஒன்றும் புகலாதிருக்கின்றீரென, இராமபத்திரர் பிங்களா! இனிச் சீதை வார்த்தையை நிறுத்தென் றுரைத்தருளினர். கராளன் கைகூப்பிச் சுவாமி! மைதிலியினுடைய சரித்திரத்தைக்காசிபர்முதலாகிய பலராலுமென்னாலுங் கேட்டுக் களிக்குநீர் இப்போது சீதை மொழியை நிறுத்தென்றீர். சீதையெனு நாமமுமக்குக் காமப்பிணியைத் தருகின்றதோ? நம்மை நினைத்துச் சானகி ஐங்கணைக் கிழவனால் வருந்துகின்றனளே யென்று நீர் மறுகுகின்றீரோ? மைதிலியையடைவேமோ? மாட்டேமோ? என்று சிந்திக்கின்றீரோவென மொழிந்துநகை

புரிந்தான். இரகுநாதர் தமது இதயத்தைநோக்கி ஏ கெட்ட மனமே! இரதியுஞ்சேடிகளுந் தரமல்லாதவழகுமிக்க சீதையைக் கண்ணுற்றுமில்லையே கேள்வியுற்றதைக்கொண்டு வருந்துகின்றனையே. பிறர் நகைத்தலைநோக்கியேனுங் கூசுவாயல்லையேயென்று வருந்தி ஏ பிங்களா! சீதை நமக்குக்கிடைப்பதரிதென்றோதியருளினா கராளன் ஓ! ஓ! இந்த வரசர்குலச சிறுவனுககுச் சீதையின்கண வேட்கை கைமமிகுந்திருக்கின்றதென்று முன்னி இராகவரே! சானகியை யுமக்கு மணஞ்செயவிப்பான்பகவான்விசுவாமித்திரரொத் தினித்திருக்கின்றரென, இராமபத்திரர் பிங்களா! பகவான் விசுவாமித்திரமகருஷி கடிமணவிடயந் தொடங்கி யிருக்கின்றனரோன்று நீயறிவாயோவென்று வினவியருளினா கராளன் விசுவாமித்திரன் செயலை யிராமபத்திர னறியான்போலு மென்றெணணிக காசிபா சொலலவெனக்குந தெரியவந்ததென்றான் இராமசந்திரா ஆமாம். காசிபரரா நீதானே சிநேகத்தால வர்நினக்குச் சொல்லியிருக்கலாமென் றருளிச்செய்தனர். அவ்வேலை சீதையைப்போலவு மவளுடைய தோழிகளைப்போலவு மாரீசன்மாயையாலுண்டாககித் திசைகளிருந்து இராமபிரானைநினைந்துவிரகதாபமடைந்து புலம்பும்படிசெய்து,பின்னராங்கோர மகிழமரத்தினடியிற் றோன்றுகின்ற இருவர் இராமனும் பிங்களனுடைய வேடத்தைககொண்ட கராளனும் போல்கின்றா ரெனறெண்ணுற்றுக் கிட்டி நட்பினுற் காசிபர் நீயேயென்று கராளனை நோக்கிச் சுவாமிமொழிந்தருளிய அம்மொழியைக் கேட்டு ஓ! ஓ! அவன் நமதுகராளனல்லன். காசிபன் பிஙகளனுடைய வேடங்கொணடு வந்திருககின்றனன் போலாம். அக்காசிபன் பிஙகள வேடந்தரிக்கக காரணமென்ன? காசிபனுடைய படிவத்தை நாம் தரிக்கின்றனமென்பதை அரசகுலப் பார்ப்பான் ஞானநோக்கா லுணர்ந்து நாஞ்செய்யுஞ் செயலையுணருமாறு காசிபனைப் பிஙகளவேடத்தோடிராமன்பால் விடுத்திருக்கின்றனன். அன்மையிலுள்ள விரிதலைத்தருவனத்திலுள் மறைந்திருந்து நிகழ்வனவற்

றைக் கண்ணுறுவோமென்று போந்து கரந்திருந்து மாயை யைக்கருதினுன். அவ்வேலை திரையினுட் சீதை தோழி காள்! எனதுடல் வெதும்புகின்றது. தாமரை மலரக ளையுந் தளிர்களையுங் கொணர்வீரென்றனள். இராமசந்தி ரர் கராளனைநோக்கிப் பிங்களா! அவாசியி லரவமென்ன? யாருடைய மொழியாயிருக்கலாமெனக் கடாவியருளக்கரா ளன் நான்குதிசையையும் பார்த்து மாரீசன் காசிப வேடங் கொண் டின்னமிவட்போதர வில்லையாகலின் பேசினவள் மாயாசீதையன்று. ஐயோ! காலஞ்செல்லுகின்றதே மாரீச ன்போதரவில்லையேயென்று நெஞ்சம் புழுங்கி இராமசந்திர ரே! அடவிகளிற் சஞ்சரிக்கின்ற வனதேவதைகளுடைய வார்த்தையென்று நினைக்கிறேனென்றனன். ஒளிந்திராநி ன்ற மாரீசனதனைக் கேட்டு ஓ! ஓ! அவனுண்மைக்காசிபனே பிங்களனுடைய வேடங்கொண்டு வந்திருக்கின்றனன். நம து கராளனோ சீதையெனறன்றோ சொல்லுவன். கராளன் இது காறும் இவட்போதராதிருப்பக் காரணமென்ன? அரச மாதவனுடைய வாணையால் இலட்சுமணனவனைக் கொன்று விட்டானோ? அவரிருவரும் இராமனும் காசிபனுமே சுவாகு வையுங் கராளனையும்போலவ்விருவரையு மிறக்கச்செயவோ மென்றுன்னினன் இராகவபிரான் பிங்களா! முநிச்சிலமாற் றங்கேள்வியுற்றோமே. ஆங்குச் சென்று பாரப்போமென்று சிறிது சேய்மை நடந்து கிளிந்தபல்லவச்சேக்கையையும், சித றிய சந்தனச்சேற்றையும், மைகரைந்தொழுகிய கண்ணீரை யும், தாமரைநாளத்தாற் செய்த வளையங்களையுங் கண்டிவை யென்னையெனக் கராளன் இரகுநாதரே! நான்கழறியபடி வன தேவதையல்லள் விரகதாபமடைந்தவோரபெண இவ்வி டத்திலிருந்து நமது வார்த்தையைக் கேட்டு நாணமுற்றகன்ற னளென்றுன்னுகின்றே னென்றான். திரையினுள் அடிசே டி!சீதாபிராட்டியாருக்குக் காமநோயதிகம்வளாகின்றது புதி யபல்லவங்களையும், நறுமலர்களையுங் கொணர்வாயென் றெ ருத்தி செப்பலும், இராமசந்திரர் பிங்களா! நீ மொழிந்தவா

றுபெண்தானென்றனர், கராளன் அரிதரிது! மாரீசனை இன்னங்கானோம். மாயாசீதையென்றும், உண்மைச் சீதையென்றும், வேறுயாரொன்றுந் தெரிகிலேம். மாரீசன் காசிபனுடைய மேனிகொண்டுவருங்காலை க்ஷத்திரியப்பார்ப்பானறிந்து இலட்சுமணனைக்கொண் டவனைக்கோறல் செய்திருப்பன். இன்றாயின் மாரீசன் காலநீட்டியானென்றுன்னி வருந்தி, நாமிதுபோது வருந்துவதழகன்றென்று தேறி, இராமபத்திரரோ ! அயன்மாதைப் பார்ப்பதிற் பயனெவன்? சககரவர்த்தி முதலாயோரும்மைத்துருவுவர், மீண்டுசெல்லுதும் வாருமெனனுங்கரந்திராநின்ற மாரீசன் அவனுண்மைக் காசிபனே, ஐயமில்லை. இராமனைத் தசரதன்பா லழைத்துக்கொடுபோக முயல்கின்றனன். நமது கராளனாயின் நமது வரவை நோக்கி இராமனையிங்ஙனே யிருப்பச் செய்வன். நல்லது முற்றுங் கண்டுணர்வோமென்றிருந்தனன். இராகவபிரான் பிங்களா ! இப்பருப்பதத்தைப் பாராய். துகிற்கொடிகளை நிகாத்தகதலிகளும்,மாதர்களைப்போன்ற மஞ்ஞைகளும், ஆடவர்களைக்கடுத்த அரிமாக்களும் பொலிதலால், நமதயோத்தியாபுரியிலுள்ள மாடம்போலத் தோன்றுகின்றதென் றுரைத்தருளி, பெயர்த்தும் பார்த் ததன்பாங்க ரோர்மங்கை தெரிகின்றனளென் றியம்பியருளினா. கராளன் ஆமாம். சிறிதண்மிக்கண்ணுறுவோமென்றான். மாரீசன் அடே காசிபா! நன்று நன்று. மாரீசனென்னு நமனால் நீ நாசமடைவாயென்று மெல்லவோதினன். திரையினுள் அடி தோழி! பங்கயப்பூக்களைத் தகரஞாழலில் தோய்ப்பாயென்றுவார்த்தைபிறக்கக கராளனதைச் செவியேற்று, அம்மங்கையினுடைய மொழிகள் இனிய நறுந்தேறல் போலிருக்கின்றன. இரகுநாதரோ! ஆங்குச்சென்று பார்ப்போமோ வேண்டாவோவென, இராமபிரான் சிறிது தூரஞ்சென்று சேடியர் சூழநின்ற மாயாசீதையைக் கண்டு பிங்களா! அவளார்? பாரெனக் கராளன் நோக்கி மாரீசன்செய்த மாயாசீதைதானோவென்றெண்ணி, இரகுநாதரோ ! அவளழகுகளோரெல்லையில்லை, தெய்வப்பெண்ணோ? நாககன்னிகை

யோ? விஞ்சையர்மாதோ? ஈசன்கண்ணால் மதனன் வெந்தமையால் விரகதாபமடைந்த இரதியோ ? விண்ணைப் பிரிந்து மண்ணையுற்ற மின்னலோ? யாரோ? பல்லவங்களெல்லாங் கரியவீற்றிருக்கின்றனள். அவளுடைய வுடலினொளியும், திருமுகச்செவ்வியும், தனங்களினுடைய இரமணீயமு நன்றாயிருக்கின்றனவென்றனன். மாரீசனதைக்கேட்டுக காசிபனு மிராமனு நம்முடைய மாயவலையில் நன்கு சிமிழ்ப்புண்டனர்கள். சுபாகுவுக்கும் கராளனுக்கும் பிரதியாக இவ்விரண்டு பெயரையுங் கொன்றுவிடுவோமென் றெண்ணினன். இராமபத்திரர் வனத்தைநோக்கிஐயோ! சீதைபடுந்துயரத்தைக்கண்டல்லவோ கிளிகளுங் குயில்களுமாங்கனி முதலானவைகளையுணவில்லை செமமுளரிப்போதுகளிலுறைகின்ற எகினங்கள் நெருப்பினுப்பண்வீழ்ந்தனபோல வாடுகின்றன. மயில்களகவா தொடங்குகின்றன வென்றனா. தீயவினைக் கராளன் அவைகளெல்லாம் மாரீசன் மாயையன்றி வேறன்றென்று நினைந்து, இராகவரே! இப்போது நம்மால் காணப்படுகின்றவள் சீதையேயென, இராமசந்திரர் ஜானகி விரகதாபமடைகின்றனளென்று காசிபர் நமக்குச் சாற்றியிருக்கின்றனரே. அச்சீதைதானிவள், ஐயப்பாடில்லையென்றனா. பின்னர் விசுவாமித்திரமகருஷியினுடைய மாணுக்கராகிய காசிபர்வந்தாா. அணுகிவந்து சீதாபிராட்டியாரை இராமபிரானுககுத் திருமணம்புணர்க்கவேண்டுமென்று நமது தேசிகராகிய பகவான்விசுவாமித்திரர் தலைப்பட்டிருக்கின்றனர். நட்டோருகிய பிங்களனுடைய மொழியினால் இராகவபிரானுடைய மனம் சீதையையே நாடுகின்றது. வேட்டையாடுவான் தனியே சென்ற இரகுபுங்கவரின்னு மீண்டுவரவில்லை. அவரைத் தேடிப்போய பிங்களனும் வந்தானிலலை, இவ்வனத்திலவரைத் தேடிப்பார்ப்போமென்று சுற்றினா. தீத்தொழிற் கராளன் காசிபரைப்பார்த்து, நமது மாரீசன் காசிபர் வேடங்கொண்டு வருகின்றனனென்றுவப்பெய்தி இரகுநாதரே ! சீதையினுடைய நிலையைத் தெரிந்த காசிபர் ஆங்குவருகின்றனர். நான்சென்

றவரை நம்வயிற்கொணர்கின்றேனென்று வெளிப்பட்டான், இரகுநாதர் போதருகின்ற காசிபர் காமநோயுழக்கு மப்பெண் சீதையென்பரோ? அல்லவென்பரோ? என்றுவருந்தினர். திரையினுள் மாயாசீதை அச்சோ! எனது காமநோய்ககு மருந்துமுண்டோ ? அதை நீப்பாருமுளரோ? என, இரகுநாயகரதைத திருச்செவிசார்த்திப் பெண்கனியினுடைய கண்டத்தி னின்றமுதம்பெருகினாற்போலெழு மதுரமான மொழிகளெனது செவிக்கின்பஞ்செய்கின்றன. யாழுக்குங்குழலுக்கு மவளுடை ı மொழியே யினிமையைக் கற்பித்தனவெனலாம் அளகம் மேகமெனக் கறுத்ததெனப் பொலிவதாயினும், நுதலிற் சுருண்டு சுருண்டு திகழ்தலால், அளிகள்முரலுமரவிந்தமெனப் பொலியு மம்முகத்தாளை, அநங்கன் கூர்ங்கணையெனப் பொலியுங் கண்ணாளை, பொற்றாமரைமொட்டினெழிலையழித்த குயத்தாளைப் படைத்தவன் நான்முகனோ ? மதனனோ ? நானுமவளை யடைவேனோ? என, அரம்பைக்கானின் மறைந்திராநின்ற மாரீசன் அவளைப் படைத்தவன் நானமுகனு மதனனுமல்லன். மாரீசனென்று முறுவலித்துத் தான்முன் சூழ்ந்தவாறு காசிபமாமுனிவருடைய திருவேடங்கொண்டு வெளிப்பட்டான். கோசலை திருமதலையார் அவனைப் பாரா ஆங்குக் காசிபர் போதருகின்றனர். அவரை நோக்கவெனதுள்ள நாணுகின்றதெனறு தலைவணக்கியிருந்தனர். மாரீசன் ஆயிரம்புழைக்கையின்வலியுடைய தாடகையைக்கோறல்செய்த க்ஷத்திரியப் பிரமசாரி யேழைபோல வீற்றிருக்கின்றனன். திரிலோகத்தையு முடிக்கு மாற்றலுடையானெனு மதைககாட்டாது விநயசம்பத்துடையானா யிருக்கின்றனன் கண்களுக்கினியனாயினுங் கருமத்தாற்கொடுமையனான அவனைப் பெருந்தீயிற்றள்ளிக் கொன்றுவிடுவோமென்றுன்னிவந்து, நமது குழந்தை இராமனுக்கு மங்களமுண்டாகுகவென்றனன். இராகவபிரானார் மாரீசனைநோக்கிக் காசிபரோ? நீரென, மாரீசன் நாம் காசிபனுடைய படிவங்கொண்டு வருகின்றனமென்பதை இராகவனுணர்ந்துண்மைக்கா

சிபரோ? என்று வினவினனோ? எனக்கொடு வெருவலுற்றுத் தாசரதிநமது மாயையின் திறத்தைத்தெருண்டுகொண்டவனல்லன். காசிபன் பிங்களனுடைய வேடந்தரித்துவந்திருப்பதை யிராமபத்திரன் அறிந்திருக்கலாம். நாமிவ்வமையங் காசிபனதுபடிவங்கொண்டு தோன்றியிருக்கின்றமையி னப்பிங்களவேடங்கொண்ட காசிபர்நீதாமேயெனக்கேட்டனனென்று தேறி, இராமா! நான் பகவான் விசுவாமித்திர மகருஷியாருடைய மாணாக்கரி லொருவனாகிய காசிபன். கபடமில்லாதவனென்றனன். இரகுநாதா ஓ! ஓ! பிங்களன் புகன்றகாசிபர் இவர் தாமென்றெண்ணி ஐயரோ! ஆங்குத் திரையினுளுறைபவள் சீதையோ? சொல்லுமினென்றனர். மாரீசன் ஆமாம் அவள்தான் ஜானகியென, இராமசந்திரர் ஏ வருந்திய உள்ளமே! அவளே ஜானகியாம். முனிவரோடவளைப்பற்றி நாம்பேசுங்காறு நீயங்குமிங்கு மலையாதிருத்தியென்று நெஞ்சிற்கோதி, ஏ காசிபமுனிவரோ! சீதையின்திறத்து நீர் சிலமொழிகள் மொழிந்தீரெனக் கேள்வியுற்றேனென்றனர். மாரீசனதனைக் கேட்டிதுவரையிலு மிராமனோ டிழைந்தவனுண்மைப் பிங்களன்தான். நமது கரர்ளனல்லன், அவன் இலட்சுமணனாலுயிர்நீத்தவனே என்செய்கேனென்று வருந்தி, இராமசந்திரரோ! பிங்களனெங்குற்றானென, இராமபத்திரர் நம்மைவிட்டுப் பிரிந்துபோன பிங்களனிக்காசிபனைச் சந்திக்கவில்லனோ? சந்தித்திருக்கிற் பிங்களன் யாங்குச் சென்றானென்று வினவ ஏதுவில்லையே யென்றனனு, காசிபரோ! பிங்களன் நீயிர் வருதலைப்பார்த்து, நும்மை விளித்துவர வெதிர்கொண்டுபோந்தான். முன்னர்ப்போலக் கானகத்துரங்கலின்கையிலகப்பட்டானோ வென்றருளினர். காசிபர் வேடங்கொண்ட மாரீசனதனைக் கேட்டு, இதுகாறும் இராமனோடு கொஞ்சிக குழைந்துநின்றவன் நாம் நினைந்தபடி யுண்மைப் பிங்களனல்லன். நமது கராளனே யென்றுள்ளுக்குளுவந்தான். கோசிகாநதி தீரத்திலிருந்து வேட்டைமேனசையாற் றனியே சேறலுற்ற தாசரதியைத் தேடிநடந்தவுண்மைப்பிங்

களனை யுண்மைக்காசிபர் தேடுவான் சுற்றுகின்றனரென்று முந்திப் புகன்றேமல்லேமோ? அக்காசிபர் பிங்களனை யெவ ணுங்காணலராகிப் பெயர்த்தும் வந்து செய்மையினோக்கி யாங்குத் தோழியர் புடைசூழப் பல்லவச் சேக்கையிலிருந்து தாபமடைகின்றவள் ஜனகாகுல சுந்தரியார்போலக் காண்கின் முள். ஓ! ஓ! அச்சானகியார் பகவான் விசுவாமித்திர மகா முனிவரது பன்னசாலையிலன்றோ விருக்கின்றனர். இக்க ன்னிகையோ மைதிலியார்போலவே கட்டழகுடையவளாயி ருக்கின்றனளென்றுகருதி யயலினோக்கி யோர் பள்ளத்திற் பெருந்தீவளர்த் தோர்பாறையினு லதுமூடப்பட்டிருக்கின் றது. இதற்குக் காரணம் யாது?' மதனனுல் மம்மருழக்கி ன்ற அவ்வன்னமன்னுள் அஙகியிற்புகவோ? அறிகிலேம் இகருறுஞ்செடிமறைவிலிருந்து நிகழ்வதைப் பார்ப்போமெ ன்றிருந்தனர். பின்னருண்மைப் பிங்களன் வந்தெனதைய னை இராமபிரானை யான் கண்ணுற் பாரப்பதென்றென்று வரு ந்தி நான்குதிசையினுநோக்குற் றோர்திசையின் விசிகத்தா லேவுண்ட கடகரி, எண்கு, கேழல், கொடுவரிமுதலியவற்றின் புணணீர்த்துவலை சிந்தியிருத்தலைக் கண்ணுற்றுத் தாசரதி செ ன்றவழி யிதுவேயென்று சிறிது சேய்மை நடந்து ஓ! காசி பராங்கு நிறகின்றனர். இராமபிரானு மாங்கணிருக்கலாமெ ன்றுவந்து, புறத்திலம்புப் புட்டிலுங் கரத்தில் வில்லுமிடையி ல் வாளுங் கண்ணிற் கருணையுந் தாஙகிக் காசிபருக் கயலில் நமது நாதர் நிற்கின்முரென்றுவந்தனன். மாரீசன்வருமப் பிங்களனைப் பாாத்துப் பிங்களவேடங்கொண்ட நமது கரா ளன் வருகின்முனென்று கருதி, இர்ாகவா! பிங்களன் வந் துவிட்டானென்ன இரகுநாயகர் பிஙகளா! நீ யுண்மையைச் சொன்னுயென்று இப்போதுதானெணணினேனென்முர். பிங்களனதனைச் செவியுற்று நாமோவொன்றும் புகலாதிருப் ப, நீ வாய்மைபகர்ந்தனையென்று சுவாமி சொல்லக் காரண மென்னவென்று நினைந்து, இரகுநாதரோ! நீர் கூறியருளிய திருமொழியை யானுணரவில்லையென்றனன். மாரீசன் வி

ரைந்து, முந்திக் கால்விசைத்தோடி வந்து அப்பிங்களனை நோக்கிக் கராளா! தெய்வாதீனம். நின்னையுயிரோடு கண்டேனே. காசிபன் பிங்களனுடைய வேடத்தைத் தரித்துக்கொண்டு, இராமனோடு குலாவுகின்றனனென்றும், சுமித்திரை சிங்கத்தால அடிக்கப்பட்டு, நீ தாஞ்சிறுயென்றுமெண்ணிப் பீழைப்புணரியிலழுந்தினேனென, பிங்களன்மாரீசனைக் காசிபரென்றேயெண்ணி நகைத்து ஒருப்பட்டு நிற்குமனமுடைய காசிபருங் கட்குடியனைப்போல நன்றாய்க் குழறுகின்றனரென்றுள்ளத்தினுளுன்னிக் காசிபரே! நீர் புகன்ற மொழிகளென்றைல்தெருளப்படவில்லை. என்னை நோகக்கிக் கராளா! என்றீரோ. மீண்டுஞ்சொல்லுமினென, மாரீசன் ஓ! ஓ! நமது கராளனல்லனென்றுவெருவந்து நண்புடைய பிங்களா! பெண்துணிவாயிற்றா வென்றன்றோ சொல்லினேன். மற்றவை நிற்க, ஆங்கு நிற்கிற பெணணமுதைப்பாரென்றுகண்ணாற்காட்டினன் பிங்களன் கண்ணுற்றமைதிலியாரன்றி இவ்வளவுப் பெருஞ்செவ்வியுள்ள பெண்ணு முலகிலுண்டோ? அம்மிதிலைநாடியாரோ! ஒன்றரைககாவதத்துக் கப்புறனிலுள்ள பகவான் விசுவாமித்திரருடைய ஆச்சிரமத்திலிருக்கின்றனராதலா லிவளவரல்லள். எழிலெல்லாமொருசேரத்திரண் டோருருக்கொண்டாற்போ லிருக்கின்றனளென்று நின்றனன். மாரீசன் ஓ! ஓ! இவன் கராளனல்லன். பிங்களனே அரிதரிது! குழந்தை கராளன் நாமுன்னரோ யெண்ணியாங்குச் சுமித்திரைகான்முளையால் முடிந்துவிட்டானோ? பிங்களப்படிவங்கொண்டு, வேறெவனிருக்கின்றானோவென்று பருவந்து இரகுநாதரே! கண்களினின் றாலிசிந்த வப் பெண்மயிலழுகின்றனள் பாரீரென, இராமபத்திரா பார்த்து, ஓ! ஓ! அவளுடைய முகங்கமலத்தினளவாயினுங் கண் கடலினும் பெரியவாயிருககின்றன. இடையிழையினு நுண்ணியதாயிருப்பினும், பொன்வள்ளம்போலு முலைகள் மலையென விளங்குகின்றன. பூமகளினு மாமைமிக்க வெழிலுடை அவள் வருந்துகின்றமை யெனதுள்ளத்தை

வருத்துகின்றதென்றனர். பிங்களன் இவருண்மைக் காசிபரா யின்,நம்மைப்பார்த்துக் கராளா!நீயிறந்தாயென்றும்,காசிபன் பிங்களனுருக்கொண்டு வந்திருக்கின்றனனென்று நினைத்தே னென்றும், மறைபொருளாக நமக் கியமப ஏதுவுண் டோ? இல்லையாகலா லிவன்காசிபரல்லன். தாடகையையிரகு நாதா கொன்றமையா லோராரககன் மாயையாற் சீதையைப் படைத்துக் காட்டி நமது இராமசந்திரனைகொல்வான் காசி பாவேடந் தரித்திருக்கின்றனன். நீ முந்திச் சொல்லியதை மீண்டுமுறையென்று நாங்கேட்டதற்கதைப் புகலாதுசிதமான விடை சொல்லாது வெருவுற்றுக் கராளாவென்று விளித்த தை மறைப்பப் பெண்துணிவாயிற்றுவென்றேனென்றுனென் று நினைந்து,இட்சுவாகு குலசம்பூதரோ!ஆங்குக காணப்படுகின் றவள் சீதையாரலலள். இவ்வடவியி லசசானகியார்வரக் கார ணமிலலை இது நிசாசரருடைய மாயையென் றெண்ணுகின்ற னெனென, இராமசந்திரராலோசிததுக் காசிபரைத் தூரத் திற் கண்டெதிர்கொண் டவரையழைத்துவருகின்றே னென் று சென்ற விபபிஙகளன் அக்காசிபரைப் பாராமல் மீண்டு வந்து, அவள் சீதையல்லள் மாயையென்கின்றனன். முந் தியோ சீதை சீதையென்று கொண்டாடினன். உண்மைச் சீதையை மாயாசீதையென் றிப்போ திவனுரைக்கக் காரண மென்னவென் றுன்னி, மாரீசனைநோக்கி காசிபரோ! பிங்க ளனுடைய மொழியைக் கேட்டீரோவென, மாரீசன் இராமப த்திரரைக் கிட்டி இரகுநாதரோ! மாயைதெரிந்த வோராரக் கன் நமது பிங்களன்போலப் படிவங்கொண்டு தாடகையையு ஞ் சுவாகுவையுங்கொன்ற நம்மைக் கொலைபுரிய வந்திரு க்கின்றனனென்று கருதாநின்றேனென்றான். இராமபத்தி ரர் காசிபரோ! நீர் பகர்நததுண்மையே நமது பிங்களனிவ் வெல்லை வந்துவிட்டா லிவனுடையும் பெற்றியென்னுமென, மாரீசன் இராமசந்திரரோ! தாடகையுஞ்சுபாகுவுமடைந்த பெற்றியே யிவனுடையதாகுமென்றனன். அவ்வேலை பிங் களன் அத்தோ! நாம் பிங்களனல்லோமென்று மிக்கரவட

னைக் காசிபரென்றுங்கொண்டு, அவன் மாற்றத்தைச் சுவாமி யேற்றுக்கொள்கின்றனரோ வென்செய்குதுமென்று பொருமி இரகுநாதரோ ! உமதடியேனாகிய நானிருப்ப வென்னைத் தவிர்த்துக் கள்வனோடென்னுளையாடுகின்றீரென்றனன். தாசரதியார் மாரீசனைப் பாராக் காசிபரோ ! நாம் பேசுமமையத் திவ்வரக்கனஞ்சா திடையிடைப் பேசுகின்றானெனப் பிங்களன் அதனைக்கேட்டுத் தன்னியற்கையுருமாறிக் காசிபருடைய வேடம்பூண்ட விராககதனாலிப்போதுள்ள நமது தன்மை நன்றாயிருக்கின்றது. உண்மைககாசிப ரிப்போதிவண்வந்தாலிவன்மொழியென்னாகுமோ ? என்னைச் சொல்லியாங்கவளையும் அரக்கனென்றே மொழிந்து நீக்குவனோ வென நினைந்து அரிதரிது! இராகவபிரானோ ! ஆராயாதொன்றும்புரியாதிர். இராக்கதருடைய வஞ்சகத்தைப்பின்னால் நீரோ பார்ப்பீரென்று வாளாவிருந்தனன். அககாலை மாரீசன் மாயாசீதை புலம்பும்படி தனது மாயவித்தையைக் கருதுதலும், திரையினுள் மாயாசீதை அறமபுரியாத் தமியேனுக்கு இரகுநாதருடைய திருமார்பு கிடைக்குமோவென, இராமபிரானுரமமொழியைச் செவியேற்றுப் பெண்ணிற்றிலகமே ! நினது விழியென்னும வேலாற் புண்கொண்ட வெனதகலம் பொற்றாமரையின் மொட்டுப்போலத் திகழு நினது தனங்களாலொற்றப் படாவிடி னப்புண்ணெவ்வா றாறுமென்று தாமே செப்பிக்கொண்டனர். காசிபருடைய வேடங்கொண்டுநின்ற மாரீசன் இராமபத்திரனுக்குச் சீதையின்மேல் விருப்புக் கடலினும் பெரிதுபெரிது! நாமெண்ணியவண்ண முடிக்கலாமென்றெண்ணி இராகவா! சீதையினதெண்ணத்தை நீ நிறைவுசெய்யவேண்டுமென, இரகுநாயகர் காசிபரோ ! கேண்மின். இவ்வனத்திற்றோன்றாநின்ற சானகியென்னைக்குறித்து விரகதாபமடைந் தெனதுமுயக்கத்தை யாதரிககின்றனள். அவளுடைய சம்மதமவ்வா றிருந்தும், பரிணயமாகாமையினா லவண்மாட்டணுக வச்சமடைகின்றனனென, மாரீசனதனைக்கேட்டு, முன்போல மாயையைக் கருதுதலு மெழினி

யினுள் தோழியரிலொருத்தி கைகுவித்து, அன்னமே சொன்னமே தேனே ! மைதிலீ! கேளாய், இரகுநாயகர் நினக்கு நாயகராகக் கிடைப்பரோ ? மாட்டாரோ? என் றையமுற்று வருந்தாதை. பகவான் விசுவாமித்திர மகருஷி நம்மிருவரையுங் கூட்டுவரென்றனள். இராமபத்திர ரம்மொழியைத் திருச்செவியேற்றுவந்து ஆடாம். மன்றற் செய்தியிற் பகவான் விசுவாமித்திரா தலைப்பட்டிருக்கின்றனரென்று நமது பிங்களன் கூறக்கேட்டிருக்கின்றோமே. இம்மாற்றம அதனோடொத்தேயிருக்கின்றதெனத் திருவுளங்கொண்டனா. பேதைமையும், வியவகாரத்திற்றேர்ச்சிக் குறைவுமுள்ள வோரதிகாரி வழக்கிற்பொய்த்துளானுடைய பொய்யுரையை மெய்யெனவும், அவ்வழக்கிற் சோர்ந்த மெய்யனுடைய மெய்ம் மொழியைப் பொய்யெனவுங்கொண்டு நீதியைத் தொடராத முடிவுசெய்ய, அதனைக்கண்டு சோராநிற்கு மம்மெய்யனைப்போற் பிங்களன் இன்னற்பட்டு, ஆ! ஆ! மாயையின்றிற னன்றோயிருக்கின்றது. அம்மாய மிரகுநாதருடைய செவியுறும்படி சீதையாரைப்போலவு மவருடைய தோழிகளைப்போலவுங் கிளக்கின்றதென்றனன். மாரீசன் இராமசந்திரரே! பிங்களனுடைய வேடம்பூண்டு நிற்கின்ற விக்கள்வனுடைய மொழியைக்கேட்டீரோவென, இராமபத்திரர் காசிபரே! இம்மாயாவியினுடைய மொழியைச் செவியிலேற்கலாமோ? என்றனர். செய்மையினின்ற பிங்களன் சுவாமி ! நாதரே! நானு மாயாவி! சிறிதுபொழுது செல்லினெல்லாம்வெளியாகுமென்றனன். பின்னர் மாரீசன் மாயையைச் சிந்தித்தலும், பொருமுகவெழினியினுட் பாங்கியரிலொருத்தி ஜானகி! எங்கள்நாயகமே ! கேட்டருடி, நின்னையிராவணன் காதலிக்கின்றானென்று கேள்வியுற்றாயோவென, மாயாசீதை கண்ணில் நீர்பெருகவிட்டு, இராவணனென்னை வேட்பது தேவர்கட்குணவாக வமைத்தஅவியைப் புன்னுமலியொன்றுநயப்பதையொக்கும். அவ்விராவணனதிரப்புரைக்கிணங்கியெனது தந்தையாருடம்படுவரேல் நெடும்புனலிலாவது, பெருந்தீயிலாவது, நஞ்சை

யயின்ருவ துயிரைநீத்த நின்னமென்றனள். இது இராமசந்திர ரதுசெவிவயிற்சாராதலுமிச்சீதை நம்மையேவரிக்கின்றன ளென்று திருவுளத்திற்பெருமகிழ்வுற்றனர். காசிபனை யழைத்துவருகின்றேனென்று சுவாமி பக்கலுரைத்து, விடைபெற்றுச்சென்ற கராளன் மீண்டுவந்தான். செடியினிற் பதிவுகொண்டுள்ள காசிபரக்கராளனைநோக்கி யுண்மைப்பிங்களனென்றெண்ணி, ஏ பிங்களா! வேட்டமாடுதறபொருட்டுக் காட்டுச்குத்தனியேவந்த இராமபத்திரரைப் பார்த்தாயோவெனக் கராளனெண்ணி, ஆ! ஆ! இவனுண்மைககாசிபனே? அல்லது அக்காசிபனுடைய வுருப்பெற்ற நமதுமாரீசனே? என்று ஐயமுற்று மாரீசனென்று தேறிப் பரிகாசத்தால், ஓ பெரியவரே! இராகவபிரானை நான்பாாக்கவில்லை. ஆனல் நீர்சொற்றவாறவனை யவ்வனம் விட்டு, நெடுஞ்சேணிற் கொண்டுவந்து விட்டேன். இத்துணைப்போது பாணித்து நும்மைக் காணுமையினுல் விசுவாமித்திரனுடைய வாணையால் இலட்சுமணனும்மைக் கோறல்புரிந்திருப்பனென் றெணுது மனமடைந்தவலக்கணை யென்னென்றுரைப்பேனென்றனன். காசிபர் ஐயோ இவனார்? பிஙகளனுடைய வேடத்தைத் தரித்திருக்கின்றவோரரக்கன் நம்மைத் தன்னைச் சோந்தவனுய்ப் பாவித்துமொழிகின்றனனுகலால், நமதுருவத்தை நிசிசரரிலொருவன் தரித்திருத்தல்வேண்டும். எல்லாவற்றையுமறிதுமென்று கருதி, இதுபோழ்து இராமபிரானுரெவணிருக்கின்ருருரையெனக் கராளன் ஐய! இராகவபிரான் சீதையைப்பார்த்துக்கொண்டாங்கிருக்கின்றனனென்றனன். காசிபாசீதையென்று நம்பிப் பார்த்துக்கொண் டிருக்கிருரோவென்று வினவக் கராளன்மாயாசீதையை மெய்ச்சீதையென் றவ்விராமபிரான் தேறியிருப்பினுஞ் சம்பராசுரன்முதலியோரினு மாயைவல்லவருந் தாடகையினுடைய புதல்வருமாகிய நீர செய்த மாயை யானறிவேனென்றனன். காசிபர் பயமுற்று அந்தோ! இவன் மாரீசனேடு திரிகின்ற ஓரிராாகதனு யிருத்தல்வேணடும். அம்மாரீசன் நம்முருத் தரித்துக்கொண்டு புள்ளுவஞ் செய்கின்ருனெ

ன்றிவன் இளவியே இளக்கின்றது. இக்காலை நாமென்செய்குதும். நாம் மாரீசனல்லேமென்று பிங்கள வேடமுடைய விவ்வரக்கனறிவானானால், நம்மைக்கொல்லாதுவிடான். புலியின்கையிலகப்பட்ட கலைபோலாதுமென்று சோர்ந்தனா. கராளன் மாரீசரே ! நான் தாடகையென்றதா லன்னையாயகங்கொண்டிடும்மையடைகின்றீரோ ? இராமனுடைய வலியைக் கருதியசுசுற்றுப் பாசாங்குபோடுகின்றீரோவென்று பரிகாசமாகவினாவினான். காசிபரெழுந்திருந்து கைகூப்பி இராக்கதரே ! நுமக்குப் போற்றிபோற்றி. நானோ மாரீசனல்லேன் கருணைசெய்தென்னை விடுவீர் கீர்த்தியடைவீரென்றிரத்தலுங் கராளன் ஓ ! ஓ ! இவன்காசிபப்பிராமணன். நாமாய்ந்துணராது மாரீசனென்றெண்ணி யெல்லாமொழிகளையுஞ் சொன்னோம். மாரீச னிதுகாறும் வாராமையினால், இலட்சுமணனாலடியுண்டு மாய்ந்தவனேயென்றெண்ணி யரந்தையுற்று, அவ்விலக்குமணனைக் கண்ணுற்று லிப்போதேகொலைபுரியலாம். நமது நட்டோனாகிய மாரீசனை வீட்டுதற்கு மாறாக இராமனுக்குப் பிரியனான இந்த வேதியனை விண்ணேற்றுவோமென்று காசிபனைப் பிடித்துத் தலையைத் திருகமுயன்றனன். அக்காசிபரோடி இராமா! இராமா! மாரீசனுக்குத் தோழனான இவ்வரக்கனென்னைக் கொல்வான் துரத்துகின்றனன். காவாய் காவாயென்று இரகுநாதர் பக்கலணைந்தனர். கராளனுங் காசிபனை வெருட்டிச் சென்றான். இராமபத்திரராங்கோலமிடுகின்றவர் காசிபரோவென, அம்முனிவேடந்தரித்த மாரீசன் இரகுநாதரே ! நான் நினது பக்கலிருக்கின்றேனே. என்னைத்தவிர வேறு *காசிபருண்டோவென்றனன் அக்காலைப்பிங்களவேடங்கொண்ட கராளன்உண்மைக் காசிபனைப் பின்றள்ளி முன்னோடி இராகவபிரானே! காசிபனைப்போல வேடங்கொண்ட இவ்வரக்கன் என்னைக் கொல்லப்போதுகின்றனன். காத்தருளவேண்டுமென்றான். இராமபத்திரர் மாரீசனைநோக்கா, ஓ காசிபரே ! நமது பிங்களன் வந்துவிட்டானென, மாரீசன் கராளன் வந்துவிட்டானென்

றுள்ளுக்குளுவந்து இராமசந்திரரே! ஓரரக்க னெனதுப டிவங்கொண்டு நமது பிங்களனைத் துரத்திவருகின்றனன் பா ருமென்முன். கராளன் தள்ளினமையாற் பின்றங்கி வந்தவு ண்மைக்காசிபர் இராகவா! காசிபன் நானே அவன்மாரீசன். மாயையாலெனது வேடங்கொண்டு, மாயாசீதை யுண்டாக்கி நின்னை மயங்கச் செய்கின்முனென்றனர். பிங்களவேடங் கொண்ட கராளன் தெய்வாதீனம். மாரீசன் காசிபனுடைய வேடங்கொண்டு சௌக்கியமாயிருக்கின்முனென் றிதயத்திற் போரவுகந்து, உண்மைப் பிங்களனைப் பார்த்து இவன் யாவ ன்? எனது வேடத்தைத் தரித்து நிற்கின்முனென்றுருத்து நோக்கலுங் காசிபர் வேடங்கொண்ட மாரீசன்பிங்களவேடங் கொண்டிராநின்ற கராளனைக் கண்ணுற்று, ஏ பிங்களா! நீ சி னங்கொள்ளற்க. ஓ ரரக்கன் நின்னைப்போல மாயையாலுரு வங்கொண்டு வந்திருக்கின்முனென்று நமது இரகுநாதர் முந் தியே யுணர்ந்தனரென்றனன். அவ்வேலே பிங்களன் காசிப னைநோக்க, ஐய! மாயை மாரீசன் நுமதுருக்கொண்டு என்னுடைய வேடத்தைத் தரித்திராநின்ற கராளன்முன் யானென்றெண்ணுபு முந்தவென்கட்போந்து கராளாவென்று கூவிப் பேசிப் பின்பு நானககராளனல்லே னென்றுணர்ந்து மு ன்சொல்லிய மொழியை மாற்றிப் பேசினன் மாயையில் வல்ல அவ்விரண்டுபெயருஞ் சுவாமியோடு குலாவுகின்றன ரென்முன். இட்சுவாகு குலசம்பூதர் ஆச்சரியம்! எவனே வோரரக்கன் நம்பிங்களனுடைய மேனிகொண்டு காசிபனை மாரீசனெனவும், பிங்களனைக் கராளனெனவும், சீதையை மாயாசீதையெனவுங் குழறுகின்றனன். அங்ஙனமாயினுங் காசிபருமிருவர். பிங்களருமிருவராயிருக்கின்முகள், மேனி கழ்வதைப் பார்ப்போமென்றெண்ணியருளினர். அப்போது மாரீசனும்,கராளனும் இராமசந்திரரே! எம்மிருவரைப்போல க் கள்ளப்புடிங்கொண்டிராநின்ற இவ்விராக்கத ரிருவரையு நீரின்னேகொல்லவேண்டும். கொல்லாவிடின்மேலென்செய் வரோ வென்றஞ்சுகின்ரேமெனத் தாசரதியார மாரீசனைப்

பாராக் காசிபரோ! நன்றுநன்று, இன்னேசொல்கின்றேனென
க கார்முகத்தை வணக்கி நாணேற்றிக் காசிபனையும், பிங்கள
னையும் நோக்கி, அரக்கர்களே ! என்னிடத்தேயே மாயஞ்
செய்யாநின்ற நுமமிருவரையுங்கோறல்புரியாதுவிட்டேன். நீயி
ரிருவிரும் யாவா ? எவணின்றுபோந்தீர்கள். யாதியற்றக கா
சிபனைபபோலவும்,பிங்களனைப்போலவும் படிவந் தரிததீர்கள்?
யான் பாணத்தை நுங்கண்மீதேவுமுன் உண்மையைமொழிமி
னென்றனர். காசிபரும் பிங்களனும் வெருவி, இரகுராமா! பே
ரருளாளா! பததவற்சலா! எங்களாராவமுதே!வினையாதி,மாரீ
சனுடைய மாயை நன்குணராமே விபரீதம விளைக்காதி, யா
தையுமெண்ணித் துணிந்து செய்வதே கருமம். யாங்கள் நின்
னபயமபயமென்றனர். இராமபததிரர் அவ்விருவரு மரக்
கரென்றெண்ணி, நாஙகொல்லத்தொடஙகினு மவாபால் எமது
ள்ளமிரஙகுகின்றது இவ்விருவரையு நமது நணபரொன்று நாங்
கொள்ளவு மனமிவரோடு பொருந்தவில்லை. காரணமென்
னோவென்றிருந்தனர். மாரீசன் கராளனை நோக்கி ஏ பிங்க
ளா ! இராமபிரா னிவ்வரக்கரை யேனின்னங்கொலைபுரியா
திருக்கின்றனரொன்றுரைத்து நடலை விஞ்சையைக் கணணி
னன். உடனே விழிதோன்ற வழிவிட்டு முடிமுதலடிகாறு
மூடிய வுத்தரியததளாகி, அலரியுமறியாத அந்தப்புர வா
சிபோல வேடஙகொண டோாமடந்தை கணகள் நீரைச்சொ
ரிய, வாய் அந்தோ ! அச்சோ! என்றரற்ற, கூந்தலவிழ்ந்
துசோர, கைகளால் வயிறலைத்து மாாபிலெற்ற, கால்கள் தள்
ளாட மாயா சீதைபால் விரைந்துவந்து ஜானகீ! நங்கள்
வாழ்வின்றோடு முடிந்தது. கெட்டோாங் கெட்டோமென்ற
னள்.பல்லவச சேக்கையிலிருந்த மாயாசீதை யெழுந்திருந்து
உற்றபெற்றியென்னையோ?சொல்லடீசொல்லடீயென்னலுந்து
ன்பமிகுதியால் வாய்குழறி வார்த்தை சொல்லவுமொணணாத
வள்போல விம்மி விம்மிப் பெருமூசசெறிந் தம்மா சீதை! எ
ன்சொல்கேன். நின்னை மணமபுரிவான் வேட்கை புரிந்திரு
ந்த தசக்கிரீவன் நமதனையரால் நின்னைக் கொடுக்கிறதி

ல்லையென்று மறக்கப்பட்டானென்று சொல்லி, மேல் யாதொன்றும் விளம்பாமற் பூமியில் வீழ்ந்து புரண்டு கண்ணீரால் நிலத்தை மெழுகி யேங்கினள். மாயாசீதையு மாயை தேதொழிய நங்களுழுந்துகொண்டு அம்மாயமாதைச்சூழ்ந்து நமக்கு நேர்ந்த வின்னலென்ன உபன்னடியென மாயமங்கை பெழூர்தம்மா! மைதிலீ! அரக்கனுக்கு நாம் பெண்கொடுக்கிறதில்லையென்று நமது ஜனகமகாராஜா சொல்லலும் இராவணன் சினந்து எனக்குப் பெண்கொடுக்கிறதில்லையென்றனினை யின்னே கொலைபுரிகின்றேனென் றரிமாவெனப் பாட்ந்து ஜனகர் தலையைக் கிள்ளியெறிந்தான். நின்னையுந் தூக்கிக்கொண்டிலங்கை சேருகின்றேனென்று போதுகின்றானென் றிறங்கினள். மாயாசீதை யதனைசகேட்டு முகத்திலும், மார்பிலும், வயிறறிலுங் கைளானெற்றி ஓ! என்றலைவிதியே! தந்தையைப் பிரித்ததுமன்றி யென்னையுமரக்கன்வயஞ் செய்வாயோ? என்செய்கேன். நீரில வீழ்வேனோ? எரியினுட் பாய்விழுவேனோ? என்று பலபடப்புலம்பிப் புறத்தோடினள். இட்சுவாகு குலசம்பூதா பார்த்து, எ சீதை வருந்தாதை; கால்நோவ் வோடாதை, முகமவாட ஏங்காதை, இராக்கதருடைய வுயிரப்பலியுண்ணு மைந்தலைக் கட்செவிகளனது வெந்நிடைத்தூங்காநின்ற ஆவமென்னும் புற்றிலுறைகின்றன. அவைகளிலொன்றை யேவுவேனேல் மூன்றுலகத்தையு மழிவுகாணும். ஜனகப்பெருங்காவலரைமுருக்கிய இராவணனை நான்கொன்று நரிக்கும் பாரிடங்களுக்கு மிரையாக்குகின்றேனென் றருளிச்செய்தனர். உண்மைகாசிபரதனை ய கேட்டு, எ இராமபிரானே! பிரபததிகிட்டரான ஜனகரிராவணனால் விளிந்தனரென நினைப்பது புலமையின்பாலதன்றென்றனர். கராளன் மாரீசா! இக்காசிபவந்தனனை யெவ்வாற்றினும் விரைவிற காதுதல்புரிய வேண்டுமெனக் காதிலோத, மாரீசன் கராளா! அதுநிற்க. இவ்விராமனுடைய ஆகத்தைப் பார்த்தாயோ? அமரினேர்ந்துவந்த ஐராவதத்தைத் தும்புடைக்கையைப் பறறிக் கவணெனச்சுழற்றி யெற

றிய தசககிரீவனைக கொலைபுரிந்து விடுகின்றேனென்று கிளத்
துகின்றனன் இவனைச் சவட்டயாராலாகும்? இராவணனுடை
யமாற்றத்தைக் கேட்டு நாஙகெட்டோம. இனிநா முயவதரி
தென்று மெல்லவோதினன். பிஙகளன காதுகொடுத்தமமொ
ழியைக் கேட்டு, இனி நுங்களுக்குய்யு நெறியுமுளதோ! நல்
லது நலலதென்றுலம்பினன். மாரீசுன இராகவா! அவ்வரக
கரிருவரையும துணைந்து கொன்றருளுவாயென வுணமைமககா
சிபர் ஐயோ! இராமபிரான நன்குசூழாதம்பெண்ணு நமனை நம்
மிடத்தேவி னென்செய்குது மெனறுலைந்து, இராமசநதிரா!
தணணருட்கடலே! நற்குணவைப்பே! தீங்குபுரியாதி. நான் கா
சிபப் பிராமணனென்றனர். ஜனகிறந்தனரென்று வந்து
மொழிந்த மாயமகளுடைய வஞ்ச மாறறதனைக் கேட்டுககந
திகொண்டு புறம்போந்த மாயாசீதை மாரீசனுவிந்தனஙக
ளைக் கூட்டித் தீமூட்டிக கல்லாறபொதிந்து வைககப்பட்டுள்ள
பேரெரியைக் கணணுற்று, இகுளையீர்! எனது தந்தையிற
ந்தமையானும், ரகுநாதனைப் பதியாயடையாமையானு நான்
கொணடிராநின்ற வல்லலை, இவ்வங்கியில் நான் வீழ்ந்து சுட்டே
னெனினவ்விரண்டுமென்னைச் சுடாதுநீஙகாவென வீழ்ந்தன
ள் காசிபரும்,பிங்களனும ஓ! ஓ! மாரீசனுடைய மாயையெ
வ்வளவாக வியப்புசெயகின்றதென்றுன்னி, இராகவா!
இப்போது நடக்கின்றவைகளெல்லாம, மாரீசனுடைய மாய
மன்றி வேறிலலை. அதை நீ பின்னரறிதி. செய்வதையாய்ந்து
தேறிப் புரிவாயென்றனர் அகாரவாச்சியராய இராமபத்திரா
சீதை யககினிப்பிரவேசஞ் செய்தகாலை நானுய்ந்துசெய்கின்
றதென்னிருக்கின்றது? தனதுயிரை நீககுஙகாலத்திலு மறவா
து அச்சீதை யென்னை நினைந்தது என்னெஞ்சைபபோழ்கின்
றதேயென்றனர் கராளன் இராகவபிரானே! வேசிமகனை
அவ்வரககன் மாரீசன் மாயையென் றடுத்தடுத்துக கூறுகி
ன்றனென்றனன் அவ்வேலை மாரீசன் மாயையைக கருதனு
ம்பேரஙகியை யண்மி நின்ற மாயாசீதையைச் சூழ்ந்திருந்த இ
குளையாஎ ஜானகியே! நீ யுரைதநவாறு செந்தீயில்வீழ்ந்தனை

யே நங்களை யம்மைதையர்களாய்விட்டுப் பிரிந்தனையே! அந்தோ! அச்சோ! இராமனைக் கூடாதொழிந்தனையே! ஆங்கு நினது தநதையைக கண்டனையோ! யாங்களுன்னைவிட்டிங்குத்தரியோம். வந்தோம் வந்தோமென் றனலில் வீழ்நதனாகள். அக்காலையிராமசந்திரர் ஐயோ! சீதை உயிர் நீத்தமையினால், நமது மனோரதமென்னும் பெருமரமொசிந்து வீழ்ந்தது. எழில்களெல்லாம் தம்மெழிலை யொருங்கிழந்தன புவியினுக்கணியழிந்தது. கண்கள் விழாத் தவிர்ந்தன. சகத்தை வெற்றிகொள்ளுமதன் மதனொடுங்கினனெனப் புலம்பி மறுககமுறறனர். மாரீசனிவ்வேலை யிராமனுக்குப் பையுள் வளருமாறு புரியவேண்டியதே கருமமென்றுள்ளத்தினுட்கருதூற்று, இராகவபிரானைத் தழீஇக்கொடு ஐயோ! இராகவா! நின்காதலிபோய்விட்டாளே, ஜனககுலஞ்செய்த தவப்பயனால், யாகபூமியிற்றோன்றினவளே! இரதியினுஞ் சிறந்த எழின்மிக்காளே! ஈரேழுலகினு மிணையில்லாளே! எனது பிரியனாகிய இராமனிடத்ததிபிரீதியுடையாளே! பிரமனினதுதலையிலிவ்வாறு பொறித்தானோ? உளத்தடங்காடடேரன்புடைய நீ இறந்தனையென்று கேட்டும், நின்னைததொடராது நாயகன் பனைபோலவாளா நிற்கின்றானென்றேங்கிச் சோர்ந்தவனைப்போலப் பாவனைசெய்தான், அவ்வேலை யிராமசந்திரா நம்மிடத் தன்புற்ற சீதை துஞ்சினளென்று நமது நண்பராகிய காசிபரெஞ்ஞான்று மாறாவின்னலுறுகின்றனர். அன்னே! நானின்னேயிறவேனெனி னிவ்விடும்பையை யெவ்வாறு தணப்பேன். வெற்பின்மீதிவர்ந்து குப்புற வீழ்வேனோ? ஆழ்நரலையி லிறங்குவேனோ? வாள்கொண்டெனது களத்தைத் துணிசெய்வேனோ? நஞ்சைப் பருகுவேனோ? தீவினையேன் யாது செய்வெனென்று புலம்பினர். கராளன் இராமா! நீ செய்யவேண்டிய தென்னென்று தாடகையையேனும, சுவாகுவையேனும் வினவுதியே லன்னவர்தக்கதுரைப்பரென்றுள்ளததினுட் சொல்லிக்கொண்டு மாரீசனைநோக்கா, ஏ காசிபரோ! சீதையிறந்தவின்னலால்இராமபத்திரன்ஏங்குகின்றனன்.

நாம் யாது செயற்பாற்றென, மாரீசன் கராளனை நோக்கி, ஏ பிங்களா! இரகுநாதன் செய்வதையே யாமுஞ் செய்வோமென்றனன். அவ்வேலை அலக்கணுழந்த இராகவபிரானார் அதைச செவி சாத்தியருளிச் சீதை வீழ்ந்ததழலிலேயே நானும வீழ்கின்றேனென, மாரீசன் யான்புரிந்த இத்தனை முயற்சியு மதறருததானேயென்று மனததினுணுவந்து, இரகுநாதா! சீதை நின்வயிற்கொண்டிருந்த பரிவுக்குயினை நீப்பதுஞ் சாலாதாயினு மதனினூங்கியற்றத் தகுந்ததென்னிருக்கின்றது? நாமாவியைப் போக்காதிருப்போமாயி னிவ்விசாரநம்மைவிட்டொழியாதென்றனன். பிங்களனும், காசிபரும் ஆசசரிய மாச்சரியம், இவ்விராகசதப் பைதல்களுடைய மாயை யெல்லையிகந்ததாயிருக்கின்றதே. நாமிருவேமும் நிசிசரால்லேமென்றிரகுநாதா நம்பும்படி செயதாலன்றியுய்யு நெறி வேறிலது இககொடியாாகளோ ஐயனையுங் கோறல்புரிய முயல்கின்றனா. இவ்வமயத் தியாமென்செய்குது மென்றிருந்தனா. இராமபத்திர ரெனதுயிருக்குயிரான சீதையிறந்தபின்பு நாமெணணுவதியாதோ? கணவனிறத்தலு முடன்கட்டையேறுமே நிலத்தில் வீழ்நதழும் பேதையளைப்போல நாமுமேங்குவது புலமைத்தோ? என முன்னு, முன்னியவாறு தீப்பிழம்பில் வீழ்ந்து துஞசுதுமெனத் தணலை மூடியிருந்த கல்லின்மேற் சரணகமலம் வைத்தருளினா. காசிபரும், பிங்களனும் அந்தோ! இராகவபிரானார் மாரீசனால வஞ்சிக்கப்பட்டுத் தீப்பாயவுறுற்றுகின்றனரே. இதைப் பகவான் விசுவாமித்திரறிவரோ விவ்வாவத்தைத் தவிர்ப்பா. நாஞ்செயற்பாற்றென்னென் றேஙகினர்! மாரீசன் கராளா! எனதன்னையைக் கொன்ற க்ஷத்திரியப் பையனைக் கொன்றேன் கொன்றேனெனக் கராளன் புருவத்தை நெரித்து, இக்கூற்றுக் கூறுஞ் சமயமிஃதன்றென்று தலையைத் துளக்கி யுணாத்தினன். அச்செவ்வியிற் காசிபா ஏ இராமா! நினது காசிபர் கழறிய மாற்றஞ் செவியி னுழைதலில்லையா? அவனாரக்கனென்பதை யினியேனு முணரவில்லையா? எனலும், நம்

மாருடை இரகுநாயகனையமுற்றுச் சிலையின்மேல் வைத்த பொன்னடியை யெடுத்து மீண்டருளினர். மாரீசன் கராளா! இராமன் மாய்கின்றானென்னும் களிப்பு மிகுதியாலெனது தியபருவாய் குழறிவழிந்தது. இராகவன் பாணிக்காமணம் மை முருகசியேவிடுவான் இனி யென்செய்குதுமெனச் செவியிலோதக கராளன் மாரீசா! இனி நொடிபபோதுமிவட் டரியாது கலையுருக்கொடு கடுகிபபாறுதும. அங்ஙனமேயாயி னுமாகுக. இன்னமுஞ் சற்றுப்பாாபபோமென்றனன். தாச ரதியா ரபடாழ்ஞ்சிலையின்மேல் வைத்த சீபாதத்தினுடைய தூளியின்பரிசத்தால் அப்பெருஙகல் மறநீத்தாாத்துவ சுவ ரணரேகைபெறற தண்ணங்கதிாபபிறைபோலத் திருமட்குநிய ணிந்தமுகமும, திருசசங்காழிக குறிபொலியும் வேயுறழ்தோ ரும்,துளவமணிவடமும்,தாமரைக்கணமணிககோவையும், அ வைபொன்றனோடொன்று பின்னிபபுரளுந்தனமும்,நுணணு சுப்பிறபுனைந்த மரவுரியும் பொலியப்பொலிவுடையவோர்மங கையாய்த் தோன்றி, அந்நஙகை இராமபிரானே! ஜய ஜய இராமசந்திரனே! பல்லாணடு பல்லாணடு பலலாணடு,மங்களம் மங்களம் மங்களம் இரகுநாதனே! என்றனள். தொல்லைமூலப் பரஞ்சுடராகிய நந்தாசரதியார் இறந்தாரென்றுகளிகொணடு கராளனை நோககி மாரீசன் சொன்ன வாாத்தையைக காசிப ரெடுத்துரைப்ப, அதனைக் கேட்டனவில் வீழாதுமீண்ட சுவா மி யீண டியா ரிவள்? நமதன்னை கோசலைபோல விளிக்கின் றாளெனத திருவுளங்கொண்டு நின்றருளினா. அமமங்கைய ாககரசி நெருங்கிவந்து, எனது பிரியளான கோசலைமதலாய்! எனது பெயா அகலிகை. யான் சதானந்தனுடைய வன்னை. அவனுடைய பிதாவாற் சபிக்கப்பட் டெண்ணிறந்தகால மிக் கலலாயக கிடந்தேன். நினதுபாததூளி கதுவியதனாற்புன் மை நீஙகி மேன்மைபெற்றேனென, இராமசந்திரா, டீவா ன் கௌதமமாமுனிவருடைய பன்னியிந்திரனைப புணர்ந்த மையாற் சாபம்பெற்றுக கல்லாய்க் கிடக்கின்றனளென்று கேளவியுறறோமே. அவ்யாயே யிவளென்றெணணி, அன்

ணாய்! இராமன் போற்றிசெய்கின்றேனென்றனர். அகலிகை குழந்தாய்! இராமசந்திரா! நெடிதூழி வாழி ஜானகி பிராட்டியை மணம்புரிவா யென்றனள். அவ்வேலை காசிபரும், பிங்களனும் விரைந்துவந்து சதானந்தருடைய அன்னையே! எங்களம்மையே! நமக்காரஞ் செய்கின்றோமெனக் கோதமன் காதலிகுழந்தைகாள்! எண்ணியவெண்ணியாங் கெய்துவீர்களென் றாசிகூறினள். இராமபத்திரர் அகலிகையை நோக்கித்தாயீர இவ்விருவரையு மறிவீரோவென்ன, அவ்வகலிகை முன்னிகழ்ந்தவற்றை யெல்லாம் ஞான நோக்காலுணர்ந்து இராமபத்திரா! காசிபரும் பிங்களனுமிவ்விருவருமே ஆங்கு நிற்கின்றவர்கள் மாரீசனுங்கராளனுமே. அவ்வரக்கர் நின்னைக் கொலவான் இவ்விருவருடைய படிவங்கொண்டு மாயையாற சீதையைப்படைத்துப் பலவித வினையஞ்சூழ்ந்தனரெனறனள், மாரீசனுங்கராளனு மதனைக்கேட்டந்தோ! நாம் சூழ்ந்த சூழ்ச்சிகரு முற்றுமுரணு யிவ்வேசி வந்தாளென நெஞ்சினுள்வைது, இனி யிவணிருப்போமேற் புயிரிலிரோமெனவெருக்கொண்டு,முன்னே தாங் கருதியவாறு நவ்வியுருக்கொடு யாவர்கண்ணுங்கதுவலாகாவண்ணங் கடுகியோடினா! அகலிகை இராமபிரானே! நோக்காய். அவ்வரக்கருழையுருகொடோடுகின்றனரென, இராகவபிரா னம்மானுருவத்தோரிருவரையுந் தொடர்ந்து ஓதுட்டர்களே! எங்கேகுகின்றீர்! நிற்பீர நிற்பீரென் றுரப்பிக் கார்முகம் வாங்கி நாண் மாட்டிக் கோல் பூட்டிச்செவியளவு மிழுத்துவிட்டருளினர். அவ்வம்பாற் கராளனரற்றி விழுந்திறந்தான். மாரீசன் மாயையாற் கண்ணுக்குத் தோன்றாது கரந்து சென்றான். பின்னர்க்காசிபர அகலிகையை நோக்காப் பகவத்கடாட்சம்; பண்டை யுருவுற்றென்னை யோம்பவுற்றாயென்று துதித்தலும், அகலிகை காசிபா! இராமபாணத்தாற் கராள னேவண்டுமானுருத் தவிர்ந்துகாட்டுதீயாலெரிந்த நெடும்பனைமரம் போனறுவிழுந்து கிடக்கின்றான்! மாரீசன் கரந்தோடிப்போயினான் இராமபிரான் மீண்டெழுந்தருளுவதைப் பாரா யென்னு

ங்காலை, காமொழிலி செம்முண்டகக் காடுபூத்து, அவற்றிலோர்மலா நெடிய மூன்றாம்பிறையைத தாங்கியதுபோலச் செங்கையிற் சிலையேந்தி,தாசரதியார்வந் தகலிகையைப் பணிந்தன்னையீர்! நுமதருளால் யானுய்ந்தனென். காசிபனையும், பிங்களனையு நன்குணர்ந்தனென், அயலானைக் கோறல்புரிந்தனெனென்றனா கோதம முனிவருடைய இல்லாள் குழந்தாய்! இராமா! நின்பூவார்கழற்றுகளாற் பாவநீங்கிப் புனிதையானேன், நீ நீடூழிவாழ்க நான் முற்றத்துறந்தமுனிவாபாற் செல்கின்றேன்; விடைதந்தருள்வாயெனத் தாசரதியார் அங்ஙனமே போதுவீரன்னையீரென்று பொன்னடிவணங்க, அவ்வகலிகை சென்றனள் இராகவபிரானார் காசிபனையும, பிங்களனையு நோககியருளி நும்மிருவிரையு நோக்க நாணமுறுகின்றேனென் றருளிச்செயய, அவ்விருவரும் இராமபிரானாரே! தாயையுந் தம்பியையு நீர் சவட்டினமையினாற் சினங்கொண்டு மாரீசன் புணர்த்த மாயையின் வயமாயினீா. நீா யாது செய்வீரென்றனா. இரகுநாதா ஆமாம். மாயையின் திறமின்றுதா னெனககுத் தெரியவந்தது என்வயின் தீராக்கேண்மையுள்ள நீவிா இங்ஙன நடந்தவற்றை யாருக்கு முணாத்தலொண்ணாது நானோ சாலவுட்க டைகின்றேனென் றுரைத்தருளி,வேட்டையை வேட்டுவாத நான் மாயையின் வயத்தனாய்க காலகீட்டித்து விட்டேன். என்னைக் காணாது தந்தையார் தடுமாற்றங்கொள்வர், நாமின்னே செல்வோமென்று நடந்தருளி, ஓ! இப்போது நடுவுச்சியிற் றோன்றும் பரிதி யெத்திக்கிற் செல்வோமென .ஆராய்கின்றவன் போலத் தோன்றுகின்றான். குயிற்பேடைகள் தமது களிச்சேவல்களினுடைய தீங்குரலைக் கேட்டுண்ணீர்நசையொழிந்திருக்கின்றன. முனிவர்களுடைய வேள்வித்தலை மீதோங்கி யெழும்புகைப் படலத்தைக் கண்ணுற்று, கார்முகிலென வெண்ணி யாடுமயில்களின தழகை நோக்கிப் புல்வாய்கள் புல்கறியாதிருக்கின்றனவென் றோதிக்கொண்டே வழிநடச்கும் வருத்தமின்றி மூவரும் போயினார்கள்.

மூன்றாமங்கம்—முற்றிற்று,

ஸ்ரீ ராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

மாயிருவிசும்பு காக்குமன்னன்பணிப்பச் சித்திராங்கதனெ ன்ற வோர கந்தருவன்போந்தான், போந்து, திசைக்காவலர் முதலெல்லாப் பண்ணவர்களும் வணக்கஞ் செய்யுங்காலை, அன்னோர்களுடைய மணியணி முடியழுந்தி மிகச் சேத்தலாற் செம்முளரிமலரைத் தவித்துத் துப்போடுறவாடுகின்ற கழல்களையுடைய கடவுளர்வேந்தன் உலகமீரேழினுந்தனது செங்கோல் நடாத்தி வீற்றிருப்டக், காலன் தாடகையினதுயிரைக் கவர்வான் வலியீட்டிக்கொண்டு பாசத்தோடெதிருற்றுற் குழந்தாய்! வாராய் வாழ்நாளொடி தெய்துவாயென ஆசிகூறி நமனே! நினக்கு முந்தியிருந்த பல கூற்றுவர்களும் வநதென்னைக் கண்ணுற்றுப் போதல் பண்டைய வழக்கம். நீ இளஞ்சேயாயினு மம்மரபுவழா துணர்ந்து வந்தனை. நின்வரவு நல்வரவாகுக நினதுபுரி சென்றினிது வாழ்தி. என்னை யஞ்சாதியென்று விடைகொடுத் தனுப்புகின்ற திறலுடைய வத்தாடகையு மவளுடைய புதல்வர் சுபாகுவுங்கராளனு மிறந்தன ரென்றோதி ஆ! ஆ! என்று சிரித்து மீண்டுஞ் சொறலுற்றான். ஊழிதிரியுங்காலையுலகை முடித்து நின்றாடலியற்று நின்ற மதிமிலைசடையோன் முதலியோரைப் பரமான்மாவாகிய தமதகட்டிஞோபுடையிற் கரந்துவைத்து விரிபுனலிலறிதுயின்மேவும் பரமராகிய தாசரதியார் கோறல்செய்து தமதம்பென்னு மனுக்கன் வயப்படுத்தி யென்முன்னனுப்பினர். நானப்பாவகாரியர் மூவரையுந் தீவாய் நரகினுட்சிறைப்படுத்துச் சேமித்திருக்கின்றே னென்பதைத் தங்கள் சிததமுணர வெழுதிக்கொணடே னென்று தென்புலக்கிழவன் விடுத்த வோலையைப் படிப்பவவ்விண்முழுதாளி கேட்டென்று முறுதவுவப்புற்றன்னோனைக்கூய், சித்திராங்கதா! காலனுக்குக்காலனாகிய இராவணனைச் சேர்ந்த சில்லோரை இரகுபுங்கவர்கொன்றருளினரென்பதைக் கருமேதியூர்தி வரைந்து விடுத்தவோலையாற் றெரிகின்றோம். நீ யின்னே யிலங்கையுற்றுத் தாடகைமுதலியோர்க ளிறந்ததைக்குறித்துத் தயக்கிரீவன் என்செய்கின்றனன்? புரியவேண்டிய நற்கன்மங்களைப் புரியாது ஐ

ம்புலன் சென்ற வழியில் நெஞ்சைச் செலவிட்டிருவாயில் நமனுற்றபோதின்ன லுழக்குமிராந்தவனைப்போ லோலமிடுகின்ருனே? கற்றோர்கூடிய வவைக்களத்துமேம்பாடுறுகின்ற கற்றுணர்ந்தவனைக் கண்டச்சோ நாம்! இருமறையோடு முரணுநூலை நோக்காது வாழ்நாளை வீழ்நாளாக்கினேமே. இப்பிறவியைச் சுடவேண்டுமென்று துயருறு முழுமகனைப் போலப் பொருமுகின்ருனே? கலவிபயிலானிடத்து மெய்ம்மொழிப பாசுரப்பொருள் விரிததுரைத் தவனுணராமை கண்டுவாடுஞ் சிறியோனைப்போல வாடுகின்ருனே? அறிந்து வருதியென, அவனும இலங்கை செல்லுகின்றேனென் றுரைத்து நிருதனுருகமொடு, முன்னே கண்டாஙகுவாரா நின்றவள் யாவள்? அன்னுளுடைய ஒரு கொங்கையுணிபோலவும, மற்ெருன்று பொருப்புப்போலவும், ஒருசெவி யெலிககாதுபோலவும, மற்ெருன்றியானையினதுபோலவு மிருககின்றன. முகமொட்டையினது போலிருககின்றமையாலோரரக்கியெனத துணிகின்றேனென நின்ருன். அவ்வரககி விரைவாய வந்து சித்திராஙகதனைநோககி நீ யாவன்? கராளனே? அல்லாவிடின் இராககதரிலெவனெனக் கடாவச் சிததிராஙகதன் இவளுக்கென்ன மறுமாற்றம் புகலலாமெனச் சூழ்ந்து ஓ! ஓ! இவளே யொருபெயா பகர்ந்திருககின்றனளே. அவ்வாறே புகல்வாமெனககொண்டு அரககி! நான் கராளன்தானென்றனன். அவள் கந்தருவனை நோககா அரக்க! நீ உள்ளகிளர்ச்சியுடையானுய்க காணகின்ருய். நினது மனைவி கிருத்திரமுகியோ? இராமன் கொடுஙகணையினுல் நீ யுயிர்நீத்தாயென்று வயிறலைத்துக் கலுழுமரக்கியர் நாப்பட் கூந்தலையவிழ்ததுப் புரளவிட்டு நினைனககூயககூப்ப் புலம்புகின்றனளெனச் சித்திராஙகதன், இறந்த கராளனுடைய வில்லாள்கதற வேண்டிய துசிதந்தானேயென நெஞ்சினுளெண்ணுற்று, அரக்கர் குலமாதே! உயிருடையானு யானிருப்பததுஞ் சினேனென்று கிருத்திரமுகிக்குச் சொல்லியவன் யாவனெனக்கடாவினன். அரக்கி கந்தருவனை நோககிக் கராளா! கேள்

மாரீசன் இலங்கைவந்து பிரகத்தன் முதலாய வமைச்சர்களை
க் கண்ணுற்று நின்றோடு தனது தாயுந் தம்பியுமிராமன் வெ
ங்கணையினா லுயிர்நீத்தனர்களென்று மொழிந்து, இன்னலால்
மாதவம் புரியக் கோகர்ணக்ஷேத்திரத்துக்குப் போகின்றே
னென்று போயினனெனச் சித்திராங்கதனதனைக்கேட்டு, அ
ங்ஙனமாயின், மாரீசன் இராவணனைக்கண்டிலனோ? எனவினா
வினன். அரக்கி, கராளா! தசக்கிரீவன இலங்கையிலிலனாகலா
ன். மண்டோதரியுள்ளம் புழுங்கி யென்னை விளித்து வித்யுஜ்ஜி
ஹ்வனுடைய மனைக்கணேகி யெனது கணவரெங்குள்ளா ரெ
ன்றுணர்ந்து வருதியென்றேவினள். நானவ்வித்யுஜ்ஜிஹ்வனு
டைய இல்லமேயினேன் ஆங்கணவனில்லை அவனதில்லாளா
கிய மாயாவதி யோர்செய்திமொழிந்தனளெனக் கந்தருவன
ஃதென்னையோவென்றனன். அரக்கி ஓ! கராளா! நனிம
றைபொருளாயவதைப்புகலவஞ்சாநின்றேன் இங்குள்ளவவை
க் களத்தாரிற் சனகரைச் சார்ந்தவர்யாவரேனுமுளராயிற்சொ
ல்லுமின் சொல்லுமினென மொழிந்துதானே நகைபுரிந்து
கொண்டு, கராளா! கேட்டி. சீதையை மணம்புரிவான்
இராமனது திப்பியத்திருவுரு விராவணனும், விசுவாமித்திர
னுடையவுரு வித்யுஜ்ஜிஹ்வனும், இலக்குமணனுடைய வடிவு
சாரணனும் பூண்டுகொண்டு ஜனகர்பாற்சென்றிருக்கின்றன
ரென்று சாற்றினளெனக் கந்தருவன், ஜானகி இராகவனு
டைய வடிவழகி லீடுபட்டுச் சாலவும் வேணவாவுற்றிருக்கின்ற
னளென நன்கு தெரிந்திருப்ப, தலைபடைத்துளான் அச்சீதையை
விரும்புவானேன்? இராவணனுக்கு மணநிறைவுபெறினும்
பெறும். அவனே உயிர்மாயினுமாய்வனென்றனன். அரக்
கி சித்திராங்கதனைநோக்கா, நீ கராளனோ? அல்லனோ? உண்
மையைச்சொல்கசொல்கவென்று விரைந்து வினவக் கந்தரு
ன் அரக்கி! நீயிவ்வளவாவலோடு கேட்பக் காரணம் யாது!
நான் கராளனாயினும், வேறெவனாயினுமாக. நினக்கென்னெ
ன்றனன். இராக்கதப்பெண் அதனைக்கேட்டு நீ கராளனே
யாயின் நான் முந்திச்சென்று நீ சாகாதிருத்தலைக் கிருத்திரமு

இக்குறைத்தாடையணிகளைப் பரிசில் பெறுவேனெனக் கழறி னள். சித்திராங்கதன் பெண்ணே! அரக்கி! காரணமின்றியே வரம்பிகந்த வவாவுமகிழ்வு நினக்கேனுண்டாயின. காராளனுயிரோடிருப்பினன்றோ நீ கிருத்திரமுகியினிடத்து நன்கொடைபெறலியலும், அக்காராளன தியாகத்தையைப் பாகுபாடுசெய்துகொள்வதில் நரிகளுக்குங் கழுகுகளுக்கு முளதாய பூசல் வான்முகடளைமியதெனக் கேள்வியுற்றே னென்றனன். அரக்கியதனைக்கேளாக் காராளன் றுஞ்சினனோயின் நீயாவன்? சொல்லென்று மோவாயைப் பற்றியிரந்தனள். சித்திராங்கதன் நான் விபீடணரென்ற வுத்தமரைச்சார்ந்த வோரரக்கனென, அரக்கி நன்று, இராவணனுடைய செயலை மண்டோதரிக்குச் சொல்வான் செல்கின்றேனென்றகன்றனள். சித்திராங்கதன் அவ்விராவணன் செய்கையை யானுஞ் சனகருக்குரைக்கின்றேனென்று நடந்தனன்.

பின்னர்ப் பிரபன்னராகிய ஜனகப்பெருமானு மவருடைய புரோகிதராகிய சதானந்தரும வந்தனர்கள். ஜனகர் பகவான்சதாநந்தரே! நமது குழந்தை சீதையாகிய மங்கையர்க்கரசியை இராவணன் நம்மை நேரோகேட்குமுன் இராமனுக்குக் கொடுத்துவிடவேண்டும் நம்மாற் பிரார்த்திக்கப்பட்டுடம்பட்டிருக்கிற பகவான் விசுவாமித்திரமகருஷி சீதையை ஆடவர் பெண்மையை யவாவுந் தோளனாகிய இராமனுக்குத் திருமன்றல் செய்விப்பரோ?, மாட்டாரோ? என்றவல்ல லென்னெஞ்சிற் கிடந்து வருத்துகின்றதெனக்கௌதமர் காதலர் அதைத் தம் செவியாரக்கேட்டு மிதிலாதிபரே! மாதவமென்னும் பேரங்கியினாற் றமதரசப்பிறப்பென்னு மாடகத்தை யுருக்கித் தலைமையொளியென்னும் பிரமவொளியைப்பெற்றவரும், வேறுலகம் படைப்ப முயன்றவருமாகிய பகவான் விசுவாமித்திர மாமுனிவருக் கிக்கலியாண முடிப்பதொரு பொருளாமோ? அவர் சீதாபிராட்டியின் றிருமணத்தை நிரப்பின், பின் நமக்குத தசக்கிரீவனால் தீராவிடும்பை நேருமோவென்னக் கவலவேண்டா. அக்காதிகாதலரருளிய

பலப்பலவத்திரசத்திரங்களையுடைய இராமகோளரி யிராவன
னென்னுங் களிற்றினைக் கோறல் புரிந்தருளுமென்றனா அ
வ்வேலை யினியென்செயற்பாற்றென்றகன்றிருந்த இராவணை
னை வித்யுஜ்ஜிஹ்வன் கண்ணுற்றரசரே! நீர இராமவேடத்தை
ப்பூணவேவேணடுமே. நான் விசுவாமித்திரனைப்போலவும், சா
ரணன் இலட்சுமணனைப்போலவும் வடிவுகொள்கின்றோமெனை
த்தாமிருவருங் கொணடனா. தசக்கிரீவன் வித்யுஜ்ஜிஹ்வா!
சீதையின்பொருட்டு நமககுச் சிறறுளவாகிய மானிடககோ
லந்தரிக்கும்படி சாலநேர்ந்திருககின்றதேயென்று வருந்தி, நம்
அரும் பெறலடிகளாகிய சருவ சுவாமியைப்போல வுருவங்
கொணடான். வித்யுஜ்ஜிஹ்வன் பரமாத்துமனுடைய வுருககொ
ணட துராத்துமனை நோககி, ஐயரே! மககட்பிறப்புப்
பெண்ணேடுவாழககாமுறுகின்றநீர் மாக்களுருச் சிறிதுபொ
ழுது பூணினேதம்யாது? அதைக்குறித்தடுததடுத்துவருந்
தல் வேணடா. சிததிரத்திலலாநத செந்தாமரையைப்பழிககு
ந்திருத்தாள்களும், மேருகிரிசெமபொறு யிருக்கின்றமையி
னஃதொப்பாகாத் திருததோள்களும், வில்லையு மம்பையும
பற்றியதிசையானைகளின் கரங்களை மானுந் திருககரங்களும,
அருவிதூங்கும் வரையெனத்திகழு மாரவாரமுடையதிருமா
பும், களஙகநீத்த சந்திரனெனவிருந் திருமுகமும், செம்மு
ளரிமலரினிதழ்போலச் செவ்வரிபரந்து பெரியவாய்க் கரு
ணைசுரந்து மடைதிறந்தொழுகுந் திருக்கண்களும்விளங்க வி
ளங்குமும்மைச்சீதைகண்ணுறுவளேல் இராகவனென்றேயெ
ண்ணி நுமது மொய்ம்பினலங்கல் சூட்டுவதிலையுமுளதோ
வெனத தசககிரீவன் வித்யுஜ்ஜிஹ்வா! சீதை மாலைசூட்டாவி
டினும் நான் மானிடவேடந்தரிததநற்கு வேறாதியம் வேண
டா. சிறந்தபேரொழில்கொண்ட வவளது மேனியையென
திருபதுகணணூர நோககப்பெறுவனேற சாலுஞ்சாலுமென்ற
னன் சாரணன் ஏ இலஙகாதிபதியீர! சீதைநுங்கணமுகப்
பேபோதுவதிலையமிலது. இதுபோதிரண்டுநயனங்களாலேயே
பாரும். இலங்கைககுக்கொண்டேகியபின் னிருபதுவிழிகளி

ருளுங் கண்ணுறலாமென்றனன். பின்ன ரம்மூவரும் போந்து பகவான்விசுவாமித்திரருடைய ஆச்சிரமமணுகலும், ஜீமூதகனென்ன வபிதாநங்கொண்ட வாயில்காப்போனொருவன்விரைந்துசென்று தலைவரே! ஞானநிதியரே! மிதிலாநகரமன்னரே! பகவான் விசுவாமித்திரர் தசரத சக்கரவர்த்தியாருடைய வருஞ் செல்வக் காதலர் இராமலட்சுமணருடன் கடைவாயிலாரென, அரசமாதவர் செவிகுளிரப்பெய்தக்கேட்டுக் களிப்புற்றுச் சதானந்த முனிவரே! சக்கரவர்த்தி திருப்புதல்வர்களுடன் பகவான்விசுவாமித்திரமாமுனிவர் புறங்கடையெழுந்தருளியிருக்கின்றனரென்று வாயில்காவலாளன் செப்புகின்றான். அருள்செய்து நீரேகிக் கைந்நீர்,அடிநீர்,உண்ணீர் கொடுத்தழைத்து வாருமெனச் சதாநந்த மாமுனிவர் பொருக்கென வெழுந்துசென்றனர். பின்னர் ஜனகபூபதியார் ஓ! ஓ! மகாதது மராகிய கோசிகருஞ் சக்கரவர்த்தி செல்வப் புதல்வர்களும் வந்திருக்கின்றனரென்பதைக்கேள்வியுற்று நமதுள்ளமோ குதுகலிக்காமே,வாள்போன்ற வாளைமீனின்மொத்துண்ட முண்டகப்பூப்போலச் சாம்புகின்றதே. இஃதென்னை யென்னையென்றுன்னி வீற்றிருந்தனர். எழுந்து சென்ற சதாநந்தர் விரைந்து சென்று கரவடவேடங் கொண்டிராநின்ற வம்மூவரையு நோக்கி நீத்தோரே! இராமலட்சுமணர்களே! வம்மின் நீவிர்போத வித்தலமெத்தவமியற்றியதோ வென்று குசலம் வினவித் தக்கவாறுபசரித் துடன்கொண்டு மிதிலையர்கோன் மாட்டணுகினர். ஜனகரிருக்கையினின்று விரைந்தெழுந்து வித்யுஜ்ஜிஹ்வனை நோக்கி விசுவாமித்திர மகருஷியே! ஜனகன் போற்றி செய்கின்றேனென, வித்யுஜ்ஜிஹ்வன் இராசருஷியே! நுமக்கு நலமபெருகுக வென்றனன். இளைய பெருமாளுடைய வேடங்கொண்ட சாரணன் பரமாத்துமனுடைய திருவுருக்கொண்ட துராத்துமனுக்குப் பின் மறைந்துகொண்டு இலங்கேசரே! உம்மை மணமகனாக வடையுஞ் சனகருக்கு க்ஷேமமில்லாம லென்னென்றனன். வித்யுஜ்ஜிஹ்வன் உண்மையிராமனுக்குமேல் ஜனகருக்கு நமக்காரஞ் செய்வானு

கலா லவனுருப்பெற்ற இராவணன் வந்தனஞ்செய்ய வேண்டி யதென்றெண்ணுபு தசகிரீவனை நோக்கிச சீதை தந்தையைச் சேவிபபாயெனக் கண்ணாற் சொல்லலுந் தசகிரீவன் சாரண னுக்குப்பின் மறைந்து இந்திராதியராற் போறறிசெய்யபபடு கின்ற நானிச்சனகனுக்கு வந்தனஞ் செய்வலோ வென்று மெல்லக்கூறினன். சாரணனதனைச் செவியேற்று வித்யுஜ்ஜி ஹ்வா! முயற்சி பயன்படு பாககறிந்து, நமது புரவலன் செரு க்குவிட்டவனலலன். இராமனைபபோல நடித்துக காட் டானே லிவ்வேடங் கொண்டதினாற் பயன் பெறுவனோவெ ன்றனன். வித்யுஜ்ஜிஹ்வன் மீண்டுந் தயக்கிரீவனை நோக்கி நமக்காரஞ் செய்யென்று கண்ணாலுணாத்தலு மிராவணன் சீ தையை நான்காமித்த குற்றத்தினாற் றண்கதிரோன் வெருவு க்கொள்ளாது தோற்றஞ்செய்கின்றனன். அநஙகன் எளிய வனை வருத்தும் வலியவனைப்போல மிகைசெய்கின்றனன். நானோ தென்றலென்னுமுழுவைக்கோர் யாடானேன் நீயோ வஃது சாலாதென்று க்ஷத்திரியப் பைதலினுடைய வுருத்தரி க்கச் செய்ததுமன்றி யெல்லாரும் அசிசெய்ய ஜனகன் காலி லும் விழச் செப்புகின்றாய். சீதையை யடையு முன்னரோ யா ன் பெறும பெரும்பே றேழுபிறப்பிற்குமமையுமமையும். திக் குவெற்றி யியற்றிய தசக்கிரீவனுடைய வுணர்வு மிங்ஙனங் கெடுமோ? என்னுளத்துக் கினிய மங்கையர் புலவிபுரியுஙகா லையினு மவரடியை வணங்கி யறியாத வெனதுமுடி யிம்மனித் தனை வணங்குமோ வென்று முனிந்தனன். வித்யுஜ்ஜிஹ்வன் இலங்காதிபதியாரே! சினங்கொள்ளாதிர. நீரிப்போது இரா மனோ? இராவணனோ? தெரியச்சொல்லும். நுமதியற்கையு ருவத் தோடிருப்பீரேல் திரிமூர்த்திகளையும் வணஙகவேண் டா, இராமனுடைய தோறறஙகொண்டிருக்கின்ற நீர் யாரைவ ணங்கினுமெனன? அங்ஙன நீர்வணங்குத லுமது பகைஞனா கிய இராகவனுடைய வுடலைக் கண்டவர் காலிற் போடடொ றுப்பதையு மொக்குமன்றோ? அதையே னுணரவில்லையென, இராவணன் வித்யுஜ்ஜிஹ்வா! நினதறி வுஞ்சகைக்கொழுந்து

போலிருக்கின்றது இப்போழ்து யான் கொண்டிராநின்றது இராமனுடைய மெய்யென்று சினந்து வாள்கொண்டு வெட்டு வனெவ் வருந்துகின்றவன் யாரோ? இராமனோ? என்றனன் சாரணன் சுவாமி! இலங்கேசரோ! வாதாடி னவரவர றிவினள வாச சொற்பல்கும். நீர் வணங்காமலிருப்பிரேற சனகராயு ருவா விளைவிற்றண்டரு செய்யப்படுமெனத் தயக்கிரீவன் இராசருஷியை நோக்கி ஆரியரோ! இராமன் போற்றிசெ ய்கின்றேனென்றான். உடனேசாரண னெட்டுறுப்பு நில ந்தோய வீழ்ந்திறைஞ்சினான். சனகர் குழந்தைகாள்! நெடிது வாழ்மினென்றாசிகூறினார். பகவான் சதானந்தா வித்யுஜ்ஜி ஹ்வனைநோக்கி விசுவாமித்திர மாமுனிவரோ! இவ்விரண டிளஞ் சிறுவர்களு நிறவொற்றுமையின்றி மற்றயாவற்றினு மொத்திருக்கின்றனரோ. இராமன் யாவன்? இலட்சுமணன் யாவனென்றுவினவ, வித்யுஜ்ஜிஹ்வன் இவ்விருவரு மவ்விருவ ருமல்லரொனத் தன்னுணைகைத்துச் சதானந்தமாமுனிவரே! வேனில்வே ளருந்தவம்புரிந் தங்கம்பெற்றாற்போலவும், கரும்பு யல் வில்லேந்தி மண்ணுற்றாற் போலவும் விளங்கு மிவ்வாண்ட கை இராமன், மற்றவன் இலட்சுமணனென்றனன். இராவ ணன் சாரணனைக் கண்ணுற்றுச் சனகரின்னுஞ் சீதையை வர வழைக்காமலிருக்கின்றனரே யென்று மெல்ல வோதலும், சாரணன் “ ஆக்கப்பொறுத்தவர் ஆறப்பொறலாகாதா?” சிறி து பொழுது வாய்விள்ளாதிருமினென்று மெல்லவுரைத்தா ன். சதானந்தர் ஆரியராகிய கோசிகமாமுனிவரோ! தச ரத சக்கரவர்த்தி யறுபதினாயிர மாண்டாண்டு தநயரைப் பெறாமல் வருந்தி பரிமகம்புரிந்து மூவுலகையு மோம்புந் திற லாளமைந்தர்களை யீன்றாரெனக்கேட்டு மகிழ்ந்தோம். நன் மகனைப் பெறுவது பெறுகின்றவனுக்கு மாத்திரமன்று மன் னுயிர்க்கெல்லா மினிதெனனும் மொழி யிவ்விராமனாலிவ் வுலகினிலவுகின்றதென்றனர். இராவணன் சாரணா! நமது வித்யுஜ்ஜிஹ்வனைச் சதானந்தன் விசுவாமித்திரனே யென்றன் போடு விளிக்கின்றான். அக்கோசிகனோ தாடகைக்கினையா

கிவிருப்பன் நமது செய்வினை வெற்றியேயெனச் சாரணன் இலங்கேசரே! விதயுஜிஹ்வனை விசுவாமித்திர னென்றெல்லாரும் போற்றுவது சீதை கலியாணமாகு மளவதோ? அதற்குப் பின்னுமுளதோ? தவப்படிவங்கொண்டமையால் ஜனகா முதலாயோர் போற்றிசெய்து பழிச்ச நல்ல மணியாசனத்தின் மிக்க பெருமிதமாய் வீற்றிருக்கின்றனனென்று மெல்லச்சொலலி நகைபுரிந்தான் இராவணன் சாரணு! தசரதனுக்கு இராமன் ரூெட்டகமாகிய புதல்வர்கள் தோன்றினர்களெனக்கேட் டுளமகிழ்ந்தோமென்று சதாநந்த னிப்போது சொல்லுகின்றனனே. நாஞ் சூழ்ந்தவாறு தாடகையா விராமனிறந்தானென்று கேட்பனே லச்சதாநந்தன் சாலவல்லலுழபப னென்று பின்னு மறைகின்றான். சாரணு! கேண்மோ. எதிர்ந்து போட்ட இராமனுடைய வேடத்தைத் தரித்தது நின்னுமன்று. விதயுஜிஹ்வனுமன்று. விதியினுமன்று. பகவான் நாரதமாமுனிவரா லென முன்னுகின்றேன். மூந்து நான் புரவலர்களோடு செருப்புரியும் வேலை யம்மகதிமுனிவ ரென்வயினுற்றுக் குழந்தாய்! இராவணு! வேந்தர்களாகிய பிணங்களை யெறிந்து நினதுவாளை யேன் கூாமழுங்கச்செய்கின்றனை? சமரமின்றி நினது தோள் தினவுறுமாயின் மேருவெறபோடுராய்ந்து தினவைத் தீரப்பாய். அங்ஙன்புரிகையில் கடவுளர்கட் குறையுளாகிய வப்பொலம்பொருப்பைத் துகளாயுதிர்த்துவிடாதி. அல்லது ஞாட்பேயியற்ற வேண்டின் மறலி முதலிய கடவுளர்களோடு பொருதியென்றனர். அவர் மொழியைக் கேட்டு நிலமன்னர்களாகிய தகர்களை யயிலா தொழிந்தேன். அப்போழ்தே தசரதனை யெருக்கல் புரிந்திருப்பேனேல் இராமனென்றொருவன் முளைப்பனோவென்று மறுகினன். சாரணனதனைக் கேளா விலங்காதிபரோ! தயரதனைச் சவட்டாமே விட்டோமென்று பருவரலுறுகின்றீர். வேந்தர் மரபை யொருங்கவிப்பான் விருதுமேற்கொண்ட பரசுராமனே யவனைக் கோறல்செய்யாது விட்டனனென்ன, இராவணன் சாரணு! நன்கு ஞாபகப்படுத்தினை.

ன்னதெனுவனாகிய வமமழுவாளியை யேவித் தசரத னுள்ளிட்டார்களைக் கொலைபுரிந்து விடுகின்றேனென்றனன். சாரணன் தசக்கிரீவரோ! சீதையை நீரோ திருமணம்புணர்வீர. வதுவை நடந்தபின்பு ஒருவனையும் விண்ணேற்றக் காரணமில்லையேயென, இராவணன் சாரணா! நீ யெஞ்ஞான்றுஞ் சுபமான வார்த்தையையே கிளக்கின்றனை தாடகையால் அரசுமாதவனிறந்தானே விலலையோவென வெறுதுள்ளந் தெருமருகின்றதென்றனன் அவ்வேலை பகவான் சதாநந்தர் சனகனை நோக்குற்றுப் புரவலா புங்கவரோ! நமது ஔரச புத்திரியாகிய ஊர்மிளையையு மிளையவனுக்கு மன்றன் முடிக்கலாமெனப் பகர்ந்தனர் வித்யுஜ்ஜிஹ்வனஃது செவிவயிற் சார்தலுஞ் சாரணா! இலட்சுமணனுடைய படிவத்தை நீ பூண்டதும், பயன்றராததாக விலது தீயருட்டீயோனாகிய வரச வந்தனன் வீற்றுரு நான் வாளாதேகொண்டேனென மெல்ல மொழிதலுஞ் சாரணன் வித்யுஹ்வா! விசுவாமித்திரனுடைய மனையாட்டியையும், புதல்வர்களையும், மாணாக்கர்களையும், ஆனிரையையு நீ யடைவாயல்லையோ? அவத்துக்கோ வேடந்தரித்தாயென்றனன் வித்யுஜ்ஜிஹ்வன் சாரணா! நரைத்த தலையும், திரைத்துத் தூங்குங் கொங்கையும், விற்போல வளைந்த வெரிநுமுள்ள இவளோ நின்னுரிமையென்று நீயே யசிபுரிவாயென்றனன். ஜனகர் பகவான் சதாநந்தரோ! எனது துணைவன் குலத்துவசன்புதல்வியர்களாகிய மாண்டவியையும், சுதகீர்த்தியையும் பரதனுக்கும், சத்துருக்கினனுக்கு முறையே வதுவையிழைக்குதுமெனப் பகர்ந்தனர். பகர்தலும், எட்டாப்பழத்தைப் பார்த்துக் கொட்டாவிவிடுகின்ற இராவணன் சாரணா! பரத சத்துருக்கினருடைய வேடம்போட் டின்ன மிராக்கத ரிருவரையுடன் கொடுவராமன் மோசம் போயினேம். உடன்கொணர்ந்திருப்பி னவ்விரண்டு பெண்களுங் கிடைப்பார்களே யென்றனன். சாரணன் இலங்கேசரோ! தசரதனைப் பெண்டு பிள்ளைகளோடு கூட்டிவர விசுவாமித்திரன் சாகேதஞ் சார்ந்திருக்கின்றனனென்று

யான் முந்தியே வித்யுஜ்ஜிஹ்வனுக்குக் கூறினேன். அவன்தனைப்பற்றி யாதொரு விரகுஞ்செய்திலனென்றனன். சதானந்தா வித்யுஜ்ஜிஹ்வனை நோக்கி விசுவாமித்திர மகாமுனிவரோ! தசரத சக்கரவர்த்தியார் அயோத்தியைவிட்டுப் புறம்போந்தனரா? பரதசத்துருக்கினரை யழைத்துவருகின்றாரா? மொழிமினென்ன, வித்யுஜ்ஜிஹ்வன் சதாநந்தரோ! சக்கரவர்த்தியார் தமது பெண்டிர் சிறுவரெல்லாருடனும், போதரலால் நெறிக்கணுங்காங்கிறுத்துத் தங்கிவருகின்றனர். யாங்கள் முந்தி வந்தோமென்றனன். ஜனகர் கைவளைக ளொலிக்கக் கவரிவீசிக்கொண்டு நின்ற மயிலன்னார்களி லோர் குயிலன்னாளை நோக்கி, அடிபெண்ணே! நீ சென்று, சீதையோடு மற்ற மூவரையுங் கொணாதி; பகவான் விசுவாமித்திர மகருஷியைச் சேவித்தல் வேண்டுமென்றனர். இராவணன் சாரணா! நமதுடைத் தெய்வமிருக்கின்றது. இப்போது சீதை போதருவாள். இராமனுடைய படிவத்தைக்கொண்டவென்னைக் கடைக்கணித் துள்ளமகிழ்வு பூப்பளென்றனன். முன்னோராசகி யிராவணனுடைய செயலை மண்டோதரிக்குத்தெரிக்கச் செல்கின்றேனென்ன, அவ்விராவணனுடைய செயலை ஜனகருக்குரைத்த யானுஞ் செல்கின்றேனெனப் போந்த அககந்தருவன் வந்து ஜனகமகாராஜரோ! கேண்மின். இதுபோழ் துமதுபாங்கா வீற்றிருக்கின்ற மூவரும் விசுவாமித்திரர் இராமலட்சுமணரல்லர். வித்யுஜ்ஜிஹ்வனும், இராவணனும், சாரணனு மம்மூவருடையவுருவைமாயையாற் றாங்கிக்கொண்டு, ஜானகியை மணம்புரிவான் வந்திருக்கின்றனர். விசுவாமித்திரர் இராமலட்சுமணருடன் பின்னர் வருகின்றனரென்றனன். இராவணன் வித்யுஜ்ஜிஹ்வனை நோக்கி யீதென்னவிறும்பூது? நமது செய்தியினுண்மையை வெளிப்படுத்தினவன் யாவனென்ன, வித்யுஜ்ஜிஹ்வன் வெருவி, ஐயோ! நமது சூழ்ச்சியை யாருமறியார். நானிலங்கையைவிட் டேகுகையிலுள்ளக் கிளர்ச்சியினாலெனதில்லாட்குக் கூறினேன். அப்பேதையெவருக்குரைத்தனளோ? நமக்கிவ்வல்லிடிவீழ்ந்ததென்

றினன். கந்தருவன் மொழியைக் கேட்டவுடனே சதாநந்தர் இம்மொழி புகன்றவன் யாவனென் றுணர்ந்துவருவாயென வாங்கு நின்ற கஞ்சுகியை யேவலு மவன்புறம்போந்து வினா ய்த் தெருண்டு மீண்டுபோய்ச் சுவாமி பகவானே ? ஓ கந்தருவ வாடவன் முந்திக்கூறியவாறு மொழிந்து வானஞ்சென் றானென்றுமங்குள்ளவர் புகன்றனரென்றனன். சதாநந்தருஞ் *சனகருமதனைக் கேட்டுச் சிறிதையுறாராய்ந்துகொண்டிருக்கும் வேலை பகவான் விசுவாமித்திரா சக்கரவர்த்தி திருக்குமாரருடனெழுந்தருளுகின்றனரென் றொருவன் போந்துணர்த்தினன். சதாநந்தரம்மொழியைச் செவியேற்று வித்யுஜ்ஜிஹ்வனை நோக்கி, நீவிர் மூவிரும் நிருதரெனவும், பின்னால் விசுவாமித்திரா வருகின்றனரெனவுங் கந்தருவனோதினன். அவ்வாறே விசுவாமித்திர மகருஷி வருகின்றனரென் றிவ்வொற் றுணர்த்துகின்றனன் நீவிருண்மையையுரைமினென, வித்யுஜ்ஜிஹ்வன் ஓ ! ஓ ! தலையதிகாரிகையி லகப்பட்ட கள்ளன்போலாயினோம். என்செய்வாமென்று மாழ்கி யொருவாறு தேறிச் சதாநந்தரே ! திருச்செவிசாத்தியருளும். கந்தருவன் வானேகுங் கன்மவயத்தனுமயத்திற்றமொற்ற முற்றுச் சொல்லினன். போதருகின்றவர்களே நிசாசரர்கள். பின்னாலுண்மைமன்றம்படும் இராமனுக்கு நான் பல்படைகளை யீந்துளேனென, அரக்கர்களென்னை முனியா நின்றனராக வொன்று கேட்டிருக்கின்றேன். எங்களுருப்பெற்றிவணடைகின்ற வவ்வரக்கரது கொடுங்கண்களில் யாங்கள் படுவோமேலெங்களெல்லோரையு மென்செய்வரோ ? வெருவுகின்றோம். அவர்களை யுள்ளேகாவண்ணம் நீர் தடாதபட்சத்தில், அன்னோர்கள் அரக்கர்களென்று நீர்தெருளுங்காறும யாங்களொருசா ரிருக்கின்றேமென வுரைத்தத தம்மிலொருவரை யொருவர் பார்த்துப் பொந்திலுள்ள ஆந்தைபோல விழித்து மூவருமெழீஇ ஓ ! ஓ ! நாமகன்று செல்லுவோமேற்சனகரிடத்து நிகழுஞ் செய்தியையெவ்வாறுணர்வோம் கண்கட்டி வித்தையியற்றி யொருவருமறியாவண்ண நாமிவணிருத்தலே

நலமென்று துணிந்து புறத்திற் செல்பவர்போலச் சிறிதகன்று சென்று மாயையைக் கருதிப்பெயாத்தும் வந்தொருவருந் தெருளாவண்ணஞ் சனகர்பக்கலிருந்தனா. அக்காலை மிதிலையராண்டகை சதாநந்தனை நோக்கி, ஐய! சீதைக்குக்கலியாணநேர்ந்ததென் றின்பவாரிதியிலழுந்திய நான் இப்போதரங்கைதப்பரவையில விழுந்திருக்கின்றேனென் றுள்ளமறுகினர். சதாநந்தா, ராஜமுனிவரோ! வருந்தாதிா அவ்விசுவாமித்திரரும் வருக, மெய்ம்மையும் பொய்ம்மையு மாராய்வோமெனச் சீதை தந்தையாா சதாநந்தரோ! கந்தருவன்கூற்றுநிற்க; நங்கணின்றயலிற சேறலுற்றவர்கள் இராக்கதாகளும, வருகின்றவாகளுண்மை விசுவாமித்திரராதியருமாயின், அவாகள்வரவைக் கேட்டிவாகள் வெருக்கொளவேண்டியதிலலையாகலான் வருகின்றவாகளே யரக்காகளென் றெண்ணுகின்றே னென்றனர், கௌதமாகாதலா எனதெண்ணமு மங்ஙனேயெனறனா. ஜனகர் பாங்கரிருந்த விதயுஜிஹ்வ னம்மாற்றங் கேட்டுப் புறனிற்சென்று மாயை தவிாந்து யாவர் கண்ணுக்கும் புலப்பட வந்து ஜனகரோ! இராமனுடைய வுருவையிராவணனும், இலக்குமணனுடைய வடிவைச் சாரணனும், எனது மேனியை வித்யுஜிஹ்வனும் பூண்டுவருகின்றனா. நாஞகவெண்ணி வித்யுஜிஹ்வனுடைய காலிலவிழும். அவனை நன்ருய்ப் பூசனைபுரியும். இராமனெனவும், இளையவனெனவுமெண்ணி, இராவணனுககுஞ் சாரணனுககும் பெணணமுதன்ஞைக்கொடுமின். அப்பாலரககரென வுணாநதழுங்கியேங்குமின். நுமது பெணகளை மணமுடித்துப் பிற்றைஞீரழுமின் எனககாகவேண்டியதென்? இராம லட்சுமணனைக கொண்டுபோய்த் தசரதாபால் விடுகின்றேன். ஆயினும், வருமவர் திறத்தை நீர் தெருளுங்காறு மாங்கிருக்கின்றே னென்றயலிற்சென்று கண்கட்டிவிஞ்சை செய்துவந்து, ஜனகா பக்க விராவணனோடுஞ் சாரணனோடு முறைந்தான். விசுவாமித்திரர் குழந்தை யிராமன் தாடகையையும், சுவாகுவையும், கராளனையுங் கொன்றமையானும், சீதையை திருமணம்புரி

யத் தொடங்கியிருக்கின்றமையானும், இராவணன் மிக்க
சினந்தலைக்கொளீஇயிருப்பன்; அவனால் நீணெறியிடைத்தி
னங்கொன்று மின்றிவந்தெய்தினேமென் றுள்ளத்தினுளுவந்து
இராகவா! இலட்சுமணா! ஜனகர் சாலப்பெரியவர். யாஜ்ஞவல்
கியாவயின் ஞானப்பெரும்பொருளீட்டினவர்; ஸ்ரீமந்நாராய
ணனே பரமனென்னு மிருமறைப்பொருளினுண்மையுணர்ந்த
புனிதர்; அவர்பாணீவிரிருவிரும் நனிவணக்கமாயிருத்தல்
வேண்டுமென்றனர். சுமித்திரைகாதலர், பகவானே! காதி
காதலரே! பெரியோராகிய ஜனகர் பெருவேள்விக் குழுதவுழு
படைமுனையிலிருந் தோர்பெண் ணிரத்தினந் தோன்றியிருக்
கின்றதென்னும் வியப்புச்செய்தி கேள்வியுற்றேனெனக் கோ
சிகர் ஆமாம். உண்மைதானென்றனர் இராகவன், தேசிகரே!
வானவரானும், ஏனையோரானுங் குனிக்கக்கூடாத சிவனு
டைய சராசனமொன்று ஜனகப்புரவலர்பாலுளதென்று கே
ள்வியுறுகின்றேனென, அம்மாமுனிவர் புன்னகைகொண்டு
சடைமுடி துளக்கி, அதுவுமெய்ம்மைதானென நவின்றுநடந்
துவந்தனர். விசுவாமித்திரராதிய ரணித்து வந்துவிட்டாரக
ளென்று வாயில் காப்போன் சொல்லக்கேட்ட சதாநந்தர்
ஜனகரைநோக்கி நகையா, அந்த விசுவாமித்திரரையுமழை
த்துவருகின்றேனென்றெழுந்து சென் றவர்களை எதிர்கொண்டு
நலங்களைக்கூடாவிவம்மினென்றழைத்துவந்து, ஜனகர்பக்கன்
மணியணைமிசையிருத்தி, ஜனகமகாராஜாவே! இவ்விருவருந்
தாம் சக்கரவர்த்தி திருக்குமாரரென்றனர் மிதிலையர்கோன்
அதைக்கேட்டுப், படிவத்தைப்பற்றிச் சக்கரவர்த்தி திருக்குமா
ரர்களென நமது சதாநந்தர் புகலுகின்றனரென்று, நெ
ஞ்சினுட் கருதுற்று, விசுவாமித்திரமாமுனிவர்பா லணைந்து
நிகழுநலங்களை வினவலுற்றிருந்தனர். சதாநந்தர் இவ்வே
லைபோந்திருக்கின்ற மூவரும் அரக்கர்களேயாயினும், நாம்
முகமனியம்புவோமெனமுன்னி யாவராலும் பணியப்படுப
வராகிய விசுவாமித்திர மகாமுனிவரே! இராமலட்சுமண
ருடன் பகவத்கடாட்சத்தால் இடர்ப்பாடின்றி வந்தீரா? என்

றனர். ஜனகரும் சதாநந்தரது மொழிக்கிணங்க யாமுஞ் சொல்வோமெனக்கொடு காதிகாதலரோ! சக்கரவாத்தியார்க்கு நெடிதுகாலம் புதல்வர் தோன்றாமலிருந்து ரிஷ்ய சிருங்கமா முனிவரால் யாகஞ்செய்வித்தபின்னர் மைந்தர்களுதித்தார்களென்று செவியாற் கேள்வியுற்று மகிழ்ந்தேன். நும்மால் அவர்களிலிருவரையின்று கண்ணூற்கண்டு மகிழ்வுற்றேனென்றனர். இராவணன் வித்யுஜ்ஜிஹ்வா? விசுவாமித்திரனோடு சனக னென்வார்த்தையாடுகின்றனனென, வித்யுஜ்ஜிஹ்வன் இலங்கேசரே! நம்மைநோக்கியமட்டில் குழறியாங்கவர்களிடத்துங் குழறுகின்றானென்றனன் பின்னர் விசுவாமித்திரர், ஜனகர்பெருமானே! கேண்மின். யாங்கண்மூவருமவராநிற்கையின் வட்டையில் தாடகை கண் கனற்புலிங்கம் வீச, முரணெடுத்துவந்தாள் அவளையொரேயம்பாற குழந்தையிராமன் கொன்றானெனலும், சனகர் சதானந்தரைநோக்கி ஆயிரங்கடகளிற்றின் றிறல்சான்ற தாடகையை இச்சிறுகுழந்தை கொன்றனனென்று கூறினால், நாம பரிவுமிக்குப் பெண்கொடுப்போம; தூக்கிக்கொண்டிலங்கைச கேகலாமெனப் பொய்ம்மைமொழி கிளக்கின்றனன். இவன் வித்யுஜ்ஜிஹ்வனே. முந்திவந்தவரோ விசுவாமித்திரரென்று மெல்லக்கழறினர். சதானந்தரம்மாற்றத்தைக கேட்டு, வேந்தரேறே! அங்ஙனமே துணிவுகோடறகுதியன்று; முறறுங்கேட்டுணர்குதுமென்றனர். சாரணனதனைககேட்டு இவ்வேஷமகன் சதாநந்தன் முதற்றொட் டிராமன்பக்கலே சார்ந்து, பேசிககொண்டுவருகின்றானென்றான். விசுவாமித்திரர், ஜனகரே! இன்னங்கேண்மின், மாரீசன் சுவாகுதொடக்கமாயோர தாடகை கொலையுண்ட சொல் செவியிடைச்சார்தலுந் துன்ந்து வந்தாகள் அம்மாரீசனையன்றி மற்றையோரைக குழந்தை விண்ணேற்றினனென்றனர சதானந்தர், மன்னர் தலைவரே! இவர்களைப்பற்றி நமதெண்ணமென்னையோ? என, மிதிலையர்பெருமானார் கண்ணுதலினுடைய வில்லை முன்னிட்டிராமரிருவர்களிற ருசரதியாவனென்று தெருள்வோமென்ற

னர். சதானந்தரம்மாற்றங்கேட்டு, நாணத்தொடு முறுவலி த்து ஐய! சைவதனுவை வளைக்கின்றவன் உண்மையிராம ஞ? கடுக்கையங்கண்ணியாரோடு கைலைப்பொருப்பை யோ ர் சுண்டுவிரலா லொரு சிறிதயர்வுமின்றி யேந்திப் பந்துவிளை யாடல்புரிந்த இராவணனுக்குத் திரியம்பகக குனிசிலை குனி ப்பத் திறலிலையெனலாமோ? வளைககவல்லவன் யாவனோ? அவனே இராமனது திருவுருக்கொண்ட இராவணன் சைவ தனுவை வாங்குகின்றவனுக்குச் சீதையைக கொடுக்கின்றே னென்று நீர் பண்டைஞான்றே குளுறவு செய்திருக்கின்றீர இம்மொழி யியம்புவீராயின், நாம் இராக்கதருக்கே பெண் கொடுக்கவேண்டு மென்றனர். ஜனகரதனைககேட்டு, பகவா ன் சதானந்தரே! முன்னேறெல்லை பரமசிவனெனக கரு ளிச்செய்த மாற்றத்தையிதுபோழ்து நமககு மொழிகின்ற னென் கேட்டருளீர் இப்பிநாகத்தைச சித்தாகள், சாரணர் கள், கந்தருவர்கள், இராககதர்கள், யட்சாகள், இந்திராதி தேவர்களொருவரும் வளைக்கமாட்டார்கள். பின் வளைப்பவன் யாவனெனின், இனித் தொண்டரேசு செய்யும்வணககததி னல் தன்னந்தனியனுகியவொருவன் திருவவதரித்தருளுவன் அப்பெருந்தகையின்னுனெனவும், இன்ன தன்மையனென வும், இன்ன திருநாமனெனவும், இன்ன திருவுருவனென வுஞ் சாற்றல் எமக்குமரிது. நாமகள் கொழுநனுககு மரிதெ ன்றனராகலாற் றநுவை வளைக்கின்றவன் சங்கரன் சாற்றிய வொருவனே யாவனென்றனர். சதானந்த ரமமொழியைச் செவியுற்று மகிழ்நது, அங்ஙனமாயினங்ஙனமேபுரியலாமெ ன்றோதினர். ஞாஙகா நின்ற இராவணன்கண சேப்பமிசை படபடவென்றுதுடிப்ப நெட்டுயிரப் பெறிந்து, வித்யுஜ்ஜிஹ் வா! என்னையஞ்சிச் செங்கதிரவன் வெய்யகதிர்களை விரிககின் றுனிலன். அனலன் சுடுகின்றுனிலன். அநிலன் ஓஙகி வீசுகின்றுனிலன். வருணன் எல்லையிகந்த பெருமாரி, மாரியி ன்மைசெய்வானிலன். தேவா செயலிவ்வாறிருப்ப, இவ்வரசர் குலவிளஞ்சிறுவன் எனக்காருயிரன்னோர்களைக் கோறல்புரிந்

து, யான் காதலிக்கும பெண்மணியையுந் தான் வேட்கவஞ் சாது வந்திருக்கின்றனன். உலகமும்மையும் யான கோலோச்சுதன்மை நன்று நன்று. குழந்தைகளுககும், கல்லாதவனுக்கும், சாதுககளுறவுசெய்யாதவனுக்கும், அஞ்சாமையும், பேதைமையுமேநெஞ்சிறகுடிகொண்டிருக்கும்; கொடுவிடபபாந்தளை விரைந்துசென்று வாலைப்பறறு மிளருசேயையொத்தவன்தானே யிராமனென்றனன் வித்யுஜ்ஜிஹ்வன் சுவாமி இலஙகேசரே ! தாய்முலைப்பான்மணம் வாய்மணக்கும் இராமனை யோர்பொருளாயெண்ணிச் சினங்கொள்ளன்மின். மேனிகழ்வதைக் காண்குறுவோமென்றனன் ஜனகா சதானந்தமகாமுனிவரே ! இவ்விருதிறததாரின் மெய்ம்மையா யாவரெனவிரைந்துணரவேணடுமென்றனர் விசுவாமித்திரா, ஜனகருஞ் சதானந்தரு மிடைபீடின்றிககிளந்துகொள்வதைச் சிறிது சிறிது செவியுற்று ஓ! ஓ! அரககாகள் நம்மிற்படிவந்தாஙகி, நமக்குமுந்தி வந்திருககின்றனா. இவரிருவருமுணமைதெருளாமே திணடாடுகின்றனரென்பதை யுணாந்து, சனகரே ! சதானந்தரே ! நும்மிருவிருடைய கருத்திலையுறலைக் கரவாதெமகருணர்த்தவேண்டும் ; எம்மை நீயிரறியவில்லையெனறு நன்குவிளஙகுகின்றதென்றனா. மிதிலாநகரமன்னர் சதானந்தனா நோககிச் சொன்மினென்று கண்ணிறுலேவ, அச்சதானந்தர் விசுவாமித்திர மகாமுனிவரே! கேண்மின். மற்றெல்லாநிற்க. எம்பாலுள்ள சைவதனுசை வளைக்குங குமரன் யாவனோ? அவனுககு யாம் பெணகொடுககின்றனமென்றனா. காதிகாதலரதனைச் செவியேற்றுச் சதாநந்தரே? நுஙகளுடைய பெண் நங்களுககு வேணடா. நீவிரகொணடிருக்குமையுறவை நீத்தல் செய்வதே யிவ்வேலை சால்வதாயிருக்கின்றது சிவன் கைச்சிலையைப் பொருக்கெனக் கொணாமினெனச் சதாநந்தா நன்றென்று புறம்போந்தனா. இராவணன், சைவதனுசை யிவ்வரசப்பைதல் குனிப்பவல்லனோ? நக்கன் வீற்றிராநின்ற கைலைவெற்பைச் சிறுகந்துகம்போலவெடுத்தாடியவெனககு மபபண்ணவனுடைய கையில

வளைப்பவொல்லுவதன்று. புதவேளிர்களெல்லாரு மொன்று
கூடி முயலினும் தூககிநிறுத்தவுங்கூடாது. சதானந்தன் வி
ல்லைக் கொணர்ந்தவுடன் சனகனம்மை விளித்தால் நானு செ
ய்கின்றதென ? விதயுஜிஹ்வா ! நுங்கள் குழறலைக் கேட்டன்
றோ ? இராமவேடந்தரித்தது. அதுதானூதியமென் றோர்தூ
ஈதநின் முடிககொண்டு, சீதா ! நின்தந்தையினால் நீ கெட்
டாய். இப்பினாகத்தை வளைப்பவா எஞ்ஞான்று மெங்குமி
லா. நினக்கு மணமுமில்லை. ஜனகா தாமருமையாயின்றெ
டுத்த ஊர்மிளையினுடைய மன்றறசெய்தியைப்பற்றி யிசகு
ஞாதததாரோ ? நிலனிறமோன்றிய நீ கேடெய்தினன்றோ
னுக கிழவென்றோ ? சானகீ ! கட்டழகையும், இளமை
யையும் படைத்தியாதுசெய்வாய் ? என்னை நீமாலை புனையா
விடின் நீ பிறந்தும் பிறவாதவளேயென்றனன். சாரணன்
ஆமாம். அஃதுண்மையே, ஐயமில்லையென்றனன் அவ்வே
லை சதானந்தா வநது அரசரேறே ! தியமபகம் வந்துவிட்ட
தென, இராசவிருடியாாபகவான் விசுவாமித்திரருடைய திரு
முகத்தை நோக்கினா. அக்காதி காதலா தமதருகிற்சிஙகவே
றென வீற்றிருநத புருடோத்தமனை நோக்க, எல்லாம வல்ல
ஆண்டகையா ரவணெழுந்துநிவந்து பொன்னுகமுநாகமுநாண
நடந்து, அறுபதினாயிர ரிடையிடைத்தணடு மடுதததுக் காவிவந்
தபினாகமென்னும் பொலநாகத்தை யிடது திருக்கரததா லெ
டுதது நாணை வலது திருககையிறகொண்டு, இடது சீர்பாதத்
தைககோதண்டத்தினடுவிலூன்றி வாஙகலும் தாசரதியினு
டையபேராற்றலுக்கு நோனாது, அச்சைவதனுசிருதுணியாய்
முறிந்தது. அபபோது அணடகோளம் விணடாற்போலக கம்
பலையெழுநதது. இநதிரன்முதலிய விமையவரெல்லாரு நம
க்குப் புகலிடம் யாதென்று நாடாநின்றனா. பாரதி கணவ
ன்தனது தேவி வெருவலுற்றோடுவளென்று வாயைப் பொத்
திக்கொண்டனன் ஐம்முகன் தனையு மீர்த்துக்கொணடு
பார்ப்பதியோடுவளென்று தனதிடப்பாகத்தை யாப்புறப்பற்
றிககொண்டனன். பின்னர்ச சதானந்தர், ஜனகரே ! சக்க

ரவர்த்தி திருக்குமாரனுடைய வளவிலாற்றல் யாருக்குண்டு? உமையாள்கொழுநன் கூறியதாய் நீர் சொல்லிய மாற்றமே யுண்மை. இவர்களே யுண்மையிராமாதியரென்றினி விளம்பவும் வேண்டுமோவென்றனர். இராசமுனிவர் பெருங்களிப்பரவையின் மூழ்கிக் கல்விகக்கரையுற்ற கௌசிகரே! போற்றி காதிகுலதிலகரே! போற்றி. நீமியேன்பொருட்டு இராமபத்திரனைக் கொணர்ந்துதவுதல் செய்த நுமக்குப் போற்றி போற்றியென்று சதானந்தருக்குத் தமது கருத்தை முகந்தாற் பகர்ந்தனர். அச்சதாநந்தரகுறிப்பை யுணர்ந்து பகவான் விசுவாமித்திர மகாமுனிவரே! இராமபிரானுக்குச் சீதையையும், இளையவனுக்கு ஊர்மிளையையும், பரதனுச்கு மாண்டவியையும், சத்துருக்கினனுக்குச் சுதகீர்த்தியையுந் திருமண முடிப்பச் சனகர் குறிக்கின்றனர். அடிகளுடைய திருவுளமெங்ஙனமோவெனக் காதிகாதலர் சதானந்தரே! ஜனக பெரும்புரவலருடைய கருத்தேதோவென்று ஞானியையந்தவனே யென்றனர். ஜனகர் பெருமகிழ்வின் கண்ணீரிடையறாது வீராகிற்பக் குழந்தாய்! இராமா! வாராய். இந்நிலவுலகையணி செய்வான்றிருவவதரித்த இராமசந்திரா! வாராய். சீதை புரிந்த பெருநோன்பின் பயனுருவாகிய இரகுநாதா! வாரா யென்று தமக்குப் பிறையணிசடையானீந்தை யெண்ணி யெண்ணி முதுமறைகிளக்கு மூவாவறனுக்கு முதற்றுணையாகிய தாசரதியாரை நோக்கி நோக்கி யுருகி யுருகி நாத்தழுதழுப் பவேத்தித் தழுவிக்கொண்டனர். உள்ளுவாருள்ளத் துவட்டெழுசெழுந்தேறலாகிய இராமபத்திரர் அசசனகருக்குக் கும்பீடுசெய்து, விசுவாமித்திரர்பால் வீற்றிருந்தனர் கனகட்டிவித்தை செய்தொளிந்துகொண்டுறைந்த நாணிலியாகிய பத்துத் தலையன் விதயுஜிஹ்வா! இனி யாமென்செயற்பாலது? அரசர்குலக்குழந்தை வில்லேக்கண்டு வெருவாதே முந்தமாத்திரையில் யானே சீதைமேலோகைதவிர்ந்தேன். நான் பரமசிவனுக்குச் சிறந்த தொண்டனேனல்லேனோ? வழிபாடுபுரிதற்குத் தகுதியாகிய அப்பிரானுடைய பிநாகத்தை

யோசித்தவனை யுயிரோடுழல விடுவேனோ எவ்வாற்றானுயினு மன்னோனைக் கோறல்புரிந்து, பெண்மணியாகிய சீதையைக் கவாகின்றேனென, வித்யுஜ்ஜிஹ்வன் காமினியிவணிறையிருப்போமேல் சுவாகுவையும், கராளனையும், தாடகையையும் வீட்டிய அம்பு நம்மூவரையுந் துருவுமெனத் துண்ணென வெரீஇ இலங்கேசரோ! மூவுலகையும் பொதுவறவோம்பு நுமக்கியலாததென்னிருக்கின்றது? நாங்கடுகி யிலங்கைசேறலுற்று, மாலியவான், பிரகத்தன், மகோதரன்றொடக்கமா யவமைச்சரோடாய்ந்து தக்கதுசெய்குதுமென்றுரைப்ப, தசக்கிரீவனுமம்மாற்றத்துக் கிணங்கி நன்றென்று புறம்போந்து வித்யுஜ்ஜிஹ்வனோடும், சாரணனோடும் பொய்ப்படிவமாறிப் புட்பகமீதிவர்ந்து சென்றனன் பின்னர் எல்லாவண்டங்களையுமன்னுயிர்களையு மீன்றுமின்னுங்குமரித்தன்மைமாறிலரென்று விண்ணவர்முனிவர்பழிச்சாநின்ற சானகியார், ஊர்மிளை, மாண்டவி, சுதகீர்த்தி நால்வருந் தங்கள் சிலதியரோடுடனுறைந்திருந்தனர்கள் அத்தோழியர்களிலொருத்தி நம்மன்னையாராகிய சானகிப்பிராட்டியாரை நோக்கி, மைதிலியாரே! நுமது நெஞ்சினுள்ளெண்ணி யாங்கு நிறைவேறிற்றன்றோ? இராமபிரானோ நுமது கொழுநர், இன்று நாளையிலவரையணுகலாகுமென, மிதிலைநாடியார் நாணமுற்றுத் தலையை வணக்கி நிலனைநோக்குற்றுத் தோழி! நீயுஞ் சிலதியைப்போலவே யெனது தங்கையரை விட்டென்னையே யசதியாடுகின்றாய்; அப்பாற் போடியென்று, தாமரைப்பூவாலடித்தருளினர். ஊர்மிளை, அக்கை சீதையாரே! எங்களை யொருமாது நகையாடலியற்ற யாங்கள் ஒதிமத்தூவியாலமைத்த மெல்லணையைத் தவிர்த்திளந்தளிர்ச் சேக்கையிற் கண்படைகொள்கின்றேமோ? முண்டகமலரைச் சந்தனத்தேய்வையிற் றோய்த்து, ஒற்றிக்கொள்கின்றேமோ? தாமரைநாளங்களால் வளையல்செய்து தரிக்கின்றேமோ? கணவனோடு கூடல்செய்வதுபோலக் கனாக்காண்கின்றேமோ? எதிரில் நின்றவர் மறைந்துவிட்டாரோ இருளையீர்! அன்னோரை விளித்து வம்மினென்கின்றேமோ? சொல்லாய். கைவளை

களையுங் கலைகளையுஞ் சோரவிடுகின்றேமோ? படம் வரைந்துபார்த்த தடபடத்தோ டேதேனுங்கிளக்கின்றேமோ? அவ்வுருவைத் தழுவிக்கொள்கின்றேமோ? மெல்லியதென்கால்வீசினால், தென்றற்புலியே! தென்றற்புலியே! இனைத்தடுதியோ? என்னைக் கொல்லாய் கொல்லா யென்கின்றேமோ? உடுபதிதோற்றஞ்செயின், இந்துவே! பாலின்பரவையில் நீ பெண்ணோடு பிறக்கவில்லையோவென்கின்றேமோ? அன்றில் கூவின், ஐயோ! அது அன்றிலன்று என் றீவினையென்கின்றேமோ? கருங்கடலுங் காயாம்பூவு நீலோற்பலமும் பானலு நீலக்கல்லு மவருடைய நிறமென்கின்றேமோ? சொல்லாய். திசைக்களிற்றினுடைய நடையே யவர்திருநடையென்கின்றேமோ? மணிவெற்பேயவருடைய மார்பமென்கின்றேமோ? திரண்டதூணமே யவர் திருக்கரமென்கின்றேமோ? முளரிமாமலரோ யவரது வதனமென்கின்றேமோ? சொல்லாயென்றாள். மைதிலியாரதனைத் திருச்செவியுற்று நஞ்செயலைத் தங்கை நன்குயுணர்ந்திருக்கின்றனளெனக்கொடு ஊர்மிளாய்! தோழிகளைப்போல நீயுமென்னைப் பரிகாசஞ் செய்யலாமோ? அதுவுமெனது தீவினைதானெனத் தோழியரிலொருத்தி, ஆமாம். நாயகனை யின்னங் கூடாதிருக்கின்றது தீவினையென்பது நமது திருவுளமெனை யானன்குணர்வேனென்றனள் ஜானகிபிராட்டியா ரினிப்பேசுதுமேல் நமது செய்தியே நனிவிளையுமென்று முன்னினுந் தலையை வணக்கி வாளாவிருந்தனர். பகவான் விசுவாமித்திரமுனிசகரசர் பக்கல் வீற்றிருந்த இரகுநாதர் எழினியினூடே பேசிக்கொள்ளுகின்றவர்கள் நமது காதலியாகிய சீதையு மவளுடையதங்கைமாருமாகவிருத்தல்வேண்டும். எல்லாநலங்களையுஞ்செய்த பகவான் விசுவாமித்திரர் கலியாணமுகூர்த்தத்தை யின்னந்துணிவு செய்யாம லிருக்கின்றனரென்றுன்னி, ஓ! ஓ! மின்னல்கள் சூழ்ந்திருக்கு மின்னரசென்னத் தங்கையரோடு தோழியர் தற்சூழநிற்குமவள்தான் சீதை. மலர்க்கணைவேளுங்குற்றேவல் புரிந்தொழுகுந் தகுதியுடையவிவளை நாமகள்காதலன்

படைக்குந் தரமுடையானாயின் இவளைச்சமைப்பப் பற்பலமாதர்
களைச் சிருட்டிப்பனல்லனோ? தனிமுதலாகிய நாராயணனுடை
ய திருத்தாட்புனலாங் கங்கையென்னுங் கடவுள்யாறு புவியிற்
போந்தபின், மாண்பிழந்த ஆறுகளையொத்து, மற்றை மங்கைய
ரெல்லாருமிச்சீதையென்னு நங்கை தோன்றியபின் பொலி
விழந்தார்கள் போலும் கலைமகள் மலைமகள்முதலியவர்களு
டைய முகமென்னு முழுமதிகளுக்கு மேனியாலிவள் பகல்
போல விளங்குகின்றாளென்னின், இவளுடைவாண்முகத்தை
யவ்வுடுபதி நிகர்க்குமெனலாமோ? அவளோடு நம்மைத் தெய்
வமெப்போது கூட்டுவிக்குமோவென்றிருந்தனர் பின்னை மா
ண்டவி அக்கை சீதா! நமது தந்தையார் விளித்தாரென அவ்
விதுலை கூப்பிடுகின்றாளேயெனச் சானகியார் சைவதனுவை
யொசித்த புருடோத்தமா ஆங்கிருக்குங்காலை நான்போதநானு
றுகின்றேனென்றுமாண்டவியினுடைய புறத்துமறைந்துகொ
ண்டு, "ஆசைவெட்கமறியாது" என்பதிவரிடத்து நிகழ்வதெ
ன்பதுபோல, முககணணுக்கும், எணகணணுக்கும, ஆயிரங்கண
னுக்கும் அவரவரியற்றிய தவத்தினளவு பதமளித்தகடைக்க
ணுககால் தாசரதியாரை நோக்கிக்கொண்டு, இராமபிரானே!
நமது காதலியார் வருகின்றாரென் றழைப்பதுபோலச் சிலம்
பு சிலம்ப, மெலலநடவாவிடின் கொங்கைகளைத் தாஙகாது நு
சுப்பொசியும் எச்சரிக்கை எச்சரிக்கை யென்பனபோல ஐம்
பாலைமொய்த்த சுரும்பரெழுந்தோலமிட நடந்தருளினா. உரு
க்கிய தங்கம்போலங்கமுடைய இளையபெருமாளை ஊர்மிளை
கண்ணுற்று இவர்தாநமதுநாயகர். இவரைநாம் பார்த்தவுடன்ம
ன்மதன் நம்மைப் பார்க்கின்றானென்பது நமது மேனியிலு
ண்டான பசலையே கிளக்கின்றதென நாணமுற்று, மிதிலைநா
டியார்புறத்து மறைந்தனள். சுமித்திரைகான்முளை ஊர்மி
ளையை நோக்கியருளி, ஐயோ இவள் யாவள்? கண்ணென்னும்
வலையைவீசி நமது நெஞ்சமென்னுமானைக்கவர்ந்தனள். அவ
ளை நாங்கண்ணுறுவமேல் இன்னம் யாது செய்வளோவென்று
நோக்குற்றிருந்தனர் அவ்வேலைமிதிலையர்கோன் குழந்தைகா

ள்! போதருமின். பகவான் விசுவாமித்திரரைச் சென்னிநிலந்தோயப் போற்றி செய்ம்மினென, அந்நால்வரும் வந்து வந்தனஞ்செய்தனர்கள். காதிகாதலர் நீவிர் நற்கணவரையடைந்து நீங்காத செல்வநிறைந்தபதியை யடைருகவென் ருசிகூறலும சீதாபிராட்டியார்முதல் நால்வருஞ் சிறிதகன் றயலின்மறைந்து நாணி நின்றனர்கள். பகவான் விசுவாமித்திரர் அரசமாதவரே! யான் யாகமியற்றுகின்றேன். நீர் கலியாணஞ்செய்யத் தொடங்குமெனச் சனகர் மகிழ்ந்து நன்றுநன்றென்னும்வேலைப் பகவான் சதானந்தருடைய மாணுக்கனுய தேவவிரதன் விரைந்துவந்து, மிதிலையாபெருமானே! சக்கரவாத்தியார் சாருகின்றனா. பௌவமேழுமேலெழீஇ முழங்கி வருகின்றனபோல வவருடையபெரும்படை வருகின்றதென் றனன். ஜனகரஃதுணர்ந்து, விசுவாமித்திரமகாமுனிவரே! சதாநந்தமாமுனிவரே! சக்கரவர்த்தியார போதருகின்ருராம். நாமெலலாரு மெதிர்கொள்வோமெனக காதிகாதலா அரசகேண்மோ. சக்கரவர்த்தியாருடைய மனைவியர்களையெதிர் கொள்வானுமது மனைவியு மமது சகோதரருடைய யில்லாளும் வரவேண்டுமென்றனர். வேந்துமுனிவர் தேவவிரதா! நீயந்தப்புரஞ்சென்றெல்லாரையு மழைத்துவாவென, அங்ஙனமே யுடன்கொடுவந்தான் வந்தவர்களோடு ஜனகாமுதலாயோருஞ் சக்கரவர்த்தியாரை யெதிர்கொண டழைத்துக் காதிகாதலருடைய ஆச்சிரமம்போந்தார்கள். ஆங்கிராமபிரான் இலட்சுமணன் பரதன் சத்துருக்கிநன் நால்வருக்குஞ் சீதாபிராட்டி, ஊர்மிளை, மாண்டவி, சுதகீர்த்தி நால்வரையு முறையேதந்து திருமணவிழாநடந்தது. யாவருங்கோசிகமுனிவருடைய வாச்சிரமத்தில் நின்று தத்தமுறைவிடஞ்சேர்ந்தார்கள். பின்னர் இராமபிரான் பிதிர்வாக்கிய பரிபாலனஞ்செய்யும்பொருட்டுத் தமது தேவியுடனும், தம்பியுடனும் அயோத்திமாநகரைவிட்டுப் புறப்பட்டுப்போந்து,தேவாநாளுமாடுங கோதாவிரிகொழுங்கரையில்பஞ்சவடி யிலெழுந்தருளியிருந்தனர்.

நாலாமங்கம் முற்றிற்று.

ஸ்ரீராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

௫-ஆமங்கம்.

கொடுமையென்னுங் கொடிபடர்க் கொழுகொம்பாகிய விராதன் போந்தான் போதரலும், தசரத சக்கரவர்த்தியாருடைய புதல்வனாகிய இராமன் நிசாசரரெல்லாரையு வீட்டுவேனென்று கங்கணம் பூண்டானென்று, ஜனஸ்தானத்துத் தலைவனாகியகரன் கேட்டுச் சினந்து, அத்தாசரதியைத் துணைந்து வதஞ்செய்துவருதியென, அங்ஙனமேவந்தேனென்று மொழிந்து பின்னர்த் தருக்கோடு முறுவலித்து, அரக்கருட் பெரியவன் இராவணன், அவனுக்குப் பெரியவன் கரன் அவனுக்குப் பெரியவன் இலவணன், அவனுக்குப் பெரியவன் நான். எனக்குப் பெரியவன் என்னையன்றி வேறொருவனுமிலன் எனது நட்பாளனான கரனுடைய நெஞ்சு நிறைவின்பொருட்டு, வின்றுணையகங்காரஞ்செய்வதினாலேயேநிசிசரர்கட்குச்சாலவச்சங்கொடாநின்ற இராமனை நிலத்திராமைசெய்யவேண்டிய கடமை யெனக்கே. அவ்விராமபத்திரன் எங்குளன்? காண்குறுவோமென்று, மாயையினொருகுயிலுருக்கொண்டு பன்னசாலையின் மருங்கெய்தி யாங்குக்காணுமே, கார்முகத்தையுங் கணையையுமேந்தி நான்குதிசையையும் விண்ணையு நோக்கிக்கொண்டு வாயிலோர்சந்தனத்தருவின்கீழ் நின்ற சுமித்திரை சேயத்தைக் கண்டு, நடுங்கி ஓ! *மேருவெற்பெனவும், நரமடங்கலெனவு மூக்கத்தோடு நிற்கின்றான். இவனுக்கு மேவலருமுளரோ? உளராகிலிவ்வேவலா னெதிருற்றால், வலிப்பிணியாளனைப்போ லுதைத்துக்கொண் டுயிர்துறப்பரேயன்றி மற்றென்செய்வரென்றோதிச் சிறிதகன் றோமலையின்சென்னியைச் சார்ந்து ஆங்குப் பூத்துத் தழைந்த வோர் மகிழமரத்தினடியிற் பளிக்குப் பாறையின்மீது வீற்றிருந்த பிரானையும் பிராட்டியையு நோக்குற்றுக் கார்முகிலு மின்னலுமோவென வையுற்றுச் சிறிதண்மியல்லரல்லா. தாசரதியுஞ் சானகியும் விலங்கலின்வளங்களைப் நோக்காநின்றனரென்றுநோக்குற்று, ஓ! ஓ! இவ்விருவருடைய பேரெழிலை யென்சொல்கேன்.

கொலைபுரிவான் றுணிந்தவெனதுள்ளமு மிவனைக்கண்டிளகுகின்றதே. இவ்விராமனுஞ் சீதையுந் தோன்றினமையால் வீரமுமோர்வீரம்பெற்றது; அழகுமோ ரழகுபெற்றதெனலாம். இன்னோர்களை நோக்கிநோக்கிவிழிகள் புதுக்களி கொள்கின்றனவாயினும், நமது மரபினருள்ளமுவக்கும்பொருட் டிவ்விராமனைக் கொல்லவேண்டும். நேர்நின்று போர்பொருதுகாதுதற்கெளியனல்லன். நா மவ்விராமபத்திரனைப்போலப் படிவங்கொண்டு, சீதை தனிப்படுங்காலை யவள்பாற்சென்று, வனத்தினெழிலைக் காட்டுவதுபோலச் சிறிது சேய்மையிற் கொடுபோய்த் தோளிற பொறுத்துக்கொண்டு செல்வோமேற் றாசரதி ஜானகியைக் காணப் பெறாமலுள்ளங்கவன்றாவிநீப்பன். அவன்றுஞ்சினமைகண் டிளையவனுந் தரியான். அதுபோழ்து கரன் கருத்துமுற்றும். நாமுஞ்சீதையோடின்பநுகர்ந்து வாழலாமெனத் தன்னுண்மையுணர்வை மேற்கொடு சூழ்ந்துபொருகவெனப்பறந்து, பொருபவைநீங்கிவந்து குயிலுருவந் தவிர்ந்து சுற்றுநோக்கி யிங்கட்சடாயுவைக் காணோம். அவன தனது தமையன் சம்பாதியை யிறைஞ்சுவான் சென்றிருப்பனென்றுகொண்டு, ஓ! ஓ! ஆங்குப்போதருகின்றவள்யாவள்? இலங்காபுரியினின்று வருகின்றசூர்ப்பநகைபோலத் தோன்றுகின்றனள். இராவணனுடைய பெருநலத்தையவளைவினவுவோமென் றோர்தருவின்கீழ நின்றான். சுழல்பசுங்கட் கழுதுகட்கெல்லாமீன்ற நற்றாயாகிய சூர்ப்பநகை வந்தாள். வந்து, ஆ! ஆ! நாம்மயிலின்வடிவுபெற்று இராமனையுஞ் சீதையையும் நனிதவவுயர்ந்த வடுக்கலின்கொடுமுடியிற் காண்டல் செய்தோமே. அவ்விருவரைப்போ லெழிலுடையார் திரிலோகத்திலுமுளரோ? சீதாராமரை யிரதியு மன்மதனும பார்ப்பரேல் தங்களைத் தாங்களே யெள்ளுவரோ? பிறரைக் காண வெட்குவரோ? அல்லது அன்னவர்களைப்போலக் கட்டழகு பெறத்தவஞ்செய்வரோ? சானகியினுடைய பேரெழிலைக் கண்டன்றோ நமது தமையன் அவளைத் தூக்கிக்கொணரும்படி நமமையிரந்து கேட்டனன் இராமன் வடிவழகி லீடுபட்டு,

மீண்டும்பெயராத கன்னியையு நெஞ்சையும் விட்டு, நாமாத்திரஞ் சென்று செய்வதெவன்! சீதைபோலகின்ற திருவுருக்கொண் டிராமபத்திரனைக் கிட்டிவனத்தினூடழைத்துக் கொடுபோய் முயங்கிக் களிப்போமென்று விலகிச் சென்றனள். பெருமரப்பராரையின் சார நின்ற விராதன் அடிசூர்ப்பநகை! க்ஷேமமாவென, ஆ, விராதனே! க்ஷேமந்தானென்றனள், விராதன சூர்ப்பநகாய்! நமது மன்னர்பிரான் க்ஷேமமாவென, அரக்கி பெருமரவின்றியிருப்பின் க்ஷேமந்தானென்றனள். விராதன் மூவுலகத் தலைவனுக்கு மறுக்கம் யாதென, இராவணனுக இளையாள் விராதா! தயரதன் புதல்வன் அரக்கா மரபை வேரறுக்கின்றனெனனச் சூளுறவு செய்தானென இலங்கேசன் கேள்வியுற்று மந்திரிகளோடாராய்ந்து இராகவனைச் சவட்டுதலியற்றுமாறு கரனுக்கு விளம்ப அகம்பனை விடுத்தனனென்றனள். விராதன் இராவணனுடைய வாளை யைய நிரப்பும் பொருட்டன்றோ? கரன் நம்மைக்கூய் முகமனுரைத்திராமனைக்கோறியென்றானென்று கருதுறூச் சூர்ப்பநகா யின்னம் செய்தி வேறுளதேற் சொல்லென, இராவணன்றங்கை விராதா! ஓர் வியப்புச்செய்தி பகாகின்றேன் கேள். மிதிலாதேசத திறைவராகிய ஜனகரென்றொருவருளரெனலும், விராதன் ஓ! ஓ! நமக்கு முந்தியே சீதையையிராவணன் அவாவுற்றிருக்கின்றனன்போலும். பின்னுமிவண்மொழிவதைக் கேட்போமெனக் கருதி, அடி பெண்ணே! சனகரை நானறிவேன்; மேல்சொல்லென்றான். அப்பெண்பேய்விராதா! சானகி தாசரதியையே நாயகனுக வரிக்கின்றனளென, இலங்கேசன்கேள்வியுற் றவ்விராமனைப்போல வுருத்தாங்கி, சனகர்பாற்சென்றான். அவ்வேலை இராகவனும விசுவாமித்திரனுட னவட்போதந்தான். ஜனகரிருவரையும் நோக்கி யையுறவுகொண்டு சைவதனுசைக் குனிக்குமாற்றலுடையானே, சீதை மணமகனென்றனர். அவ்விராகவனக் கார்முகத்தைவணக்கியகைத்துச் சானகியைமணந்தான். இராவணன் சத்துவக்குமின்பமறியானையிரந்த வறிஞனைப்போலப்

புலர்ந்து மீண்டிலங்கைபுகுந் தலைமைச்சராகிய மாலியவான், மகோதரன்முதலாயோருடனாராய்ந்து, பூசனைக்குரிய சைவக கார்முகத்தை யிராமனொசித்தானென்று சினந்தலைக்கொளீஇத் தன்னண்பனாகிய பரசுராமனுக்குக் கூறினான். அம்மழுவாளி செவியேற்றுமூவரணெரித்த சிவசாபமோ ரரசர்மரபுசசேயினான் முறிந்ததாவென்று வெகுண்டானெனினும், விராதன், அடி சூர்ப்பநகை பரசுராமன் க்ஷத்திரியரைக் கொல்வதினுள்ளக்கிளர்ச்சியுடையா னாகலாற் றசகிரீவனவனைத் தூண்டினான்போலுமென்றனன். சூர்ப்பநகை விராதா! இன்னுங் கேட்டி, காதிகாதலனுடைய பன்னசாலையிலிருந்து தயரதனதியா அயோத்திக கேகுமிடைவழியில் அப்பரசுராமன் புகுந்து இராமனைமறித்துக்கொண்டு, வைணவதனுசைவாங்கென்றுவிண்ணேனறெனவுரப்பியீந்தனன். கோசலைமைந்தன ககார்முகத்தை வாங்கிவணக்கிக் கணைதொடுத்துப் பரசுராமா! இவ்வம்பு பிழைப்பதன்று; இலக்கம் யாதெனு உலகமும் மையுமாடல்கொண்ட கார்த்தவீரியார்ச்சுனனைக் கொலையியற்றிய வம்மழுவாளி கைகால்கள் விதிர்விதிர்த்து இராமபத்திரா! நினது பகழிக்குக்குறி யெனதுதவத்தைத் தநதேனென்று சரணஞ்செய்து பாறினான், இலங்காதிபதியதனைக் கேள்வியுற்று மன்னர்குலக் கூற்றுவனாகிய பரசுராமன் தயரதராமனுக்குப் பிறக்கிட்டோடினனே. அவன்மூத்தமையானுயிராமேற்பற்றுடையானா யோடினான்போலும. நன்றுநன்று விடுவேனோவென்று மயனையு மாரீசனையும் வித்யுஜ்ஜிஹ்வனையுங் கூய்ப் பெரியமாயாவிகளாகிய நீவிர் மூவருமின்னே அயோத்திசென்று, மந்தரை, கைகேசி, தசரதனாகிய அம்மூவர்கண்ணும்புக்கு, இராமன்பான் முனிவுபெறச்செய்து வெங்கான்மேவப்புரிந்து மீளுமினென, அம்மூவரும விமலையுற்று அவ்வாறே புரிந்தனர். கூனியுங் கைகேசியுந் தசரதனுமிராக்கத ஆவேசங்கொண்டு மாறியவுள்ளத்தராயினர். பின்பு கூனி சூழ்ச்சிக்குட்பட்ட கைகேசியினது நெடுமொழிக்குட் சிமிழ்ப்புண்ட தசரதன் தன் னரும்பெருங்காதலனையீோ

ழியாண்டுபுறவத்தூடுறைந்துவருதியென்று பணித்தனன். இராகவனுந் தந்தைசொற் றலைமேற்கொண்டு, தையலுடனுந் தம்பியுடனுந் தேவர் பராயிறைஞ்சுஞ் சித்திரகூடஞ்சார்ந்து, சில பகலிருந்தனன். பின்னர் இராக்கதவாவேசநீங்கித் தயரதன் பெறலரும்புதல்வனைப் பிரிவாற்றாமையினால் விண்ணேறினன். இராமன் தந்தை துஞ்சினமையைத் தன்னைமீட்டுங்கொண்டுபோகப்போந்த பரதன்மொழியக கேட்டு நீர்க்கடனாற்றிப் பரதா! ஈரேழாண்டுகானுறையப்பணித்தயான் நாட்டிலுறையேனெனலும், தாளிணையைப்பற்றிய அப்பரதனுக்கு மராடிகளைக் கொடுத்தருளித் தண்டகாரணியமுற் றுங்கிரந்த முனிவர்கட்கு அரக்கரைவேரறுத்தும்மைப்புரக்கின்றேனென் றபயமருளியிவணிருக்கின்றனனென்றனள். விராதனதைக்கேட்டுச் சூர்ப்பநகை நம்வேந்த னியற்றுவதெல்லா முறைவழுவே. தன்னகரத்தின்பநுகர்ச்சியிற்கிடந்த இராமனடவியி லுறைவானிந்நிலையேன் செய்தான்? வஞ்சமும் பொய்யும் விரவாதசெய்கையவன்பாலுளதோ? நலலது, நீயெங்ஙனம் வந்தனையெனச் சூர்ப்பநகை சானகியைக் கவர்ந்துபோதரும்படி யிராவணனாற் பணிக்கப்பட்டுவந்தேனென்றனள். விராத னம்மொழியைச் செவியேற்றவங்ஙனமா? சீதையை விராதனன்றோ கரந்தெடுப்ப முயல்கின்றனனென நெஞ்சினு ணகைபுரிந்து, சூர்ப்பகை கேட்டீ. அச்செயனின்னான்முற்றுதெனச சூர்ப்பநகை யதற்கோ நான் வந்தேன்; இராமனோடு முயங்க வன்றோ வென்று விண்ணையண்ணாந்து நோக்கிப் புன்முறுவல்செய்து ஆமாம், சீதையைக் கவர்தலெனதாற்றலுக் கியல்வதன்று, இலங்கை சாருகின்றேனென்றாள். விராதன் நாமுயன்ற காரியத்துக்கிப்பெண்கழுதையா லேற்பட்ட விடையூறிடையூறுற்றதென வுளத்தினுள்ளுவந்து ஓ சூர்ப்பநகை காலம்வாளாயாணிக்கின்றது. இலங்கை சாரலாமென்றனன். சூர்ப்பநகை ஓ விராத! நீ யாவதுகருதியிவணுற்றாயென, விராதன் அடிபெண்ணே! இராமனைக்கோறல்செய்வான் கரனதுவேண்டுகோளாற் போந்தேனென்றனன். சூர்ப்பநகை யாங்கது

கேட்டு ஆ! இப்பாவி நமதுயிரினுஞ்சிறந்த நாயகனை யுயி ாகவாவான் வந்திருக்கின்றனன். அச்சோ! நமதென்னை ம் பயன்பாடுற்றிலதென்றனுங்கி விராதா! இராகவனை நீகொ ல்குதியோ? என வினுயினள். விராதன் சானகியை யப கரிப்ப முயன்றிருக்கின்ற நாம் வாளாபொய்ம்மை கூறுவா னேனெனக் கொடு சூர்ப்பநகை! இராமனைச் சவட்டுதல்செ ய்யவெனக் கொல்லாதென்று கரனுக்கு விளம்ப நானும்போ கின்றேனென்ருன். சூர்ப்பநகை இக்குணுங்கனிவணின் ருே ழியினிராமனோடுகூடும் விரகுபுரியலிமையுமெனக கருதி வி ராதா! நாஞ் செல்லுது மென்றனள், விராதன் நன்றென்றவ ளோடேகலுற்ருன். பின்னா விண்டொட நிவந்த வெற்பின்கு வட்டில்வீற்றிருந்த எம்பெருமானா எம்பெருமாட்டி யாரைநோ கக் அன்னமே! நின்னைக்காதலித்துப் பண்டைஞான்று பகவா ன் விசுவாமித்திரர் பகர்ந்தவாறெல்லாம புரிந்தேன். மாயாசீ ன்தபெருந்தழலிற் புகுதலும யானுமப்பேரனலிற் குப்புறதது ணிந்தேன். மேருவெற்போடொத்தசைவதனுசை முறித்தேன். நின்னைப் பெறுபாக்கியானியறறிய முயற்கியெல்லாவற்றையு மிதுபோது கருதாநின்றேன். கருங்குயில்களின இனிய தீங்குர லைகேட்டு மறுகுகின்ற வெனதுசெவி குளிரப்பெய்தும்வண் ணம நீசின்மொழிமொழிதியெனப் பிராட்டியாதிருமுகங்கோ ட்டிப் புன்னகைகொண டொன்றுமுரையாதிருந்தனர். நம்மா ளுடை வள்ளலா மாசிகந்தமுழுமதி முகத்தாய்! எற்பிரிவாற் ருமையினுற்றந்தையா ருயிர்நீத்த வின்னலையும், அன்னையைப் பிரிந்த விடும்பையையும், பரதனென்னுற் சடைதாஙகித்தவஞ் செய்தலானெஞ்சிற் குடிபுககவலககணையு நின் முகனைநோக்கி யன்ருே தணிகின்றேன். நீ பவளவள்ளமபோன்ற வாய்திறவா யேல் நானென் செய்குவேனெனத் திருவுளங் கலங்கிக் கூறி யருளுதலும், பேரருட்படிவமாகிய வெம்பெருமாட்டியார் பெரு ருக்கெனவெழுந்தருளித் தழுவிககொடு எம்முடையாரே! வருந்தற்க. தமியனேனைத் திருமணம்புரியத் தாம் திரு விளையாட்டாகச் செய்தருளிய வற்புதச் செயல்களை யுன்

ஸியுன்னி யிறும்பூதெய்தி வேறேதேனுந் தோன்றுதிருந் தேனெனக் கொஞ்சிக் கிளந்தருளினர். தாரகப்பரமர் ஜா னகியாரைத் திருமார்புறத் தழுவி முத்தந்தந்து திருமுகத் தை மறைத்த கார்க் குழலையொதுக்கிக் கன்னத்தோடு கன்ன ஞ்சேர்த்துத் தமது மடியின்மீ தெழுந்தருளச் செய்து தேன் மொழி! மகரயாழ்போல வறுகால்களிசைமிழற்றுகின்றன. சி காவளங்களாகவாநின்றன. நின்மொழிபோலக் கிள்ளைகள் பேசு கின்றன நோக்காய். வானநாடியாபோந்து பெரியவப்பளிகருப் பறையைத் தெளிநீர்க்குளமெனக் கருதுபு புனல்குடைவான் சென் றுதகத்தைக் காணுதுட்கி மோவாயிற்கைகொடுத்துமீ ள்கின்றனர் காணுயென்றருளிச்செய்தனர். மிதிலைநாடியார் சுவாமி! வெயிலியங்காவணனம் பல்வகை மரனடர்ந்தும், நா ளுவிதப் பூங்கொடிகணமல்கியும், மலர்ப்புதாகள் கழுமியும் முண்டகப்பூம்பொய்கைகண முற்றும் பொலிகின்ற வில்வனத் தைத் தாம் போரவுகந்தருளுகின்றீர போலுமென்றனர். அகா ரவாச்சியர் பெண்ணமுதே! அணிமிக்க பூங்காவையவாவா தாருமுளரோ? நினது சாயலைப்பெற்ற மஞ்ஞையையும், நடை யைப்பெற்ற வெகினத்தையும் தடங்கொங்கையை யொத்த மததகத்தையுடைய களிற்றையும், மருங்குலை நிகாத்த பூங் கொடியையும், வதனத்தைமானும் வனசதத்தையுங் கொண்டு விளங்குதலால் நின்னை வேட்பதுபோலவே யிவ்வனத்தை யும் வேட்கின்றேனென மொழிந்தருளினர். மைதிலியாரத் திருமொழியைத் திருச்செவிகுளிரவேற்று நமது நாதா வேறு திருவுளங்கொண்டு நா முண்மகிழுமாறு மாற்றம் பகர்ந்தரு ளுகின்றனா. நாம வேறு மொழி புகல்வோமெனத திரு வுளத்தெண்ணியருளி இறைவ ரோ! வெருவரத்தக்கவாயும், வட்டவடிவினவாயுமுள்ள விழிகளையுடைய பரந்த முகத் தையும, இராக்கதிபோல விளாத்தமேனியையுங்கொண் டா ணடு விளையாடுகின்ற அவைகளென்னை? உடுபதித் தோற்றங்க ண்ட பாற்கடலின் வெண்டிைகள்போல வெளுத்து நீண்ட வாலதியுடையனவாய் விளையாடுகின்ற இவைகளென்னை?

எனினும், சாட்குணப்பரமா துடியிடை! அவைகள் சியக்குரு
ளைகள் இவைகள் கவரிமான்களென்றனர். மிதிலைநாடி-
யாா எம்முடையீர்! மரக்கொம்பர்களில் தேனிறால்க ளினி
யவா யிருக்கின்றனவென, இராகவபிரானார் ஜனகர்குலகொ
டியே! நினதிதழ்த்தேனிறுமதுதேறலினிதாமோ? நினது
கொவ்வை யதரத்தமுதைப பருக விப்போதவாவுகின்றேனெ
ன்றனா. சானகியார் அம்மொழியைச் செவியுற்று நாணமு
ற்று நந் நாயகா கலவியை விரும்பி மெல்லமெல்ல இனியன
கழறுகின்றனர். நாம் மறுமாற்றமொன்றும புகலாதிருப்போ
மெனத் தலையை வணக்கியிருந்தனர். இரகுநாதர் நமதுமொ
ழியைகேட்டுச் சீதையின்பமுற்றுக் கசசின்பூட்டுநெகிழ்த்தடி-
க்கின்றனள் கடைக்கண்ணால் நமமை நோககுகின்றனள். தன
து தலையை வணக்கி நமதுள்ளததை வணக்குகின்றனள், நாமி
ன்னமற்றொன்றைப் புகல்வோமென்று திருவுளத்துச்கொடு
சீதை! நின்தாள்நிலனிடைநடக்கின்றமையால் வையமகள் பூரி
த்துப் புளகெழுந்தாளெனப் பசும்புல் வளர்ந்திருக்கின்றன
வென்றனா. விதேகைநாடியாா ஆ! ஆ! திருமன்றல் நிகழ்
வதற்குமுன் சொப்பனத்தில் நம்மோடு கொஞ்சிக்குலாவி யு
ரையாடியதுபோலவே யிபபோது மிவாபேசுகின்றனரென்
று திருவுளங்கொண்டு, எல்லாம் வல்லீா! கோதாவிரியி னிரு
கொழுங்கரையின்பாற் பூத்துள்ள முளரிமலாகளிலுறையாநி
ன்ற வோதிமப்பறவைக ளொன்றனோடொன்று கூடுவதையு
ம், குறிப்பொலிசெய்வதையும் பாருமென, இரகுநாயகா ஆ
மாம். அவ்வஞ்சங்களுடைய குரலொலி நினது காற்சிலம்பி
னொலியையும், நுண்ணுசுப்பின் தகட்டணியிற் குஞ்சம்போல
த்தூங்குஞ சதங்கையினோசையையு மொத்திருக்கின்றதென்ற
ருளினா. அகலகில்லேனிறையுமென்றுறையும் அருட்படிவவ
ன்னையார் அக்கிளவியைகேட்டுங் கேளாதவாபோலச் சு
வாமீ! தேவர் வனஞ்செல்லச்சக்கரவாத்தியாாபக்கல் வி
டைபெற்றுவந்தகாலைத் தொடாந்த தமியேனை முனிந்தருளி
னீரே. உமமைப் பிரியின், பரவைநீணாநீத்த மீன்போலவா

வேனல்லவோ? யான். கானங்களில் அரக்கருழல்வர். அதனைக்கருத்தின்மறவாதுவைத்துச் சென்றுவருதியென்று தங்களம்மனையார் தமியேனுக்கு வற்புறுத்தியிருப்பவுஞ் சைவச்சிலைமுறித்ததேவருடைய தோள்வலியைக்கருதியன்றோ! அரக்கருறையு மிப்பழுவத்தில் வெருவுறாது விளையாடுகின்றேனென்றனர். அவ்வேலை இராகவபிரானார் சேய்மையிற் பாராவிடையிற் புலியதனையடுத்துக்கையின்கண் மூவிலைவேலைப்பற்றி வெற்பகத்திப்பொதும்பரிற் செல்பவன்யாவன்! ஓரரக்கன்போலாம். இளையவன் கண்ணுக்குப் புலப்படவில்லான்போலும். சீதா!நீ நோக்காயெனப்பணித்தருளச் சானகியார் இறையவரே! அது மலையகத்திவனமன்று; கோங்காரண்ணியம்,அதனூடொரு பெண்ணல்லளோ செல்கின்றாளென்றனர். அரகோதண்டகண்டகர் பெண்ணருங்கலமே! நீ யெங்ஙனேபார்த்தாய். இவ்வகத்தியடவியையன்றோ யான்காட்டினேனென்னதிருக்கரத்திற் சுட்டியருள,எம்மை யாளுடைய நாயகியார் திருக்கண்சாத்தி ஆமாமென்று தாநோக்கிய கோங்குவனத்தையுங் காட்டினார். தேவதேவாதலைவ ரதைக்கண்ணுற் றிரண்டு மதிப்பிளவுகளைப்பதித்த முழைஞ்சையொத்த பேழ்வாயையும், செம்புண்ணைப்போலச் சேந்தழன்றெரியும் விழியையும் செந்தீயையொத்த செவ்வோதியையும், பருத்து நீண்டு நாலுஞ் சுரைக்காயையொத்த முலைகளையுமுடைய வப்பெண்பேய் யாவளெனவெண்ணுங்காலை, கரீரமரச் செறிவினுளுழைந்த விராதன் இரகுநாதருடைய திருப்படிவந்தாங்கிக்கொடு நின்றான். தாசரதியா ரவனைக் கண்ணுற்றருளி ஜானகீ! என்னைப்போல வங்கிசரன் உருவந்தரித்து நின்றான் நோக்காயென, மைதிலியார் சுவாமீ!நறுஞாழற்காவினுட் புக்க அவ்வரக்கியு மென்னைப்போ லுருக்கொண்டு நிற்கின்றாள் பார்த்தருளுமென்றனர். புருடோத்தமர் கண்டருளி நம்மிருவருடைய வுருவங்களை யவ்விருவருங்கொள்ள வேதுவென்னவெனப் பிராட்டியார் எல்லாமுணரவல்லீரோ! செய்குன்றுபோலப் பொலிகின்ற அச்சிகரத்தின்மேலிவர்ந்தன்றோரிருவ

ரது செயலையுங் கண்ணுறுவோமென, இராமபத்திரர் ஜாநகீ! அதன்மேலேறுவாயேல் நின தனிச்சப்போதினுமெல்லிய பாதங்கன்றும். ஓர் காவதவழிவரைச் சுற்றிலு நன்குய்த் தெரிகின்றது; இவணிருந்தே கண்ணுறுவோமென்றருளிச் செய்தனர். அக்காலைச் சுமித்திரை திருமதலையார சுற்றுநோக்கி, அந்தோ! யாம்நோக்கிய வப்போழ்தே மூவிலைவேல் கரங்கொண்டுள்ள நிருதனை முருக்காது தாழ்த்தமையால் நம்மைக்கண்ணுற் றச்சுற்றேடிப்போய்விட்டான்; நன்றுநன்று, அவனை நேடுவோமெனச் சிறிதகன்றுவேடம்பூணடிருந்த விராதனைக்கண்டு தனது தமையனெனக்கருதுற்று, அவ்வரக்கர் குலத்துளான் நம்மைக் கண்ணுற்றிக் கரந்தவனல்லன் கொடுமரத்தையுங் கூர்ங்கோலையுங்கொண் டவனைத் தேடாநின்ற நம தச்சனைக்காணலுற்று, அச்சம்பூண்டோடிவிட்டானெனத் திருவுளங்கொண்டு பிரானும் பிராட்டியாரும் விலங்கலின்மே லன்றேயிருந்தனர். மிதிலை நாடியாரைத் தனியேவிட்டண்ணன்மாத்திர மிங்குவருவாரோவென்று வரையைப்பார்த் தாங்கிருவரையுநோக்கி வாழி ஜானகி, வாழி இராகவனென்று சேவித்து, இஃதென்னை! இறும்பூதுடைத்து. யாவனே வொருதுராத்துமன் பரமாத்துமனுடைய திருவுருப்பெற் றிவண்வந்திருக்கின்றான் கொடிகளடர்ந்த விம்மாங்கன்றினுழைகரந்திருந் திங்ஙனே நிகழ்வதைக் காண்குறுவே மென்றிருந்தனர். அருளே திருவுருவாகிய நங்களன்னையாரது வடிவுபோல வடிவுபெற்ற சூர்ப்பநகை ஞாழற் காவைநீத்துப் புறம்போந்து விராதனைக் காணலுற்றுத் தாசரதி வேட்டைமேல் வேட்கையினுற்றன்னுயிரன்ன சீதையைவிட்டுத்தனியேயீங்கணுலவுகின்றனன். " காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றபடி, நமதுள்ளம் அவனதுள்ளத்தோடு கைகோப்ப விதுவேநல்லற்றமெனவெண்ணித் தனது மருங்கெனத்துவளும் பூங்கொடியில் மலர்கொய்வாள்போலப் பாவனைசெய்து நின்றனள். விராத னவளைநோக்குற் றலர்மேனசையாற் சீதை யிராமனைவிட்டுப் பிரிந்து தனியே போந்திருக்கி

ன்றனள். தேடிப்போனமருந்து காலிற் றட்டுப்பட்டதுபோ ல நங் கண்முகப்பேபோதந்தாள் ஓ! ஓ! மேனியினொளிப் பிழம்பினாற் செம்பொன்னின் மயமான இவளது றுப்புகளைப் பார்க்கவொண்ணுமே கண்கள் வழுகுகுறுகின்றன. வாழைகப் பரப்புக்குக்கீழா விரிதலையி னிளந்தண்டுகளைத் தலைகீழா நாட் டினாற்போல விவளுடைய குறங்குகள் விளங்குகின்றன. அமிழ்தநிறை பொனனங்குடங்களை யவாவிக் கரியசிற்றெறும் பணியாக வூர்வதுபோலத் தடங்கொங்கைகளும், மயிரொழுக் கும்பொலிகின்றன. இராமன் போதருமுன்னரே இவளைக் கவர்ந்து செல்லவேண்டுமெனவுன்னி யருகே யண்மிச் சனகர் குலக்கொடியே! நினது திருமேனியினொளியைப் போல நிறமுறீஇ மலராநிறகுஞ் சணபகவலலை விருமபுவா யேல் நினது விழைச்சின்றிறத்துத் தொண்டனேனுகிய யான் கொய்து தருகின்றேன், நீ கைவருந்தலெனச் சூர்ப்பநகை, இராமன் நம்மைச் சீதையென்றேதேறி மாற்றம் பகர்கின்ற னன். அவனுடைய மிடற்றினின் றெழுகின்ற வினிய கீங கிளவிக ளமுதைச் செவிகுளிரப்பெய்தாற்போ லின்புவிளைக் கின்றன கணையுங்கார்முகமுங் கரத்திலுடையானென்று சிறிதுமஞ்சாது தூக்கிக்கொண்டு போகவேண்டுமென்று கருது றறு நாயகரோ! பித்தியினறுமலரி லெனக்குவிருப்பந்தான். ஆங்குச்செய்மையிற் றோன்றுகின்ற வுய்யானததில் நறுந்து ணர்கள் பூத்திருக்கின்றனபோற்றோன்றுகின்றன; ஆங்கட் சென்று கொய்வோமென வினிதுமிழற்றினள். விராதன் ஓ! ஓ! இச்சீதை நட்புக்குறிப்போடு நாயகரேயென விளித் தவமுதமொழியைக் கேட்டு நமதுள்ளமென்னு மரிணங்கா மனென்னும் வேட்டுவன்கையி லகப்பட்டது. சானகிதா னே நம்மைச் சேய்மையிற்கொண்டுபோகமுயல்வது நாஞ்செ ய்த வறப்பயனெனக் கருதி மைதிலீ! அகொழுமலாககா லின்கணேகுவோம், வருதியென்றழைத்துச் சென்றான். சேமாவின் சிறுகன்றின்பாற்பதிவிருந்த இளையபெருமா ன், காதில் மணிக்குழையசைய, வாரினுளடங்காமே கொங்

கைகுலுங்க, அக்கொம்மையைப் பொறுக்காது நுண்ணுசுப்பு நுணங்க, சிறு காலாற் பொன்னங்கோடிகம் விலக,வான்முகத்திற்றரளத்தையொத்து வியாவரும்ப நடந்த சூர்ப்பநகையை நோக்கி யடுக்கலையுங்காணுப் பத்தராவியராகிய நமதையைப்போலவும், நம்மன்னையாரைப்போலவு மோரரக்கனுமரக்கியு முருகக்கொண்டுபோகின்றா. நாஞ் சிறிது சேய்மைப்பின்றொடாந்து நோக்குவோமென வெழுந்து சென்றருளினா. அவ்வேலைப்பொருப்பின்குவட்டி னெழுந்தருளியிருந்த ஜானகிபிராட்டியார், சுவாமீ! நம்மிருவரையொக்க வுருப்பெற்றுச் செல்லாநின்ற அரக்கனையு மரக்கியையு நாமெனக்கருதியோ தேவர் திருத்தமபியார் தொடர்ந்துசெல்லுகின்றனரெனக் கடாவியருளத் தாசரதியார் சீதா! இலட்சுமணன், அரக்கனரக்கியென் றுணாந்தேமெல்லென ஆங்கவா கட்புலனுககு மறைந்து தோன்றுவண்ணஞ் செல்கின்றுனெனச்செப்பியருளினா. பின்னா விராதன், இம்மைதிலியினுடையபொல நூபுரவொலியும், மருங்குலிற் பூண்ட வாடகத்தகட்டணியிற றூங்குமெளவலின்சிறுமுகையனைய சதங்கையோசையு நமக்குப் பெருவேட்கையைததருகின்றன. அவளுடையபுடைபரந்தெழுந்தணைந்துவிம்மிய விருபெருங் குயங்களினெருக்கி னுழைவுற்ற நமது விழிகளை வாங்கக்கூடவில்லை ; நல்லது இனிக் காலநீட்டியாமலிப்பெண்ணரசைக்கொண் டேகவேண்டுமெனக் கொடு, சுந்தரீ? நாஞ்சேணின்வந்துவிட்டோம் ; எனது பூஙகரந்தொடினுஞ் சிவந்து காட்டு நினது சீறடிவருந்த விலையோ ? எவட்செல்கின்றனை ? நினது நோக்கமென்னையோவெனச் சூர்ப்பநகை யொருவரும் வழங்குதலில்லாவாங்கட்சென் றுமதுகண்ணாடியன்ன கடிமார்பைப் புல்லவேண்டுமென்பதே யெனது கருத்தென்றுள்ளத்தினுட்சிரித்துத் தனது கருத்து முற்றுப்பெறுமெனப் பெருமகிழ்வுபூத்து எனனுடைய நாயகரே! அப்பூங்தோட்டத்துக் கணித்தாய்வந்துவிட்டோமென நடந்தனள். விராதன், ஆயிரமாணகுயிலினுடைய கூவலினு மோாபெணகழுதையினுடைய கத்தல்

காருக்கினிமைசெய்யுமென்பர். இவளோ பதினாயிரம் பெண்குயிலினு மினிதாய்ப் பேசுகின்றனள்; கற்பகவல்லிபோல நுடங்குகின்றனள். நம்மை நோககாலும், புன்முறுவலாலும்,மஞ்ஞையன்ன சாயலாலும், அன்னமன்னநடையாலு மயககுகின்றனள். நன்றுநன்றென்று, சானகி! நீ சொறறபூங்காவையெய்திவிட்டோம, சம்பகப்போது சாலப்பூத்திருககின்றன; கொயவோமென்றனன். தொடர்ந்துசென்றருளிய இளையகோளரியார் இந்நிருதன் தாசரதியாரதுருக்கொண்டு அந்நிருதியைப்பூமிஜாவெனத்தேறிக் கவருவான்முயல்கின்றனன் மேனிகழ்வதைநோக்குவோமென வாளாவிருந்தனா சூாப்பநகை விராதனைநோக்கி யெனதாவிக்கினியாரே! இவ்வடவியரக்கா குழுவுக்குறைவிடமாயிருக்கின்றது. நிருத்தாவேரறககோறல் புரிவேனெனச் சூள் நீாபூணடிருக்கின்றமையின், நானச்சமொருசிறிதுமின்றி யுலாவுகின்றேனென விராதன், இராக்கதப்பூணடின்றிச் செய்கின்றேனென்று வஞ்சினமறைந்தவன் நானல்லேன். அச்சபதஞ் செய்த இராமனுடையவுயிாத்துணையாகிய நின்னைக் களவுபுரிகின்றவனானென்று நெஞ்சினுணகைத்துப் பெண்மணியே! நான் மேற்கொணட நோன்பிலேயப்பாடுமுளதோ? சாது சனததை நலியுங் கரன்முதலாகிய நிருதர்குலத்தை யாசறககளையேனேவென்றனன். இளையநம்பிகள் அதனைத் திருச்செவிசாாத்தியருளி யிருவருந் தனிமுதல்வராகிய தாசரதியைப்போலவுஞ் சானகிபிராட்டியாாைப்போலவு நன்கு வார்த்தையாடாநின்றனரெனப் பெருவியப்பெய்தி, நமதத்தாையு மவர்தேவியாாையும் ஓரரக்கனு மோரரக்கியுங்கண்ணுற்றுக் காமுற் றொருவனையொருவரின்றொன வுணராவண்ண மவ்விருவாைப்போலப் படிவங்கொண்டுவந்து,இவ ளவனை யிரகுநாதனொன்றே துணிந்து பெரிதுங்களிக்கின்றாள்.அவனு மவளைமைதிலியாளொன்றே கொண்டு சாலவுவக்கின்றான், இனி இன்னோரிருவருடைய செயலையு நோக்குறுவோமென்று குறிப்புற்றிருந்தருளினர். கரனை யானுயிர்மாய்க்குந் திறலில்லேனோவெனத் தருக்கோடு பெருமித

மா யுரைத்த விராதனது மொழியைக்கேட்ட சூர்ப்பநகை, அன்றே! இவர் கரனைக் காதுவரே னமதுமுன்னவனிராவணனை நொய்திற் கோறல்புரிவரென விதிர்ப்புற்று, எனதுயிராக்காதலரே! இராவணனுக்கு மேம்பட்ட வலியுடைய கரனை யெங்ஙனங்கொலையியற்ற வல்லீரென விராதன்,மாதரசி! பரசுராமனை முதுமறையந்தணனென்முன்னி யுயிர்கவராது விடுத்தவெனக்குக் கரனை விண்ணேற்ற லோர்பொருளாமோவென்றனன். சூர்ப்பநகை ஆமாம், அது யான் கண்கூடாகத்தெருண்டதுதானே யென்றுரைத்து, அச்சோ! சீதையைப்போலுருவங்கொண்டும் இராமரென்ன நமது கரத்தைப் பற்றினாரில்லை பணைத்தெழுந்த பயோதரத்தை நெருங்கப்பிடிசகலுற்றாரில்லை. இதழைவாலெயிற்றாலதுக்கிப்பருகினாரில்லை; முத்தங்கொடுத்தாரில்லை, அங்கங்களோடங்கங்க ளொன்றத்தழுவினாரில்லையென்று வருந்திச் சினையால் நனையைப்பறிப்பவள்போலக் கலிங்கத்தினுடைய நீவிதளர்ந் துந்திச்சுழி புலப்படக் கச்சு மேலேறிக் குயங்களின் கீழ்ப்பாதிதோன்ற முலைகளைப்பொதிந்து பரந்திருந்த வுத்தரியஞ் சுருக்குண டந்தணருடைய மாாபுநூல்போலக கிடக்க, இருகால்விரல்களை நிலனிலூன்றிக கழுத்தையுயாத்தி முகத்தையணைந்து, இடக்கரத்தால் மரக்கொம்பரைப்பற்றி வாங்கி, நறுமலாகொய்வாள்போலப் பாவனைசெய்தாள். விராதன், மயிலே! குயிலே! அன்னமே! சொன்னமே! எனதுகண்ணே! ஜனகர்பெண்ணே வருந்தாதி. நீ வயிறெக்கிப் பூப் பறிப்பதினால்வாரின் விளிம்பழுநதி நகிலமுகம்வாடுகின்றனவே. நினதிருகரங்களுமிருகன்னத்தினு மழுந்தியிருத்தலால் வியாவுண்டாகிப் பத்திரரேகை யழிகின்றனவேயெனச் சூர்ப்பநகை யதனைக்கேட்டு இவ்விராமன் றனதுமொழியினாற றன்னோடு விழைச்சுப்புரிய நம்மை யேவுகின்றனன்போலாமென்று மனத்தினுளுவந்து கிளையைவிட் டம்மாற்றத்தைக்கேட்டதனால் நாணமுற்றவள்போல முகங்கோட்டிச் சிறிது சினத்தோடு கடைககணித்து மலர்களைக் கொய்தலைவிரும்பி நானுழப்பதை நீா நோனாதிராயிற்பறி

த்துத் தாரீரொன்றனள். விராதன் மைதிலீ! நினதேவலைப்புரி வதன்றி யெனக்குறுதிபொருள் வேறுமுளதோ. இவ்வடவி யிலுள்ள மலர்களையெல்லா மின்னே கொய்கின்றேனென்று மண்டினன். சூர்ப்பநகை விராதனைநோக்கி, எனதன்பனே! கேண்மின் அந்நறுந்தார்களெல்லா மெனக்கு வேண்டா. உய ர்ந்த இச்சண்பகத்தருவி னனிதவழ்ந்த நீள்சினைகளினலர்ந் துள்ளபோதுகளை யெனது தோளின்மே லிவர்ந்துகொண்டு பறித்துத் தம்மினென, விராதன் சீதை நம்மேலேறின், தூக கிக்கொண்டோட லெளிதென்றெண்ணிச சானகீ! என்மீது நீயேறி நினக்குவேண்டு மலர்களைப்பறிப்பாயென்று குனி ந்தனன். சூர்ப்பநகை இராமனைத்தூக்கிச் செல்லுதற்கு நல் ல விரகுகிடைத்ததென்றுவந்து பிராணநாயகனே! தங்கள் மேலேறுவதினேதம் யாதெனநுவன் றுடல்வளைந்துநின்ற வ வ்விராதனுடைய வெரிநிடைத் தன்கரங்களையூன்றித் தாவி யெருத்தினிடை யல்குலைப்பொருத்தி யருத்தியோடிருத்தலும் விராதன் நிமிர்ந்து தனதிருமொய்ம்புகளிற் றூங்காநின்றவவ ளுடைய கவான்களைக் கைகளாற் சிக்கெனப்பற்றிக்கொண்டு கடிமலர்களைக் காட்டுவான்போலச் சிறிதுபோ துலாவிமேற் செல்வான் முயறலுஞ் சூர்ப்பநகையு மலர்கொய்பவள்போலச் சற்றுப் பாவனையியற்றி விராதனைத்த தன்னுடை யூருவினி டை யிடுக்கிக்கொண் டேகுவானுஞற்றினள். அன்னவிரு வோருடைய முயற்சியுமொன்றனையொன் றொருங்கொத்தி ருந்த தன்மையினு லதிவிரைவாயெழும்பினர். சூர்ப்பநகை த ன்னையிடுக்கிக்கொண்டு மேற்செல்கின்றனளென்பதை விரா தனோராது, அவ்விராதன் தன்னைப் பொறுத்தேகுகின்றன னென்பதைச் சூர்ப்பநகை யோராது தாமுதலிற் கருதிய வெண்ணமேபோலவே கவர்ந்தேகுகின்றேமென விருவருங்களி த்து விண்ணினெறியிற் றுனைந்துபடர்குற்றனர். அவ்வேலைத் தென்கடல்சார்ந்து அத்தனாகிய சம்பாதியை வழிபாடுசெய்தி றைஞ்சி மீண்ட ஜடாயு விராதனையுஞ் சூர்ப்பநகையையுங் கா ணலுற்று, ஆ! ஆ! இஃதென்னை! வியப்புடைத்தெனக் க

ருதி யாரடா நீ யெனது குழந்தை யிராமபிரானுடைய பொருநுக்கொண்டெனது மருகியை, கற்பினருங்கலத்தை, மங்கையாக்கரசியைச் சுமவாநின்று செல்கின்றாய் ; நில்லடா நில்லடாவென் றுருமெனவரப்பினா. விராதன் ஓ ! ஓ ! இதென்ன ? இடுக்க ணமகரு நேர்ந்ததே. இப்போது மிகை செய்குதுமே விச்சேவல்வன்கழுகுதுணடத்தானம் மைத் துண்டங்காணுமென வச்சுற்றுச் சூர்ப்பநகையோடு படிமிசை யிழிந்தனன். சூரப்பநகை ஆ! ஆ! சீதையைக் கணுறுற வொருவன் அவனை முயங்கக்காமுற்று இராமனதுருக் கொண்டு, இராமனைக்கண்டு அவனை யணையவாசைகொண்டு சீதையினுடைய படிவங்கொண்ட நம்மைக் கண்ணுற்றி யுண்மைச் சீதையெனவே யேற்றுச் சென்று, ஜடாயுவை நோக்குறுறுத துண்ணென வசசங்கொண்டான்போலும். மெய்ம்மையைத தெருளுவோமெனக் கருதி நீ யாவன் ? பொய்யுரையாதி, மெய்யுரையென, விராதன் ஓ! ஓ! இவள் சீதையல்லள். அப்பூவின் மெல்லிய சீதையாயி னமமையும் பொறுதது மாக நெறியிடை யேகவல்லளோ ? அதனை முகடியே யோராது தவிர்ந்தோமெனப் பீழை யெய்தி, இலங்கைககுப் போகின்றேனெனச் சூரப்பநகை யிராமனைப் புல்லக்கருதிச் சீதைகோலமணிந்து, இராமவேடமேற்கொணட நம்பால் வந்திருப்பினுமிருககலாமென வெண்ணி நீ யாவள் ? சூர்ப்பநகை யோவெனக் கடாயினன். அசசூரப்பநகை நீ விராதனோ வென விளுவ, அந்நிருதன் அன்றோ ! சுரைக்காய்போலத் தூங்குந் தோன்முலையையோ தூக்கிச் சுமந்து தொலைத்தோம். இன்று வைகறையில் யார்முகனில் விழித்தோம். விரைந்து பாறவேண்டுமென நெஞ்சுட்கொண்டனன் அக்காலை மறைவுற்றிருந்த விளைய பெருமாள் புன்முறுவலியினுங் கடைப்பட்ட விராதனுஞ் சூரப்பநகையுமோ அவ்விருவருமென வணமிப்போந்து விராதா ! சுவாவே ! பரமாத்துமனுடைய படிவத்தையொருவடா ! துராத்துமனே ! எனவகடுகுழப்ப மெய்தவரைபுரை நெஞ்சிற்குததலும், விராதன் அரிதரிதென்

ஹீ தனதுலம்பொருதோளிற்பொறுத்த சூர்ப்பநகையினுடை
ய பின்னலேப்பற்றிச் சென்னியை வணக்கிப் பிடரிலோர்கை
யும், ஊருவினூடோர்கையுங் கொடுத்துத் தூக்கித் தரை
யில் விட்டெற்றித் தனதியற்கைவடிவுகொண்டு கழுமுளுங்கை
க்கொண்டு, அடே! சுமித்திரை புத்திரா! நீயென்னைவிட்
டகலாயேல் யான் நின்னைக்கொடுமறலியின் பேழ்வாயிற் புகு
த்தாதுவிடேனென்னும் வேலேப் பெரியவுடையார் குழந்தை
இளையகோவே! விண்ணவாக்கிடரிழைக்கும விராதனையுஞ்
சூர்ப்பநகையையும் விடாதை அன்றே ரிருவருயிரையும்
நீ வாங்குதியேற் கூற்றுவனின்னைப் பராவுவானெனறணித்து
வந்தனா. மலேமேல் வீற்றிருநத தேவதேவாகருத் தேவன்
ஜானகி பறவைவேந்தாகிய நமது பெரியார வந்து, தகைத்த
லுநிருதனு நிருதியும் வானிற்சேறலொழிந்து நிலத்துப் போ
ந்து, நமதுருத்தவிர்ந்து தமதியற்கை யுருவந்தாராய் நிறகின்ற
னா. இளையவன் விரைந்தவட்சென்று நிற்குந்திறத்தை நோ
க்குங்கால அவர்களைக் கோறல்புரிந்தேவிடுவன். நமது சிற
றப்பருடைய வலகையுந் தம்பியினுடைய வலகையுநோக்குற்
றுங்கவர்கள் வெருவுறுகின்றாகள் பாராயென வருளிச்செய்
தனா. மறுத்தும், இராகவன் ஜானகி! அவ்வரக்கன் இலட்
சுமணனுயிரையுண்ணுதியென்று கூரியகைக்கழுமுளை யெறி
ந்தான். அம்முக்கவட்டுப்படையை நமதிளையவ னொருவிசி
கத்தினாற் கண்டங்கணடு, அவனதுவரைபுரையாகத்து வின
ணாறு வீழ்ந்தெனவோருதையுதைத்து, நிலனிற்றள்ளிப் ப
னைபோன்ற அவனது திணிதோள்களைத் துமித்துக காதுதல்பு
ரிந் தாங்கணுள்ள பெருஙகுழியிற் பாதத்தாலுருட்டி யுய்த்
துக் கொடிசெடிதழை முதலியவற்றாற் பொதிகின்றான் கா
ணுயெனத்திருவாய்மலர்ந்தருளினா பின்னாச்சூர்ப்பநகை அ
டேவிராதா! கரன்பணித்தமொழியைத் தலைமிசைக்கொடு
வெறறியுமெழிலு மொருசேரமிக்க இராமனைககொல்லவந்த நீ
மான்குருளையினுற் புடையுணடவயப்புலிபோல இலட்சுமண
னலடிபட்டாயே சீதையை விரும்பி இராமனுருக்கொண்ட

நீயப்பெண்ணரசி சீதையாங்குப் பொருப்பின்மே விராமனே டிருபபதை நோக்காம லென்னைக்கிட்டிச்சுமந்து கெட்டாய். நானு நின்னை யிராமனென்றெண்ணுபுகெட்டேன். இராவ ணனு லேவப்பட்டுவந்த நான் சீதையைக் கவர்ந்துபோகாது வெறுங்கையொடேகுவனேலவ்விராவணனென்னை முனியும். எனககு நன்குமதிப்புந் தணக்கும், என்செய்கேன். நினக்கழு வேனே? எனக்கழுவேனே? என வாய்வெரீஇ யரற்றினுள். ஜடாயு குழந்தாய்! இலட்சுமணு! சூர்ப்பநகை புகன்றமாறறங் கேட்டிலையோ? அவ்வரக்கி கைகடவாமுன், விராதனுக்கு நெ றித்துணையாச்செல்ல விடுத்தியெனச் சுமித்திராபுத்திரா பெ ண்ணெனத் திருவுளமிரங்கிக் கார்முகத்தைவளைக்காது சுரிகை கைக்கொணடனர் கிரிமேலெழுந்தருளியிருந்த இராமபத்திரர் மைதிலீ! இளையவன் அந்நிருதியினது செவ்வோதியைப்பற் றிப்பேழைபோன்ற பேரகட்டிலுதைத்துச் சுளகுபோன்ற செ வியையு மூக்கையுந் தோற்றுருத்தியெனத் தூஙகாநின்ற மற் றையவிரணடையுந் தடிந்துவிட்டான்பராய் செங்குருதிபெய்யு முகிலென, அந்நிருதியாகததிலெற்றிஅயனே, அரனே, குகனே யெனுமாறறலமைந்த கரனே! முனித்தனை, அவன் மறனை, உர னைககாணவாராயோ? தாரததானையொடாரத்தானைக்கிறைவனை யுந்தி, இகல்புரிந்தவலாரியைச் செருவிடை வலிதொலைத்துச் சிறையில்வைத்தவனே! பிதாமகன் வேண்ட அன்னேனைவி டுத்தவனே! யான்பட்ட பழியைப் பாராயோ? மும்மையுல கெங்கு நினது தனிக்கோலூறின்றிச் செல்லாநிறக, மனிச ன் தலையெடுத்துச் சிலையெடுத்துத் திரிவனேற் குறைவன்றே! கையிற்றழலெடுத்தானுடைய மலையெடுத்தபெருமலையே! எ ன்னைக் காணப்போதராயோவென் ரேலமிட்டோடுகின்று ள் பாராயென்றுரைத்தருளித் தெனுது பரவைசென்று போத ந்த நம பெரியவுடையாரைப் போற்றிசெயல்வேண்டும், இளை யவனைத்தழுவிகொளல்வேண்டும், போதுவாயெனப் பிராட் டியாரையுடன்கொண்டு விலங்கலைவிட்டு நிலனுறறனா. இளை யபெருமாள் கழுகுக் கரசைநோக்கிப் பெரியவுடையாரோ! இ

னாதர் உயர்ந்தோங்குசிலம்பினின்று போதருகின்றனர். யா
முமெதிர்கொடு செல்லுதுமெனப் பெரியவுடையார் குழந்தாய்!
வாராயென வெதிர்வந்தனா, இரகுநாயகா எம்பெருமாட்டியா
ரைநோக்கி அன்னமே! எனது கரத்தைப்பற்றிக்கொள் இப்ப
யம்பைத் தாணடிவருவாய். அந்நெருஞ்சின்முள்ளிற சீறடியை
வையாதி, அந்நீரொழுககு நின்மெல்லியகாலையிழுககும், இங்
கேவாவெனத் திருவதனத்தைக கடாட்சித்தருளிப் பெண
ணமுதே! நின்னொய்யசீறடியில் வெமபரலுறுததுவதினுன்
மடமருளுகின்ருய். முழுமதி வட்டத்தி லசுமபுறு மமுதம்
போல நின்வாண்முகததில் குறுவியாவரும்புகின்றது. விசு
புபோழுகிவந்த இம்மரததின் கொழுநிழலில் சிறிதுபோது த
ஙகியிருககுதுமெனப் பிராட்டியாா குழந்தை யிலட்சுமணனை
நாங்கடிதுசென்று நோககவேணடுமென்று நாயகனைத் தொ
டாந்து நடந்தாசிரமமவந்தருளினுர். ஆங்கணண்ணிய பெரியவு
டையானைக்காண்டல்செய்து, ஜானகீவல்லபா பெரியாரே! இ
ராமனிறைஞசாநின்றேனெனப் பறவைப்பெருமான் குழந்தா
ய்! நெடிதுழிவாழியவென்று மஙகளாசாசனஞ்செய்தனர். சீதா
பிராட்டியாரும் பெரியீர்! வணக்கமெனப் புள்ளரசா மருகியே!
நன்மகப்பேறுபெறுதியென்றுசிகூறினா. சுமித்திராபுததிரர் வ
ந்துபூமகளாரோடு புருடோத்தமனை வணங்க, நமமுத்தமரவ்வி
லகருமனைத்திருமாபுறத் தழீஇகொடு குழநதாய்! இறைறை
ஞான்று நல்வெற்றிகொணடனை இனிமேற் செறுநர் நேரின்
யான்கோறல்புரிகின்றேனென்றருளிச்செயதனா இளையபெரு
மாள் எம்மையாளுடை நமபியாரே! இன்று நமககு வெறறியுற்
றபெற்றி சிறறப்பனுராலெனறுரைததனா. பெரியவுடையாா இ
ராமா! குழந்தையிலட்சுமணனுடைய வலியை நீ யெங்ஙனின்
றுகண்டனை என, எமபெருமான தந்தையீா! யானுஞ் சீதை
யும் அடிககலின மீமிசைநின்று நிகழந்தவறறை யெல்லாங்
கணணுற்றேமென வுரைத்தருளினர். பூவினைவெறுத்துச் சன
கருடைய பொன்மனை புகுந்தருளிய பெரியபிராட்டியா ரவ்வ
ரக்கனு மரக்கியு மினனுரெனத் தமியேனுககுத் தெரிதலில

ரென, பறவையேந்தலார் நோக்குறறுப் பெண்ணினருங்கல
மே! அவ்வரக்கனீங்கணுள்ள ஜனந்தானத்துறைபவன். அ
வனை விராதனெனபர் அரக்கி பதினாலாயிர மகாரதிகருக்
கரசனாகிய கரனுக்கும், இருபதுகரனுக்குஞ் செல்வத்தங்கை.
அன்னாளுக்குச சூர்ப்பநகையென நாமமென்று விளம்பி, இரா
மா! கரன்சூர்ப்பநகையினுடைய மூக்கையும், முலையையும்,
காதையுங் கண்டி சினந்து நின்னோடு போர்பொர வோர் முகூ
ர்த்த காலத்தில் வருவனென்றனர். அரகோதனுடைய கண்டக
ரம்மொழியைக் கேட்டருளிப் புன்முறுவலபூத்து நான் வே
ண்டுவதுவேறென்னையெனப் பெரியவுடையார் மகிழ்ந்து குழந்
தாய! யானச்சிமயத்தின்மேற்சென்றுடலயாவு போக்கிக்கொ
ண்டு போதருவேனெனப் போயினர் பொருமுகவெழினியினு
ட்பகவான் யாழ முனிவர் தோன்றி, பங்கமடைந்த அங்கமு
டைய தங்கையைக்கண்டிரன்மிகக கரன்வெகுண்டு இராமபிரா
னோ டமர்புரிவான். பெருந்தானைகளோடு புகுகின்றனன். ஞா
ட்பினைநோக்க வெம்மைப்போல வேட்கையுற்றீரக ளெல்லீரு
மெம்மோடு வரலாமென்றனர். இளையபெருமாள் பெருமானை
நோக்கி அத்த! பகவான் நாரதமாமுனிவருடையகிளவி கரன்
சமரஞ்செய்யவருகின்றனனென்பதைககிளத்துகின்றது. நாம
யாநதிருத்தலொண்ணாதென ஆளுடைய நாயகனார் நன்றுநன்
று குழந்தாய! நீ சீதையைச்சோரவின்றிப்பாதுகா வென்றன
ர். சுமித்திரை திருப்புதல்வர் சுவாமி! நன்றென்றிருந்தனர். தி
ரையினுட் படைவீரர்களே! இட்சுவாகு குலத்திற்றோன்றின
வனும், முனிவேடத்தைத் தரித்தவனும், பாரியோடுந் தம்பி
யொடும் போந்திருக்கின்றவனுமாகிய இராமனையெல்லீரும்ப
டைகளோடு வளைத்துக்கொண்மின். கொண்மினென் றோ
ரோசை பிறந்தது. இரகுநாத ரப்பூசலைத் திருச்செவியுற்றுக்
கரனே வந்து மாற்றம் பகர்கின்றானென்று கவயந்தரித்து,
ஆவந்தாங்கி, காமுகமேந்தி, கரனே! நினதியானைபரிதேர்
காலாளாகிய படைகளோடு நின்னையின்னே முருக்கல்செ
ய்து குணமுகனாளி சமபு கழுகுமுதலானவற்றிற்குங் கால

னுக்கும் நல்விருந்தமைக்கின்றேனென் றுங்காரஞ்செய்து பாணங்களாற் பதினாலாயிர மகாரதிகர்களையும், கரனையும், அவன்தம்பியரையுந்துமித்தருளினர். இராக்கதரது செருக்கழிந்ததென்று கடவுளர்கள் முனிவர்களெல்லாருமுளங்களித்துத் துந்துபிதுவைத்துப் பூமாரி பெய்து நம்மையவா வாழ்த்தினர்.

ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

ஸ்ரீ ராமதாசர்கள் திருவடிகளே சரணம்.

அந்தர்நாடிகை.

பரமபாகவதோத்தமராகிய விபீஷணுழ்வானது திருப்புதல்வியாகிய மருக்குழலியனலைவந்தனள். வந்து முன்னே கண்ணுற்று நம்தந்தையாருடை வமைச்சனுகிய சம்பாதியாங்கு வருகின்றனன் போலுமென நின்றனள். நிசிசரகுலனி னுதித்த சம்பாதியாண்டு நிற்கின்றவள் அனலையோவென்றண்மைக்கணெய்திக் குழந்தை அனலை! இவண் நீயேன் சார்ந்தனையென விபீஷணருடைய வருஞ்செல்வப்புதல்வி நான் வித்யுஜ்ஜிஹ்வனுடைய மனைக்கணேகி வருகின்றேனென்றனள், சமபாதி மாதே! ஆங்கு நீ செல்லக் காரணமென்னையென, அனலை அமைச்சரோ! கேளீர். இலங்காதிபதி தங்கையாகிய சூர்ப்பநகை தசரத புத்திரனுகிய இலக்குமணனுல் மூக்கறையாகி வித்யுஜிஹ்வனது மாடமேயினளென்றனள். சம்பாதி நகைத்து அனலை! சூர்ப்பநகை நினக்கத்தை யல்லளோவென அவள் அமாத்தியரே! அத்தை செய்தியை முற்றுங்கேண்மின் உறுப்பிழந்து போந்த சூர்ப்பநகையை வித்யுஜிஹ்வன் மனையாட்டி மாயாவதி நோக்கி நினது மூகமெங்கே? காதெங்கேயென, தயக்கிரீவன் தஙகை தக்க மறுமாற்றஞ் சாற்றுது இராமனுடைய வடிவழகைப் புகழ்ந்து பெரிதுபன்னினள். மாயாவதி கேள்வியுற் றிவ்வளவெழின்மிக்க வாடவனு முளனே?

அவனுருப்பொறித்த படத்தைக்கண்ணுறவேணடுமென வெனக்குச்சொல்லியனுப்பினுளெனச் சம்பாதி, மங்கையே! இராமபடம நின்வயினேதெனவினுயினன். அரககா குலககொடிசம்பாதியே! கேட்டி சீதைதனக்குத் திருமன்றலாகுமுன்இராமனதுகட்டழகைககருதிப் படமொன்று பொறித்தனள், அப்படத்தை வித்யுஜ்ஜிஹ்வன் குடிலம்புரிந்து கொணாந்து தன்னில்லாள் கரமீந்தனன. அவள்வயின் யான் பெறறு இராவணனுலெடுக்கப்பட்டு இலஙகாபுரியிற் சிறையினுள்ள சானகிக கப்படத்தைக்காட்டிச் சோர்வகற்றிகொண்டிருந்தேன். அமடாயாவதி யச்சட்டகத்தைப் பாரக்க வேட்கையுற்றமையாற் கொடுபோய்த் தந்துவருகின்றேனென்றனள் சம்பாதி, இராவணன் சீதையைககளவுசெய்வான் மானுருவமெடுததமாயமவல்ல மாரீசன்மாய்ந்தான்! தாடகை முதலாயோர் முடிந்தியே யுலந்தார் அரக்கா மரபுக்கின்னமென்ன கேடுநேருமோ வென்றனன் அனலபெரியோரே! அதுநிற்க மிதிலையாகோனங்கை யெப்போது மிராமபடத்தை நோககுற்றுக கணணீர் மல்கிக்கலுழ்ந்து சிம்சுபா மரனடியி னேழுதிஙகள் கழியவைகுகின்றனள். இராமபடமின்மையினுலினி யென்னுறுவளோவென்றனள். சமபாதி கேட்டுமங்காய்! இராகவன் வாலியை வீட்டுதல் செய்தானென்று மாலியவான் முதலியோர் கேட்டு வெருவந்து சானகியைக் கொண்டுபோய்த் தாசரதியினிடத்தில் விடுத்துப் சரண்புகுவதே பயன் தருசெயலென்று கடைப்பிடிககின்றனரென, அனலை பெரியீர்! மாலியவான் முதலாயோருடைய வெண்ணமீதாயின், பெருந் தீவினையாளனது தீயகருத்தென்னென்று கடாவினள். சம்பாதிநங்காய்! சீதையைககொணர்ந்த பின்னர் இராவணனை நோக்குற்றவர்யார? எப்போழ்து மத்தசககிரீவன் பவனங் கொணாந்து வேய்கின்ற பல்லவச்சேக்கையிற் படுத்துப் புரளுகின்முன். வருணனீகின்ற முண்டகமலர்களால் அலங்கஞெடுத்துச் சூடுகின்முன். கொடுந்தழல் விடப்பாந்தள் நீங்குற்ற புற்றுப்போல நெஞ்சு பாழாம்படி சீதையினிடத்தேயே கருத்தைச் செலவிடுத்தி, எனைத்தாயினும

வினையொன்றனையும் கருதாதிருக்கின்றான். கச்சளங்கழுமிய
தன்னெஞ்சுபோல விருண்டுள்ள சிற்றறைவிட்டுப் புறம்போந்த
ரா திருக்கின்றான். மந்திரியா முதலாகிய நண்பாகளோ டொ
ரு சிறிதும் வாய்விள்ளாதிருக்கின்றான். அமைச்சர்கள் இராவ
ணனை நோக்கவும பேசவு மற்றம் பெரிது வருந்தி யவனைவெ
ளிப்படுத்துவா னொருசூழச்சிபுரிந்து, மழைகோலக்கூடித்
தாசரதி ஜானகி பிராட்டியை நடாத் தொடங்க ஞெட்
டு வாயிலைவிட்டவீறாய ஓர்நாடகம் புனைந்துளாமி னெனச்
செப்பலும், அவ்வுசன ளிரதமொன்பலிது நிரம்பப்புனைந்த
நாடகமியற்றி யுலகமுமமைகடும் வேந்தே! எங்கள பெருநாத
காப்! இலங்கை வாழமணியே! பிரமன் வேண்டுகோளால்
வானவா மன்னவனைத் தொடாப்பிணிப்பை நெகிழ்த்துவி
ட்டவளளலே! நீயுவகை தூங்கும்படி யோாநாடகம் புது
வதுபுனைந்துளேன. அதைப் பாாத்தருடியென வேண்டுகி
ன்ற நினது சுசகிராசாரியென்று கையொப்பமிட்டுப் பத்திரி
கை ஒாந்து செலவிடுத்தனன், இராவணனவ்வோலையைப்
புலமகனொருவன் வாசிப்பகேட்டு நாடக நோக்கவிரும்பி
னன் நடாவிலசகடவுண்மகளிாகளையுங கண்ணுளாகளையு
ங கொணர்வான் நிறுது நகதையாணையைத் தலைமேறபொறு
த்து நான் செலகின்றேனென விளம்பினன். அனலை பெரிய
வரே! இராமபடத்தைப் பாராவிடிற சீதை சாலமறுகுவள்;
அவளையழைத்துவந்து இராமசரித்திரமாகிய விந்நாடகத்தை
நோககுவித்துச் சிறிதின்னலாற்றலாமெனக் கருதுகின்றே
னென்றனள். சம்பாதி யம்மொழி செவியிடைசசாாதலும்
மானே! இராவணனது சமுகத்தில சீதையையும் விளித்து வ
ரலாமா? அப்பெணமணிதான் வருவாளா? அவ்விராவணன்
றொடக்கமாய மாயவரககருணராவதைக நீவிரிருவிருமிருந்து
நாடகநோக்க விரகொன்றுளதேற கழறெனை, அனலை சம்பாதி!
சம்பாதித்துளேன். பூண்டவாகளை நிருதர்கொடுவிழிகருப பு
லப்படுத்தாதமணிகுயிற்றிய கங்கணங்களிரண்டென்வயினிரு
க்கின்றனவென மெல்லப பகாந்தனள். சம்பாதி அவ்விரணடு

கங்கணங்களையும்யான்முந்தையே யறிவேன். பண்டைஞான்று பகவான்விசுவாமித்திரர் மங்கையர்க்கரசியாகிய சீதைக்குக்கொடுத்தனர். கரவடசாரணன் முனிவடிவங்கொண்டு பொய்யுரைத்து, அக்கடகங்களைச் சீதைபாற்பெற்று, இராவணன் வயிற்கொணர்ந்தான்; அவன் சாரணனைநோக்கிக் கங்கணங்களைநீ கைக்கொண்டிருத்தலால், நின்னுருத்தோன்றலிலது நெடிதுசேணிலெறியெனக்கடிந்தான். சாரணனறியாது புட்பகத்தினோர்புறனிற் பொதிந்துவைத்தான். பின்னை வித்யுஜ்ஜிஹ்வன்வற்றைக் கைக்கொண்டு முன்னோர்நாள் என்னோடு நகையாடி விளையாட்டயர்ந்தான். அக்கங்கணங்கள் நினதுகைப்பட்டகாரணமென்னையென, அனலை, அமைச்சரோ! அவ்வித்யுஜ்ஜிஹ்வன் தன்னில்லாண்மாயாவதிகையி லீந்தான். அவள் நட்புடைமையினெனக்குத் தந்தாளென்றனள். சம்பாதி பெண்ணே! ஆயின், நீவிரிருவிரும் வந்து நாடகம் பார்க்கலாம்; யான்சென்று வயிரியர்களைக் கொணாகின்றேனென்று சேறலுற்றான். அனலை யானும் போய்ச்சீதையையுடன்கொண்டு நடம்பயிலிடனுக்குப் போதருகின்றேனென்று சென்றனள். பின்னர் இராவணன் மகா பார்சுவனென்னு மமைச்சனோடரங்கமேபோதந்து, அரியணைமிசையணைந்து மகா பார்சுவா! இச்செவ்வியினுடகவாட்டை நோக்கவேண்டுமென்றமாத்தியரென்னைநெருக்குகின்றார்கள் என்னையென, மகா பார்சுவன், இலங்கேசரோ! சீதையைக் கருதிக்கருதிக் காமவெப்புநோயுழக்கின்ற நும்மைக் களிப்பிக்கும்பொருட்டேயன்றி வேறன்றென்றான். தயக்கிரீவன் நல்லது நாடகர்நடமுயற்சியியற்றலாமென, அண்மையினுறைந்த மகாபார்சுவன் கண்ணாற் குறிப்பித்தனன். உடனே நிருத்தர்கள் அணுகிவந்து தண்ணுமையினோடு தாளத்தைச் சிறிதுகொட்டிக் கைகூப்பித் தலைவணங்கிக் குடபிட்டனராய் நின்றனர். அக்கூத்தர்களிலொருவன் ஓ! ஐங்கணைக்கிழவனனையவன் கூடியவர்களுக்கின்பத்தையும், பிரிந்தவர்களுக்குப் பையுளையும் புரியாநின்றனன். ஈரேழுலகத்தினு மவனைவென்றிகொள்வா ரொருவருமிலர். அ

வின் கொற்றத்தினின்று குதித்துய்ந்தவருமிலர். அவ்வேளை யாங்கனுயியற்றிய உருத்திர மூர்த்தியு மவன்செயலுக்காற் றாஞகியோர்மங்கையைமெய்யினும், மற்றோர் மங்கையைச் சென்னியினுஞ் சுமககின்றனனென்றனன். பின்பு முழந்தாள்வரையுந் தாழ்ந்தகுப்பாயமும், தலையிறறலைச்சாத்தும், கையின் வேத்திரகேகாலுங்கொண்டு, கட்டியங்காரன்போந்தான். வந்த கட்டியங்காரன் மாரிகாலம் பெயர்ந்தமையால், கலாவமஞ்ஞைகள் விண்மீக கொண்மூவைக் காணுது மெலிந்துயங்கி மரன்செறிபழுவத்துழல்கின்றனவென்றனன். இராவணன் ஆம், இராமனைக் காணுமறசீதையு மம்மஞ்ஞைகளை மானப் புலாகின்ற ளென்றனன். திரையினுள் ஓ இலட்சுமணு! சீதையை ஆச்சிரமத்திற்காணேன் என்செய்கேனென்னுஞ் சொல் பிறத்தலுமெதிர்நின்ற கட்டியங்காரன் இலங்கேசா! புஞ்சிகஸ்தலையென்ற கடவுணமகள் இராமனைப்போலவும், கிருதாசியென்பவள் இலக்குமணனைப் போலவும் படிவங்கொண் டிவ்வாடரங்கின்கண வருகின்றனரெனப் பகர்ந்தனன். இராவணன் மகா பாரசுவா! இந்நாடகத்தினுடைய தொடக்கஞ் சாலநன்றாயிருக்கின்றது. நாம் கவர்ந்துகொணர்ந்த சீதையைப்பிரிந்த இராமனென்செய்கின்றான் பாரப்போமென நுவன்றனன். இராவணன் முன் கூத்து நிகழ்கின்றதென்று அனலைகூறக் கேட்ட ஜானகியார் அனலே பிரியை! கேளாய். இரகுநாயகர் தந்தைசொற தலைமேற்கொடுகொடுங்கானத்துக கேகும் வேலைப் பின்றொடர்ந்த தமியேனைத் தாம் வருங்காறுந் தமது தாய்க்குந் தந்தைக்குங்குற்றேவல்புரிந்துகொண் டிருத்தியென்று மறித்தனர் அப்பெருமைக்கேற்பவென்று இரட்டைப் பேதைமையினல் நான்சுளித்து, அவருறையுமுறையுளே அயோத்திமாநகரமெனப் பிரியாதடவிவந்தேன். இராமபிரானுக்குத் தகுதியாயுள்ள வென்னைவேட்பது புதகேளிர்க்கமைத்தவவியை இழிந்தவை காமுற்றுக் கௌவுங்குணுங்காது புன்கிஞ்ஞுமலி யவாவியதுபோலாகுமென வோராது பாபி யிராவணன் றீமையியற்றினன். அரகோதண்டகண்ட

க ரென்னைநாடாது சாதுசனகண்டகனுயானை வீட்டாது சா கேதஞ்சாாந்தருளாா. திவவியமங்கள விககிரகவிசிட்டராகிய அவ்விராமபிராானைச் சேவித்தறிணணமென்னுங் களியாலின் னுமுயிாதாங்கியிருககின்றேன் நாடகமவருடைய திருககதை யாயிருத்தலாலும், வேடவுருவாயாவ தவாதிருமேனியை நோ க்கலாமென்னும விருப்பாலும் பொருநராட்டுநோகக வேட்கி ன்றனென். அவ்வரஙகுவயிற்புகவு மஞ்சாகின்றேனென்றனா அனலை மைதிலியாரே! அஞ்சவேண்டா நமககுப் பகவான் விசுவாமித்திரமகாமுனிவ ரீந்த கங்கணமிரண்டுமென்பாலிரு ககின்றன. அவற்றை யாமிருவேமும்பூணடு செல்லுதுமென் றனள். ஜானகியாா அரககனென்றுணராதெனக்குளதாய வுவ கையினுற் சாரணனுக கற்றைஞான்று நான் கொடுதத பொற்ற கங்கணங்களிற்றைநாள் நன்குதவுகின்றனவென் றருளிச்செய் தனர். பின்னரவ்விருவருங கடகந் தரித்துக்கொண்ட ரங்கசா லைமேயினர். மிதிலைநாடியாா அனலாய்! பத்துத் தலைகட் செவியொன்று படம்விரிததிருககின்றதுபோலாங்குறைகின்ற இராவணனை யஞ்சுகின்றேனென, அனலை அன்னமே! நாம் பூண்ட கங்கண நம்மை யரக்கர்கட்புலனுககுக் காட்டமாட் டாதே. அதனுடைய செயலை யறிந்திருந்து மேனவெருவுகி ன்றனிர்? நீ ரோர் கங்கணத்தைத் தரித்திருத்தலால், நீரெ னக்குத் தோன்றலிராதலால் நுமதுகையைப் பற்றிக்கொண்டே யிருககின்றனெனென்றனள். பிராட்டியாா அனலாய்! கடக ங்களால் நிசிசராருடைய கட்பொறிக்குமட்டும நாந் தோன்ற வில்லோம். நடனம்புரிகிற கடவுண்மகளிர் நம்மைச் காண் பர்களே, யாதுபுரிவோமென, அனலை தேவமாதா நோக்குறி னேதமென்ன? அவர்க ளொருவருககும் புலப்படுத்தாாக ளென்றனள். பின்னா அனலையும், நமதன்னையாருஞ் சிறித ணித்துப் போந்து அரங்கிறேர்புறத்திருந்தனா. உடனே பு ஞ்சிகஸ்தலையும், கிருதாசியுந் தாசரதியாரெனவும், இளையபெ ருமாளெனவுந் திருவுருசகொண் டவைககளனிற் றேன்றலுற் றனா. வந்த அத்தாசரதி இலட்சுமணு! என்னைப்பிரிந்து

தனித்துச் சீதை சிறுவரையாயினும் நோனேனே. அவளைக் கண்ணுறாமையா லெனதுநெஞ்சு பீழையுறுகின்றதென, இராவணன்சாலமெலிக, புலாகவென்றனன். ஜானகியார் கணவரு விவரவுயிருமுடம்பும்போல வாழ்ந்திருந்தோம், பாவியரக்கன் பிரித்தான், என்செய்கோவென்றனர். இலட்சுமணன் அத்தரோ! திருவுளம் வருந்தன்மின். கனிமஞ்ஞைகளகவாநின்ற வவ்வ டுக்கவின்றுகட்டிற் பொழுதுபோக்க மிதிலைநாடியார் போயிருப்பினுமிருக்கலாம். ஆங்குச் சென்று பார்ப்போமென, இராவணன் சீதையை நான் கவர்ந்துவந்ததை இலட்சுமண னுணரான்போலுமென்று நகைத்தான் ஜானகியார் அச்சோ குழந்தாய் இலட்சுமணா! இலங்கையிலுள்ளவென்னை விலங்க விலேயோ துருவச்சேறலுறுகின்றாயென்றனர். இராமபத்திரர் இளையவனே! சீதையென்னை நீத்துத் தனித் தாங்கணைல லாஞ் செல்லாளென மிதிலையர்கோன் றிருப்புதல்வியார் எம்முடையார் கூறுவதுண்மையே அவளையின்றி மலர்தழைகளுலியணிசெய்யுங் கடிபொழிலுக்கு மேகமாட்டேனென்றனர். சுமித்திரைகான்முளைநாதரோ! தேவியார் தங்களுடைய சீபாதங்களை வழிபாடியற்றிப் பூசனைபுரியும்பொருட்டு நறுமலர்கொய்ய வப்புன்னைகப்பொதும்பருட் புகுந்திருக்கலாமென்றனன். இராகவன் குழந்தாய்! அப்பூங்காவை நேடி வருவாயென இளையவன்போயினன். இராவணன் சீதை புன்னைகவனத்தி லில்லை, நறுஞ்செயலைவனத் துறைகின்றாளென்றனன். சீதையார் அனலையைநோக்கிப் பெண்ணே! நாயகனோடுபிரியாதுடனுறையுங்காலை யப்புன்னைகப்பொதும்பருக்கோர்பொழுது சென்றிருந்தேன். குழந்தை அதனையுளங்கொண்டு சுவாமியினிடத்தில் விண்ணப்பஞ்செய்தவ்வுய்யானத்தின்கணேகுகின்றாளென்றனள். இராமபத்திரன் சானகீ! எங்குற்றாய்? வாராய்வாராய் நீ வளர்த்த பசுங்கிள்ளை நின்னைக்காணாமை யாற்றுயர்ந்து, தலையைவணக்கிக்கொண்டிங்குமிங்கும் பார்த்துச் சீதை! சீதை! மைதிலீ! மைதிலீ! என்றோவாது கூவுகின்றதென்றனன். மிதிலைநாடியார்கையை நெரித்துக்கொண்டு, அனை

லை! சுவாமி யுரைக்கின்றபடியே யிருக்கலாம். யான் வளர்த்த சுபந்தியென்னுங் கிள்ளை யென்னைக் காணாது தரியாது; உயிரவிடுமெனவுயங்கினர். இராமசந்திரன் அரிதரிது நஞ்சீதை நல்லபல்லவங்களைக் கொய்து நாடோறுமக்கரிமாச் சிறுகுருளையினுடைய கையிற்றரும் பயிற்சியினாற் காளமேகனென்னு மகுஞ்சரகன்று சீதையை நாடிப் பன்னசாலையைச் சுற்றிச் சுற்றிவருகின்றதென, இராவணன் சீதை நமது கருத்துக்கிணங்கியொழுகுவளேல் அவளுக்கு விளையாட்டயர நம்வயிற் பிணருடற்றுடியடி நால்வாயிளங்கன்றுக ளுண்டோவென்று நகைத்தனன். ஜானகியாரவ்யானைக்கன்றினை நோக்கிக் காளமேகா! நானிங்கேயென்று மற்றவை பகருமுன் அனலை மைதிலியாரே! யாம நாடகத்தையன்றோ நோக்குகின்றோம். காளமேகனென்ற கடகரிக்கன்றுபோல வேடமன்றோ வந்துளது. அதை விளிக்கின்றீரோவென்னென்றனள். இரகுநாதன் ஓ அப்பெடைமயில் ஆச்சிரமத்தினுட் சேறலையும், புறம்போந்து சிறுவரை நின்று பெயர்த்து மகத்திற் புகலையும், வெள்ளிடைவந்து தோட்டமொன்று கோலியுலாவுதலையுங் கருதின், எனதாருயிரை நாடுகின்றதுபோலக் காணுகின்றதென்றனன். மைதிலியார் அச்சோ அச்சோ! அனலை! இரகுநாதருக்கு யானமுதூட்டுவதற்கு முந்திப் பாபி யென்னைக் கரவுசெய்தான் சுவாமியற்றைப்போ துண்டாரோ வில்லையோவெனப் பேரின்னலுற்றுச் சோர்ந்தனர். அனலை கரங்களாற றாங்கி யுத்தரியத்தால்விசிறிச் சோகமாற்றினள் ஜனகாகுலவமுதமெழுந்து, அனலை! ஏகுமுயிரை யிரகுநாயகர் வருவர் வருவரெனவெத்தனை நாள் தகைந்துகொண் டிருப்பேனென்றனர். தாசரதி எனதாருயிராகிய பூமிஜா! புனல்குடைந்து பீடத்திலிருந்து கூந்தலை விரித்துப புலர்த்துங்காலை யவ்வோதியை மேகமென்றெண்ணி வனத்திலுள்ள தோகைகள் தோகையைவிரித்தாடாநிற்குமென, இராவணன் ஆமாம். சீதையினுடைய அளகத்தினழகைக் கண்டு, அம்மஞ்ஞைகள்போலவே யெனது நெஞ்சமுங் கூத்தாடுகின்றதென்றனன். இராகவன் ஐயோ!

எனதுயிருக்குயிராகிய பெண்கனியை யெப்போது காண்பேனென்று கண்மூடிச் சோர்ந்தனன். இராவணனதனைக் கண்டு களித்து இராமனிப்போது சோர்ந்தபடியே யுயிர்மாய்ந்தால், இராகவன் அஞ்சினான்; இனி நமக்கு நாயகன் இராவணனென்றுகொள்ளு மைதிலியினுடைய வேயுறழ்தோளிற் றுயிலலாமென்றனன். மிதிலையார் கோனன்னம், அனலை! என்னை யெண்ணி யிறைவரயர்ந்திருக்கின்றனர்; யானென்செய்கேனெனக் கலுழ்ந்தனள். அனலை கலுழாதியென்று தேற்றினள். புன்னாகச்சோலையினு ளேகிய இளையபெருமாள்வந்து அந்தரோ! அந்தரோ! என்னைப்பாரும், ஒருமொழி கிளத்துமினென்று சைத்தியோபசாரஞ்செய்து சோர்வையகற்றலுந் தசக்கிரீவன் இலட்சுமணனனைமி யுபசாரம்புரிந்திராமனைத் தேற்றினனென்று சாலவருந்தினன். சீதாபிராட்டியார் பகவத்கடாட்சத்தால்நாயக ருயிருய்ந்தனரென்று களித்தனர். சுவாமி இலட்சுமணா! புன்னாகக் காவில் பெண்ணாயகத்தைத் தேடினாயோவென வினவ, இளையவன் ஐயோ! தேவியாரில்லென்றெங்ஙனங்கூறுவேனென்று வருந்தி, அண்ணலாரோ! புன்னாகக் கடிபொழிலினு மலர்களலர்ந்த கான்யாற்றிலுங் கட்டுமாமரத் துடவையினு மணற் குன்றிலுந் தேடினேனெனத் தாசரதி இளையவனே! ஆங்கெல்லாம் நீ சீதையைக்காணவில்லை போலாமென் றுள்ளமறுகி நெட்டுயிர்ப்பு வீங்கிப் பேரின்னல் பெருகித் தீப்போலத் தெறுகின்றதே. நெஞ்சோ வலி குறைந் தொசிகின்றதே யென்செய்கேனென்றனன். நாலைந்துகையன் செய்யக்கடவது வேறென்னை? *நற்குண நற்செய்கையுடைய நங்கையைப் பிரிந்தவன் செய்தற்குரியதையுந் தசகிரீவ னுவப்பதையுஞ் செய்தி செய்தி ஓ! இராமா! அவை யாவையோவெனின் நீ யின்னே யுயிர்நீப்பதே தகுதியென்றனன். ஜானகியார் அனலையை நோக்கி மாதே! பலவிடங்களிற் றேடியுங் காணேனென் றிளையவன் விளம்பக் கேள்வியுற்ற சுவாமி யென்னுற்றனரோவென்று வருந்துகின்றேனென, அனலை துடியிடையீர் நுமது நாதருக் கேதமுமுண

டோ? அவளைப்பற்றி நீர்வேறொன்று நினையாதிர் மேனி கழும் அவருடைய செய்கையனைத்து மிந்நாடகத்தினூற் றெரிதுமெ னத் தேற்றினள். சுமித்திரைகான்முளை தனதத்தனை நோக்கி அண்ணலே! ஊக்கம் விடற்க. எனையிடங்களிலும் பிராட்டியாரைத்துருவுவோ மென்றனன். இராமபத்திரன் தனக்குமுன் னே நின்ற வோர் வகுளத்தருவை நோக்கி வீசுகின்றதென்றலா லலர்ந்த வுடுப்போலுமலாகளையுதிர்த்து, அத்தென்றற்குக் கடிம ணமளித்துப் பொலிகின்ற மகிழமரமே ! சீதைக்கு மெனக்கு முள்ள நேயத்துக்குச் சான்று நீயல்லையோ ? அன்றெவ ணேகினள் ? அவளை நீநோக்கினையோ ? அவள் நின்னோடே தேனுங்கூறினளா? சொல்லுதியென்றனன். இராவணன் சினந்து புலவுநாறும் விடக்கினூங்கு நறுமணம வீசகில்லாமே யாவற்றினுங் கடைப்பட்ட மகிழமரமே ! சீதையினுடைய செயலைச் சொல்வாயே விருதுணியாய் நின்னைத்துமித்து விடுவே னென்றுடைவாளை யுருவினன். மகாபார்சுவன் ஓ ! ஓ ! சீதையை யிழந்து இராமனும்,அவணமேலாசையுற்றுஇராவண னுமபித்துச் சீற்றங்கொணடன னென்றெண்ணுபு, இலங்கேச னே ! இம்மரமுற்றறியுமோரறிவுயிரன்றோ ? அதற்குற்றுணர் வல்லாவேனைப் புலன்களுணடோ? அதுபேசுமோ? அன்றியுந் தாசரதி சானகியைப பிரிந்தமையால் துயர்ந்து செய்ததை யெலலாஙகாட்டுகின்ற நாடகமன்றோ? ஈங்கணிகழ்கின்றதென் றனன். இராவணன் மகாபாாசுவா! ஆமாம். சீதையைககரு திசகருதி நெஞ்சுதடுமாற்ற முறறேனுகலினூடகமென்றோ ராது விடபியின மேறசீற்றங்கொண்டே னென்றனன். இராம சந்திரன் ஓ ! ஓ ! என்னிரப்புரை கேட்டு மிம்மரமொன்றும் புகலாமே வாளாவிருககின்றது. நன்று நன்றென் றோவிலங் கலை நோக்கி வெற்பே! சீதையை நீ கணடனையோ? கழறுதி கழறுவிடின் ஒரே வெங்கணையினூல் நின்னைத்துகளாக்குவே னென்றனன். தசகிரீவன் குலிசப்படையை மூனுமெறுது கையாற் புடைககும் புடையை நன்குணாந்தவப்பருப்பதம் இராமனுககுப்பகருமே யென்றனன் இராகவன் அந்தோ!

திகிரிநடங்காமலிருக்கின்றது. அவ்வாயினருவியைக் கேட்போமென வருவியே! சீதையினுடைய திருமுகமன்ன சரோருகத்தையும், திருநயன மன்னகுவளையையும், நகிலன்ன சக்கரவாகத்தையும், இடையை நிகர்த்த வல்லியையுங் கொண்டு வெற்பின் மடிமேலிருக்கின்றனையே, எப்போதுமெனது மடிமேலிருந்தபெண்ணிற்றிலகம் யாண்டையுற்றாள் உரையா யென்றுரைத்திமையாது நோக்கி நின்று ஆ! ஆ! இவ்வருவியுயிரில் பொருளானதாலொன்றும் மொழியவில்லை யென்றனன். பிராட்டியார் அச்சோ! கொடியதீவினை யெல்லாந் திரண்டோருருப்பெற்றாற்போல வினிதிருக்கின்ற அவ்விராவணனால் நான் கரவுசெய்யப்பட்டே னென்றெனது நாயகருக்குச் சொல்லுநரிலராலவரெவ்வண மறிவரென்றழுதரற்றினர். அனலைநோக்கிச் சானகியாரோ! நாடகத்தின் முடிவைக்காண்குறவோமெனத்தேற்றினள். இலட்சுமணன் கொழுந்தியாருடைய பிரிவாலண்ணனாருள்ள மறுக்கமுற்றிருக்கின்றன ரென்றனுங்கிக் கைகூப்பி அத்தரோ! திருவுளங்கலங்கன்மின் தேவியார் நல்ல பசும்புற்களைத்திற்றி வளர்த்தமான்பேடுகளெல்லாம் அவாசியை நோக்கி நம்மையும் கண்ணுறீஇ விழியிணை மழைவாரகின்றன. அதனையொருகாலாராயின் தெற்றுதவயிற்றேடுமி னென்று நமக்குக் கிளப்பதுபோலக் காணகின்றதென்றனன், இராவணன் இப்பிணைகள் கழறுமா? கொடியளவையிறகொன்றுதின்னுகின்றே னென்று முனிந்தான். மகாபாரசுவன் வேந்தாசீயமே! இதுநாடகமென முந்தையே மொழிந்தேனேயெனத் தயக்கிரீவன் ஆமாம், பொச்சாந்தேனென்றிருந்தனன் எம்பெருமாட்டியார் கண்ணினின்றுலியுகுத்துநவ்விகளே! நீயிர்தாமெனக்கு முற்படுபிள்ளைகள், எனது பெற்றியை நாயகருக்கு நன்குகழறுமினென்றனர் இராமன் இளையவனே! ஆனால் கூற்றுவன்றிசையை நேடுவோமென்றுரைத்துநடந்து குழந்தாய்! நான் கொய்து வந்து சீதையினுடைய வளககககாளிற் சூட்டிய சாதிமலரலங்கல் தேனோடும் வண்டோடும் கிடக்கின்றது பாராயென, இளையபெருமாள்

சுவாமீ! பிராட்டியாரைப்படிற்றொழுககப் பேதையொருவன் கவர்ந்து செல்லுகையிற பூங்குழலினின்றிந்தா வழுவிக கிடககின்றதாய்த் தோன்றுகின்ற தென்றனன். மைதிலியாா இளையவன் வல்லன். எனதுமைந்தன் வல்லன். என்னை யொருவன் கொண்டு தென்றிசை மேயின னென்றுணர்ந் தனனே. எனதப்பன் வல்லனென்று சிறி துவந்தனர் இராக வன் சிவேதைநோககிச் சென்று இளையானே! ஆஙகுயிா நீத்து க்கிடக்கின்றவன் யாவன் ? கையிற்கசைகொண்டிருத்தலாற் றோவலவனென வுன்னுகின்றேன், யாவனிரதமாங்குத் தக ர்ந்து கிடககின்றதே? அவ்விரதத்திற் பூட்டிய வேசரிகளும் கழுதுகளும் இறந்து கிடக்கின்றன; முடிகளும, தோள்வலயங் களும், அரதனவாரங்களுஞ் சிதைந்து கிடக்கின்றன, விற்கள் சிறுதுணிகளாகிக் கிடக்கின்றன. தூணம்போலுருண்டு திரண்டு நீண்டகரங்கள் துணிந்து கிடக்கின்றனவென இலட்சுமணன் நோக்குற் றிறும்பூதிறும்பூதிது. இன்னஞ் சிலசேய்ததுச் சென்று பார்ப்போமென்று நடந்து பிராட்டியார் பொருட் டிரண்டு வீராகளுக்கு நெடுஞ்சமர நேர்ந்திருக்கலாமென் றெ ண்ணுகின்றே னென்றனன். இராவணன் கோபங்கொண்டு சீதையினு னமக்கும், எவருக்கும ஞாட்பு நேர்ந்தது? எதிாத் துப்பொருதஜடாயு நம்மால் நன்குயொறுக்கப்பட்டானேயெ ன்றனன். ஜானகியாா பெரியவரே ! பறவைக்கரசரே! வல்லி யத்தின் கையிற்கிடைத்த பிணையையொப்ப வருந்திய தமியே னை நோக்கியிரங்கி யோம்புவான் போந்தநீா அவ்வறப்பயனை முற்றும் பெற்றீரில்லையே யென்று பொருமினர். அனலை மை திலியாரோ ! இன்னலெய்தாதி ரென் றுத்தரியத்தாற் கணணீா துடைத்து இராவணன் பெருந்திணணியன்; உலகமும்மை யினு மவனேடெதிாத்து முரண்புரிவாா யாவருமிலா. பெரு மூப்பினராகிய ஜடாயு அத்தியாரே டெதிர்த்துப்பொருது மொத்துண்டார், அதற் கியாதுஞுற்றற்பாற்றென்றனள். இரா மபத்திரன் இலட்சுமணு! வில்லைத்தருதி தருதி யெனக்கதழ்ந்து கழறலுஞ சுமித்திரைகான்முளை அகாரணமாய் நம்பேர

ருளாளப்பெருமானா சிலையைக் கேட்டல் யாதென்றுன்னிக் கிட்டினன். மகாபாரசுவன் ஓ புருவங்கள் நெரிந்து கண்சேந்து நிற்கு மிராமனைநுமுனிவை நோக்குங்கா லீரேழுலகத்தையுமின்னே யழிப்பான் போலும். அம்மட்டுமோ? பிரளயகாலருத்திரமூர்த்தி யிவ்விராமனுடைய வொருகூற்றிலொருசிறுகூறென்று முன்னுநின்றே னென்றனன். இராவணன் அழுக்காறும், அச்சமுமெய்தி மகாபார்சுவா! அழலைத் தழந்து வாளின்முனை தேயச்செய்வதின் மாபெருங் கீர்த்தியுமாயின் தன்னைக்காக்கும் வலியில்லானாகிய இவ்விராகவனோடு செருப்பொருது வெற்றிபெறின் கீர்த்திபெறுவ தரிதாமோ? இத்தயரதபுத்திரனை நோக்க வெனக்கு விருப்புக்கிடையாதாகலாற் புறம்போகுவலென் றெழுந்தான். மகாபார்சுவன் இலங்கேசரோ! உண்மை யிராமனே னீருரைப்பது தக்கதே. புஞ்சிகஸ்தலையல்லளோ அவனுடை யுருப்பெற்றாடுகின்றனள் வீற்றிருக்கலாமெனா, இராவணன் ஆமாமென்றிருந்தான். இரகுநாதன் இளையவனே! ஆங்குவெள்விலங்கல் பெருமருத்தினான் மறியுண்டுகிடந்தாலொப்பக் கிடக்கின்றவன் யாவன்? அடுத்தடுத்துப் பெருமூச்சுவிடுகின்றான். கண்ணை மூடிமூடி விழிக்கின்றான், புண்ணீருவட்டெழும் யாக்கையனாயிருக்கின்றனன். முண்டகநாளத்தையயிலு மதவெற்புப்போலவோரரக்கன் சீதையை யுண்டுகிடக்கின்றனன்போலும். பறவையினுருவனா யிருக்கின்றனன். இவனைக்கோறல்புரிகின்றேனென்றனன். தசகிரீவன் எனது பிரியையாகிய சீதையைத் தின்றநிசாசரன்யாவன்? எனது கூவாளுககுச்சிற்றுண வாகக்கருதிச் சானகியை யயின்றானோவென்றென்று முறுச்சினங் கொண்டான். மகாபார்சுவன் இலங்காதிபரோ! இராமன் ஜடாயுவைக் கண்ணுற்றீஇ யரக்கனெனவும் சீதையையுண்டவனெனவுங்குழறுகின்றான். அது செவியிற் சார்தலால் நீர் முனியலாமோ? சீதையைக் காகோளிகாவிற்கடுஞ் சிறைப்படுத்தியதைப் போச்சாந்திரோவென இராவணன் ஓ! ஓ! இது நாடகந்தானே யென்றிருந்தனன். சுமித்திராபுத்திர னாய்த்துணர்ந்துசுவாமி

விளையாதீர். நமது சிற்றப்பாவெனசகருதாநின்றனெனென்றனன். எழினியினுள் நெடிதாயுளுள்ள இராமா ! வாராய் குழந்தாய் ! வாராய் நான் ஜடாயு என்னைத்தாககாதி ஓ ரரக்கன் கற்பினருங்கலத்தைத் தூக்கிக்கொடுபோயினன் நான் கண்டு தகைந்து அவனலடியுண்டு நின்னைக் கண்ணுறறுச்சொல்லுவா னெகு முயிரைத்தகைந்து கிடக்கின்றேனென்றனன். பத்துத்தலையன் செவியுற்று இராமன் வருஙகாறு மிம்முதுக கழு குயிாதாஙகியிருந்து வாாத்தையும விளம்புகின்றதே. நானடிததபோழ்தே யுயிர்வீடியதென்று வந்து விட்டேன் நல்லது நல்லதென்று சிரக்கம்பனஞ்செய்தனன். ஞானகியாா ராவணனலடிபட்டயாந்த நமது முதினர் இராகசத னொருவன் சீதையைக் கவாந்துசென்றன னென்பதை நமது நாயகருக்குக் கூறினரோ. இனி நம்மைததேடாதுதாழாா ஆயினும் நா மவரைச்சேவிக்க வெத்துணைக்காலஞ் செல்லுமோ வெனச் சிறிதின்புந்துன்புங்கொளளும், அனலே சோகதி மைதிலியாரே! எல்லாவற்றையு மிந்நாடகததி னேக்குது மென்றனள் இராகவன் ஜடாயுவை யெடுத்துத் தனதுமாாபோடணைத்து முதியோரே ! அரிதரிது. சீதையையேந்திச்சென்ற அரக்கனெவன் ? அவனூரெது ? பேரெது? கழறவேண்டுமென்றனன். இராவணன் முடைப்புலானறம் பிணத்தைப்போர்ததிட்டுக் குத்திபயிலு மிம்முதியவெருவை இராமனுக்குச் சொல்லவேண்டியவெல்லாஞ் சொல்லுக. அதற்கு இராவணனச் சுறுவேனேவென்றனன். நம்மன்னேயார் அந்தோ ! தறுகணனற் றுக்குண்டயர்ந்து சோர்ந்த பெரியவா நமது பெற்றிமையைமுற்று மொழிகின்றாரோ பாதிமொழிகையில் முடிகின்றாரோவென்று தயருற்றார். திரையினுள் குழந்தாய்! இராமபத்திரா! கண்சுழலுகின்றது. நெஞ்சுமறுகுகின்றது. வாய் குழறுகின்றது. சோகமேலிடுகின்றது. இனிகாணுய்யேனுய்யேனென்றனர். இராவணன் சகுந்தமே! நீயுயிருய்யவேண்டுமென யாவர் வேண்டுகின்றார். இப்போதே சாகுதிசாகுதியென்றனன், இராகவன் பெரியவுடையாரை நோக்கிச் சிற்றபபோ

ஷுக்கங்கொளீஇ மேலே சொன்மினெனப் பறவைவேந்து இராமசந்திரா! நானென்சொல்கேன் ஓரரக்கனே தீங்கிழைத்தா னென்றனன், இருபதுகையன் அரக்கனோ நான்? அரக்காபதியல்லேனோ? நல்லது நல்லதென்றனன், ஜானகியாநாதசே! குழந்தாய்! இலட்சுமணா! நானிவணிருக்கின்றேனே நுங்கடகுத தெரியவில்லையா வென்றுரைதது வெள்கி அனலே! இரகுநாதனைப்பிரிந்தமையாலுள்ளந் தெருமாதென்வயப்படாமையால நாடகமென்றோராது குழறுகின்றேனென்றனா. இராமபத்திரன் அடுக்கனபுக்கன்னதனைக் கவருஞ்சுவானைப்போலபனசாலை புகுதெனை தன்னதனைக கைக்கொணடு போயவனை யமன்கைகயிற புகுத்தாமே விடுவேனோவென்றனன் இளையவன் எனதன்னை சானகியானைக கவாந்ததுமன்றிச சிறியதாதையையும் கொலைபுரிநத பெருஞ்சழக்கனை யெனதுவாளால் வீசிச சிறு துணிதுணியாயக தடிகின்றேனென்றனன். இராவணனவ்வன்மொழிசெவிபுகலும் தோளாற்றலில்லான் வாய்வலியைககொணடே யுயிாவாழ்வன் இளையவன் வாள்பறறவேணடியமுறை யின்னதெனததெருளாதவனேனும் மாற்றம் விளம்பமட்டும்வல்லவனென, திரையினுள் ஜடாயு இராமசந்திரனை நோககிக குழந்தாய! விந்தமென்னு முகூாத்ததிற் கைவிடடவொணபொருள்தவறுமே கைவருமென்பா சீதையை நீயடைவது திண்ணமென்றனன் இராவணன்! விந்தமுகூர்த்தமென் வுணர்ந்தே நானு சீதையையெடுத்து வந்தோம் காலத்தைக்கடப்பாா யாருமிலா எல்லாருககுங் காலம் பெரிதென்பா. அக்காலந் தசககிரீவனுககும்பெரிதாமோவென்றனன். எழினியினுள் சடாயு இராமபததிரா! கேணமோ விசசிரவசுவென்னும முனி புதல்வன் இராவணனென்றனன் இராவணன் திரிலோகத்தலைவனுகிய நமது பெயனைப் புல்லியமுதுப்புணடாமொன்று வாய்கூசாதுரைககின்றதே. சீதையையெடுததுவந்த அன்று இறகையுங் காலையும் வாளால துணித்தேன். இறந்ததுபோல நிலமிசைவிழுந்தது. வீடியதென்றன்றோ வந்துவிட்டேன். அவ்வெல்லையே யொருவெட்

டுக் கழுத்திற்போட்டிருப்பேனே வித்தனையின்னலில்லை யென்றனன். ஜனகா குலப்பொன்னன்றோ தெய்வாதீனம் கரவுபுரிந்தவன் இராவணனென்று மாமனாசொன்னார். அம் மொழிகொண்டே யிரகுநாயகரு மிளையவனுமெல்லாந்தெரிந் துகொள்வமொன்று களித்தனா. இராமசந்திரன் ஜடாயுவை நோக்கிப் பெரியவரே! மேலே கூறுமின் கூறுமினென்ற னன். இளையபெருமாள் விழியருவிவாரவுயங்கியரிதரிது நம து சிறறபபர் நமமை நீதது வினைனேறினரொன்றுயங்கலும, இராகவன் ஊறறிருந்தொழுகியதெனக கணணீர் மல்கத்தந் தையீர்! தந்தையின்றுணையீர்! எருவைசுகரசரே! வலி யின்வலியே! தாதையையிழந்த வரந்தையை நும்மைககண் டன்றோவாறினம். இனியென்செயற்பாலோமெனப் பொரு மிப்பொருமிப் புலம்பினன். மகாபாரசுவன் வேந்தாபிரா னே! இராம னித்தனையலககணு நும்மாலடைந்தனனெ னத தசககிரீவன் மகாபாரசுவா! இராமனால் நானுற்றசெ ல்லலை நீயுணாகிலேயோ? தாடகையையும், சுவாகுவையும், கராளனையும், மாரீசனையும், கரனையும், தூடணனையும், திரி சிராவையும,மகாரதிகாகளையு மிழந்தேன் எனது தங்கை யோ மூசகையுங காதையுமிழந்தாளே யெனலும், மகாபார்சு வன் கொம்மைமுலையையு மியம்பககூடாதோவென்றுள்ளத் தினுணகைபுரிந்தான். தயககிரீவன் மகாபாரசுவா!எனது செல் வத்தங்கையை யெழிலழித்த அவ்விலட்சுமணனையின்னே தடி கின்றேன், சூர்ப்பநகை யவனுடலிழி செங்குருதியை வெப்பா றுமுன்பருககவெனக்குறறுடைவாளையுருவினன். மகாபாரசு வன் இலஙகாதிபரோ! இஃது நாடகமன்றோ? நீ துணிசெயிற் திருதாசியல்லவோ வுயிரிழப்பாளென்றனன் இளையபெருமாள் ஆராவமுதன்றோ! கலுழுற்க ஒன்னலனுடைய வுறைவிடத் தைத் துருவுவோமென இராமசந்திரன் இளையவனே! சீதை யைககவர்ந்த விழுதைநிலனிலிருபபினும், அளக்கரிலிருப்பி னும், பாதலத்திலிருப்பினும், வானிலிருபபினும், எனையவு லகஙகளிலிருப்பினு நாம் சூழத்தக்க தென்னையுளது? மாசுண

த்லிதக் கொல்லுங் கலுழனைப்போல நமது கணை அன்றோ ளைவீட்டாதோவென்றனன். கைலையை யாடல்கொண்டோ ன் மகாபார்சுவா ! வலாரி புராரி முதலிய திசைகாப்பா ளர்கள் வாய்வெரீஇவெரீஇப்பாறப்பொருது வெற்றிகொண் ட இலங்கேசனுடைய வொளியையும் புகழையு முணராமே யிவ்விராமன் பயன்படா வீரம் பேசுகின்றானென்றனன். இ ளையபெருமாள் தாசரதியைவணங்கிச் சுவாமீ தேவியார பக் கல் பெரும்பிழை யிழைத்த வளையெயிற்றுப் பேழ்வாயரக் கனைமட்டுங் கோறல்செய்வ தழகன்று. அவனது மனைவி மகள் நட்பினருள்ளிட்டாரைத் தேர்கரி பரிகாலாள்களோடு கோறல்வேணடும். ஒருவனைக் கொன்றமையினால் நிலவுலகம் நிசாசரப்பூண்டிலதாகமாட்டாதென்றனன். இராவணன் மகா பார்சுவா! இவ்வறியாப்பருவ விளம பைதலினுடைய மொ ழி யென்செவிவயிற் சார்ந்ததோவென அவன், பேரரசே! வலி யில்லா நொய்யோன் வாய்விட்டுலமபுவதன்றி மற்றென்செய் வனென்றனன். ஜானகியார குழந்தாய்! இலட்சுமணா! நன்றாய் மொழிந்தனை. எனககுத் தீஙகிழைததபாவகாரியினது குலத் தைப்பூண்டின்றியழிவுகாணவேண்டுமென்றனர். இராமபத்தி ரன் இலட்சுமணா! இனிமேற் செயற்பாலதென்னவெனச் சுமி த்திரை கான்முளை அடிகேள் ! தென்றிசையைநோக்கியேகித் தெவ்வரை யுயிர்வவ்வி எம்பெருமாட்டியாரை யடையவேண் டுமெனப் பகர்ந்தனன். சீதாநாயகன், என்னின்றுணையே! இலட்சுமணா ! நமது சிற்றப்பனுரைத தாங்கிச் சென்று கோ தாவிரிக் கரையிற் சிதையடுக்கி, அதன்மேல்வளர்த்தித் தீகக டனீர்க்கடன்கள் யாவும புரிந்து வருதியெனப் பணிததுப் போக்கி, ஐயோ சீதையினுடைய பிரிவென்னுங் காலச்செ க்தழ லெனதுநெஞ்சையெரிக்கின்றதே, எவன் புரிவேனென வழுங்கினன். அச்செவ்வியிற் றிரையினுள் அத்தோ! பிதிர கடனாற்றிவருமென்னைக்காணுறைகின்ற வெல்லாமன்னுயிர்க ளோடு மொருவன் கைகளாற் பிணித்திழுக்கின்றானெனலும், இராமபத்திரன், ஓ! ஓ! இளையவனது திருகுரல்போலக்காண்கி

ன்றதென வெண்ணுபு துண்ணெனு மனத்தினனாகி இலட்சும ணா! வந்தேன் வந்தேனென்று விரைந்தனன் மகா பார்சுவன் இலங்கேசரே! இராமலட்சுமணர்களை வதைசெய்யும்பொருட் டு உமதாணைசுமந் தடவியிலிருக்கின்ற கவந்தன் இலட்சும ணனைப் பற்றி யீர்க்கின்றனனென்றனன். இராவணன் யாப் புறவீர்க்கக்கடவன். சுவைபார்த்துத்துணைந் தயிலக்கடவனென் றனன். எழினியுள் இளையபெருமாள் எங்குரவரோ! ஒரு விழி யுள்ளமுகனை யகட்டிடைக்கொண்ட வொருவன் மந்தரவெற் புப்போன்ற கைகளா லெல்லாவுயிர்களையு முகந்து வாய்ப்பெ ய்கின்றான், விரைந்துவருதியென்னலும், கவந்த னிளையவனை நோக்கி அத்தனை யெற்றுக்கோவிளிக்கின்றனை? நீயாவன்? அரசிளங்குமரனாகத் தோன்றுகின்றாய் தெய்வாதீனம். பசிப்பி ணியுற்றிருக்கின்ற வென்பால் விதியுந்தவந்தாய். நொந்தாவதெ ன்? நானின்னையொன்றும் புரியகில்லேன். சாலவொழுக்க முடையானா யென்வயிற்றிடைப் புகுதியென்றனன். இராக வன் விரைந்துபோதந்து நமதிளையவீர னவ்வரக்கனுடைய விருகரங்களையுந் துணித்தான், இருபுறத்தினின்று மிரண்டு வெங்குருதிப் புனல்யாறு கழுமிப்பெருகுகின்றன. இலட் சுமணன் வெற்றித்திருமகளுடனுறைய நிற்கின்றனனென வுவகையோங்கினன், இராவணன் இராமலட்சுமணாகளை க் கொல்வான் நமதுபணியைத் தலைபொறுத்துக் காடகமிறந் த கவந்தனுயிர்மாய்ந்துவிட்டான். மகா பார்சுவா! இஃதெ ன்னை வியப்பென்றனன். மைதிலியார் குழந்தாய்! பகவத்க டாட்சத்தினால் கூற்றங் குதித்துய்ந்தனையே யென்று மகிழ்ந்த னர். இளையபெருமாள் நமதத்தரைக்குறித் தசரீரி பிறக்கின்ற து; அஃதியாதென விண்ணை யண்ணாந்துநோக்க, இராமசந்தி ரா! நீ இராவணனைக் கொன்று ஜானகியை யடைவதற்கு விர கொன்று பகர்கின்றேன் கேட்டி. நான்கமைச்சர்களோடுரிசிய முகவடுக்கன்மிசையுறைகின்ற வலிமுகவிறையாகிய சுக்கிரீவ னைத் துணைக்கோடல்புரிதி. அன்னவனது முன்னோன் வாலி யைக்கோறி. கிட்கிந்தாபுரியை யக்கதிரவன் மகனுக்குக் கொடு

த்தி.நீபின்னாப்பெருநலங்கள் பெறுதி முந்தை நாளேவானேரி லொருவன் தூலசிரசென்ற மாமுனிவருடைய வைவினு னிசி சரனுயினேன் அச்சாபததிரவு செய்தருளியவள்ளலே! என்று லாகிய சிற்றுதவியியறறி னெனென்று ஓர திப்பிய வுருசகொ ண்டு விமானமீதிவர்ந்து பொலிகின்றேனென்முனென்றனன். தசக்கிரீவன் கவந்தன் பிணககுடைச்சழக்கன். நம்புடையிகந் துவிட்டு இராமன் புடைசார்ந்தான்; அற்புதமற்புதமென, மகா பார்சுவன் கவந்தனென்செய்வன்? இராககதவுருககொணடிருந் தகாறு நம்மைச் சார்ந்திருந்தான். கடவுள்யாகனை பெறறவுடன் இராமனைச்சார்ந்தானெனப் பகாந்தனன். மைதிலியாா பகவத் கடாட்சத்தினல் அரக்கருருத்தவிர்ந்த அப்பெருநதகையாரா லும் சாலவுபகாரமடைந்தோமென்றனா. இராவணன் மகாபாா சுவா! இவ்விராமன் கரனைக்கொன்றவனேனும், பரசுராமனை வென்றவனேனும், தோலாவாற்றலுடையானும், பொழுது தோறு நான்குகடலினுஞ்சென்று நித்தியகன்மங்களைககழிபப வனும், நீலமால்வரை யுயிாபெறறெதிா ததாற்போன் றெதிாத்த துந்துபியைத்தாசகிக் குமைத்தவனும், சிவபூசனைவழாதியறறு பவனுமாகிய வாலியைககொலலவலலவனே? நிவந்ததோடக வந்தன் இராமலட்சுமணரை முருககலசெய்வான் வாலியோடு முரணும்படிவஞ்சமாய்ப் புகனறிருககின்முனென்றுன்னுகின றேனெனககழறினன். மகா பாாசுவன் வாலியினுடையமுடி வைககேள்வியுற்றபின் நாலைந்துகரணதெணணத்தின் முடிவெ ன்னுங்கொல் நோக்குவோமெனக்கருதுபு, எங்களிறையே! தாங்களுரைப்பதே திண்ணமென்றனன். இராகவன்நோககி விமானமீது பொலிகின்ற வுததமரே!உம்மால்நாஙகளுய்யுநெறி தெருண்டோமாகலின் உத்தமவுலகையடையுமினென்றனன். இலட்சுமணன்மீணடு மத்தேவனென்னைகூறுகின்முனென்று வானையண்ணாந்துநோககி, இராமபத்திரரே!பம்பாசரசுசார்ந்து ஆங்கு உமதுவரவு நோககாநின்ற சவரியைககணடருளி, அப் பால்ரிசியமூகஞ்செல்லுதிரெனப் பகர்ந்துபோகின்முனென்ற னன். இராவணின் மகாபாாசுவா! முனிவாபடிவத்தனுய்க் கொ

மேரனையுஞ் செவ்வியகோலையுங்கரத்தினேந்திய இராமனோடு சுக்கிரீவன் நட்புகொள்ளுவானோவென, மகாபாரசுவன் ஆம் அவன் கேண்மைபுரியானென்றனன். இராவணன் மகாபார்சுவா! ஆயிரமிராமராயினும் வாலியைகொல்ல வியலாதென மகாபாரசுவன், அவன்வாலில் நாஞ்சிமிழ்ப்புண்டால் இராமனவனைக் கோறல் புரியுமாற்ற லில்லானெனறெண்ணுவதோவென வுள்ளததுளுன்னி நகரு வேந்தே! எல்லாவற்றையு மிந் நாடகத்திற்கணணுறுவோமென்றனன். மைதிலியாா அனலையைககண்ணுற்று நங்காய்! சைரிபப்போத்துப்போல விருண்டு கறுத்தமேனியுடையானு யுட்கார்ந்துள்ள இக்கள்ளப்பாவியென்னையெடுத்து வருங்காலை யோர்பொருப்பின் கொடுமுடியில் வானரரைவரிருந்தனா. அவர்களிற் சுககிரீவனொருவனு யிருத்தல்வேணடுமென, அனலை, ஜானகியாரே! அவ்வானரவீரர்களைநோககி நீரொன்றும் வாய்விள்ள வில்லையோ வெனக்கடாயினள். மிதிலைநாடியாா அனலாய்! நாயினுமிழிந்த இராவணன் மனததினுங் கடிதாயோடிவந்தான். யானோ சித்தங்கலங்கியிருந்தனெனென்ருர். இளையபெருமாள் முன்னே பாரத்து, ஆஙகுததோன்றுகின்றது பம்பைப்பொய்கையெனக் கருதுகின்றேன் இன்னிளந்தென்றியால் சிந்தியமந்தாரமலாகள்விலங்குகளின் குளம்பிறுல் மிதியுணடொழுகவிட்டதேறலால் நனைந்து குளிர்ந்தும், தேமா, தெங்கு, கமுகு, பனசம், விரிதலை முதலியவைகளடாந்து தண்ணெனுங் கொழுநிழல பொருந்தியும், சுரபுன்னையினறுமணத்தையுந்திய சிறுபசுங் காலுற்றும், காண்டொறும்புதுககளிதருகின்ற இவ்வழியினூடுசெல்வோமென்றனன். இரகுநாதன் பம்பையைநோககிக கடகரிகள் தாமரைப்பூவை நாளத்தோடு பிடுங்கித் தமதுபிடிகளுக் கினிதுகொடுத்துத் தணபுனலைவாரி முகத்திலெறறுகின்றன. வண்டுகளெழுந்திசைபாடப் பங்கயத் தெகினம் புட்கள் சிறையையுளர்ந்து பெடையைப் பாடணைக்கின்றன. யானோ காதலியைப் பிரிவுற்றுத் தனியே யுழல்கின்றேனென் றுளமழுங்கிச் சோர்ந்துவிழுந்தனன். இராவணன் தெய்வா

தீனம், இராமனிப்போது சோரவெய்தியவண்ணமே மாய்வா
னேல் நாஞ்செய்த தவப்பயனதுவே யெனக்கழறினன். அரு
ட்படிவவன்னையார் அரிதரிது, நாயகர் நம்மை முன்னியடுதத
டுத் தயாவடைகின்றனா நானென்செய்கேனென்றலககணுற்
றனர். இளையபெருமாள் அண்ணா! அண்ணா! துயருறவேண்டா.
தேவியைக்கவர்ந்த கள்வனையின்னானெனதெருணடோம். அ
ன்னோனைவென்றிகொள்ளு முபாயமுந்தெரிந்தோம் கதழ்ந்து
நாங்கதிரவன்மைந்தனைக்காண்டல் வேண்டுமெனலும், இராக
வன் ஒரு பரிசு சோகந்தெளிந்து இளையவனே! ரிசியமுகவெற்
பின்ன மெனைத்துச்செய்த்தோவென வினாயினன். சுமித்தி
ராபுத்திரன் சுவாமீ! ஆங்குப் போதுகின்ற பிரமசாரியை வின
வுகின்றேனென்னலும், என்னையாளுடை ஐயா அணித்து
வந்தனர். இராவணன், இவ்விராமலட்சுமணர் சுக்கிரீவனை
நட்டுத் தன்னைக்கொல்லுவான் முயல்கின்றனனென்னு மது
வாலி செவியிற்படலு மவ்விருவரையுந் தான்கொல்லுவான் இ
ம்மாணிவேடங்கொண்டனாகுகின்றானென்று நினைக்கின்றே
னென்றான். மைதிலியார் அனலே! ஓர் நிருதன் மாணவகப்ப
டிவங்கொண்டு சுவாமிபககல் போதருகின்றான். சாலவலிய
னாய்த்தோற்றுகின்றான். மாயையால் நாயகனையென்செய்வ
னோவென்னா வச்சுறுகின்றேனென்றா. சுமித்திரா புத்தி
ரன், ஆரியராகிய பிரமசாரியரோ! கவியரசாகிய சுக்கிரீவன்வ
சிக்கின்ற ரிசியமுகக் கார்வரையை நீரறிவீரோவென, மாணவ
கவடிவர் இவர் ரிசியமுகப் பெருவரையை வினவுவதை யோர்ந்
தால் வாலியின தேவல்பூண்டு நமமைவீட்ட விவ்விருவரும்
போதருகின்றனர்போலும், அவர்பாற் சென்றுண்மை யறிதி
யென்று நம்மைவிடுத்த யூகபதியினதெண்ணமோ தின்னணம்
அங்ஙனமாயினுமீங் கிவ்விருவரையுங் காண்டலும் நமக்கென்
புருக அன்புதுவன்றுகின்றது. உளத்திலடங்காவுவப்பு நம்மை
யறியாமே யெய்துகின்றது. உடலமெல்லாம் புளகுபோர்க்
கின்றது; அடைவென்கொல்? முற்றுமறிவோமென்றெண்ணி,
ஐய! விசும்புபோழநிவந்தவக்குன்றந்தான் ரிசியமுகமென்று

கையாற் சுட்டிக்காட்டி, தேவரிருவிரையு மின்னரொனத்தெ ரிந்துகொள்ள வெறுதுள்ள மவாவுகின்றது. தமமைவினவ வெனது நாவோவெழவில்லையென்றனா. இராவணன் ஆ! ஆ! நாம நினைந்தபடி யிப்பிரமசாரி வாலியன்றென்றுன்னி மகா பாாசுவா! கரன்முதலியோரைக்கோறலியற்றிய பெருஞ்சழக் குடைத்தியரொருவனென்றும், சூர்ப்பநகையினுடைய வெழி லையழித்த தீரவில் பெருநவையாள ரொருவனென்று மிச்சிறு வனறியான்போலு மென்றனன். ஜனகர்குலப்பெருந்தவப் பயனுயினுர் அனலாய்! கேளாய், தெய்வமகளிரிருவ ரொனதுநா யகரைப்போலவும், இளையவனைப்போலவுந் திருசகோலம்பூண் டு நடிக்கின்றனரொனவோராது, இராவணன மகா பாாசுவனை நோககிக் கரன்முதலியோரைக காதுதல் புரிந்தவ ரொருவ னெனவும், சூர்ப்பநகையினது வடிவழகைககுறைத்தவனொரு வனெனவுங் குழறுகின்றனனெனக்கூறியருளினா. சுமித் திரை கான்முளைமானவனை நோககி உத்தமரோ! கேண்மின், சூரியன்குலததிற்றோன்றிய வறவா, வலியுடைய வசுரரை யாவியுண்ட மறவா ஆரணஞ்சொன்ன அருமைவேள்விகளெ ல்லாமியற்றியியற்றி மறந்தபுனிதா. கொடையென்னுந் தரு வின் கொழுங்கொழுந்தோடி மேலுலகெஙகும் படருங கீர்ததி யர், அரசாககரசர், நல்லறமூர்த்தியன்னா தடமதிலயோத்தி யாண்ட தசரதரொன்னுமபிதாநர், அன்னவா சிறுவரவா, இவ் வாண்டகை யாரக்கிளையவன் யான். அவருடைய தேவியார் மிதிலைநாடியாரை யெனலும் பிரமசாரி ஐயன்மீரிருவிர சீர்பா தததிற்போற்றியெனப் போற்றிசெய்து சுமித்திரை கான்மு ளையாரை நோக்கிப்பெருமாஞரோ! மேலொனறும் புகலவேண் டா. இராவணன் புரிந்த தீங்கையானறிவேனென்றனா. இல ட்சுமணன் புனிதரோ! செங்கதிரோன்புதல்வனு னுதவிபெ றுவான் யாங்களிவட்போந்தனெம் அவ்வேந்த லப்பொருப் பகத் திதுபோழ்திருப்பரோ! யாஙகள் செல்லினெங்களைப் பா ர்ப்பரோயென்று வினவலும், பிரமசாரியார் சூரியகுலதிலகரோ! கேணமின் நான் பாற்கரன்மைந்தனுடைய அமைச்சரிலொ

ருவன், எனது நாமம் அனுமான். வாலியென்பவன் தனது தம்பி மனைவி தனக்கு மருகியெனக் கருதாது சுக்கிரீவனது காதலியைக் காதலித்துத் தன்வயமாக்கிக்கொண்டிருக்கின்றனன். அவ்வாலியினுடைய திறலை நீவிர் கேள்வியுற்றிருப்பீர்கள். வீரமேயுருக்கொண்டாங்குப்பொலிகின்ற தாங்கள் அவ்விந்திரன் காதலனைக் கோறல்செய்தாதித்தன் மதலைக்கிலையு மரசையுமளிப்பிரோ லவ்வானர இறைவன் தனது படைக்கடலோடுவந்து இராவணனைக் வீட்டுறுங்கவ்வையி னுங்கட்குதவிபுரித றிண்ணமென்றனர். இராவணன் பாசுவா! இம்மாணியுருவனுடைய குழறலைக்கேட்டாயோ? இவனையின்னே கோறல்புரியாது விடேன். ரிசியமுகவரைபோய்ச்சுக்கிரீவனையுமுயிர்மாய்க்கின்றே னென்றனன் அஞ்சனைச் சிங்கம, தேவாகளே! வம்மின் ரிசியமுகஞ் சாரலாமென வணங்க, சக்கரவர்த்தித் திருக்குமாரரிருவரு நன்றென்றெழுந்து நடந்தருளினர். ஒப்புயர்வில்லாப்பேராற்றலுடைய இரகுநாதன் அனுமானே! இரசிதவெற்பெனநிவந்து குவிந்து கிடக்கின்ற என் பியாதென? வாதாத்துமஜா, வாலி கொன்ற துந்துபியினுடைய வென்பெனப் பணிவாய்மொழிந்தனர். இராகவ னவ்வெலும்பைக் கால்விரலாலுந்தியாங்கு நின்ற வேழுமராமரங்களை யோரிறுகணையெய்து தொளைத்தருளினர். அஞ்சனை மைந்தன் தாசரதியாரது முழுவலி நம மனோராலுன்னுந்தரத்த தன்றென்றிறும்பூதெய்தி அரகோதண்டகண்டகா விழிநீர்வார வுடலபுளகம்போர்ப்ப நோக்கித் தேவதேவ! துந்துபியினுடைய மெய்யை ஓர் விரலாலுந்தியதையும், சாலவிருட்சங்களைத் தொளைத்ததையுங் கவியிறைபார்த்துத் தேவரால் வாலியை வெல்லலாமென்றெண்ணுகின்றனனென் றுச்சிகூப்பியகையினராய நின்றனர் இராவணன் ஓ இராமன் காற்பெருவிரலால் துந்துபியினுடைய காயத்தைக் காயத்தையணவவெற்றினன். சால்மரங்களைத் தொளைத்தான். வாலியையுங் கொல்வனோவென்று சிறிதையமுற்றுப பெருவிறல்வாலியைக் கொல்கினறவனுமுளனோ! அவ்வாலி

நமக்கு நமன்போல்பவ னல்லனோவென்றனன் ஜானகியார்
தெய்வாதீனம் இந்த விடுக்கட்காலத்தில் சுவாமிக்கனுமானது
துணைகிடைத்ததே சுக்கிரீவனும் வருகின்றானென்றுள்ளே
கிளுகிளுத்தனர். சுக்கிரீவன் ஆமாத்திரியர்களோடுவந்தான்.
வந்து அத்திவ்விய மங்களத் திருவுருவனைக்கண்டு வாலியினு
ணை சுமந்து நம்மைக்கொல்வான் யாவர்வருகின்றாரென்றச்
சுறேறோமோ அன்னோர்களை யனுமானழைத்துவருகின்றாரா
கலா லவவிருவரும் நலமியல் புடையாரோ யெனக்கணுகின்
றேனென்றான் வாதாத்துமசா தாசரதியாரே! சுக்கிரீவன்
தங்களைச் சரணஞ்செய்கின்றானெனலும், இராமபத்திரன் பரி
தியின் கான்முளையைநோக்கி நண்பரோ! க்ஷேமமாவென்று
வினவியருளினன் சுக்கிரீவன் சிரமிசைக்கைகூப்பி எத்தே
வர்க்குந் தேவரே! நட்பாளனே! க்ஷேமமாவென்று தாங்கள்
திருவாய்மலர்ந்தருளிய பின்னர் க்ஷேம மென்னை யுறைவிட
மாய்க்கொள்ளாது தாழுமோவென்றனன். சீதா நாயகன்
வலிமுகவேந்தை நோக்கி, கேண்மையுடையாய்! விசிரவசுவி
னுடைய புதல்வனாகிய இராவணனையறிதிகொல்? அவனுறை
யுமிடந் தெரிதிகொலென, கவிகுலநாயகன் யானறியேனென்
றனன். மகா பார்சுவன் இலங்கேசரே! தாங்களுந் தாங்களு
றையும் பதியுஞ் சுக்கிரீவன் தனக்குத் தெரியாவெனக்கிள
த்துகின்றனனே இஃதென்னை வியப்பெனத் தசக்கிரீவன்
கைபுடைத்து நகைத்து மகாபார்சுவா! கேட்பாய் பஞ்சவடியி
லிருந்து சீதையைக்கவர்ந்துவரும்போதென்னோ டெதிர்த்த ஜ
டாயுவைத்தொலைத்து மீளுகையி லன்னாடோறு மாயிரத்தெ
ட்டு லிங்கரூபமா யாராதித்துவருகின்ற பரமசிவனைவேண்டி
நான் சீதையை எடுத்துக்கொடு செல்வதை யுயிருள்பொருள்
உயிரில் பொருள்களொன்று முணரக்கூடாதென வரம்பெற்
றேன், அச்சிவப்பிரசாதத்தால் சுக்கிரீவ னென்னையுணர்ந்திரு
ந்து முணர்ந்திலேனெனப்பகர்கின்றானென்றான். சானகியார்
அனலை! கேண்மோ மகாராஜாவானவர் பத்துத்தலையனுறையும்
புரி யிலங்கையென்றுசொல்லவில்லை நாம் செயலை மரககாணி

னுன்றவதை நாயகருக்கியாவா ளெப்பாரெனமொழிந்தருளினர். அனலை, ஜானகியாரே! நமது நாயகர் சுக்கிரீவனாத துணைக கோடல்செய்தமையின் அவருடைய படைவயவர்களின் யாரேனு மிக்கரப்புறை யுள்ளுகி நம்மை நோக்கிச் சென்று அவருக்குரைப்பர். வருத்தமுறுதிரென்றனள் சுக்கிரீவன சுவாமி! இரகுகுலமாமணியே! நிருதனொருவன் ஓர் அரசகுலப்பொலம் பாவையனையாளைக குடிலம்புரிந்து தூக்கிக்கொண் டெங்கட் புலனுக்குப் புலப்பட விட்புலனிற் செல்லுங்காலை யவ்வனிதாமணிபொன்மணியணிகலன்களை யோர் துகிலுட் பொதிந்தியாபடுற முடிந் தென்முன்போட்டனர். அது இதுவெனத்தந்தனன் இரகுநாதன் சீதையினுத்தரீயந்தானிது வென்று வாங்கினன். மைதிலியார், தெய்வாதீனம், நாட்ணியு மணியணியு மாடையும் இரகுபுங்கவரது திருக்கரமுற்றனவேயெனக களித்தனர். இராமபத்திரன் அககலன்களை நோக்கி நோக்கிப் பொருமினன். இராவணன் மகா பார்சுவா! இராமன் சீதையினிடத்து வைத்துள்ள காதன்மிகுதியினாலன்றோ இனனுமுயிர்மாயா திருக்கின்றானென்றான். இட்சுவாகுகுல சம்பூதன் அணிமுடிச்சையவிழ்த்து ஒவ்வோரணியையுமபார்த்து, அக்கலனைவனையுமுறுப் பொவ்வொன்றையு நினைந்தழுங்கி வாடினன் இராவணன் தெய்வாதீனம். இராமன் இககலன்களைக் கண்ணுறுவதனால் கைமமிகுந்த வ்யாவுற்றுயிர்நீப்பனேற சீதை யிணங்குவாள். அப்பெண்மணியோ டினிது வாழலாமென்றனன். சுக்கிரீவன் இரகுபுங்கவரே! கேட்டருளீர் ஜானகியாரை விரைவினடைவீர். வருந்தாதிரென இராகவன் நட்பாளனே! என்செய்கேன். இளையவனே! ஒன்றுந் தெரிதலிலாமல் மம்மருறுகின்றேன். என்னைத் தாங்குவாயென வலமந்து சோர்ந்து நிலனில் வீழ்ந்தனன். இராவணன் இனி யென்னை? இவ்விறுதித் தெருமரல் இராமனுயிருக்கிறுதி யியற்றுதுபோகாது ஐயமேயிலது. நமக்குப் பெருமகிழ்விதினினூங்கியாது? உயிர்ப்புளதா! அடங்கிவிட்டதா பார்ப்போமென்று குதுகுலித்தெழுந்தான். மகா பார்சுவன் இதுநாட

கமன்றேவென்று எழுந்தவனை மறுத்திருவினன். ஜனகனுல சுந்தரியார் தமதுபதியினுடைய சோர்வைக்கண்டலும் திருவு ளமறுகி யயர்வுற்று அனலை தேற்றத்தேறினா இளையவன் தே ற்றத்தேறிய இராமன் சுக்கிரீவா! எனது நட்பைவிரும்புகிறறி யேல் கைகொடுத்தியென்று தனது திருககரத்தை நீட்டலுஞ் சூரியன்கான்முளைதனதிருகையா லம்மலாக்கரத்தைத்தாங்கிக கண்ணிலொற்றிககொண்டனன். இவையினுள் நமசகுப் பே ரன்பினனுயும, உடன்பிறந்தானென்னு முறையுடையவனுயு மிருககிற இலஙகேசனுடைய சுறறததாரைக்கொன்றவன்யா வனே? நமக்கு விரோதியாகிய சுக்கிரீவனேடு நட்புக்கோடல் புரிகின்றவன்யாவனே? துந்துபியினுடைய மெய்யை விண்ணு றவுந்தினவன்யாவனே; சாலமரஙகளைநொய்திற்புழைத்தவன் யாவனே? அவனுடைய தலையில் இபபெரும்பாறைபோட்ட ழிவுசெய்கின்றேன். இராமனேடு நோகின்று சமம்பொருவ னேல் எனது மாபெருங்கோதிமாசுறுமென்று மொழிந்தனன் சுக்கிரீவன் ஐயோ! வாலி என்னேடு முரணுகின்றனனே, எ ன்செய்கேன். இராமா! சரணம். இராகவா! சரணமென்றன ன். அனுமான் நமது சுக்கிரீவனுக்குப பேரிடுக்கணேர்ந்தது வாலிவரக்கூடாத ரிஷியமுகப்பொருபபகததினின்றிறங்கி யிவ் வனத்தில்வந்ததே வெருவரததககது ஆயினும் இரகுபுங்கவர் பக்கலி லெழுந்தருளியிருத்தலி னச்சமிலதென்றனர் இட் சுவாகு குலசம்பூதன் இலட்சுமணு? வாலிவந்து வாலுளச்சிய வேறெனவுராறுகின்றனென, இளையவன் உளங்கன்றி அடேது ட்டா! வாலீ! வலிமுகத்தொடு பொருமுரணுற்றவது மன்னர் களாகிய எமக்கழகன்று. ஆயினும் வேலைசூழ் ஞாலத்திற் கிவ் வேலை வேந்துயாா? நீயுணாவாயா! எனக்கு மூத்தவரும், எமதத்தருக் கிளையவருமாகிய பரதா, அடவிகளில் யாரேனும் யாதேனுந் தீச்செயல்புரியினன் னேயொறுக்கவேண்டுமெ ன அப்பரதமகாராஜரால் அணைஞா வேண்டிக்கொளப்பட் டிருக்குநா. நீ இளையானில்லாகியவருமையோ டின்பநுகர் கின்ற பெருந்திய மகாபாவியாகையா லின்னைவீட்டுகின்றே

மென்றனன். இராவணன் இவ்வரசர்குலத் திளஞ்சிறுவனு டைய குழறல்கிடக்க, வாலி இராமனைககோறல்புரியாது விடான் ஐயமில்லை. நானிந்நாள்காறுஞ்செய்த சிவபூசை யினது முழுபபேற்றை யிற்றை ஞான்றுதானடைந்தேனென பெரிதுகழறினன். திரையினுள் வாலி இலட்சுமண னென் னைககுறித் தென்னை சொல்லினையெனவிடியேறென்வுரறி, காகமேறப்பனம்பழம்விழுந்ததென்னும் பொருளமைநத காக தாளியஞாயம்போல விராதனெதிர்த்தலும், இலட்சுமண ஞோ பாணம்விட்டதும், அவ்விராதனுடைய ஆயுணமுடிந்ததும் ஏக காலம இலட்சுமணன் தன்னுெய்யவலியிஞல் விராதனை யெ ருக்கியிருப்பனேல் இப்போழ்தென்முன்வருக. தன் வலியைக காண்பிக்க இன்றாயின் அவ்விராமன்வருக ஓ இராமா! சீதையினது பிரிவாற்றாமன் மறுக்கங்கொண்டிருக்கின்றனை. இப்பெருஞ்சிலையானினது மணடையைப் பிதா பிதிராகப் பிதி ரககின்றேனென்றனன் இராவணன் இந்திரனுடைய புதல் வஞகிய வாலி இராமனை நன்கெள்ளுகின்றனனெனககளித்த னன். சீதையாா அனலாய்! கவிக்குலவரசனுகிய வாலி யுரப்பு கின்றானே மேல்வினை யென்னுங்கொலென வின்னலுறறனா. இராகவன் வாலி யறைகூவாநின்றானே ஞாட்பியற்றத் தருந்த நிலனுக்குப்போகுதுமெனப புறம்போந்தான். எழினியினுள் அரிதரிது. திருவிழந்தேன் திருவிழந்தேன். அமங்கலமடைந் தேன் இரகு நாயகனது கடியவாளி யெனது கணவனுடை ய வயிரவரையகலத்திற் றைத்துருவியுயிரையுண்டதே. நான் கெட்டேன் கெட்டேனென்றழுகுரல் பிறத்தலுஞ் சுக்கிரீவன் ஓ! ஓ! சுவாமி காலனுமுட்கும் வாலியை யுயிர்வாங்கியருளி ன ராகலால் தாரையழுகின்றாள். இரகு புங்கவனை நாமெல் லாரும் நமககரிப்போமெனப் புறப்பட்டான். தசககிரீவன், இராமன் வாலியையுயிரகவர்ந்தானென்பது வாய்மையின் பாலதாகுமா? புனல் சிலையைப்பொறுக்கு நோன்மை சான்ற தா? என்னை பெருவியப்பெனத் திகைத்துயிாப்படங்கினன். திரையினுள் குத்திய துந்துபியின் மருப்பை யொசித்ததும்,

இராவணனது பத்துத்தலைகளின் முட்டலைப் பொறுத்ததுந்தா
ரையினுடைய குவிமுலையி லப்பிய செச்சையினு லொப்பனைவ
ளைந்ததுமாகிய வாலியின் றிண்மைசான்றவரை புரையுரத்தை
ப்பிளந்த இராமபாணம் நமக்குப் பெருநலத்தை யுதவுகென்று
மங்கலமொழிபிறந்தது. மகா பார்சுவ னதனைக்கேட்டு இலங்
காதிபரோ! வாலி மடிந்தமையால் சுக்கிரீவனுடைய மாராய
வொலியைக் கேட்டீரோவென, இராவணன் முனிந்து பூச
லில் விண்ணுலகரசன் றொடக்கமானவருடைய வெந்நழகை
நோக்கிய பெரியவயவனாகிய எனக்குமுன் எந்நாளும் வீவுநே
ராத வாலிக்கு நோந்தாற்போல வெறுமையேயுகண்டெழுந்து
பேயாட்டாடுகின்ற தெய்வப்பிணாக்கள் தலைமயிரை முற்றுங்
கொய்யாது விடுகின்றிலேனென்றனன். மகா பார்சுவன் கை
குவித்து மன்னரேறே! வெகுளற்க இந்நாடகம் நமது பெரி
யவர் சுக்கிராசாரியரல்லரோ? இயற்றியது. அதில் சிறிதே
னும் பொய்விரவாதெனத் தசக்கிரீவன் ஆனால் வாலியுயிர்நீத்
தது மெய்ம்மைதா யிருக்கலாமெனக்கொடு அரிதரிது. அடே
வாலீ! எனக்குக்கேண்மையாளனாயிருந்தனையே, கரனுள்ளிட்
டாரை முருக்கினவனை நீ கொல்வாயென வெண்ணியிருந்
தேனே, அவனால் நீ காதப்பட்டாயென்றேங்கினன் இளைய
பெருமாள் எம்மானுடை யருணம்பிகள் வாலியை விண்ணே
ற்றிமீண்டு போதருகின்றாரானலும் ஐயன்வந்து குழந்தாய்!
இலட்சுமணா! இராச்சிய பட்டாபிஷேகம் சுக்கிரீவனுக்கும்,
யுவராச்சிய பட்டாபிஷேகம் அங்கதனுக்குஞ் செய்விக்கும்
வண்ணங் கிட்கிந்தையி லினிதுறையும் முதினார்களுக்கு நான்
கட்டளை யிட்டுளேனென்றனன். திரையினுள் வாலியிறந்
தான் சுக்கிரீவன் கவிகட்கரசனாகிச் சானகியைநாடத் தி
சைகளுக்கு வானரப்படைகளை யேவினானென்னு மொழி
பிறந்தது. இராகவன் ஏ இலட்சுமணா! சீதையின்னவிடனி
லிருக்கின்றனளென்று வானரத்தானைகள் தேடிவருங்காறும்
ரிசியமுகச் சிலம்பின்மிசை யிருப்போமென வாங்குநின்று
போநதனன். ஜானகி பிராட்டியார் அங்கலை நின்வாய்மொ

ழியொன்றும் இன்றுகாறும் பொய்த்ததில்லையென்று மகிழ்ந்
தனர். இனையினுள் சாரதூலனென்பவன் சுகனே! ஜடா
யுத் தமையனாகிய சம்பாதி இலஙகையிற் பிணடிவனத்திற்
சீதையிருக்கின்றாளென அனுமா னதுகேட்டுப பெரு
நரலையைததாவி வருகின்றனன். பாராயெனச் சுகன் சாரத்
தூலா! இது போழ்தே நாம் இலஙகேசனுககுணர்த்துவோமெ
ன்றுவிரைந்தான். இராவணன் என்னே! சுகசாத்தூலரு
டைய மாற்றத் தொலியாகக்காண்கின்றது ஓ! ஓ! இராமன்
செயலையுணர்ந்து வருமினென்று நாம் விடுத்தோமே. அவ்
விருவரு மீண்டுவருகின்றனாபோலுமென்" றுன்னிச் சீதை
மேல் விருப்புக்கொண்டு மற்றொன்றும் புரியா தரசியற் கவ்
வையை யொரு சிறிதுமுள்ளாம லந்தப்புரத்திலேயே படுத்துக
கிடந்த நம்மைப் புறனிற்கொணரும்பொருட் டமைச் சராயோ
ராய்ந்து இந்நாடகம புதுவதுபுனைந்தனர்போலு மென்றனன்.
மகா பார்சுவன் இலங்கேசரே! உண்மைதானென்று புன்ன
கைகொணடனன். சீதாபிராட்டியார் திருவுள முகந்தருளி
அனலை! அனுமான் நம்மைத் துருவிவருகின்றானென்று கே
ட்டேமல்லேமோ? நாம் கடுகிசகாகோளிவனஞ் செல்குது
மென் றுஙகட்சென்றருளினா. இராவணன் சில நிருதர்களைக்
கூய்நீவிர்சென்றுவானரங்கள்போதருகின்ற நீணெறிகளில் பு
னலற வற்றச்செய்யுமின். உணவு எவ்வளவொருசிறிதேனுங்
கிடையாமே அழிபசியினுலக்குமாறு தேனிறால்களையும்,
காய்கனிதரு தருக்களையும், பூங்கொடிகளையும், கிழங்குவகை
களைத்தருகின்ற கொடிகளையும், குறுஞ்செடிகளையும் அகழ்ந்
தெறிமின். நெருஞ்சின்முள் கூரிய வச்சிரமுதலிய வற்றால்
வட்டைகள் முற்றும் நிரப்புமின். இலங்கையாங்கணுளதெ
ன அச்செம்முகக்கூனற் கவிகள் விறுவுமேல் விணாணின்கணை
ணதெனத் திண்ணமாகச் செப்புமினெனக் கட்டளையிட்டு
மகா பார்சுவா! போதுதியென்றுபோயினன்.

ஆறுமங்கம் முற்றிற்று,

இராவணன் செல்வத் தங்கையும்,அரக்கர்குலனை யொருங்கு கொன்று தீர்த்த கொடிய திராப்பிணியும்,பாவத்திற்குச் செவிலியுமாகிய சூர்ப்பநகை, தீக்கொழுந்துபோலுங் குருளவிழ்ந்து நிலனுறப்புரள, பறைபோன்ற இருகண்களிலும ஆறுகள் உளபோலநீர்மல்கிவார,பெருமுழைவாயோலமிட்டரற்ற,மாரிலெற்றிக்கொண்டோடிவந்து அண்ணா! தசக்கிரீவா! கும்பகன்னா! குழந்தாய் மேகநாதா! அதிகாயா! அட்சகுமாரா! திரிசிரசே! தேவாந்தகா! நராந்தகா! வச்சிரதந்தா! துன்முகா! பிரகத்தா! கும்பா! நிகும்பா! மகாபார்சுவா! மகோதரா! நீவிரெல்லீரும் எங்கேசென்றீர்கள். வானுடாளச் சென்றீர்களோ? தேவாசுரர்களுடைய எண்ணிலுங் கண்ணிலுமுள்ளநீவிர், எட்டிலுள்ளவர்களானீர்களே. தமியேன் இனி எஞ்ஞான்று நுங்களை யொருசேரக்கண்ணுறுவேன். அண்ணா! இராவணா! திசைகளிற்றின் றின்மருப்பொசித்த நுனது வயிரவரையகலம்பிளந்து வாய்வழியு நாசிவழியும் செங்குருதி நீத்தம்போலப்பெருகக் குப்புற்று மண்ணைக்கவ்வி வீழ்ந்துகிடக்கின்றனையே அவ்விதம்வீழ, தஞ்சமடைந்தபாலனையாவது,அரிவையையாவதுவஞ்சித்து இழுககுத்தோடுவரைந்து அவருடைய பொருளைக் கவர்ந்தனையோ? அவ்வாறு கைதவம்புரி கைதவனன்றே நின்போல வீழக்கடவன் அல்லது செந்நாப்புலவர்மாட்டுக்குற்ற மேதேனுமிழைத்ததனையோ? அம்மெய்ந்நாப்புலவர் சினந்து நினக்கங்கத மொழிந்தனரோ?அல்லது அந்தணர்க் கவமதி யயர்ந்தனையோ? அதனால் வாழ்நாள் குறைந்தனையோ?அல்லது உண்மை வழக்கையிழந்தவரது கண்ணீர் குலத்தை வேரோடரியும் வாளென்றுணராது மனுநெறிவழுவி மாறுபுரிந்தனையோ? இவ்வடாதவற்றில் எதைவிடாது புரிந்து இவ்விதங் குருதிகாலுபு வீழ்ந்துகிடக்கின்றாய். நீ ஆயிரம் வேதங்கள்கற்ற புனிதனல்லையோ. சிவார்ச்சனை அவாவுறத் தவாதுசெய்தனையல்லையோ? ஆயிரத்தெட்டிலிங்கம்வைத்திலிங்கமென்னு நாமம் இன்றோடற்றதே நீ யுயிரிழந்தமையினால். ஊழி வெந்தீயென இராமபாணம்

பரிசுத்தபக்தரை, பரமசிவா! நீயே தஞ்சந் தஞ்சமென்று நீ சொல்லவில்லையோ? சொல்லவயர்பவனல்லையே. நீ புகலடைந்தும், அரசெருசடையோன் இராமபாணத்துக்கசசுறறுச் சரண்புக்க சயந்தனைக் கைவிட்டாற்போல நின்னையுங் கைநெகிழ்த்தனனோ? அந்தோ! பாதிப்பெண்ணுருவனை நம்பிக்கெட்டனையே புருடோத்தமனம்பால்வைமபாப் பட்டனையே. இனி நானென் செய்கேனென்றேங்கி, அந்தோ அனுமந்தனுடைய வால்கொளுத்திய இலங்கை யின்னம்வேகின்றதே தணிந்திலதே. விபீடணனுடைய மந்திரியாகிய சம்பாதி இராவணனாகிய இறந்தானென்றும்,விபீடணனுக்கு இலங்காதிபதியங் கொடுத்தனரென்றுங் குதகுலிக்கின்றான். அப்பாபியாலேயே விபீடணன் தான்தோன்றவுற்ற மரபு மாசுண்ணுமா குலப்பகைகளைந்த தருசம்புக்கான் நிருதகுலத்துக் கூழிகாலயமபோல இராமனுக்குகந்தான். ஓ அனுணு! இப்போழ்து சிதையை மறந்தனையோ? உடலாலன்றோ நஞ்சுகொல்லும் நீ கண்ணுற்பார்த்த குறையாலே ஜானகியென்னும்பெருவிடம நின்னுயிரைாட்போக்கிறதே என்றுபுலம்பி வாய்திறந்தலம்பினன் பின்னாப்பாசுடோத்தமரான விபீஷணுழவானுடைய அமைச்சரி லொருவனாகிய சம்பாதிபோந்தான் வந்து அரகோதண்ட கண்டகரும், சரணுகதவற்சலருமம, மலைகளை யமலையிந்தலைதாங்கச் செய்து திருவணையியற்றியவரும்,இராவணனை விண்ணேற்றியவருமாகிய இரகுபுங்கவருடைய நிரவதிக சௌலப்பிய சௌசீலியாதியுத்தம குணங்களை யென்சொல்லிவாழ்த்துகேன் வியப்பு வியப்பெனப் பெருமகிழ்வுறறு,ஆங்குப் பேட்டுக்கோட்டானென நின்ற சூர்ப்பநகையைக் கணுற்று, துட்டையாகிய இவள் அறத்திறுருவினனுகிய விபீஷணன் இலங்கையாட்சியை யெய்தியதை நோறுமலிடும்பையுறுகின்றனள். நீ கவல்வதுயாதென அவளைக் கடாவுவோமெனக்கருதி ஏ மங்காய்! என் மழுங்கியிருக்கின்றனையெனலும், சூர்ப்பநகை, அரக்கியரெல்லாரு மிப்போழ் தென்போலியராயிருப்ப,நின்மனைவிமாத்திரந்தவிர்ந்திருப்பானேனென்று நினைந்துதான்மற்றொன்று

மிலது, ஓ சம்பாதி ஜானகி இலங்கேசனைக் கோறல்செய்த லெ னது நாயகர்பாற் செல்லுகின்றேன். என்னோடு நீயும் வாரா யென வென்னை விளித்தனள். ஒருப்பட்டு நானும் பின்டிக் காவையணடினேன். வேத்திரகோல்கைக்கோணடிராநின்ற குப்பாயத்தாாக ளென்னைநோக்கி அடிமூக்கறையே ! அக லப்போ, எம்மன்னையார் போதுகின்றனர். முன்னே நில்லா திநில்லாதியென்று வெருட்டினரெனச் சம்பாதி சூர்ப்பநகாய்! நீமூக்கறையல்லேயோ ? பயணம் புரிவோா உறுப்பறுபட்டவர் களை யெதிரப்படுவரேல் கருதிச்செல்லுங் கவ்வைமுற்றுப் பெருமையே அன்றிப் போரவின்னலு முறுவரெனஎன்னூற் புலவரியம்புவர். நீ மூக்கறை காதறையாகலால் கஞ்சுகிகள் துரத்தினா அதனல் நினக்கென்னை இன்னல் ? நீ யெதிர சென்ற பொல்லாநிமித்தத்தினுல் ஜானகியார் இடுக்கணுற்றன ரென்றனன். சூர்ப்பநகை அஃதென்னையோவெனச் சம்பா தி நங்காய் ! நீ கேட்டிலேயோ ? இராகத்தை விரும்புஞ் சகோரத்தை யொத்தத் தம்மை விரும்புகின்றவள் சானகி யென்று இராமபிரானா உணர்ந்திருந்துங் காணலுற்ற வுடன் முனிந்தருளினர் அம்மைதிலியார்தமது தூய்மையைக் காட் டுவான் அனலில் மூழ்கிவந்தனா அம்மிதிலைநாடியாா உயி ரன்னதுணைவராற் சினங்கொளளப்பட்டதும, பெருந்தீயின் மூழ்கப்பெறறதும் நின்னையாறறெதிர்ப்பட்டமையினலன்றே வென்றனன். சூர்ப்பநகை அவ்வின்னச்சொல் செவிவயிற் சாாதலும், முலையையிழந்த அறறை ஞான்றினுங் கைம்மிகுந் து நாணமுறறு, சம்பாதியே! இப்பொழ்து ஆடவா பெண்மை யை யவாவுந் திருந்தோளராகிய இராமபிரானு ரென்செய் கின்றாரென அமைச்சன் சூர்ப்பநகாய ! இரகுநாதர் இராவண னைச் சவட்டிப் பொன்னிற பொலியுஞ் சீதாபிராட்டியாரை யடைந்து வானரப்படையுடன் புட்பகமிவாந்து அயோத்தி மாநகரஞ்சார முயல்கின்றனா. தமது திருத்தம்பியாகிய பர தாழ்வானுக்குத தமது வரவையுணர்த்த அனுமானை விடுகின் றாரென் றேதியகன்றான். சூர்ப்பநகை ஆங்கது செவியேற்

று, அநுமான் செல்லுமுன் நாம் விமலையுற்று, இராமலட்
சுமணருயிர் நீத்தாரெனப் பரதனுக்குக் கிளத்துவமேல் அவன்
அவனுள்ள எல்லாரோடுந் துஞ்சுவன். பரதன் தொடக்கமா
யோர் விளிந்தகாலையில் நமதுகுலனையழிவுகண்ட இராமனுடை
ய மரபுஞ் சிறிதுலந்ததாகுமெனக் கடைப்பிடித்துச் சென்றன
ள. பின்னர் முழுவலன்பினுரு விஃதெனத்தோன்றும் பரதாழ்
வான் புனைந்துவிட்ட தாழ்சடையராய், சீரைசுற்றிய விடைய
ராய், உணங்கிமெலிந்து துவண்ட யாக்கையராய்த் திருத்தம்
பியாருடன்வந்தனர். வந்து குழந்தாய்! சத்துருக்கினா! நம
மானுடை நம்பிகளாகிய தாரகவாச்சியரது சீர்பாதகாணிக்கை
யாகத் தென்றிசைக்கு விடுப்பா னம்மால்விளிக்கப்பட்டுவந்
துள்ள பலதேய மன்னர்கள் கொணர்ந்திறுத்த திறையை
எல்லா வுலகத்திறைவி னுடைய பாதுகங்களுக்குக்காட்டித் தன
சாலையிற்குவித்து இலச்சினைபோக்கி, அவ்வேந்தர்கட்கு முக
மனுரைத்து, அவர்களுக்கு மவர்கள் படைகளுக்கு முறையு
ளமைத்து, செயற்குரிய வேலையவும் புரிதியெனச் சத்துருக்கி
னாழ்வான் அத்தரே! தேவர் முந்தியே கட்டளையிட்டருள, அ
டியே னவ்வாறு வழாநெறியிற் புரிந்துவிட்டேன். அவ்வேந்
தர்களும் நாவண்ணிக்கும் அறுசுவையுணவின்று அவர்சித்
தேத்தேகத் தேவரதாணையை யெதிர்நோக்காநிற்கின்றனர். மீ
ண்டுந்தேவர் அதனையே செப்புகின்ற தென்னையெனலும், பர
தாழ்வான் குழந்தாய்! எம்பெருமான்வனத்தி லுறைவதைக் கரு
திக்கருதி நெஞ்சுகவல்கின்றமையால் மம்மருற்றுப் பொச்சாக்
கின்றேன். நீ யெல்லாவற்றையு மறவியின்றிக் கண்ணுறு
வாயென்றனர். சத்துருக்கினாழ்வான் நன்றென்று பணிந்
திருத்தலும் அடாநெறியொழுகாப் புரவலர் புங்கவர் சத்து
ருக்கினா! கேட்டி ஒன்பதுவகை மணிகள் குயின்ற பொன்
திணிமுடி மிலைச்சு முடியிற் சடையையும், கடவுட்பொன்
னுடையணியு நுசுப்பில்வற்கலையையுந் தரித்துச் சித்திரகூடத்
தின்சென்னியில் பன்னசாலையில் புலியத ளாசனத்தில் வீற்றி
ருந்த நம்மரும்பெற லடிகளைக் கண்கள் மறந்தனவில்லையே

யென்றனர் இளையவர்க்கிளையார் கண்ணீர்மல்கிக்காரக் சரு வசுவாமியினுடைய செயலை நினைந்து யாம் என்செய்குதும், அரிதரிதென்றனர். பரதாழ்வான் எல்லாவுலகத்தவாகளுக குங் களைகணுகிய நம்பிரானா வெம்பரல்களுமுட்களும் கூர்ங கற்களும் பரந்துள்ள வெங்கானிடைப் பூவினுமெல்லிய சீர்பா தம் வருந்தநடககின்றனரோ. காய் கனி இலைகிழங்குகளை ய ருந்துகின்றனரோ. சருகுகளைப் பரப்பிச் சேக்கை கொள்கின் றனரோ. என்செய்வலெனப் பொருமிச் சோகாத்தனர். சத் துருக்கினுழ்வான், அண்ணு! அயர்வையொழிதிர். அடுத்த டுத்து நினைந்தயார்ந்தாவ தென்னேவென்று தேற்றினர். வேந் தரோந்தலார் சத்துருக்கினு! அரக்கனு லபகாிக்கப்பட்ட மிதி லை நாடியார் இற்றைக்காறும் உயிருய்வரொன நான் கருதவில் லை. அவ்வன்னையார் தன்மையங்ஙனமாயின் அண்ணனுர் பெற்றியென்னுமோவெனச் சத்துருக்கினுழ்வான் அத்தரோ! நம்பெருமானுடைய செயலை நன்குணர்ந்து வனசரர் பதியா கிய குகப்பெருமான் திருமுகமொன்று வரைந்துவிடுத்தனர். படிககின்றேன், கேட்டருளுமெனப் பரதாழ்வான் சத்துருக் கினு! திருமராடி பெற்றுப் பத்திரப்பழுவஞ்செறி சித்திரகூ டத்தினின்று மீண்டுவரும் வேலை குகப்பெருமானைக்கண்ணு ற்று, அன்ப! இரகுநாதருடைய நலங்களை யடுத்தடுதது வி ளுய்த் தெரித்தல்வேண்டுமெனச் செப்பினேன். உள்ளன்பு ள்ள குகப்பெருமா னதனை மறவாமை, ஓர் நிசாசரன்கலை யுரு க்கொளீஇச் சுவாமியையு மிளையவனையும் பன்னசாலையினி ன்றுசெய்மையிற்கொடு சென்றனனெனவும், மற்ருே நிரு தன் நீத்தோன்படிவங்கொணடு அம்மனையைக் கரவிற்றாக கிப் போயினனெனவும், முன்னே பொறித்துவிடுத்தனர் இப்போழ் தென்வரைந்திருக்கின்ருர். வாசியென் வநுரை செய்தனர். சத்துருக்கினுழ்வான் நன்றென்று இலச்சினையை நீக்கி முடங்கலைநிமிர்த்து உலகெங்கும் பாயிருளையோட்டிச் சேயொளிபரப்புந் தினகரகுலதிலகரும், சருவஞ்ஞராகிய தாச ரதியார்ககிளைஞரும், ஆயிரமுடங்கலிற பொறிப்ப வடங்கா மா

கீர்த்தியுடையாரும், மன்னர் மன்னருமாகிய பரதசுவாமிகளுடைய திருவடித்தாமரைகளில் நாயேன் குகன் தாளுந்தடக்கையுங் கூப்பி அநந்ததண்டஞ் சமர்ப்பித் தெழுதிக்கொண்ட விண்ணப்பம். தமது தாசவர்க்கங்களாகிய நாங்களெல்லாரும் க்ஷேமம். தேவருடைய க்ஷேமாதிசயங்களைப்பற்றி ஸ்ரீமுகம் பிரசாதித்தருளல்வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். முன்னே அடியேன் வரைந்துவிடுத்த பத்திரிகையால் நம்பெருமானாருடைய செயல்களைத் திருவுளமுணர்ந்திருக்குமே, பின்னர் அநந்தகலியாண குணகண பரிபூரணர் தேவியாரை யெங்குந் தேடிக்காணாது தென்றிசையை நோக்கிச் சிறிதுதூரஞ்சென்று புகழ்க்குயிரைவிற்பான் அருந்தவமுயன்று தோன்றிய பெரியவுடையாரைக் காணடல்புரிந்து தீமையிழைத்தவன் இராவணனென்று அவராலுணர்ந்து, அப்புறஞ்சென்று கவந்தனையுயிர்வாங்கி, அவனுரையால் ரிசியமுகஞ்சென்று சுக்கிரீவனை நட்டு, வாலியை முருக்கி, அம்மகாராஜாவுக் கரசீந்து, கார்காலங்கழிந்தபின், அச்சூரிய புத்திரன் நாடவிடுத்த வானரசேனையால் பிராட்டியார் சிறையிருந்தருளு முறையு ளிலங்கையெனத்தேறி மகதேவனாகிய வருணனைக்குறித்து நோற்றுப புனன்மன்னவன் வராமையாற் றீக்கணையெய்து வயப்படுத்தி, கடலில் நூறுயோசனைதூரந் திருவணைபுரிந்தருளி வானரப் பெரும்படைகளோடு சென்று இலங்காபுரியை வளைந்துகொண்டிருக்கின்றார். இலட்சுமணசுவாமி பகவத் கைங்கரியஞ் செய்துகொண்டு உணவுமுறக்கமுமின்றி யினிதிருக்கின்றார் பெரும்பௌவத்தில் அணையியற்றப்பட்டிருத்தலின் இலங்கை செல்வது அரிதன்றாதலால் வனசரரைவிடுத்து மேனிகழ்வதை யுணர்ந்து விண்ணப்பஞ்செய்கின்றேன். பலதண்டம், இங்ஙனம் தாசன் குகனென்பதைப்படித்துக் காட்டி யசசத்துருக்கினாழ்வான் பரதசுவாமியை நோக்கி, அண்ணரே! இரகுநாதருக் குதவிசெய்யும்பொருட் டிங்கிருப்பர்களை யினியாங்கட் செல்லவிடுக்கவேண்டியதில்லை. சுவாமி இலங்கையுற்றாராகலால் நிருதரை மூலமறச்செய்தேயிருப்பர். இப்பதிகளெல்லாருந்

தமது பதியேக விடைகொடுக்கின்றேனெனப் பரதசுவாமி சத்துருக்கினு! அவ்வண்ணமேசெய்தி. நமது குகப்பிரானெழு தியதெல்லாம் வாய்மையே. நானொன் றியம்புகின்றேன் கேள். சின்னாட்குமுந்தி விண்ணினெறியிற கந்தருவரிருவர்சென்றார். அவரி லொருவன் மற்றொருவனைநோக்கி, ஆகண்டலன் இராமபத்திரராலோருதவியையடையக் கருதியிருக்கின்றமையின் தனது புத்திரனாகிய வாலியைக்கொன்றமையைக்குறித்துப் பருவரலுற்றிலன், ஆச்சரியமாச்சரியம்! இன்றுகாறுங்கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை. தாசரதியார் புணரியிற சேதுக்கட்டியருளினரென்று பேசிக்கொண்டு போயினரென்றனர். சத்துருக்கினுழ்வான் பெரியீர்! மற்கடங்களுக்கும் அரக்கர்களுக்கு மிப்போது சமரநிகழ்கின்றது. அதனை நீ யெவ்வாறுணர்ந்தாயெனிற் சொல்லுகின்றேன்கேட்டருளும். ஓர்நாள் பெருமாருதமெழுந்து மணலைவாரியிறைத்தது, நான் பிங்களனைக்கூய் இம்மண்மாரியால்வையமுய்யச் செய்யலாவதுண்டோ? உளதாயிற் பரிகாரமென் புரியலாமென்று வசிட்டபகவானை வினவிவர விடுத்தனன். அப்பிங்களன்சென் றம்மைதயுறைபபச் செவியுற்றருளிய வசிட்டபகவான் இது மணமாரியன்று. இலங்காபுரியில் நிருதர்களும், கவிகளும் பொருகின்ற வெஞ்சமரத்தைச்சென்று கண்ணுற்று மீள்கின்ற பெரிய திருவடிகளுடைய சிறகுவீசு பெருங்காற்றுகையால் எதமுறாது, அச்சுறுதல் வேண்டாவென்று சொல்லென்று சொல்லினனெனப் பிங்களன் சொற்றனனென்றனர். பின்னாத்திரையினுள் அமித்திரர்களடைந்த வெற்றியினுலு மித்திரர்களுற்றதோல்வியினுலுமின்னற்பாடுற யான் மாதவமியற்றப் பணிவரை புகுகின்றேனென வோர்மாற்றம் பிறந்தது. பரதசுவாமி யம்மொழியைச் செவியுற்றுச் சமரம் பொருகின்றவர்களு ளொருவருக்குத தோல்வியு மற்றொருவருக்கு வெற்றியு முற்றமையில் யாவரோ வொருத்தி யலக்கணுழக்கின்றாளென்றனர் உடனே சூர்ப்பநகை தவப்பெணபடிவம்பெற்றுப்போந்து மேவினருக்குச்சார்ந்த கீழ்மையாலு மே.

வலருக்குநேர்ந்தமேன்மையாலு மறுககமுற்ற நான் அருந்தவம்
புரிய இமயமலைசாருகின்றேனென்று மீண்டும் பகர்ந்தனள்.
பரதாழ்வான் குழந்தாய்! சத்துருகனே! இவள்யாவள்? ஆ
ரொன்று வினவுவாய். பக்தராவியாராகிய நமது சுவாமியா
ரது செய்தியைச்செப்பினுஞ் செப்புவளென முத்துருககொண்
டன்ன சத்துருக்கினாழ்வான் ஓ தாபசீ நீயாவள்? எவணின்று
போதுகின்றனை. புகலுதியென வினாயினார். சூர்ப்பநகை
சத்துருக்கினாழ்வானை முன்னையதவப்பேற்றாற்கண்டு ஆ! ஆ!
நம்முடைய மூக்கையுங் காதையுமரிந்த அரசிளங்குமரன் இ
ஙகே யிருக்கின்றானென்று வெருவுக்கொண்டு நன்றாய் நோக்
குற்று இவன் அவ்விலட்சுமணனல்லன். அவனைப்போலி
ருக்கின்றானாகலால் அவனுடைய தம்பி சத்துருக்கினனாயிரு
ககலாமென்று நினைவுற்று மூக்கையுங் காதையுங் கையாற்
றொட்டுப்பார்த்து ஆ! ஆ! நாமிப்போது தாபசியைப்போல
வேடங்கொணடிருக்கின்றமையின் நாசியும், வார்குழையும் ப
டைத்திருக்கின்றோமாகலால் மூக்கறைபோலக் குணகுணவெ
ன்று பேசோம். நமது கூற்றைக் கேட்டொருவரு நகையாடா
ரென்று துணிந்து சத்துருக்கினனை நோககி நீ யாது கூறினை
யென, இளையவாக் கிளையார் தவமங்காய்! நீ யாவள்? எவணி
ருந்துபோதருகின்றனை? சாற்றுதியென்றேனென்றார். சூர்ப்
பநகை நெட்டுயிராப்புயிர்த்துப் பெரும்பீழை யுற்றவள்போலப்
பாவனைகாட்டி வாயாலிச்சுககொட்டி, எவளோ வொருத்தி
யெஙகேயோ போகின்றேன். நீ என்னை வினவுவானேனெ
ன்று சலித்துப் புகன்றாள். பரதாழ்வான் இத்தவப்பெண்
வெஞ்சமத்தி லுடைந்தவாகட்கிரங்கி வருந்துகின்றாள். இப்
போழ்து நமது சுவாமிக்கும் பத்துத்தலையனுக்குநதான் பொ
ருமுரணோங்கிருக்கின்றது. அத்தனார்க்கு அமரில் வெற்றியி
லையோ? அஃதன்றாயின் இத்தவப்பெண் வேறுகாரணத்தாற்
பொருமுகின்றாளோ? அஃதறிவாமெனத்திருவுளத்துன்னித்
தாபசி! நின்பெயரேதெனக் கொடியாள் நாம் யாவரொருவ
ளை வேணவாவுற்று நாசியையுஞ் செவியையுமிழந்தனையே

பயனுயடைந்தேமோ அவ்வரசப்போரேறு சிவணக் கடுங்கி
ன்றமையினால் இவ்வாண்டகை பரதனாகல்வேண்டும். அவ
னுடைய பககலில் உவன் வணக்கத்தோடு வாய்பொத்தி நின்
றமையின் சத்துருககினனேயென்று தெருண்டு இளையாக்
*கிளையானை நோககிக குழந்தாய்? என்னசொல்லினையெனக்
கடாவினள். உடனே சத்துருகனாழ்வான் நஙகாய்! நினது
நாம மென்னென்று அண்ணனார் கடாவுகின்றாரென்றனர்.
தீதொழிலா ளதனைககேட்டுப் பிறந்தநாள்தொட் டெனக்
குச் சூர்ப்பநகை யெனப்பெயர் வழங்கும். உற்றபெற்றியால்
மூககறையே யெனவு மழைப்பரென்று மனததினுளோதி
ஐய! என்னைப் பருணதினியென்று ரிசியமுகப்பறம்பி லுறை
யாநின்ற முற்றத்துறந்த முனிவர்கள் சொல்லுவர் புலத்திய
னுடைய மரபில நான் அருமையாய்த் தோன்றியவளாகை
யால் முனிவாகளெல்லாரு மென்னை நட்பார்களென்றனள்.
பரதசுவாமி மஙகாய! நீ புலததிய மரபினையெனவும, ரிசி
யமுகவரையினின்று வருகின்றனையெனவு மறிந்தோமென்
னுஞ சூர்ப்பநகை யதற்கென்னையென்றாள் சத்துருக்கினாழ்
வான் இராவணன் தங்கையை நோககுற்று நீ நிசி சரகுல
மாதோவென அரக்கி யென்னைக் கேட்கவும் வேண்டுமோ
வென்று வுள்ளத்திலுள்ளி மெள்ள வெள்ளிப் புன்முறுவல்
செய்து, சீற்றங்கொண்டவள்போல நடித்துக்காட்டி, புலத்தி
யர் மரபிற்பிறந்த நான் அரக்கியாகத்தானிருக்கவேண்டுமோ
வென்றாள். பரதாழ்வான் குழந்தாய் சத்துருக்கினா! தாபசிக்
குச் சினமூளும்வண்ணம் உரையுரையாதி புலத்தியருடைய
மைந்தர் விச்சிரவசுவும், அவருடைய புதல்வர் குபேரரும் இ
ராக்கதரா? அல்லரோ யென்றனர். சூர்ப்பநகை இராட்சத
குலனிற் றோற்றஞ்செய்தும் அன்ன விருவோரும் அரக்க
ராகாதவாறுபோலப் பிறப்பினாற் கடைப்பட்ட விபீடணனும்
அரக்கனல்லனேயென்றுகருதி, அப்பா! பரதா! நன்று
மியம்பினையென்றனள். பரத சுவாமி நங்காய்! நீ யல்ல
லுற்றனையாகத் தோற்றுகின்றி. அதற்குக் காரணமென்னை

கழறுதியென்றனர். சூர்ப்பநகை கேட்டியப்பா! விளம்பு கின்றேன். சாது சனங்களினுடைய வீவினுலுஞ் செறுநரு டையவுய்தியினுலு மிவ்வரந்தைநயடைகின்றேனெனச் சத் துருக்கினுழ்வான் பருணுதினீ! உனக்குற்றவரு முருதவரும் யாவரென்றனா சூர்ப்பநகை எனக்கு அரக்கா மித்திரா வான ரமித்திரரென்று மனத்திலோதி முறுவலித்துக் குழந்தாய்! எனக்கு வானராமித்திரா, அரக்கரமித்திரரென்றனள். பர தசுவாமி யச்சொற்செவியேற்று நமது சுவாமியோடுற்ற கவி கட்குற்ற பெறற்றிமையெறறோவென் றுடல்பனித்துப் பரு ணுதினி! ரிசியமுகப்பொருப்பினின்று போந்தேனென்ருய் ஆங்குந்தான் அரக்கருக்கும் வானரருக்கும் போா நடந்ததோ வென, இராவணனுக் கிளையாள் ஐய! ஆங்கில்லை, இலங்கா புரியிலென்றனள் பரதாழ்வான் உள்ளம் புழுங்கிக் கணணீா சொரிந்து இளையவனை நோக்கலும், அச்சத்துருக்கினுழவான சூர்ப்பநகையைக் கண்ணுற்று இவையெல்லா நீ யெங்ஙனம் உண ர்ந்தனையென்றனா, சூர்ப்பநகை குழந்தாய்! கிட்கிந்தையென வோா பெருமுழையிருக்கின்ற தன்றோவெனலும், இளையவாக கிளையவர் மாதவப்பன்னி! கிட்கிந்தாபுரிக் கரசனுகிய வாலி க்ஷேமமாயிருக்கின்ருனேவெனக் கடாயினா. அரக்கிதாதா! இரகுகுலத்திலுதித்த இராமசந்திரா வாலியை யவன் தந்தை யுலகுக்குச்செல்ல விடைகொடுத்து, அவ்வாலியினது தம்பி யாா சுக்கிரீவருக்குக் கவியரசுரிமைதந்தருளினர் இப்போ தச் சுக்கிரீவா கிட்கிந்தாநகரவரையராயிருக்கின்றனரென்றன ள். சத்துருக்கினுழ்வான் நல்லது நீ மேலே விளம்புதியெனத் தீயாள கேளப்பா! உருமையினுடைய சிலதியாகிய சங்கு கருணியென்ற வானரப்பெண் எனதாருயிரன்ன விகுளை. அவ ளென்வயின்வந்து, உருமை தீப்பிழம்பிறகுப்புற்றன ளென்றோதிக் கலுழ்ந்தனள். அதனுணாந்தேனென்றனள். பரதாழ்வான் பருணுதினீ! உருமையவளெனத் திமைச்சுக கொள்கலமாயாள் குழந்தாய்! அவ்வுருமை சூரிய புத்திரராகிய சுக்கிரீவருடைய தேவியென்றனள். சத்துருக்கினுழ்வான்

தாபசி! சுக்கிரீவர் அரக்கரால்மொதந்துண் டிலந்தனரோவெனப் படிற் ஹெழுக்கப் புல்லியள் கணமழை வாரத்தொடங்கி, அ வாமாத்திரமன்று அமைச்சராகிய அனுமானும் இளவரசாகிய அங்கதப்பெருமானும, ஏனைவலிமுகஙகளும் வான்புக்கனரெ ன்றனள். சத்துருககினுழ்வான் பருணுதினி! இரகுகுலத்தை விளககஞ்செய்தருளிய மன்னிளங்குமார ரிருவர் இலங்கை யின்கண் ணேகினாகளே, அன்னவாகளதுசெயதி யென்னை யோவெனலும், பெண்ணிற்கூற்றமன்னுள் வெறென்னவிருககி ன்றது இராககதாகள் வெற்றிகொள்வது வெஞ்சமத்தில் விஞ் சுற்ற வஞ்சததினுலன்றேவென்றனள். சததுருககினுழ்வான் தாபசி! நிருதாகள் எஞ்சலில் வலியமைநத மஞ்சரிருவரிடத் தும மாயையியறறினரோவென, நாயினுஙகடையாள் கேள ப்பா! அரக்காகள் கடலின் வடகூலஞ்சார்ந்து மானிடவுருக கொணடு தசககிரீவனேடு ஞாட்புப்புரியாநின்ற இராமலட்சும ணர்களுக்குத் துணைபுரிவான்வேந்தரேந்தலாகிய பரத ரெங் களைவிடுத்தன ரெனுவுரைத்துத் திருவனைமீது நடந்திலங்கை போநதுவேந்துகுலவிளம்புதல்வா போருழப்பினுலலந்து கண் வளருங்காலை வாளையுறையினின்றுரீஇ யென்றேதிப் பொரு மினள். சத்துருக்கினுழ்வான் பருணுதினி! பின்பு நிருதர்கள் யாது புரிநதனாகள். சொல் சொல்லெனத் தீவினைக் குறையு ளாள் நமது மூத்தவள்ளல்களை யம்பாலெறிநதவருடைய தம்பி யாகளை நாம் வாக்குப் படையாலடிப்போமெனசகொடு, சத்து ருககினனை நோக்கி. தாதா! சூரியன் மரபிற்றேன்றிய இராம லட்சுமணனை நீ யறியாய். நானன்குணாநதவளாகலா லெனது ள்ளம்வேகின்றது என்னை சொல்வேனென்றேங்கினள். பர தப்பெயரண்ணலார் தாபசி! மேலே சொல்சொலலெனப் புலா லுணங்கு பேழ்வாயரக்கி கேளப்பா! வந்த நிருதர்கள் இராம லட்சுமணனை யென்செய்தனர்? பெயர்மாத்திர நிலவுலகினில வும்வண்ணஞ் செய்தனரென்றனள் பரதாழ்வான், அச்சொல் செவி புகாமுன் வாளராவினஞ்சுதலைக்கொண்டு மெய்யயாந்து விழும் வேழமென்ன நிலத்திலுற்றுப் புழுதியுடல் போர்ப்பப்

புரண்டு, கொல்லனூதுகின்ற உதியிலெழுந்தழலென உயிர்த்து யிர்த்துள்ளம் புலர்ந்து நாவுலர்ந்து கண்கள் சோரியைக்கான்று, ஐம்புலன்களும் அலந்தலையுற்றுயிர் நீங்கு மற்ற நேர்ந்திருந்தனர். அப்பாகவதோத்தம ரெய்தியபையுளைச் சொல்ல வல்லுநாயாவர்? இளையவர்க்கிளையாரு மவ்வாறே யயர்ந்துயங்கினராயெனக் கடைப்பட்ட பேயனைய சூர்ப்பநகை சோர்ந்தவனை நோக்கி யுள்ளுக்குள்ளே களிகளித்து நீ விரிருவிருமயாவர்? நுங்கட்குச் செல்லலை விளைக்குஞ் செய்தியிஃதெனவுணராமறபேதைமையினாற் புகன்றேன். சோகந் தீர்மின். ஒன்னலனை வெல்லும் வீரநுன்னுமின். இனி யிழைக்குவ தென்னென்றுதேற்றினள். பரதசுவாமி அந்தோ! அந்தோ! லட்சுமணா! லட்சுமணா! என்றெழுவர். நிலத்தில்வீழ்வர். ஓவியமொப்ப உயிர்ப்படங்கி யாவியோய்வர். மீண்டுமெழுவா வெந்தபுண்ணில் தீக்கொள்ளி நுழைந்தாலொப்ப வுழைப்பர். ஒன்றுந் தெரியாது மம்மருறுவர். மீண்டும் புவியில்வீழ்ந்து பேதைப் பெண்டிர்போலப்புரளுவர். அந்தோ! இதென்னகாலம் ஊழியினிறுதியோ? இருங்கதிர்மரபு இன்றோ டிறுதியெய்தியதோ வெனஏங்குவர். பெண்ணிறந்தீயனையாள் பரதாழ்வானை நோக்கி முற்றுங்கேளப்பா! சுக்கிரீவாதியருஞ் சக்கரவாத்தமக்களுக் கருகிற்றுஞ்சினார்கள். மானிடவேடங்கொண்ட அரக்கர்கள் யாவரும்வாளென்னு நமனைக் கைகளிற் பற்றியிருந்தார்கள். நான் வேறு பகர்வதென்? நீயிரிருவிரும்யாவர்? சொல்லுமினெனச் சத்துருக்கினுழுவான் சிறிது சோக நீங்கி அயாவுயிர்த்துத் தாபசீ! நாங்கள் பரத சத்துருக்கனா. இரகு புங்கவருக் கிளைஞர்களென்றனர். சூர்ப்பநகை பெரிதுகவலுற்றவள்போலத் தோற்றுவித்து அந்தோ! நீவிர் இராமபிரானோடுடன் றோற்றினீர்களென நான் முன்னமேயுணராமற் கெட்டேன் கெட்டேன். இன்னறுசெய்தி பன்னுதல் கடனன்றென்று மேலோரியம்புவர். அதையறிந்தும், "நுண்ணுணர்வுடையோர் நூலொடுபழகினும் பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்து" என்பதற் கியையவியம்பிவிட்டேன்; அண்ணத்

தல்செய்யாசிரயத்தில் இன்னே வீழ்ந்தேனெனவாய் வெரீஇ யினள். பரதசுவாமி தாபசி! நீயேன் கலுழுகின்றனே. நினக் கியாதிழவு? இச்செய்தியை மறைவராயினுங்கூற எமது தொளை ச்செவியிற் கேட்கத்தான் வேண்டுமென்றனர். சத்துருக்கினுழ் வான் தவமங்காய்! மிதிலையாகோ னங்கையினுடைய செய் கையை நீ யறியாயோவென்றனர் சூரட்ட நகைக அபபா! என் னென்றுசொல்கேன். இராக்கதனால் கரவுசெயயபபட்ட அம் மைதிலி இராமலட்சுமணர் இறந்ததைகேட்டுத் கழுத்திற் சுரு க்கிட்டுக்கொணடுயிரையுந் துயரையுமொருஙகு துறந்தாளெ னப் பரதசுவாமி ஆவிபதைப்ப வலக்கணெய்தி மெய்தள்ளாடி த் துமித்துமுறிதத மரம்போல அலறிவீழ்ந்து மிதிலையாகோன் மஙகாய்! ஆருயிர்க்கணவனைப்பின்பற்றினையோவென்று புலம் பிப் புலம்பிப் புழுஙகிப் புவியிற் புரளாநின்ற சத்துருக்கினுழ் வானைக் கரத்தாலெடுத் துரத்தோடணைத்துச் சூழ்ந்தாய! இனி யாமென் செய்குதுமென்றனர். சத்துருக்கினுழ்வான் சினம் பொங்கி அண்ணனோ! முன்னர் அரக்கரை வேரறுப்போம். பின்னா நாமும் நமதருள் வள்ளலார் சீர்பாதநிழலைச் சாருவோ மென்றனர். தீயினுந்தீயள் அரககர்பூண்டு இன்னமுமுளதோ வெனத் தன்னுணைகைத்துக் குழந்தைகாள்! பேரின்னல்கொ ண்ட நுங்களுக் கிது தகுதியன்று. நீர்கள் மறுகுகின்ற பழங்க ளால வில்லமபேர்தவு நுஙகட் காற்றலிலது. நுங்கள் சிதை புரிந்தவாறு தீவிருஞ் செய்வதே கருமமென்றனள். பரதாழ் வான்அன்னே! சுவாமி இனிதெழுந்தருளுவா. அவர் சீர்பா தத்தைப்பணிந்து சேவிக்கலாமென்று நாளை யெண்ணிக்கொண் டிருந்தேனே, என்னைத் தமியனாய் விட்டேகினரோ. என்னை யாளுடையார் திறனன்றுநன்று இன்று கழிந்தால் பதினான்கி யாண்டிறுதி யுற்றனவாகலாற் பக்தவற்சலர் நாளைவருவரென்று பெருமகிழவுப் பரவையிலழுந்திய நான் பேரிடும்பைப் புணரி யில்வீழ்ந்தேன். பெரிய பிராட்டியார் திருவிளையாட்டாத்திரு க்கையிலேந்து செம்முண்டகமலர்மானுந் திப்பிய சரணங்களை யும், சரற்கால சந்திரனொத்த திருமுகத்தையும், கருணை கழு

திருவிழிகளையு மினி நானெங்ஙனன்று காண்பேனென்றழுங் கினர். சூர்ப்பநகை சூழ்ந்தாய பரதா! அலககணடையாதி சத்துருக்கினனைத் தேற்றுதி இப்போழ்து நோந்துள்ள இன் னுமையைப்போக்க விரகு நாடுவாயென்றனள். பரதாழ்வான் அந்தோ! சித்திரகூடத்தில் என்னைத்தழுவுபுசூழ்ந்தாய்! நீபா துகங்களைவைத்துககொணடு அரசியல்வழாது நடாத்துதி இனி தோமபுதி நான் நந்தந்தையாரதாணைபபடி ஈரேழ்வறசரங கானிலுறைந்துவந்து, நீ எண்ணிய வெண்ணியாங்கு நிறைவு செய்கின்றனென்றருளிய நம்பெருமானார்சொற் பொய்த்தா ரே. இரகுகுலத்திற் றோற்றஞ்செய்த முந்தையோர் பொய்ம் மைமறந்தும் பகர்வரோ? அநதோ! என்செய்கேன், இனி ஆவி நீப்பதன்றி வேறொன்றுமுளதோ? சத்துருக்கின! ஆதித்த ன் மரபு நம்மாலிற்றைப்போழ திற்றதெனலாகாது. நீயிருந்து பிதிர்கடனாற்றிக்கொண்டும், வமிச விருத்திசெய்துகொண்டும், உயிர்வீடு மெனககும், இரகு புங்கவருககும், இளையவனுக்குஞ் சிறிது நீரககடனாற்றுதியென்றனா. சத்துருககினனுழவான் தொ ழுது அத்தரே! இந்திரனும் விரும்பு மரசியலைக கையிகந்து கானுறைச்சென்ற வொருவனை யொருவாது ஒருவாசென்ற ருளினா. மூததோன் புறவத்திலுறையத தமபி பதியிலு றைந்து இன்பந் துய்த்தாலெனன்னுஞ் சொல்நிறகு மென்றஞ்சி நகரம் புகாதிருநத நீா, அண்ணனா வாழுநாளிழந்தாரொன்று ருயிர் நீப்பான் றொடங்குகின்றீா. என்னை யரசாளுதி யென் கின்றீா. என்திற நன்றுநன்று நீ ரெனககுடுதத தியம்பிலீா உமக்கு மடுத்ததன்று. வானேகும் நெறியை யடிகளுககுயா னே காட்டுவலென்றனர். பரதசுவாமி அரிதரிது. இலட் சுமண! அததருடைய திருவுளததைப் பின்பற்றியன்றோ வெ ன்னையீன்ற பாவியையு மந்தரையையுங் கோறலியற்றாது த விர்ந்தேன். அண்ணனாைப் பிரியாதுகானினுந் தொடாந்து சென்ற நீ விண்ணுலகுந்தொடாந்து சென்றனையோ? பெருந் தீயோன் யானுதையால் சுவாமியைப் பிரிந்திங்கிருந்து, அவா தன்னடிச்சோதிக் கெழுந்தருளியதைக் கேட்டுவருநதுகின்

றேனாயினேன் இனித்தாழேன், வந்தேன் வந்தேனென்றே ங்கி, சத்துருக்கினா! நமது பிதாகளுக்கு நங்கள் மூவர்க்குந் திலோதகம்விட நின்னைத்தவிர வொருவனைக் காட்டுவாய், நீயு மென்னோ டுயிர்நீப்பாயேல் அன்னைமார்களுக்குக் களைகணார்? படைப்பின் றொடக்கத்திலேயே தோற்றிய பானுகுலம் நமது நாளி லிறுதியுறலாமோ வென்றழுங்கினா. சூாபபநகை ஆ! ஆ! சத்துருக்கினாழ்வான் சாகாதுயிர்வாழ்வனேல் நமதுவிருப் பு முற்றுமுற்றுப் பெறாதெனக்கொடு, குழந்தாய்! பரதா! நின் னினுஞ் சத்துருக்கினன் பெருமபழங்கணுறுகின்றான். இத்தி றத்தி லுனதாணையைக் கைக்கொளமாட்டான். நீ மாய அவன் பார்த்திருப்பனோவென்றனள். சத்துருக்கினாழ்வான் நிலத் தில்வீழ்ந்து புழுதியுடன் முற்றும்போர்ப்ப அண்ணனோ! நீரிப் போது கூறுங்கூற்றினாலே கூற்றின்வாய்விழுவேன். உமது சீர்பாதத்தைப்பிரிந்து, நொடிப்பொழுதுந் தரிப்பேனோவென் றரற்றினர். சூர்பபநகை சத்துருக்கினா! வாளா கலுழ்வதிற்பய னெவன்? விராயும், தீயுங்கடிதுவருக. எனககு நட்பினாக ளாய வானரர்கள் மாய்ந்தமையினால் நானுந் தீப்பிழமபின் முழுகுகின்றேனென்றனள். பரதாழ்வான் அன்னை! கோசலை யே! கரையில்லாத் துயர்க்கடலிலழுந்தினாய். ஓ கேகயன்மா தே! கதிருமதியுமுள்ளளவும் வசையளற்றிலழுந்திக் கிடந்து ழைப்பாய். தாயே! சுமித்திரையே! நீபெற்ற பிள்ளைகளிரு வரையுமிழந்தனையே. ஏகூனி! இககேட்டுக்கெல்லாங் காரண மானவளே! நீயெல்லா நிரயததிலு முறைவாயுறைவாய் பிதா வே! இந்திரனுககு நட்பாளரோ! பேய்ப்பெண்டு மொழிக்கிண ங்கினிர். பின்னை அருஞ்செல்வக்காதலர்களை நெஞ்சுதுணிந்து கானிலேகவிட்டீர். இரகுகுலத்தைச்சுட்டீர். நீர் மெய்ம்மை காத்ததிறம் அழகிதழகிதென்றனா. சூர்ப்பநகை பரதசுவா மியை நோக்கி, என்னப்பா! இவ்வழுகையாற் பயனென்னை யோ? செந்நெருப்பில் விழுந்தாலன்றி யின்னலி நம்மைவிட் டொழியாது சத்துருக்கினா! கடுப்பினில்-நெருப்பினைவளர்த் தியென்றனள். இளையாக கிளைவா பருஞ்ஞினி சொல்வது

தக்கதேயெனப் புறம்போந்து மீண்டும்வந்து அத்தரோ! வெந்
தழற் குழியிழைத்துளேனெனப் பரதாழ்வான் மிகுதியும் பெ
ருமகிழ்விதென்றனர். சூர்ப்பநகை நுன்னினும் நொதுமலாகி
யவெனக்குப் பெருமகிழ்விதென்று மனத்தினுள் மூரல்புரிந்து
குழந்தாய்! பரதா! தீக்குளிப்ப வெழுந்திருக்கலாமேயென்ற
னள். பரதாழ்வான் தாபசீ! எமது குலகுரவராகிய வசிட்ட
பகவான் பால் நீ சென்று ஓர் விண்ணப்பஞ்செய்து வருவா
யெனச் சூர்ப்பநகை நாம தீமூழ்காதுய்யப் பரதனே நல்லவிர
குகூறு கின்றானென்றுன்னி, தாதா! அஃதென்னையோவெ
ன்றனள். பரதாழ்வான் நங்காய் இராமலட்சுமணர்தன்னு
டைச் சோதிகெழுந்தருளினமையால் அடியேங்களும் சூழ்
விசுமபுபுகுகின்றோமென்றும, நாங்கள் நால்வரும் அந்நிரதிசய
வின்பவீடடையத் தண்ணருள்புரியவேண்டுமென்றும், இன்று
முதல் மனுவே விரிநீரவியனுலகைப் பொதுவறப்புரத்தல் செ
ய்யவேண்டுமென்றும, எமதன்னையாரை இன்னலுழவாவண
ணம் தேறறவேண்டுமென்றும் நான் தொழுது கேட்டுக்கொ
ண்டதாய் ஓதுவாயென்றனர். சூர்ப்பநகை நாம் பேணியது
பேணியாங்கு நிரம்பிற்றெனப் போரவுகந்து குழந்தாய்! நான்
சென்று செப்புவானேன்? ஞானப்பாவையினால் அவனொல்
லாவற்றையு முணர்ந்துகொளவல்லர் நீவி ராவி நீககாவிடினு
நான் நீக்காதொழியேனென்றோதி அத்தீப்பிழம்பினுணுழை
வாள்போல விரைந்து அனற்குண்டத்தை வலமவந்தாள். சத்
துருக்கினாழ்வான் பருணுதினீ! நாங்கள் முன்னே தீப்பாய்
கின்றோம். நீ அத்தரோவலின்படி வசிட்டபகவான் வயிற்
சென்று மீளுதியென்று தகைதலும், இராவணன் தங்கை
குழந்தைகாள்! நான் வசிட்டபகவானாச்சிரமஞ்சென்று துனை
ந்துவந்து நெருப்பிலேயேவீழ்கின்றேன். எனதுவரவை நோ
க்கி நீயிராபீழைதுய்த்திருத்தல்வேண்டா. தழற்பிழம்பி லின்
னே விழாதிருப்பிரோல் அரந்தையே நுங்களைக்கொல்லும்.
கதழ்ந்துகனலிற் குளிமினென்றோதி, இன்னோரிருவரும் சோ
ர்ந்தனாக் கொல்லியிற் குப்புறுவதில் ஐயமேயில்லை. இனி

நாஞ்செய்யவேண்டுவ தொன்றுமிலதெனக்கொடு புறமேவந்தாள். பரதாழ்வானும், சத்துருக்கினுழ்வானும் தீப்பாய்தல் செய்யக் குண்டத்தை வலம்வந்தனர். அவ்வேலை திரையினுள்முதுகுரவரது மொழியை நிறைவுசெய்வான், புறவத்திற்கேகிய நாயகனைவிடாது தொடர்ந்துபோய வெனதருஞ் செல்வக்காதலி சீதை அடவியி லென்னதுன்பமடைகின்ருளோவென்று வெய்துற்றுள்ள நான் இடிவிழுந்தாற்போலக் குராக்கமழ்குழலியாகிய குழந்தை இராக்கதனுற் கவரப்பட்டாளென்று கேள்விப்படுகின்றேன். என்செய்கேனென்று வாக்குப்பிறந்தது. பரதாழ்வா னதனைகேட்டுச் சத்துருக்கினு! நமதுஜனகமகா ராசருடைய இனியதீங்குரலாகத் தோன்றுகின்றதென்றனர். மீண்டுந் திரையினுள் இராவணு! நீ வேதசாத்திரங்களைக் கற்றவனல்லேயோ ? நீதியினெறியையுணர்ந்தவனல்லேயோ? எனது தநயையைக் கரவுசெய்த லொழுக்கத்தின்பாலதோ? அது எங்களுக்கு மரபுந்தொழிலென்கின்ருயோ, தாமசமூர்த்தியை நீ பூசனைபுரிகின்றமையால் தாமசகுணத்தையே மேற்கொண்டிருக்கின்ருய்; அடாமூடா! எனது புதல்வி பங்கயச்செல்வியடா, கனலைத் தூசில்முடியு முழுமகனைப்போல அவளை யெடுத்தனையேயடா நீ வழிபாடியற்றும் உமையாள் கொழுநன் நின்னைப் பாதுகாப்புப் புரியினுமெனது ஜாமாதாவினுடைய தம்பியே நின்னைக்கொன்றுவிடுவனடா. அரிதரிது. ஆ குழந்தை சீதா! பத்துத்தலையையும், இருபதுகையையுமுடைய புல்லிய நாயன்று னின்னைக்கவர்ந்து சேறலுறுங்காலை நீயென் செய்தனையோ ? எங்ஙனமறுகினையோ? என்னை விளித்தனையோ? நினது காதற் கணவனைக்கருதினையோ? கொழுந்தன்மார்களைக் கூயினையோ? என்று இரங்கும் வாக்கொலித்தது, சத்துருக்கினுழ்வான் அண்ணனுரே! மிதிலைநாடியா ரிறந்தமையைச் சனகப் பெரும்புரவலர் உணர்ந்திலர்போலுமெனப் பரதசுவாமி! பெருந்தகையாரும், நமது குலனுக்குப் பெரியாருமாகிய ஜனகப்பெயரப் பெரியவேந்தா எழுந்தருளியிருக்கையில் அவரை வணங்கிப்பணியாமல்வெந்

தழலில்வீழ்வது தகுதியுடைய தன்றெனநின்றார். உடனே ஞானமேயுருக்கொண்டன்ன ஜனகக்காவலர் அரிதரிது. வினைணங்காறுநிவந்து வெய்யசெந்தீக் கொழுஞ்சிகைவிட்டெரிகின்றது. பரதசத்துருக்கினர் கனலில்வீழ்க முயல்கின்றனர். இஃதென்னை யென்னையென்று விரைந்தணுகலும் பரத சத்துருக்கினாபெருந்தகையீர! யாவரும் வழிபடற்குரிய வொழுக்கமிககாரே! யாங்கள் பணிகின்றனம். இதுவே முடிவிற்புரி நமககாரம். இராக்கதருடைய புள்ளுவத்தினால் இராம லட்சுமணருயிர்நீத்தனர். தொண்டரேந் தீபுகுகின்றோமென்றனர். ஜனகா ஆ! ஆ! என்னைப்போலத் தீவினையாளனுமுளனோவென்று சோகாத்தனர். பரத சத்துருக்கினா பெரியாரே! அறமூர்த்தியரே! சோகந் தணிதிரெனத்தேற்றினர். ஜனகா கண்விழித்து அந்தோ! நிலனிற்றோற்றஞ்செய்த திருமகளுடைய கொண்கன் பரமாத்துமனெனவும், மூவா முதல்வனெனவும், ஊர்மிளையினது தலைவனும் அப்பெற்றியனே யெனவும் எண்ணூலார்புகன்றனர் எனது தீயவினையால் அவர்கள மொழிந்தமொழியும் பொய்த்துப்போயிற்றே அந்தோ! இரகுநாதரிறந்தனரென்றசொல் செவிவயிற்புகுந்து, யாஜ்ஞவல்கியப் பெருமுனிவரால் இறைநிலையையும், மெய்யாமுயிநிலையையும், அவனை அடையப்பெறும்நிலையையும்மற்று நிலைகளையுமுணர்த்தும மெய்ம்மைவேதாந்த சாத்திரங்களைககற்றுணர்ந்தடைந்த ஞானத்தை வெருட்டித்துரத்திவிட்டதே இவ்வின்னலகலந் தென்னைக்கொல்லுகின்றதேயென்றனர். சத்துருக்கினாழ்வான் பெரியாரே! மிதிலாதிபதியாரே! நமது புதல்வியாருமென்று கழறிப்பொருமிப்பொருமியழுதனர். ஜனகரதனைச் செவியுற்று நன்றுநன்று, அமங்கலையாய் நான் தன்னைப் பாராமற்போய்விட்டாளே. அவள் உத்தமி. கொழுநனைப்பிரிந்து நொடிவரையுந் தரியாளென்றோதிக் குழந்தாய்! பரதா! இராவணனோடு செருச்செய்ய இரகுநாயகருக்குத் துணையாக வேந்தர்களைக்கூ யனுப்புகின்றாயென்று கேள்வியுற்று நேரேவந்து நின்பக்கல்செய்தி தெரிந்துசெல்லலாமென்று

வந்தேன். இனிநான் மீண்டுசென்று செல்லலுக்குப் பிடிபடுக் கப்பட்டகளிறுபோ லாவதினும், நுங்களோ டொருசேரப் பெருந்தழற் பிழம்புக்குப் புதுவிருந்தாவேனென்றனா. அவ் வேலையெழினியினுள் இராமசந்திரன் இராவணனைக் கோற விழைந்து, ஜனகதிருக்குமாரியாராகிய சீதாபிராட்டியாரை யடைந்து, விதிசிவேந்திராதிய கடவுளர்களாலு முனிவர்களா லுந்துதிக்கப்பட்டு, ஈரேழுலகிலும் பெருஞ்சீர்த்திபெற்றுத் தே வியாரோடும், திருத்தம்பியாரோடும், சுக்கிரீவாதியரோடும் புட்பகமேறி எழுந்தருளுகின்றார். பரதசத்துருக்கினர்களே! தழற்கட் புகுதலொழிகென மொழிபிறந்தது. சத்துருக்கினாழ் வான் இம்மாற்றம் பகர்ந்த பிரமசரிய வொழுக்கத்தான் யாவ னெனினும், சனகர் பரதா! விரையாதை, நலந்தருமொழியா யிருக்கின்றது செவியுறுவோமென்றனர். பரதாழ்வான் பூச் சியரே! இனி நன்மைதருமொழி யேது? கிட்கிந்தையினின்று போந்த தாபசி யாங்கள் பரதசத்துருக்கினரென்று தெருளா மே சுவாமியினுடைய செயலை யியம்பலுற்றுப் பின்னாகவே தச் செய்தியை யாமெற்றுக்குத்தெரித்தனமெனத் துயர்ந்த னள். நாங்கள் அழற்பெரும் பிழம்பின் முழுகாமையின் பொ ருட் டத்தாபசியம்மாணவவுருக்கொடு பொய்மைகூறுகின்று ளென்றோதி, தீக்கழுமிய குண்டத்தைக்கிட்டினா. எம்மையாளு டைய ஐயராகிய அனுமான் மாணியுருப்பெற்று வந்து பரதசு வாமியே! நில்லுமின் நில்லுமின் நான் பகர்கின்றேன் கேண் மின். கவிசசேனாதிபதியாகிய நீலன் இராக்கதப் படைத்தலை வனாகிய பிரகத்தனைவதைத்தான். இராவணனுடைய தம்பி கும்பகன்னனை இராமபத்திரா கோறல்செய்தருளினா. அத் தசக்கிரீவனுடைய புத்திரனாகிய இந்திரசித்துவை இளையபெ ருமாள் விண்ணேற்றியருளினா. பின்னாப் பெருமாள் தசக் கிரீவனை உயிர்கொலைபுரிந்தருளி, வயத்திருமகளையும், நிலத் திருமகளையுமடைந்தருளினர். கார்முகிலைவென்றிப, அதனி ருபாங்கரும் இருமின்னல்கள் நிலைகொளீஇ நிற்றல்போலக்க வினவிளங்குகின்ற மூவரையுங் கவிதிரக்கண்ணுற்று, நீவிர்களை

காணோணைப் பேரின்பப்பெளவத்தின் மூழ்குவீரென்றனர். பரதாழ்வான் மாயைவல்ல அரககராலண்ணனார்வஞ்சிக்கப்பட்டனரோ,அவரினி யிங்குவருதலேதென,எம்மையடிமைகொண்டதிருவடிகள் பரதரே!கேண்மின் நமது இரகுபுங்கவராகிய கதிரவன்முன் அரக்கர்மாயையிருள்நிலைக்குமோ? இராவணனுடைய புத்திரனும், மகாமாயாவியும், அத்திரசததிரங்களில் வல்லவனுமாகிய மேகநாதனெய்த நாகக்கணையினால் இராமலட்சுமணா கட்டுண்டனரென்றனர். சத்துருக்கினாழ்வான் தாபசியானவள் நம் ஆராவமிழ்தனன் இருவரும் அராக் கணைக்குக கட்டுப்பட்டதைக் கருதியே யிறந்தனரென்றாளோ? மேலே நிகழ்த்துமென்றார். வாதாத்துமஜா தாரகப்பரமனுக்குச் சகாயஞ்செய்யும்பொருட்டு இநதிரனால் வேண்டுகொளப்பட்டுப் பெரியதிருவடிகள் வந்தனரென்றனா. பரதாழ்வான் குழந்தாய்! சத்துருக்கினா! நீ நின்னண்முன்னர்ச் சாற்றிய பகவான் வசிட்டமுனிவருடைய மாற்றத்தை யிப்போ திவாசெப்புகின்றனரென்றனா. அஞ்சனைமஞ்சர் கேட்டருணமின் பரதரே! வயினதேய ரொழுந்தருளவு நாகாத்திரம், தானுய்ந்தாற் சாலுமென் றிரியல்போயிற்றென்றனா. பரதசுவாமி சத்துருககினா! நம்மானுடை யருள்வளளலாரிடத்து இந்திரன் விழைவுற்ற பயன் இராவணசங்காரமென்றிதுபோழ்து தெரியவந்ததென்றனர். ஜனகபூபதியாராவாதாததுமஜனை நோககி ஐயரோ! எங்களாவியை எங்கட்களித்த நீயாவா? தெருளச் செப்புமினென, அநிலன்செல்வமைநதா வேந்தர் பெருந்தகையாரோ! தொண்டனேன் சுககிரீவருடைய அமைச்சரிலொருவன்; எனது நாமம் அனுமானெனச் சத்துருச்கினாழ்வான் இஃதென்னை வியப்பிற்று? இலஙகாபுரியில நிகழ்நத பொருமுரணிடைச் சுக்கிரீவன் அனுமான், அங்கதனாதிய ரெல்லாருந் துஞ்சினரென்று பருணாதினிசொற்றனளே, மற்றோர் அனுமானுமுளனோ? என்றனர். அஞ்சனைமஞ்சர் அழகிதழகிது. பருணாதினியாவளெனச் சத்துருககினாழ்வான் ரிசியமுகபருப்பததில் தவஞ்செய்பவளாம். சுக்கிரீவாதியருக்கு நண்பளாம.

அவனை நீ ரறியீரோவென்றனர். வாதாத்துமஜர் தமக்குள் சூழ்வுற்று, தயககிரீவனுள்ளிட்டார் விளிநதமையினுலும், விபீஷணுழ்வான் இலங்காதிபத்தியத்தைக்கொண்டமையினுலும், சூர்ப்பநகை வருந்துகின்றனளென்று மந்திரி சம்பாதி சாற்றக்கேள்வியுற்றேமல்லேமோ. அவளே யிவட்போந்து வஞ்சனுசெயதிருக்கின்றனள் ளென்றோர்ந்து பரதசுவாமியே! கேட்டருண்மின் ரிசியமுகப பொருப்பிற் பருணுதினி யென்ருெருதநதியுமிலலை. இராவணனுடைய தஙகை சூர்ப்பநகை தவபபெண் வடிவஙகொணடு நுங்களைப்படிறு புரியும்பொருட்டுப் போந்தாளெனக் கருதாநின்றேனென்றனா பரதாழ்வான் உண்மைதான். அவளே தான்புலத்தியர் மரபிறறோன்றினவளென்று சொற்றாளென்றனா. அககாலை திருவடிகள் பரதாழ்வானே! தென்றிசையைப்பாாத்தருண்மின். நம் பேரருளாளப்பெருமாள் நம்மன்னையாருடனும், இளையவருடனும், மகாராஜா விபீஷணுழ்வான் குகபெருமான் முதலியோருடனும், கிட்கிந்தையிலுறைபவர்களாகிய வலிமுகமடந்தையர்களுடனும் புட்பகமிசைவருகின்றனா நும்மைதுதுனைந்து நோக்கி யருளவேணடுமென ஜகத்காரணா திருவுள்ளஙகொண்டமையினுல் புட்பகத்தினதுகடுமையை நோககுமின். அம்மானத்துக் கொருபொருள் சேய்மைத்தென்பதும, ஒருபொருள் அண்மைத்தென்பதுங் கிடையாதுகண்டீர். நமதத்தனுருடைய தொண்டாகுழாம் ஒருமரனினின்று மற்றோா மரனிற்றாவியும், ஆகாயவழியிலும் நிபிடகரிததும்வருகின்றன பார்த்தருண்மின். வலிமுகஙகளாலும், காருகஙகளாலும், செங்குரங்குகளாலும், குடாவடிக் குழுவாலும் நிலன்குழியுறப்போயது நோககியருண்மினென்றனா. ஜனகர் நமது குழந்தை சீதையினுல் அலஙகரிக்கபபட்ட இடதுபாகத்தையுடைய குழந்தை இராமபிரான் இளையவனேடும், ஏனையரோடும் புட்பகத்தினின்றிறங்கி வருகின்றனரென்று மகிழ்வுபூத்தனர். பரதாழ்வான் இருவிழியுங் குளிர்ப்ப நோக்குற்றனறலாந்த செந்தாமரை புரையுஞ் சரணத்தையுடைய நம் அரும்பெறலடி

கனைச் சேவிக்கப்பெற்றேன் அமுதப் பெரும்புணரியிடை மூழ்கினேனென்றனர். சத்துருக்கினாழ்வான் இன்னகாலத்தில இந்நேரம் இது நேராமெனை வுணரவல்லவர்யாவர்? இமைப்பொழு திவ்வாண்டகையா ரீங்கணெழுந்தருளாவிடின் தீயிடைமுழுகிச் சாம்பராயவிந்திருப்போம் எழுந்தருளி யுயிர் புரந்தனரென்றனர். புட்பகத்தினின் றிறங்கியருளிய தாரகவாச்சியர் ஜனககுலசுந்தரீ! சாகரத்தையும், மகேந்திரத்தையும், ரிசியமுக விலங்கலையும், பஞ்சவடியையும், எழின்மிக்க சித்திரகூடத்தையும் பகவான் பாதோதகத்தையுங்கடந்து அயோத்தி புகுந்தோமென்றருளிச்செய்தனர். இளையவர் அந்தரே! ஜனகப்பெரும் புரவலரும, என்னண்ணனும் சத்துருக்கினனு மெதிர்கோள்செய்யவருகின்றனர் நோக்குறற்ருளுமினென்றனர். உடனே பரதாழ்வான் வந்து அண்ணு? கடல்வண்ணு? கருணைசுரந்துமடைதிறந்த கமலக்கண்ணு! தாரகப்பரமா! அடியனேன்பரதன் சேவிக்கின்றேன், சருவலோகசரண்ணியா! சரணாகதவற்சலா! கருணாசாகரா! நின்றொழுமபனேன் சேவிக்கின்றேனென்று தொழுது தொழுதின்புற்றனர். இராமபத்திரர் பரதாழ்வானை யருணோக்கினோக்கி முடிமுதலடி காறுந் திருக்கரங்களாற் றைவந்து தழுவிக்கொண்டு குழந்தாய்! பரதா! ஆயிரமௌலிப பெருமானுடைய திருவருளால் நாம நாலவரு மொன்றுசேர்ந்தோமென்றருளிச்செய்தனர். பரதாழ்வானையும்,இராமபிரானையும, இலட்சுமணரும், சத்துருக்கினரும் பணிந்தெழுந்தார்கள். மறத்தை வீட்டியறத்தை நாட்டியருளுவான் திருவவதரித்த இராமபத்திரர் பெரியீர்! மிதிலையர் புரவலரே! இராமன் சேவியாநின்றேனென்றனர். இளையவரவ்வாறே செப்பிச்செய்தனர். ஜானகியார் தந்தையீர்! சேவிக்கின்றேனென்றனர். ஜனகர் ஆசிகூறி இரகுபுங்கவனை நோக்கி, குழந்தாய்! இராவண சங்காரஞ்செய்து விண்ணவர்க்கும், பண்ணவர்க்கும், மண்ணவர்க்கு மிடுக்கணகற்றிச் சீதையையடைந்து இனிது மீண்டனையே; தெய்வாதீனமென்றனர். இராகவபிரான் அஞ்சலிசெய்துகொண்டு சிந்தி

ணிலையையும், அசித்தினிலையையும், ஈச்சுரனிலையையும தக்கவாறுணர்ந்த அடிகளே! தமது தண்ணருளினாலும், வசிட்டபகவான், பகவான் விசுவாமித்திரர்முதலிய முனிவாகளுடைய ஆசிகளினாலும் பற்றலரைப் பற்றற வெறறியியற்றிப் போந்தனேனென்றனர். உடனே விசுவாமித்திராவநதார். வந்து வலாரிமுதலிய வானவர் குழுமியண்மி யென்னைக் கண்ணுற்று, உமதாணையை மேற்கொணடு இராவணனைச் சாாந்தவரை இராகவன்கொன்றருளுவன், அத் தசக்கிரீவன் முனிந்தேதேனுந் தீஙகுசெய்வன். அவனை முருக்குவான் தாசரதிககு விடுபடை விடாப்படைகளைக் கொடுததருளுமென நீயிர்கூறியவாறு யானுஙகொடுத்தேன். இரகுபுங்கவன் நிருதாவேரறுத்துமீண்டதைச் சமாதியாலுணாந்து மகிழ்ந்து இரகுநாதனைக்காணப் போந்தேனென்றோதித திருமிபபாாத்தாா. இராமபத்திரா பகவானே! விசுவாமிததிரரோ! இராமன் அடிபணிகின்றேனெனலும, பரதாழ்வானும், இளையபெருமாளும், சததுருசகினாழ்வானும், பிராட்டியாரு மமமுனிவரைசசேவித்தனா. காதிகாதலர் மகிழ்ந்தாசிகூறி இராமசந்திரரைக் கண்ணுற்று, தாரகப்பரம! இம்மும்மை யுலகத்தையும் நலிந்து கொண்டிருந்த ஈரைநது சென்னியனைக்கொன்ற நின்னால அந்தணரனைவரும், முனைவரும், இமையவரும் பாதுகாவல் செய்யப்பட்டார்களென் றுவநதருளச ஒதாநாயகர் இவ்வனைத்துந் தேவருடைய திருவருளினாறறலேயெனமொழிநதனர். பரதாழ்வான் பகவான் விசுவாமித்திரரோ! எமதத்தமை யிந்நந்திக்கிராமத்திலேயே முடிசூட்டிப் பின்னர் அயோத்திக் கழைத்துக்கொடுபோகவேண்டும். அநுமான், விபீஷணர், சுககிரீவர், அங்கதர், குகர்முதலிய நணபாகளுமவ்வாறே விரும்புகின்றார்களெனலும், காதி காதலரும், ஜனகப்பெருந்தகையாரும், பரதாழ்வானுடைய அன்பிற்கோர்வரமபில்லையென்றனா. உடனே திருவடிகள் உலகமூன்றினுமுள்ள அறப்புனல்களையெல்லா மொடியெல்லையிற் கொணருகின்றேனென்று புறம்போந்தனா. ஜனகப் பெருமானா குழந்தை சத்துருக்கினா! வசி

ட்டபகவானையும், மற்றமுனிகணங்களையும், அமைச்சர்களையும் அரசர்களையும், நின தன்னைமார்களையுங கதழுநது ஈஙகட்போ தரச் செய்தியெனறும், அச்சத்துருக்கினுழ்வான் நன்றென்று விரைந்தனா. எழினியுள் இராமதிவாகரனுக்குத்திருமுடிபுனை யும பெருவிழாவானைகையான் நறுஞசந்தம, நாண்மலா, அக்கதை கோணரத்தக்கன. அநுமான்கொணாந்த அறததுறைப்புனல் களைப் பொனனஙகுடன்களில் நிரப்பித்தாபனஞ் செய்யவே ணடியது. அரியணை, வெண்கொற்றக்குடை, வெணகவரி, மணி முடி முதலியவற்றைக கொணரவேணடும். ஒப்பனைகள் செய் துகொடு கன்னியர்கள் வருதல்வேணடும்? அரசுவாவையும, பரி மாவையுங்கொணடுவந்து நிறுததல்வேண்டும. வேதியாகளை யும், அந்தணமாதவாகளையும, அரசமாதவாகளையும், அரசாக ளையும் விளித்துவந்திம்மணடபததில் வீற்றிருப்பசசெய்யவேண டும். கடிமுரசுமுதலிய பல்லியங்களைத் துவைப்பவேண்டுமெ ன்று வாக்குப்பிறந்தது ஜனகபிரானா இராமபட்டாபிஷேக த்துக காகவேணடியவற்றுககு வசிட்டா கட்டளைசெயகினுா் போலுமென்றனா பின்னாச சததுருக்கினுழ்வான்வந்து தார கவாசிரியரைததொழுது சுவாமி! வசிட்டபகவானும், அன்னை யர்களும், எனைரும போதந்துவிட்டாாகளென; இராமபததி ரா எம்பெருமாட்டியாரோடும், இளையபெருமாளோடும, வசிட் டபகவானையும், அன்னையரையுமவணஙகினா. அருந்ததிகேள் வர்மகிழ்ந்து திருவருள்செய்தனர். சககரவர்த்தி தேவியாரமூ வரும கொஙகைபால்சோரத் தமதுதிருக்குமாரரையும், மருகி யையுந் தழுவிககொணடுசசிமோநதனர். பின்னை வசிட்டபக வான், நட்பினரே! விசுவாமித்திரரே! மனுமுதலாகிய அரசா களுக்குப்பட்டத் திருமஞ்சனமாட்டிய நவமணிகுயிற்றிய அரி யணைமிசை ஸ்ரீசானகீரமணனை வீற்றிருப்பசசெய்துமுடிசூட் டுவோமெனப்பகவான் கோசிகர் பகவான் வசிட்டமுனிவரே! தேவர் திருவுளப்பாங்கின்படி செய்கவென்றனா. வசிட்டபக வான் ஜனகவேந்தனை நோக்கி நுமது கருத்தியாதோ? என்று குறிப்பின்வினவ, மிதிலைநாடர் வசிட்டபகவானே! அடியே

ணைக்கேட்கவேண்டுமோ? சூரியகுலத்துக்குத் தாயும், தந்தையும், தவமும், கடவுளும், அறம்பொருளின்பங்களும் வேருகிய நிரதிசயவீட்டிலக்குந்தேவரல்லீரோவென்றனா பகவான் வசிட்டப்பெயரறவரதனைச்செவியுற்றுப் போரவுகந்து ஐயருக்குச சடாசோதனமும், மங்கலத்திருமஞ்சனமுஞ் செய்வித்துத் தூரிய மொலிப்ப, மங்கலமியமப, கருணுசொருபியும், பிரபன்னாகளுக்குப் புருஷகாரியும், தவம் புரிந்தவர்களைச்செய் தவதிற்கிடாகப் பிரமனுகவும், சிவனுகவும், இநதிரனுகவும், மற்றுந் தேவர்களாகவுஞ் செய்தருளிய கடைநோககுடைய பிராட்டியாருமாகிய ஜனககுல அன்னதத்தோடு இராமபிரானை, சம்பு இடையருமற்பன்னி யின்பநடனகுயிற்று நாமனை, தாரகப்பரமனை, நாரணனை யாவா கணணுக்குங் கருத்துக்கு மினியானை,நிரவதிக சௌலப்பிய சௌசீல்யாதி குணேத்தமனை, மலர்மேலலர் பூத்தாங்குத் திருததொணடர்கள துள்ளமுளரி மலாமிசைமலருமமுண்டகத்தாளானை, நான்முகனைமமுகன்முதலிய விண்ணவா முதலியோரரந்தைபோககி,அறத்தை ஆககுவான் அயோத்தியில் திருவவதரித்த பேரருளாளனை, உள்ளுவாருள்ளத் துவட்டெழு நறுந்தேறலை, என்னப்பனை யரியாதனத்திலிருவி யபிடேகஞ்செய்து திருமுடிசூட்டினர். வேதியாகளு முனிவர்களும் அகங்களிதூஙகவாசிகூறினர். மன்னாகள் திறையோடிறைஞ்சிப்பொலம்பூததூவி ஜயவிஜயீபவா, கோதணடராமாவென்றுகொணடாடி ஞாலமுற்று மரசாளுகை தாஙகொண்டருளின ரெனக்களித்தனா. மாகதரேத்தினா. சுமங்கல மங்கையர் மஙகலம்பாடினா. கலைமகள் கொழுநனுமம, உமையவள்கணவனும், சசிமணமகனும், ஏனையவிமையவர்களும், அந்தரநணணித் துந்துபிமுழககி மந்தார நறுமலர் மாரிபெய்து, சேவித்துப் பாடியாடியுளங்களிதிரம்பினர். தெய்வமகளிாகள் நடனஞ்செய்தனா கநதருவர் கானஞ்செய்தனா. ஜனகப்பெயாப்புரவலர் தெய்வாதீனம் இராமபட்டாபிஷேகநடந்தது. வேதபாரகாகள் பூதானங் கோதானம்பெற்றுப் பேருவகைகொளகின்ருாகள். எறும்பிமுதல் எறும்புக

டையீட்ட மன்னுயிர்கள் அமுதினுமினிய அமுதுண்டுகளிக்கின்றன. அநுமான், விபீஷணாழ்வான், மகாராசா, அங்கதப்பெருமான் முதலியவரும், பாரவேந்தரும் பெரும்பரிசுபெற்று மகிழ்கின்றனர். பூதேவருடைய ஆசீர்வாதத்தால் இராமசந்திரரும், நமது குழந்தையும், இலட்சுமிநாராயணர்போல இனிது நெடிது நூழிவாழ்ந் திருத்தல்வேண்டுமென்றனர். பின்னர் வசிட்டபகவானாணையால் தாரகப்பரமர் பட்டத்துக்குரிய இருசெவிமும்மத நால்வாயப்பொருப்பின்மீதிவர்ந்து, அந்தணரருமறை வருக்கமோதி நிறைபொலங்குடமேந்திச்சூழ, மங்கலமயிலன்னார் பல்லாண்டுபாட, அரசர்கள்பங்கயச் செங்கைகூப்பியிருமருங்குஞ்செல்ல, வாரியமுழங்கத்தூரியமுழங்க, மறுதேயஞ்சென்றுநெடிது நாட்பிரிவுற்ற காதற்கணவன்வரக்கண்ட கற்புடை நங்கையென அலங்காரங்கொண்ட ஸ்ரீ அயோத்தியைவலம்வந்து பாகவதோத்தமர்களை முன்னர்ப்புகுத வேவிப் பொன்னன்ன நம்பெருமாட்டியாரோடு பொன்மனைபுகுந்தனர் பின்னர்ப் பகவான் விசுவாமித்திரர் இராமசந்திரா! எனதாச்சிரமமேகலாமா? என்றால் நினக்காகவேண்டிய தேதேனுமின்னமுளதோவென, இராமபத்திரர் அம்மாமுனிவரைத்தொழுது சுவாமீ! தேவர் கருணையால் சீதையை விவாகஞ்செய்தேன். தேவகண்டகனாகிய தசக்கிரீவனைக்கோறல்செய்தேன். எனதாருயி ரன்ன பரதனைக்கண்டேன். தேவரைச்சேவித்தேன். ஒன்றுங் குறைவில்லையென்றனர். அணித்துநின்ற பரதசுவாமி, பகவானே! காதிகாதலரோ! எனக் கொருசிறிது வரமருளவேண்டுமென்றுதொழுது, சுவாமி கோசிகரோ? கோக்களும், அறங்கரைநாவினருமறையந்தணர்களும், சாதுக்களு மெஞ்ஞான்றும் இன்பந் துய்த்தினிது வாழவேண்டும். இருமறை நூல்களையுணர்ந்த மேலோர்களை நிச்சலுஞ் சேவிக்கின்ற மன்னர்களே யிந்நிலனைப்புரத்தல்வேண்டும். கலவிமான்களெல்லாரும் அரசர்களால் மேல்வருகவெனக் கொண்டாடப்படவேண்டும். சைவைணவமே. இருடருமா ஞாலத்தில் கலியினது வலியைவென்று

விளங்கவேண்டும். தெய்வத் திருமட்குறியும், இராமகதையும், இராமசரணத்திற்பத்தியுமே தரணியெங்கும் பரவவேண்டும் இராமசரிதையைப் படிப்போரும், வடிப்போரும், கேட்போரு மப்பிறப்பிலேயே நிரதிசய வின்பவீடெய்தவேண்டுமென்று பிரார்த்தித்தனர். கோசிகமாமுனிவா, பரதா! வையமுய்ய நீ நன்குகேட்டனை. பகவான் அவ்வாறே அருளுவனென்றருளி ஸ்ரீயப்பதிகளும் ஆசியருளித்தம தாச்சிரமமேகினா அஜசங்கரேந்திராதியருக்கு நற்பதமருளிய சிற்பரனுக்குச் சருவாபீஷ்டமு முண்டாகுகவென்று பிராமணர்களு முனிவர்களும் திருவருள்செய்து தந்த முறைவிடஞ்சார்ந்தனர். ஜனகப் பெயர்க்காவலரும் மிதிலைசேர்ந்தனர் அனுமான், விபீஷணாழ்வான், மகாராசா, அங்கதபபிரான், குகப்பெருமான் முதலியோரும், மாயிருஞாலமன்னரும் சேவித்து விடைபெற்றுத் தத்தம்பதிமேயினர். தாரகப்பரமர் ஈரேழுலகினுந் தனிச் செங்கோல் பொதுவறநடாய், அருமறையறையுமறமென்னும் பைங்கூழ்வளர மேகமு மின்னலும்போலச் சனககுல சுந்தரியாரோடு அரியணைமேவி வீற்றிருந்தருளினர்.

பசநஜனங்களைப் பாதுகாத்து, அவர்களுடைய இஷ்டபூர்த்தி செய்வதில் கற்பகவிருட்சம்போன்றஅநந்தகலியாண குணகண பரிபூரணராகிய ஸ்ரீராமபிரானுறோயென்று நமக்கு மங்களத்தைக் கொடுக்ககடவரென முதனூலாசிரியர் மங்களமருளிச் செய்தனர்.

ஏழாம் அங்கம் முற்றிற்று.

ஸ்ரீ ராமதாசர்கள் திருவடிகளேசரணம்.

ஜாநகீபரிணயம்.

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ சடகோபமகாதேசிகர் பொன்னடிகள்வாழ்க.

ஸ்ரீ

ஸ்ரீநிகமாந்தகுரவே நம:

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை.	திருத்தம்
க0	கங	வென	வென்
ககூ	கஉ	மரன்கள் பூக்களால்	மரன்களில பூக்கள
உக	கக	என்னுற்ருயே	என்னுறநீரே
உங	உக	மூதுக்கி	ழுதுககி
உச	கஎ	நெடுட்யிர்	நெட்டுயிா
உசு	கசு	மூறித்தும்	மூறித்தவனும்
ஙரு	க0	கின்றரென	கின்றனரென
சஎ	கசு	வீட்டுதற்கு	வீட்டியதற்கு
சஅ	உகூ	படிங்கொ	படிவஙகொ
சகூ	உங	கைகளால்	கைகள
ருஎ	கரு	புதல்வா	புதல்வன்
சுசு	உஉ	குலத்துவசன்	குசத்துவசன்
எ0	உசு	முனிவாபாலனைநது	முனிவனாககண்ணுற்று
எஉ	உரு	மிசை	மீசை
எசு	ஙக	சொல்லாய்	சொல்லீா
எஎ	கக	சொல்லாய்	சொலலீா
ஷை	கச	சொல்லாயெ	சொலலீரொ
அசு	கூ	பறையை	பாறையை
அகூ	ககூ	தடைத்து	டைதது
கூஎ	கசு	பராய்	பாராய
கூஅ	க0	விசு	விசும்
[illegible]ச	கச	துணியாய்க்தடி	துணியாட்தமட
ககஎ	உசு	நோக்க	நோகதி
கஙஅ	ரு	பொலிகின்றேனென்று னென்றனன்	பொலிகின்றுனென்ற னன்
கஙங	ஙக	ஆயிரமுடஙக	ஆயிரமுடங்க
கஙச	ககூ	தீத்கணை	தீக்கணை
கஙஎ	கசு	அறிந்தோமென்	அறிந்தோமென
கஙஅ	ககூ	க்ஷேமமா	க்ஷேமமா
கஙகூ	அ	வெறென்	வேறென்
கச0	கஅ	வெனறேஙகு	வென்றேஙகு
ஷை	ஙு0	பெறும்	பெரும்
கசக	அ	கேட்டுத்கழுத்திற்	கேட்டுக்கழுத்திற்
கருக	அ	கொன்றருளுவன்	கொன்றருளினன்
ஷை	கக	நீயிர்கூறியவாறு	கூறியவாறு
ஷை	கஅ	நவிந்நு	நவிந்து